கல்கி



KALKI ஏப்ரல் 10, 1955 4 அணா


பாப்பாவின் புது கவுன்
ஹா, புது கவுன்!
ஜாக்கிரதையாய் இருக்கணும் பாப்பா
பள்ளிக்கூடத்தில்
வா, நாம் விளையாடலாம்
உஹூம்.
வீட்டில்
கவுனை கிழித்து விட்டாயா பாப்பா
நான் ஜாக்கிரதையாய் இருந்தேன்!
கடையில்
இந்த கவுனைப் பாருங்கள்!
யார் தைப்பது?
நான் செய்தேனே!
இது அடித்துத் துவைப்பதனால் ஏற்பட்டது!
அடித்துத் துவைப்பதினால் நூலிழைகள் சேர்ந்து துணிகள் கிழிகின்றன. உங்கள் துணிகளை அடித்துத் துவைக்காமல் சுத்தம் செய்யுங்கள்.
ஆமாம்! விரைந்த நுரையுண்டாகும் ஸன்லைட் துணிகளை அடித்துத் துவைக்காமல் சுத்தமாக்குகிறது! இப்பொழுது துணிகள் நீடித்திருக்கின்றன. அதோடு பணமும் மிச்சம்!
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப் துணிகளை நீடித்திருக்கச் செய்கிறது

மலர் 14 இதழ் 37

கல்கி பொருளடக்கம்

௧௯௫௫ ஏப்ரல் ௰

ஜய ஹூ பங்குனி 28

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

60 ஆண்டுகள்

தாய் நாட்டின் சேவை!

★

இந்திய தேசீய பாங்கி தொழிலில் மிகப் பழமையான **பஞ்சாப் நேஷனல் பாங்க்** அதன் வைர விழாவை இந்த வருஷம் ஏப்ரல் 13உ கொண்டாடுகிறது.

1895-ல் ஒரு சுதேச பாங்கை நிறுவுவதென்றால் அது ஒரு பெரிய துணிகரமான விஷயமாகும். கஷ்டமான சாகசச் செயலும் கூட. ஏனெனில் அன்னிய பாங்குகளின் போட்டி ஒருபுற மிருக்க இந்தியர்களாலும் ஒரு நவீன ஜாயிண்ட் ஸ்டாக் பாங்கை நடத்த முடியும் என்பதை நம் நாட்டு மக்களுக்கு உணர்த்துவது சிரம மிக்கதா யிருந்தது.

இந்த பாங்கியின் அறுபது ஆண்டு சரித்திரமானது அதன் விஷயத்தில் டைரக்டர்கள், அதிகார்கள் மற்றுமுள்ள ஊழியர்களின் ஒற்றுமையான உழைப்பு, உறுதி மற்றும் தன்னலமற்ற சேவை ஆகியவைகளை மகோன்னதமாகக் குறிக்கிறது. அது தவிர, ஏராளமான வாடிக்கையாளர்கள் பாங்கின் மீது தொடர்ந்த நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் காட்டி, இந்த சுதேச பாங்கையே ஆதரிக்க விரும்பினார்கள். ஆரம்பத்தில் எளிமையான முறையில் ரூ. 20,000 செலுத்தப்பட்ட மூலதனத்துடன் ஆரம்பமான பாங்க் இன்று நாட்டின் ஜாயின்ட் ஸ்டாக் பாங்குகளில் இரண்டாவது ஸ்தானத்தை அடைந்த விதத்தையும் இதன் சரித்திரம் சித்திரிக்கிறது.

1954ம் ஆண்டு முடிவில் இந்த பாங்கியின் செலாவணித் தொகை ரூ. 91 கோடிக்கு மேலும் டெபாசிட்டுகள் ரூ. 75 கோடிக்கு மேலும் பெருகி உயர்ந்தது. 814 ஆபீஸ்கள் மூலம் நாட்டுக்குச் சேவை செய்து வரும் இந்த பாங்க், பெருகிக் கொண்டே வரும் தேசத்தின் பொருளாதாரத்திற்கு சேவை செய்ய இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தன் அலுவல்களை விஸ்தரிக்கத் திட்டமிட்டிருக்கிறது.

முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டதும் தாய் நாட்டின் சேவையில் முன்னணியில் நிற்பதுமான **பஞ்சாப் நேஷனல் பாங்க்** தேசத்தின் சொந்த பாங்க்.

★

தி பஞ்சாப் நேஷனல் பாங்க் லிட்.

(ஸ்தாபிதம் : 1895)

தலைமை ஆபீஸ் : **டெல்லி**

மலர் 14 இதழ் 37



தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்

இலங்கையா? தென் ஆப்பிரிக்காவா?

வங்காள கவர்னருக்கு, அதாவது ராஜாஜிக்கு, காரியதரிசியாக இருந்த ஸ்ரீயுத சக்கரவர்த்தி அவர்கள் இலங்கைக்கு இந்திய சர்க்காரின் பிரதிநிதியாகப் போய்ச் சேர சென்ற திங்கட்கிழமை சென்னையில் ரயிலேறிப் புறப்பட்டார். அவருக்கு வாழ்த்துக் கூறுகிறோம். கடுமையான வேலையில் யாரை அமைத்தாலும் காரியங்கள் நிறைவேறுவது கஷ்டமே. ஐரோப்பிய நாடுகளில் ஸ்தானீகராக இருந்து அநுபவம் பெற்ற ஸ்ரீயுத சக்கரவர்த்தி அவர்களை இலங்கை சர்க்கார் நன்கு மதித்து அவருடன் கலந்து யோசித்துத் தவறுகளைத் திருத்திக் கொள்ள முயற்சிப்பார்களாக.

சென்ற வாரம் தில்லியில் இலங்கை சர்க்காருக்கு ஸ்தானீகராக அமர்ந்திருக்கும் திரு விஜயரத்ன அவர்கள் சென்னையில் இரண்டு நாட்கள் தங்கினர். ஆயினும் அதே சமயத்தில் சென்னையில் இருந்த சக்கரவர்த்தி அவர்களோடு கலந்து பேசவில்லை. புதிதாக நியமிக்கப்பட்ட இந்திய ஸ்தானீகரைச் சென்னையில் கண்டு அவசரமாகப் பேசுவதில் பயன் ஒன்றும் இல்லை என்பது உண்மை. இந்திய ஸ்தானீகர் தம் வேலையில் அமர்ந்து சில நாட்கள் கழிந்த பிறகு, இலங்கையில் அவ்விடத்திய சர்க்காரைக் கண்டு பேசித்தான் காரியங்கள் முன்னேற வேண்டும்.

தம்முடைய சர்க்காரின் போக்கை, இலங்கை ஸ்தானீகர் ஆதரித்துப் பேசுவதுதான் முறை. தம்முடைய சர்க்கார் கையாண்டு வரும் முறைகள் தவறு என்று ஒரு ஸ்தானீகர் எப்படிச் சொல்ல முடியும்? பகிரங்கப் பிரசங்கங்களில் இந்தச் சிக்கல்கள் முடிவு பெறும் என்று எதிர்பார்க்கக் கூடாது.

சிக்கல்கள் தீரவேண்டுமானால் அடிப்படையான சத்திய தர்ம உணர்ச்சி ஏற்பட வேண்டும். இதற்கு வேறு எதையும் படிக்க வேண்டியதில்லை. புத்தர் மொழிகளை பக்தியோடும் தைரியத்தோடும் படித்து உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்.

மொத்தத்தில் ஹிந்து தர்ம சாஸ்திரங்களில் நியாயங்களை எடுத்துக் காட்டியிருப்பதைப் பார்க்கிலும், பௌத்த நூல்களில் மிகவும் விளக்கமாக யாரும் அறிந்துகொள்ளும் படியான முறையில் காட்டப்பட்டிருக்கின்றன என்பது பிரசித்தம். ஆகையினால் என்றைக்காவது ஒரு நாள் இலங்கை சர்க்காரில் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறவர் சமய உணர்ச்சியோடு காரியங்களை நிறைவேற்றி முடிவு செய்வார்கள் என்று இந்திய மக்கள் புத்த மகானையே தியானித்து, ஆசை கொள்ளுவோம்.

சமயங்களை வைத்துக் கொண்டு சமய பேதங்களைப் பெரிதாகச் செய்து அந்த பேதங்களின் அடிப்படையாக அரசியல் நடத்துவது தவறு. சமய நூல்களில் சொல்லப்பட்ட தர்மங்களை நிர்வாகத்தில் புகுத்துவது சமயங்களின் நோக்கம்.

இலங்கையின் இன்றையச் செழுமைக்கு இந்தியர்களின் உழைப்பே காரணம். இலங்கையைப் பண்படுத்திப் பொன் விளையும் பூமியாகச் செய்த பரம்பரை இந்தியர்களைக் கவலைக்கும் துன்பத்துக்கும் உள்ளாக்குவது புத்த பெருமானின் உள்ளத்தை வருத்தும். மலேரியா ஜுரத்துக்கும் இன்னும் பல நோய்களுக்கும் ஆயிரக்கணக்கான ஆண் பெண் குழந்தைகள் உள்பட மக்கள் இரையாயினர். இதை யெல்லாம் விஜயரத்ன அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார். யாருடைய பேச்சைக் கேட்டுத் தமிழ் மக்கள் இலங்கைக்குச் சென்றிருந்த போதிலும் அவர்களுடைய உழைப்பின் லாபத்தைப் பெற்ற ஒரு நாடும் அதன் சர்க்காரும் அந்த உழைப்பை மறந்து விடலாகாது.

செய் நன்றியை மறப்பது மிகப் பெருங் குற்றம். இதை வற்புறுத்தவே கொல்லுதல் என்ற கடுமையான சொல்லை வைத்து 'செய்நன்றி கொல்லுதல்' என்ற சொற்றொடர் வழக்கத்தில் வந்திருக்கிறது. செய்நன்றியை மறுத்தல் கொலைக்குச் சமானமாகும். கொல்லுதல் கூடாது என்பதை அடிப்படையாகக் கொண்ட சமயங்களில் இதற்காகத்தான் செய்நன்றி மறத்தலைச் செய்நன்றி கொல்லுதல் என்று வழங்கி வருகிறார்கள்.

இலங்கையில் உள்ள பரம்பரை இந்தியர்களுக்குப் பிரஜா உரிமை தந்தால் உலகம் முழுகிப் போகாது. ஆறு ஏழு ஸ்தானங்களுக்கு அவர்கள் செல்வாக்குப் பயன்படும்.

அவ்வளவே. எஞ்சி நிற்பது நூறு ஸ்தானங்கள். இதற்காக அவிழ்க்க முடியாத சிக்கல்களை உண்டாக்கிக் கொண்டு வருவது அறியாமை.

கடுமையான புது நோக்கங்கள் ஆரம்பித்த காலம் 1949-ம் வருஷம். அதற்கு முந்தி இலங்கையில் இருந்து நேர்மையான முறையில் வாழ்க்கை நடத்தி, இலங்கைப் பொருளாதாரத்தில் பங்கெடுத்து, ஜீவனம் நடத்தும் ஒருவன் 'நான் இலங்கையைச் சேர்ந்தவன்' என்று சொன்னால் அதை உடனே பதிவு செய்து கொள்ளாமல் அவனையும் இந்திய சர்க்காரையும் ஏமாற்றி வரும் பேச்சுகளும் முறைகளும் நியாயமாகாது. பயன்படாது. 'இலங்கை மக்களில் தானும் ஒருவனாக வாழவேண்டும்' என்று ஒருவன் ஆசை இருப்பதாகச் சொல்வதைப் புறக்கணித்துவிட்டு, 'உன் உள்ளம் எனக்குத்தான் தெரியும்' என்று சிங்களவர் ஒருவர் குறுக்கிட்டுப் பேசுவது கொஞ்சமும் சரியாகாது. உண்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டினால் கடுமையாகத்தான் தோன்றும். ஆயினும் தெளிவாக எடுத்துக் காட்டுவது அவசியம். எழுதப் படிக்கத் தெரியாதவர்களே மலேரியாவுக்கும் மற்ற நோய்களுக்கும் பயப்படாமல் காடுகளில் குடியிருந்து கூலி வேலை செய்து, பிழைக்கும் தைரியத்தோடு இலங்கை சென்றார்கள். அவர்களுடைய குடும்பங்களும் இலங்கையிலே பெருகின. படிப்பில்லாமலே குழந்தைகள் வளர்ந்தன. கூலி வேலையையே எதிர்பார்த்து வளர்ந்தன. இந்த நிலையில் இருப்பவர்களுக்குக் கேள்வித் தாள்களை அச்சடித்துத் தந்து, அவற்றைப் பூர்த்தி செய்யும்படி கேட்டு, 'இது சரியானபடி பூர்த்தியாகவில்லை, அது குறித்தபடி காட்டப்படவில்லை, தேதிக்குள் வந்து சேரவில்லை, அத்தாட்சி செய்திருப்பவருக்கு அதிகாரம் இல்லை' என்றெல்லாம் ஆட்சேபணைகள் கிளப்பி ஒரு பாவமும் அறியாத மக்களைக் கவலைக் கடலில் ஆழ்த்துவது தர்மம் ஆகாது.

அடுத்த வருஷம் ஜூன் மாதத்துக்குள் பதிவு வேலை முடிந்துவிடும் என்று இலங்கை ஸ்தானிகர் சென்னையில் சொன்னார். இதுவல்ல இலங்கையில் குடியேறிய இந்தியர்களுடைய கேள்வி. 'பதிவு செய்து கொள்ளாமல் எங்களை நடுத்தெருவில் விட்டுவிட வேண்டாம்' என்றே அவர்கள் வேண்டிக் கொள்வது. இது தமிழ் பேசும் லக்ஷக்கணக்கான இலங்கை மக்களுடைய கேள்வியாகும். கண்டிப் பிரதேசத்திலுள்ள தமிழ் மக்களும் இலங்கை மக்களே ஆவார்கள்.

இலங்கையில் அமைக்கப்பட்ட குடியரசு வரவர தென் ஆப்பிரிக்கக் குடியரசைப்போல வடிவம் எடுக்காமல் காப்பாற்றுவது கொத்தலாவாலா அவர்களுடைய கடமை. இல்லாவிடில், உலகத்துக்கு ஒரு புதுமையாக இருக்கும் தென் ஆப்பிரிக்க அரசியலுக்கு இலங்கை ஒரு துணை விநோதமாகி, இகழ்ச்சியில் முடியும்.

லக்ஷக்கணக்கான மக்களை அப்புறப்படுத்தியும், அவமானப் படுத்தியும் தொல்லை உண்டாக்குவதில் லாபம் இல்லை. அத்தனை குடும்பங்களும் ஒரு நாளும் கப்பலேறி இந்தியாவுக்கோ வேறு நாட்டுக்கோ போக மாட்டார்கள். இலங்கையிலேயே இருந்துதான் வருவார்கள். அரசியலுக்கு ஒழுங்கும் கவலையற்ற நிலையும் அமைதியும் வேண்டுவோர் இந்த விதமான சிக்கலை உண்டாக்கிக் கொள்ள மாட்டார்கள். ஆயினும் இவ்வித நிலைமையைத்தான் தென் ஆப்பிரிக்க சர்க்கார் உண்டாக்கி வருகிறார்கள் என்பது பிரசித்தி. இலங்கையும் அதனுடன் சேர வேண்டுமா!

பாகிஸ்தானிலும் ஒரு நல்ல நிகழ்ச்சி

மிக முக்கியமான செய்தி. சிறைப்பட்டுக் கிடந்த டாக்டர் கான்சாகிப் அவர்கள் விஸ்தரிக்கப்பட்ட மேற்குப் பாகிஸ்தான் ராஜ்யத்துக்கு முதல் மந்திரியாக அமர்ந்து விட்டார். அண்ணனும் தம்பியுமாகப் பல ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த போதிலும் இவ் இரு தலைவர்களுடைய அந்தஸ்தாவது செல்வாக்காவது பண்புப் பெருமையாவது குறைந்து போகுமா! பாகிஸ்தானில் அடங்கி நிற்கும் பல ஜாதி மக்களை ஒன்றாக்குவதற்காகச் செய்யும் முயற்சிகளில் மேற்குப் பாகிஸ்தான் விஸ்தரிப்பு ஒன்றாகும். ஆப்கானிய ஜாதியோடு நெருங்கிய பற்றுக்கொண்டிருக்கும் "எல்லைப்புற" மக்களைத் திருப்தி செய்து மற்றப் பாகிஸ்தானியருடன் ஒன்றுபடுத்துவதற்காக டாக்டர் கான் சாகிப் அவர்களைப் பதவி ஏற்கும்படி கேட்டிருக்கிறார்கள். அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். பாரத நாட்டைச் சுற்றியுள்ள நாடுகளிலும் அமைதியும் நல்ல அரசியலும் இருந்தால்தான் நமக்கும் சுகவாழ்வும் வியாபாரச் செழிப்பும் இருந்து வரும். பாகிஸ்தானில் ஏதாவது அமைதிக் குறைவு ஏற்பட்டால் சில இந்தியர்கள் அதை மகிழ்ச்சிக்குக் காரணமாக வைத்துக் கொள்வது பேதைமை. உண்மையில் நம்மைச் சுற்றியுள்ளவர்கள் நன்றாக வாழ்ந்தாலேதான் நாமும் நன்றாக வாழ முடியும். டாக்டர் கான்சாகிப் அவர்களுடைய ஆட்சிக்கு வாழ்த்துக் கூறுகிறோம். நுண்ணறிவுடன் செய்யப்பட்ட இந்த நியமனம் குலாம் மகம்மது அவர்களுடைய ஆட்சிக்கு ஒரு வெற்றியாகும். இந்த வெற்றி பூரணம் பெற வேண்டுமாயின், டாக்டர் கான் சாகிபைக் காட்டிலும் முக்கியஸ்தரும், மக்களின் அன்பைப் பெற்றவருமான கான் அப்துல் கபார்கான் அவர்களைத் தக்கபடி மதித்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மீண்டும் செய்திப் படம்

சமீபத்தில் சென்னை சர்க்கார் செய்து வந்த பல நல்ல காரியங்களுக்குச் சிகரமாகப் புது சினிமாச் சட்டமும் நிறைவேறிற்று.

இந்தச் சட்டத்தினால் நமது தியேட்டர்களில் காண்பிக்கப்பட்டு வந்த செய்திப் படங்களைப் பற்றிக் கிளம்பிய ஆட்சேபணை தீர்ந்தது.

பழைய சட்டம், தியேட்டர்காரர்களைச் சர்க்கார் வற்புறுத்த முடியாத நிலையிலிருப்பதாகச் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பளித்தது. இதைச் சாதகமாகக் கொண்டு பல மாதங்களாகச் சென்னை ராஜ்யத்தில் இந்திய சர்க்கார் வெளியிட்டு வந்த அருமையான செய்திப் படங்களைக் காட்டாமலிருந்து வந்தனர்.

இந்திய சர்க்காரின் இச்செய்திப் படங்களுக்காகத் தியேட்டர்காரர்கள் செலுத்த வேண்டிய கட்டணம் அதிகமென்றும் படங்கள் தரம் வாய்ந்தனவாக இல்லை என்றும் சினிமா சொந்தக்காரர்கள் வாதாடி வந்தார்கள்.

'தரம்' என்ற வார்த்தைக்கு இவ்விடத்தில் என்ன பொருள் கொண்டு உபயோகிக்கிறார்கள் என்பது சரியாகப் புரியவில்லை. செய்திப் படங்களில் பெரும்பாலும் அணைக்கட்டுத் திட்டங்களும், தலைவர்கள் கலந்து கொள்ளும் விழாக்களும், வெளிநாட்டுத் தூதர்கள் வருகையும் போன்ற விஷயங்களே இடம் பெறும். இவைகளில் தரம் நன்றாக இல்லை என்றால் நமது பிரதம மந்திரி நேருவும் மற்றத் தலைவர்களும் சரியாக வேஷம் போட்டுக் கொண்டு நடிக்கவில்லை என்கிறார்களா அல்லது காமிராவுக்குச் சரியாக போஸ் தரவில்லை என்கிறார்களா—என்பது புரியவில்லை.

உண்மை என்னவென்றால், செய்திப் படங்கள் வெகு நன்றாகவே இருந்தன. பார்த்தவர்கள் அநுபவித்துத்தான் வந்தார்கள். உதாரணமாக, பிரும்மபுத்திரா நதியில் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியதினால் அஸ்ஸாமில் ஏற்பட்ட பலத்த நஷ்டத்தையும் கஷ்டத்தையும் உள்ளத்தைக் கசியச் செய்யும் வகையில் எடுத்திருந்தார்கள். பண்டித நேரு வெள்ளம் பெருகும் இடங்களில் சென்று பார்த்ததைக் காண்பித்தனர். 'மக்கள் மீது எவ்வளவு அன்பிருந்தால் இவ்வளவு பயங்கரமான இடங்களுக்கு அவருக்குப் போகத் தோன்றும்!' என்றெல்லாம் எண்ணி வியக்கச் செய்யும்படியாக இருந்தது; உள்ளத்தை உருகச் செய்தது.

ஜவாஹர்லால் நேருவுக்குச் சீனாவில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. பாரத மக்களின் திலகத்துக்குச் சீன மக்கள் அளித்த உற்சாக வரவேற்பைக் கண்டவர்கள் உள்ளம் பெருமிதத்தினால் விம்மியிருக்கும். இவையெல்லாம் இடையில் சிலகாலம் சட்டத்தைப் பற்றிக் கிளப்பிய சந்தேகத்தினால் தமிழ்ப் பொது மக்களுக்கு மறுக்கப்பட்டன!

கூட்டம் சேர்க்கத் தியேட்டர்காரர்கள், செய்திப் படங்களை விளம்பரப் படுத்தியதையும் பார்த்திருக்கிறோம்.

இப்பொழுது சட்டமியற்றியாகி விட்டது. கதைப் படங்களைப் பார்த்துக் களிப்படைவதோடு, செய்திப் படங்களும் விஷய விளக்கப் படங்களும் பொது மக்கள் பார்த்துப் பயன் பெறலாம். சமீபத்தில் நடந்த ஒரு மகாநாட்டில் கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்கள் ஸ்ரீ எஸ். எஸ். வாஸனைப் பாராட்டிப் பேசினார். வாசன் அவர்கள் சொல்லி வரும் கட்சி, சினிமாக் கலையின் முக்கிய நோக்கம் மகிழ்ச்சி தருவதே ஆகும், அறிவு புகட்டும் இயந்திரங்களில் ஒன்றாகச் சினிமாக் கலையை வைக்கக் கூடாது என்பது. ஆயினும் அறிவு வேண்டாம் என்று வாசன் அவர்கள் எப்போதும் சொன்னதில்லை. முக்கிய கருத்து களிப்பு உண்டாக்குவது என்று சொன்னார். அவ்வளவே. களிப்புத் தருவதிலும் மக்களுக்கு நன்மை உண்டு. அதன் வழி அறிவு புகட்டலாம். களிப்புப் படங்களும் அறிவு தானமாகச் சில நிமிஷங்கள் செலவழிப்பதை ஸ்ரீ வாஸன் அவர்கள் இனி ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம். ஆனாலும் ஒரு நியாயம் உண்டு. கட்டாயமாக ஒரு படத்தைக் காட்டு என்று சட்டபூர்வமாக நிர்ப்பந்தித்தால் அதற்குக் கட்டணம் செலுத்து என்று சொல்வது நியாயமா! இதைப் பற்றி சினிமா சங்கத் தலைவர் வாசன் அவர்கள் விவாதித்து வெற்றி பெற்றால் நமக்கு யாதொரு ஆட்சேபணையும் இல்லை.

பனித்துளி

"உதட்டுச் சாயம் தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருள்கள் இந்த ராஜ்யத்தில் அகப்படுவதால் 'லிப்ஸ்டிக்' உற்பத்தித் தொழில் ஏற்படுத்தலாமா?"

—எம். எல். ஏ. கோரிக்கை

"'இது தென்னாட்டுக்கு உதவாது!' என்று மந்திரி உதட்டைப் பிதுக்கி யிருப்பாரே!" என்கிறார் பழமையில் பற்றுள்ளவர் ஒருவர்.

★

"பார்லிமெண்ட் வாயிலில் தேனீக்கள் முற்றுகை!"

—பத்திரிகைத் தலைப்பு

அப்படி யென்ன ருசிகரமான விவாதமோ!

★

"இருடர்களையும் நாடோடிகளையும் தெருவாசிகளையும் அழைத்து இலவசமாக இடமும் உணவும் அளிப்பதாக உத்தரவாதம் செய்ய வேண்டும். சும்மா சாப்பாடு போடுவதாக வாக்களித்தால் லட்சக் கணக்கான பேர் பணத்தை எதிர்பாராமல் வேலை செய்வார்கள்."

—எம். பி. யோசனை.

"எந்த வேலை! அவரவர்கள் வேலை தானே!" என்கிறார் சந்தேகப் பேர்வழி.

"நெல்லுக் குத்துவதில்கூட யந்திரங்களின் போட்டி நம் நாட்டில் பெருகி விட்டபடியினால், கைக்குத்தலரிசி அபிவிருத்தியே தடைப்பட்டு நிற்கிறது."

—ஒரு அறிஞர்

கைக்குத்தலரிசியை ஆதரிப்பதற்காக, அறிஞர் ஆலைத் தொழிலைக் குத்தலாகப் பேசி யிருப்பதாக ஆலை முதலாளி ஒருவர் வருந்துகிறார்!

★

"வேலையில்லாதோர் அனுதாப தினத்தை அனுஷ்டிக்க வேலையில்லாதோர் சங்கத்தின் ஆதரவில் ஓர் கூட்டம் நடைபெற்றது!"

— பத்திரிகைச் செய்தி.

அவர்களுக்கு வேறு வேலையில்லை என்று நிதர்சனமாகத் தெரிகிறது அல்லவா!


★

"நல்ல எண்ணெயை நாட்டுச் செக்கின் மூலம் தயாரிக்கும் முறைகளில் முன்னேற்றத்தைச் சமீபத்தில் சென்னையில் நடந்த பொருட்காட்சியில் நன்கு விளக்கப்பட்டது."

—ஒரு பிரசங்கி


நல்ல எண்ணெயைக் காண்பதற்கே பொருட்காட்சிக்குத்தானே போகவேண்டி யிருக்கிறது!

கோட்டை உடைந்தது!




அரசியல் சட்டத் திருத்த மசோதா பார்லிமெண்டு பொறுக்குக் கமிட்டியிலிருந்து அதிக பலத்துடன் வெளி வந்திருக்கிறது.

அபாயம்! ஜாக்கிரதை!



போர்ச்சுகலின் ஆதிக்கம் இந் நாட்டில் இன்னும் இருந்து வருவதற்கு இந்தியாவின் பொறுமையே காரணம்; எனவே அந்தப் பொறுமையை மேலும் சோதிக்க வேண்டாம் என்று நேருஜி பார்லிமெண்டில் எச்சரித்தார்.

அவர் வாரிசு !



"பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் அரசியலிலிருந்து ஓய்வு பெற்று விட்டார்."—செய்தி.

மோட்சம் கிட்டியதா ?



ரஷ்யாவின் மாஜிப் பிரதமர் மாலென்கோவின் கதி என்னவாயிற்று என்பது பற்றிப் பல விதமான ஹேஷ்யங்கள் வெளியாகி யிருக்கின்றன.

என்ன சேதி?

பிரிட்டிஷ் தொழிற் கட்சி

பிரிட்டிஷ் தொழிற் கட்சியில் கலவரங்கள் நடைபெற்று வருவது அடுத்த தேர்தலில் கட்சியினருக்கு வாக்குகள் குறைந்து போவதற்குக் காரணம் ஆகும் என்பது நிச்சயம். இதை உணர்ந்தேதான் இப்போது அதிகாரத்தில் இருக்கும் சர்க்கார் தேர்தல் தேதியைச் சமீபத்தில் வைப்பார்கள் என்றும் கருதலாம். கட்சியின் பிளவினால் பொது மக்களுடைய நம்பிக்கை குறைந்து போகும். கன்சர்வெடிவ் கட்சிக்கு வாக்குப் போடுவதற்கு எப்போதுமே ஆங்கில மக்கள் தயார். தொழிற் கட்சியில் பிளவுகள் உண்டாகி விட்டால் கேட்க வேண்டியதே இல்லை.

எனினும், ஒரு தர்ம சங்கடம் இருந்தே வருகிறது. உலக நன்மைக்கு மிகவும் முக்கியமான ஒரு விஷயத்தைப் பற்றி, "பேசாதே! உன்னுடைய அபிப்பிராயத்தை வெளிப்படுத்தக் கூடாது. வெளிப்படுத்தினால் அது கட்சி ஒழுங்குப் பாட்டுக்கு விரோதமாகும்" என்று சொல்லித் தடுத்து விடுவது ஆங்கில அரசியல் கட்சியின் பழைய தர்மத்துக்கு ஒவ்வாது. இதை சர்ச்சில் எடுத்துக் காட்டியிருக்கிறார். தீவிர வாதங்கள் கொண்ட புதுக் கட்சிகளில் ஒழுங்கை மீறியதாக அங்கத்தினர்கள் பேரில் நடவடிக்கை அதிகமாக எடுத்து வருகிறார்கள். "நம்முடைய கட்சியில் இத்தகைய சிக்கல்கள் கிடையாது. பேச்சுச் சுதந்திரத்தை நாம் தடுப்பது வழக்கமில்லை" என்று பெருமை பேசியிருக்கிறார். என்ன உத்தேசத்துடன் அவர் இதைச் சொன்னாலும் சொன்னதில் உண்மை இருக்கிறது. கட்டுப்பாடு இல்லாமல் அரசியல் கட்சிகளைக் காப்பாற்ற முடியாது. ஆயினும் கட்டுப்பாட்டு நிர்ப்பந்தங்களுக்கு வரம்பு உண்டு. ஜலஜ குண்டு விஷயத்தில் தொழிற் கட்சியில் அமெரிக்க சர்க்காரின் போக்கின் காரணமாக ஒப்புக் கொண்ட கொள்கையை பெவன் அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. இதைப் பற்றி இனி பேசக் கூடாது என்று அவர் பேரில் நிர்ப்பந்தம் போடப் பார்க்கிறார்கள்.

புதிய பெருந் துறைமுகம்

பம்பாய்த் துறைமுகத்துக்கு வடக்கே மேற்கு சமுத்திரத்தில் பிரதான இறக்குமதித் துறைமுகமாகக் கராச்சி இருந்து வந்தது. பாரதநாடு கராச்சித் துறைமுகத்தை இழந்ததால் அதை ஈடு செய்வதற்கு ஒரு புதுத் துறைமுகம் நிறுவ வேண்டியது அவசியமாயிற்று. காலஞ்சென்ற வல்லபாய் பட்டேல், என். கோபாலசாமி ஐயங்கார் இவர்களுடைய ஆசிகளைப் பெற்று ஆறு ஆண்டுகளுக்கு முன் ஆரம்பமான கண்ட்லா துறைமுக நிர்மாணத் திட்டம் இப்போது அனேகமாகப் பூர்த்தியாகி விட்டது. 2,75,000 சதுர மைல்கள் விஸ்தீர்ணமும் நாலரைக் கோடி ஜனத் தொகையும் உள்ள ராஜஸ்தான், ஆஜ்மீர், தில்லி, கிழக்கு பஞ்சாப், மேற்கு உத்தர பிரதேசம் முதலிய பிரதேசங்களுக்கு இந்தத் துறைமுகம் மிகவும் பயன்படும்.

இந்தத் துறைமுகத்தின் ஆரம்ப விழாவை ரயில்வே மந்திரி ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி நடத்தி வைத்தார். தென்னாட்டு என்ஜினீயர்களில் ஒருவராகிய கணபதி ஐயர் அவர்கள் இந்தத் துறைமுகக் காரியத்தில் முக்கிய ஸ்தானம் பெற்று நடத்தி வருவது நமக்கு மகிழ்ச்சி தருகிறது. கங்கையாற்றில் கட்டப்பட்டிருக்கும் பெரியமான வியாவாராவதியும் இவர்தான் கட்டியது. இந்த செயல்களுக்காகத்தான் பத்மபூஷண் பதக்கமும் பெற்றிருக்கிறார். மேற்படி துறைமுக நிர்மாண வேலைகள் பூர்த்தியாகும் போது, கண்ட்லா துறைமுகம் இந்தியாவில் உள்ள ஆறு பெரும் துறைமுகங்களில் ஒன்றாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை. சுமார் பதின்மூன்று கோடி ரூபாய் செலவில் நிர்மாணமாகியுள்ள அத் துறைமுகத்தில் எண்ணெய் இறக்குமதியே அதிகமாக இருக்கும். முக்கியமாக எண்ணெய்க் கப்பல்கள் வந்து நிற்பதற்குத் தகுதியாகவே மேற்படி துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. அங்கு கப்பல்களில் வரும் எண்ணெய் ஐந்து மைல்களுக்கு அப்பால் உள்ள இடத்தில் தேக்கி வைக்கப்படும். அதற்கான குழாய் நிர்மாண வேலைகளும் கட்டட வேலைகளும் பூர்த்தியாகி விட்டன. அத் துறைமுகத்தில் வருஷா வருஷம் லட்சம் டன்களுக்கு மேற்பட்ட எண்ணெயும் மற்ற சாதனங்களும் ஏற்றுமதி, இறக்குமதியாகுமெனில் அதன் முக்கியத்தை உணரலாம்.



திரு லால்பகதூர் சாஸ்திரி

1955-ம் வருஷம் பாரத நாட்டின் அரிய சாதனைகளில் கண்ட்லா துறைமுகமும் ஒன்றாக விளங்கும் என்பது நிச்சயம்.

பாரதி கலா மன்றத்தின் ஆண்டு விழா

பம்பாய் தமிழ் நாட்டிலிருந்து வெகு தூரத்திலிருக்கிறது. இருந்தாலும் பம்பாய்த் தமிழர்களுக்குத் தமிழ் மீதுள்ள அன்பும் பக்தியும் சிறிதும் குறைந்து விடவில்லை. பம்பாய் நகரின் வடக்குப் பகுதியிலுள்ள தமிழ் இளைஞர்கள் 'பாரதி கலா மன்றம்' என்னும் சங்கம் நிறுவித் தமிழ்த் தொண்டு ஆற்றி வருகிறார்கள். பாட்டுக்கொரு புலவன் பாரதியின் புகழ் பரப்பி வருகிறார்கள்.

இலக்கிய ஆர்வமும் பொதுநல சேவையும் மிக்க இளைஞர்கள் நிறுவிய இக் கலை மன்றத்துக்கு ஓராண்டு பூர்த்தியாகியுள்ளது. இவ்வாண்டு விழாவை மார்ச்சு மாதம் 27-ந் தேதி மாதுங்கா நப்பூ ஹாலில் திரு டி. வி. ராமானுஜம் அவர்களின் தலைமையில் வெகு விமரிசையாகக்கொண்டாடினார்கள். திரு எம். சுந்தரம், திரு வி. எஸ். நாயர், திரு எஸ். சீனிவாசய்யர், திரு பி. எஸ். சேஷாத்திரி முதலியோர் அவ் விழாவில் சொற்பொழிவாற்றினர். திரு எம். டி. சோபே மனோதத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சிகள் சிலவற்றைச் செய்து காட்டினார்.


இந்த மன்றத்தின் ஆண்டு விழாவையொட்டி, பாரதி கலா மன்றத்தினர் அழகிய மலர் ஒன்றும் வெளியிட்டிருக்கிறார்கள். கவியரசர் பாரதியாரின் திருவுருவத்தைத் தாங்கிய இம் மலர் உதவி ஜனாதிபதி திரு ராதாகிருஷ்ணன், திரு வி. பி. ராமசாமி அய்யர், திரு க. சந்தானம் முதலியோரின் வாழ்த்துரைகளும், திரு டி. வி. ராமானுஜம், திரு கே. எஸ். எஸ். ராகவன் ஆகியவர்களின் பாரதியாரைப் பற்றிய கட்டுரைகளுமாக ஒரு நல்ல விருந்தாக அமைந்திருக்கிறது.

நகரத்தார்களின் நன்முயற்சி

சென்ற மாதம் பினாங்கில் நடந்த பிரபல செட்டியார்கள் அடங்கிய கூட்டத்தில் மலேயாவிலே ஓர் உயர்தரக் கல்லூரியை நல்ல முறையில் அமைப்பதென்று முடிவு செய்திருக்கிறார்கள். இது எல்லோருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும் நல்ல முடிவு என்பதில் சந்தேகமில்லை.

அரசியல் துறையில் முன்னேறிக் கொண்டிருக்கும் மலாய் நாட்டில் சீனர்கள், மலாய்க்காரர்கள் இவர்களைப் போல் இந்தியர்களின் சமூகமும் பெரியது. அப்படியிருந்தும் அந்த நாட்டில் மற்ற சமூகத்தினரைப் போலன்றி, இந்தியர்களுக்குச் சொந்தமான பொது ஸ்தாபனங்கள் மிக மிகக் குறைவாகும். சீனர்களுக்கென அந்த நாட்டில் ஏராளமான கல்விச் சாலைகளும் நகர மண்டபங்களும் தியேட்டர்களும் இருக்கின்றன. ஆனால் மலாய் இந்தியர்கள் அவ்விதம் பெருமைப் படுவதற்கு

கல்கத்தாவில் இசை விருந்து



கல்கத்தாவில் தென்னாட்டுக் கலைகளுக்கு மகத்தான சிறப்பை உண்டாக்கிய பெருமை, அவ்வூரில் வாழும் தமிழர்களுக்குத் தனிக் கௌரவத்தை அளித்து வரும் ரஸிக ரஞ்சன சபையைச் சாரும். சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட ரஸிக ரஞ்சன சபை விரைவில் பெரிதாக வளர்ந்து, சொந்த நிலமும் வாங்கி யிருக்கிறது. அதில் கட்டவிருக்கும் தியாகராஜா மண்டபத்துக்கு அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் மார்ச் 13உ அஸ்திவாரக் கல் நாட்டினார்.

இவ் வருஷம் சபாவின் சொந்த நிலத்திலேயே தியாகப் பிரம்ம மகோற்சவம் நடந்தது மிகப் பொருத்தம். மிகவும் விமரிசையாக நடந்த மேற்படி மகோற்சவத்தில் அரியக்குடி ராமானுஜ ஐயங்கார், ஆலத்தூர் சகோதரர்கள், டி. என். கிருஷ்ணன் போன்ற சங்கீத வித்வான்களும், எம். எல். வசந்தகுமாரி, வேணி, தனலக்ஷ்மி முதலிய கலைஞர்களும் பங்கெடுத்துக் கொண்டு தெவிட்டாத இன்னிசை விருந்தளித்தனர். குமாரி சுசீலாவின் பரத நாட்டிய நிகழ்ச்சி குறிப்பிடத் தக்க அம்சமாக விளங்கியது.

வழி ஏற்படவில்லை. அந்த நாட்டில் ஒவ்வொரு நகரத்திலும் இந்தியர்களின் ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டிருப்பது போல், கல்வி ஸ்தாபனங்களும், பொது நிலையங்களும் ஏற்பட வேண்டும். இந்தியர்களின் முன்னேற்றத்துக்கும் நல் வாழ்வுக்கும் அத்தகைய ஸ்தாபனங்கள் அத்தியாவசியமானவை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

பாரதியார் தந்த செல்வம்

மகா கவி பாரதியாரின் பாடல்களும் அந்தப் பாடல்களைப் பாடும் உரிமையும் மகா கவி அளித்துள்ள மற்ற இலக்கியச் செல்வங்களும் தமிழ் நாட்டின் பொதுச் சொத்தாக வேண்டுமென்று பலரும் சொல்லிவந்தார்கள்.

அதன் பயனாக பாரதியார் பாடல்களையும், இதர இலக்கியங்களையும் சிறந்த முறையில் அச்சுப் பிழைகளைச் சோதித்து சர்க்காரிலேயே அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர். ஆனால் பாரதியார் பாடல்களை சினிமா, நாடகம், பள்ளிக்கூடப் புத்தகங்கள் ஆகியவற்றில் சேர்த்துக் கொள்வதாயிருந்தால் அதற்காக சர்க்காரிடமிருந்து உத்தரவு பெற்றே உபயோகித்துக் கொள்ள வேண்டும் என்று சட்டம் இருந்தது.

பாரதியாரின் பாடல்களும் இலக்கியங்களும் பொது மக்களின் சொத்தாக இருந்தும், அதை உபயோகித்துக் கொள்வதில் இருந்த இந்தச் சட்டத்தால் தமிழ் மக்களுக்குப் பெரிய தடை இருந்தது. எளிதில் பாரதியின் இலக்கியங்களை உபயோகித்துக் கொள்ள உத்தரவு கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் எதிர்பார்த்த பலன் கிடைக்காமல் இருந்து வந்தது.

இந்தத் தடையையும் நீக்கி விட வேண்டும் என்று பாரதி பக்தர்களும், தமிழ் வளர்ச்சியில் ஆர்வமுள்ள பலரும் முயன்று வந்தனர்.

அந்தத் தடையையும் சர்க்கார் இப்போது நீக்கி விட்டனர். மகா கவி பாரதியாரின் அமிழ்தினும் இனிய கீதங்களை இனித் தமிழ் மக்கள் தாராளமாக எவ்விதத் தடையும் இன்றி அச்சடித்துப் பயன் அடையலாம். கலை அரங்குகளில் பாரதியின் கீதங்களைக் காது குளிரக் கேட்கலாம். பாட புத்தகங்களில் சேர்த்து இளங்குழந்தைகளுக்கு உணர்ச்சியும் அறிவும் ஊட்டலாம்.

பாரதி பாடல்களை யாரும் அச்சிடலாம் என்கிற சுதந்திரம் இனி உண்டு. ஆனால் வியாபாரத்தை உத்தேசித்து இந்தத் துறையில் இறங்குவதில் இனி அதிகப் பயன் உண்டாகாது. நல்ல முறையில், அச்சுப் பணியாற்றி, மனதைக் கவரும் படியான அழகோடு நல்ல காகிதத்தில் குழந்தைகளும் படிக்கும்படியான அச்செழுத்துக்களைக் கொண்டு பிரசுரித்தால் இப்போது விஸ்தரிக்கப்பட்டுள்ள இப் பொது உரிமையினால் மக்களுக்கு நன்மை உண்டாகும். பாரதியாருக்குச் செலுத்த வேண்டிய கௌரவமும் ஆகும்.

பூதான மகாநாடு

பூரி ஜகந்நாத க்ஷேத்திரத்தில் பூதான மகாநாடு கூடி மிகச் சிறப்பாக நடந்ததாகத் திரும்பி வந்த தமிழ் நாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் சொல்லுகிறார்கள். இதைப் பற்றி அறிக்கைகளும் படங்களும் இனி வரும். அரசியல் பலாத்காரம் இன்றி, சுவும் இரக்கமும் அடிப்படையாகக் கொண்ட இயக்கத்தை, வினோபா அடிகள் நடத்துகிறார்கள். இதில் தமிழ் மக்களும் தங்களுக்கு உரிய இடத்தையும் சிறப்பையும் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

"கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். அதற்கேற்ப வடமொழி இலக்கியங்களிலும், தர்ம சாஸ்திர நூல்களிலும் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டு, அரும் சேவை புரிந்து வரும் பிரமுகர்களில் ஒருவரான திரு கே. பாலசுப்ரமணிய அய்யர் அவர்கள் சமீபத்தில் 'கவி கோகிலம்' என்னும் பட்டம் பெற்ற அறிஞரைப் பற்றி எழுதுகிறார்: —ஆசிரியர்

டாக்டர் ராகவன்

கே. பாலசுப்ரமண்ய ஐயர்

ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர் அவர்கள் பிரசித்தமான கர்நாடக சங்கீத திருமூர்த்திகளில் ஒருவர் என்பது எல்லோரும் அறிந்ததே. அவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தை ஒரு அழகான காவியமாகச் செய்வது சங்கீத உலகத்துக்கே ஒரு நன்மையைப் பயக்கும் என்பதில் ஐயமில்லை. தன்னுடைய ஆராய்ச்சியாலும், நல்ல படிப்பினாலும், முத்துசாமி தீக்ஷிதர் அவர்களுடைய பிறந்த ஊராகிய திருவாரூரின் மகிமையையும், தியாகேசருடைய பெருமையையும், முத்துசாமி தீக்ஷிதர் அவர்களுடைய தகப்பனாரின் வரலாற்றையும், அவர் நன்கு கற்றுத் தேர்ச்சி யடைந்த வழிகளையும், அவர்கள் குருவாக இருந்தவருடைய பெருமையையும், அவருடைய சங்கீத உயர்வின் தத்துவத்தையும், அவர் சாகித்யத்தின் நுட்பங்களையும், பல ஆலயங்களுடைய தெய்வங்களின் வழிபாட்டின் முறைகளை நன்கு பாடின அழகையும், இவ்வெல்லாவற்றையும் தொகுத்து அழகான சமஸ்கிருத பாஷையில் மாந்தர்களுக்குப் படிக்கக் கூடிய வகையில் ஒரு சிறந்த காவியத்தை இயற்றியது நம் எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது.



டாக்டர் ராகவன்

இந்தக் காவியத்தை டாக்டர் ராகவன் அவர்கள் நமது ஜகத்குரு சங்கராச்சாரியார் அவர்களிடத்தில் பல தடவைகள் படித்துக்காண்பித்ததில் அவர் இந்தக் காவியத்தின் பெருண்மையைக் கண்டு மனமகிழ்ந்து டாக்டர் ராகவன் அவர்களுக்கு "கவி கோகிலம்" என்ற விருதை அனுக்கிரகித்தார்கள். அது ரொம்பவும் பொருத்தமாக இருந்தபடியாலும் சங்கராச்சாரியார் சுவாமிகள் அவர்கள் உத்தரவுப்படி சென்னை சமஸ்கிருத சேவா சமிதியில் அந்த காவியத்தை மார்ச்சு மாதம் 23-ந் தேதி ஒரு கூட்டத்தில் ராகவன் அவர்கள் படித்துக் காண்பித்தார். பல பேரறிஞர்கள் அங்கு வந்திருந்தனர். இக் காவியத்தின் சிறப்பை நன்கு உணர்ந்து மெச்சியும் பேசினார்கள். மார்ச் மாதம் 31-ந் தேதி வால்மீகி தின விழாக் கூட்டத்தில், நம் கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்களுடைய தலைமையில் விழா நடந்தது. அன்று அவர் முன்னிலையில் மக்கள் நிரம்பிய கூட்டத்தில் "கவி கோகிலம்" என்ற விருதானது டாக்டர் ராகவன் அவர்களுக்கு வழங்கப் பெற்றது. பாரத நாட்டிலே உள்ள பல பெரிய வித்வான்கள் எல்லோரும், விருது வழங்கின பொருத்தத்தைப் பாராட்டி சந்தோஷித்துக் கடிதம் எழுதியிருந்தனர். சென்னை பல்கலைக் கழகத்தில் சமஸ்கிருத தலைமை ஆசிரியராக இருக்கும் டாக்டர் ராகவன் அவர்கள் சில மாதங்களுக்கு முன் ஐரோப்பாவுக்குச் சென்று அங்குள்ள ஏட்டுச் சுவடிகள் தொகுதிகளையெல்லாம் நன்கு ஆராய்ந்து பார்த்துப் பெருமை வாய்ந்த வேலையைச் செய்தார்கள். இந்த வேலை செய்வதற்காகவே அவரைச் சென்னை பல்கலைக் கழகத்தார் ஐரோப்பாவுக்கு அனுப்பினார்கள். பல்கலைக் கழகத்திலும் உலகத்திலுள்ள எல்லா சமஸ்கிருத ஏட்டுப் பிரதிகளுடைய குறிப்புகளைக் கொடுக்க வேண்டிய ஒரு வேலையில் அவரை நியமித்தார்கள். அதைச் செய்வதற்கு ரொம்ப தகுதி யுள்ளவராக அவர் இருக்கிறார். மகாமகோபாத்தியாய குப்புசாமி சாஸ்திரி அவர்களிடத்தில் முக்கிய சிஷ்யராக இருந்து டாக்டர் பரீக்ஷையில் தேறி அந்த விருதையும் பெற்றார். ஆங்கிலப் படிப்பிலும் நவீன ஆராய்ச்சி முறைகளிலும் சமஸ்கிருத சாகித்தியத்திலும் அவர் வல்லவர். முத்துசாமி தீக்ஷிதர் சரித்திரம் என்ற காவியத்தை உயர்ந்த முறையில் செய்வதற்கு வேண்டிய குணங்கள் முழுவதும் பொருந்தியவர். சங்கீத உலகத்துக்கும் சமஸ்கிருத சாகித்ய உலகத்துக்கும் இது ஒரு பெரும் தொண்டாகக் கருதப்படும்.

அட்டைப்பட விளக்கம்

எங்கே பார்க்கிறாள்?

"கொடியும் செடியுமெல்லாம் — அவன்றன்
கோலம் விளங்குதடி!"

நீரோடையில் தண்ணீர் கொண்டு வரச் சென்றாள். ஆனால் இதென்ன? குடத்தைக் கீழே வைத்து விட்டு ஏன் இப்படி நிற்கிறாள் அந்த நங்கை?

எத்தனையோ இனிய சந்திப்புக்களுக் கெல்லாம் இடமாக அமைந்த அந்தப் பூங்கொடியின் தண்ணிழலில் மானும் தானுமாக நின்று மறுகுகிறாள் அவள். அவளுடைய உள்ளத்தின் உணர்ச்சிகள் அந்த நீரோடையைப் போல் பொங்கி ஓடுகின்றன. அவளுடைய காதலன் வரும் திக்கை நோக்குகின்றன அருகில் நிற்கும் மானின் விழிகள்.

உலகம் தோன்றியது முதல் மனிதனுடைய கற்பனை இந்த மாதிரிக் காட்சிகள் பலவற்றைச் சிருஷ்டித்திருக்கிறது. உலக இலக்கியங்கள் பலவும் இவ்வித இனிய சந்திப்புகளில் கதையை உருவாக்கி இலக்கிய ரசிகர்களை மகிழ்வூட்டி யிருக்கின்றன.

காதல் என்ற உணர்ச்சியைப் புனித நிலைக்கு உயர்த்தி, இறைவனுடனேயே பக்தனின் உள்ளம் நேசம் கொள்வதாக எல்லாம் நமது நாட்டுக் கவிஞர்கள் பாடியிருக்கிறார்கள். நிரந்தரமான இந்த உணர்ச்சி தத்துவமே மனிதர்களின் கற்பனை — நீரோடையாக ஓடி எத்தனையோ பல ஆண்டுகளாக உலக இலக்கியத்தையும் கலைகளையும் பல துறைகளில் வளர்த்து வந்திருக்கிறது.


உள்ளமும் உணர்ச்சிகளுமாக அமைந்த இந்த மூவர்ணச் சித்திரத்தை இந்த இதழின் அட்டைப் படமாக வழங்குகிறார் ஓவியர் சந்திரா.

சிறுவர்கள் சித்திரப் போட்டி

பரிசு ரூபாய் 20

○●○

- சிறுவர்களுக்கு இயற்கையிலேயே சித்திரங்கள் வரைவதற்கு ஆவல் இருப்பது இயல்பல்லவா? அந்த ஆவலைத் தூண்டி அவர்களை ஊக்குவிப்பதற்காகவே இந்தச் "சிறுவர்கள் சித்திரப் போட்டி"யை ஆரம்பித்திருக்கிறோம்.
- இந்தப் போட்டியில் பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட எல்லாச் சிறுவர்களும் சிறுமிகளும் கலந்து கொள்ளலாம்.
- தங்களுக்குத் தோன்றிய எந்த உருவத்தையும், எறும்பில் இருந்து ஏரோப்ளேன் வரை, குருவியில் இருந்து கோபுரம் வரை, எதை வேண்டுமானாலும் வரைந்து அனுப்பலாம். வரையும் படங்களுக்கு அடியில் தங்கள் பெயரையும் வயதையும் மறந்து விடாமல் குறிப்பிட வேண்டும்.
- படங்களைக் கறுப்பு மையில் வரைந்து அனுப்ப வேண்டும். வர்ணங்களில் வரைந்து அனுப்பப்படும் படங்கள், போட்டிக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.
- பிரசுரத்துக்கு உரிய படங்கள் 'கல்கி' இதழ்களில் பிரசுரிக்கப்படும்.
- 'கல்கி' பத்திரிகையின் அளவுக்கு நல்ல வெள்ளைக் காகிதத்தைக் கத்தரித்து, அதில் முக்கால் பக்கம் வரும்படி கறுப்பு மையினாலேயே படம் வரையவேண்டும்.
- பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளாத படங்களைத் திரும்ப அனுப்புவதற்கில்லை.
- ஒவ்வொரு மாதம் முடிவிலும் அந்த மாதத்தில் வெளியான மூன்று சிறந்த படங்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதற் பரிசு பத்து ரூபாய். அடுத்த இரண்டு பரிசுகள் ஒவ்வொன்றும் ஐந்து ரூபாய்.
- படங்கள் அனுப்பும் உறையின்மீது "சிறுவர் சித்திரப் போட்டி" என்று குறிப்பிட்டு, "ஆசிரியர், கல்கி, சென்னை—10" என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.



காற்றினிலே வரும் கீதம்

நா. ராமகிருஷ்ணன்

சென்ற மார்ச் 29-ந் தேதி பாலக்காடு சுப்ரமண்ய அய்யர் அவர்களுடைய ரேடியோக் கச்சேரி நடைபெற்றது. பாவம் நிறைந்த பாட்டு. ரீதிகௌள ஆலாபனை நன்றாக இருந்தது. ஆனால், இன்னும் நிதானமாகவும், சங்கதிகளுக்கிடையே அவகாசம் விட்டும் ஆலாபனை செய்ய வேண்டும். இக்குறைவினால், சங்கதிகளுடைய முழு அழகு தெளிவாக வருவதில்லை. சுத்தசாவேரி கீர்த்தனையில் (காலஹரண) பாடிய நிரவல் விதரணையாக இருந்தது. தேவ் ஆலாபனை சுருக்கமாக இருந்தாலும், இனிமையாக இருந்தது.

அதே தினம் வீணைவாசித்த வி. ஸ்ரீகண்டய்யரின் கல்யாணி ஆலாபனை பாவத்துடன் இருந்தது. கானடா ஆலாபனையில் அதிகம் கற்பனை இருந்திருக்கலாம். ஸைந்தவி ஆலாபனை மிக சாதாரணமாக இருந்தது. நவரச கன்னடா கீர்த்தனை (நின்னுவினா) மிடுக்காக இருந்தது. மற்றக் கீர்த்தனைகள் கமகக் குறைவான வாசிப்பினால் கவர்ச்சியாக இருக்க வில்லை. கானடா கீர்த்தனையின் (ஸ்ரீ நாரத) பல்லவியில், மந்தரஸ்தாயி 'தரித' பிரயோகத்தில், கரஹரப்ரியா த்வனித்துக் கொண்டிருந்தது. நிஷாதத்தைத் தீர்க்கமாகப் பிடித்திருக்கலாம்.

29-ந் தேதி யன்று மாயூரம் எஸ். ராஜம் ஆனந்தபைரவி, சாருகேசி, பைரவி, காம்போதி, சிம்மேந்திரமத்யமம், கானடா ராகங்களை ஆலாபனை செய்தார். எல்லாம் பாவப்ரதானமாக இருந்தன. ஆனந்தபைரவி தரமாக இருந்தது. ஹம்ஸாநந்தி ஆலாபனையில் பஞ்சமத்துக்கு மேலே 'உருட்டல்' சங்கதிகள் அமிதமாக இருந்தன. கற்பனைக்கு இடம் கொடுத்துப் பாடியிருக்கலாம். பொதுவாக, ஆலாபனைகளில் சங்கதிகளுக்கு இடையேதேவையான அவகாசம் கொடுத்துப் பாடினால்தான் குழைவு சங்கதிகள் பரிமளிப்பாக வெளிவரும். மேலும் நிதானக் குறைவினால், நயமும் பாதிக்கப்படுகிறது. கீர்த்தனைகளும், ஸ்வரங்களும் நன்றாக இருந்தன.


அதே தினம் மற்றொரு விசேஷ நிகழ்ச்சி நடைபெற்றது. முடிகொண்டான் வேங்கடராமய்யர் கல்யாணி ராகத்தில், ஆலாபனை, தானம் பல்லவி பாடினார். ஆலாபனையும், தானமும் முதல் தரம் என்று சொல்லத் தேவையில்லை. சிறிதளவே பாடினாலும், லக்ஷியதரமாக இருந்தது. பல்லவி, ஆதிதாளம் 32 களை சவுக்கத்தில் பாடப்பட்டது; எடுப்பு முக்கால் இடம். பல்லவியை ஒரு ஆவர்த்தனம் பாடித் திரும்புவதற்குள் பல நிமிஷங்கள் ஆகின்றன. ஆனால், ஒரு ஆவர்த்தனத்துக்குள் ராகத்தின் அத்தனை சாயைகளையும், விதரணையுடன் அமைத்துப் பாடியது உயர்ந்த சாதகத்தையும், நிறைந்த கற்பனையையும் காட்டின. ஒவ்வொரு ஆவர்த்தனமும், சிறு பாவம் நிறைந்த வர்ணம் ஒன்று பாடியது போல் இருந்தது. பல்லவியை ஆறு காலத்தில் பாடி அனுலோமம் செய்தார். பிறகு எட்டுக் களைச் சவுக்கத்திலும் பாடினார். கற்பனாஸ்வரம் வெகு விதரணையாக இருந்தது. இத்தகைய ஷண்மார்க்கப் பல்லவி, ரேடியோ மூலமாக அல்லாமல், நேராகப் பாடிக் கேட்டால்தான், பூரணமாக அனுபவிக்க முடியும்.

திண்டுக்கல் எஸ். பி. நடராஜன் 30-ந் தேதி யன்று புல்லாங்குழல் வாசித்தார். நிதானமாகவும், கமக நிறைவுடனும் வாசிக்கிறார். ரீதிகௌள ஆலாபனை விஸ்தாரமாக இருந்தது. கீர்த்தனைகள் இனிமையாக இருந்தன. ரீதிகௌள கீர்த்தனையை (த்வைதமு) விசேஷமாகக் குறிப்பிடலாம். ஆனால், பொதுவாக சங்கதிகளின் இறுதிப் பாகங்கள் தேவையான காத்ரத்துடன்வெளிவரவில்லை.காத்ர பூரணத்துடன் இருந்திருந்தால், வாசிப்பிலுள்ள குழைமை, இன்னும் சற்றுப் பிரதானமாக இருந்திருக்கும்.

ஏப்ரல் முதல் தேதி த்வாரம் நரசிங்கராவ் அவர்களின் வயலின் இசை நடைபெற்றது. அவருடைய குரு, த்வாரம் வேங்கடசாமி நாயுடு அவர்களின் பாணியை அநுசரித்து வாசிக்கிறார். ஆனால் குருவின் வாசிப்பிலுள்ள நயம் இவர் வாசிப்பில் அவ்வளவு ஏற்படவில்லை. மத்யம கால கீர்த்தனைகள் நன்றாக இருந்தன. ஆனால், குழைவு தேவையான கீர்த்தனைகள், தரமாக இருக்கவில்லை. உதாரணமாக, தோடி கீர்த்தனை (எந்துகு தயராது)யில் போதிய நயம் இருக்கவில்லை. இதில் வாசித்த கற்பனாஸ்வரம் விதரணையாகவும், பாவத்துடனும் இருந்தது. சங்கராபரண ஆலாபனை விமரிசையாக இருந்தாலும் தாரஸ்தாயி பிரஸ்தாரங்களில் இனிமையும், நிதானமும் அவ்வளவாகப் போதவில்லை.



முடிகொண்டான்
ஸ்ரீ வேங்கடராமய்யர்



நான் பாக்கியசாலி

எஸ். வைத்தியநாதன்

என்னுடைய இரு புதல்விகளும் புக்ககத்திலிருந்து வந்திருந்தார்கள். இளையவளாகிய இந்திரா ஏதோ உடம்பு அசௌகரியமென்று பெரிய ஆஸ்பத்திரியில் காட்டி மருந்து சாப்பிடலாம் என்று வந்திருந்தாள். அவள் புக்ககம் இருந்தது ஒரு சிற்றூரில். அங்கே அவ்வளவாக வைத்திய வசதி கிடையாது. மூத்தவளாகிய விஜயா புக்ககத்திலேயே மூன்றாவது குழந்தையைப் பிரசவித்துவிட்டு, ஒரு மாதம் கழித்து ஓய்வுக்காகப் பிறந்தகத்துக்கு வந்திருந்தாள். மூன்றாவது பிரசவம் பிறந்தகத்தில் நடக்கலாகாது என்று ஏதோ சாஸ்திரமாம்.

இன்னும் இரண்டு தினங்களில் விஜயாவை அவள் கணவன் வந்து அழைத்துக் கொண்டு போவதாக இருந்தது.

அன்று விஜயா என்னிடம், "அப்பா! நேற்று கிருஷ்ணஸா கடையில் ஒரு ஸில்க் கவுன் பார்த்து வைத்துவிட்டு வந்திருக்கிறேன். எவ்வளவு அழகாயிருக்கிறது, எப்படிக் கண்ணைப் பறிக்கிறது என்கிறாய்! அதன் விலையும் பதினைந்து ரூபாய் தானாம்!" என்றாள்.

"இப்போது கவுன் யாருக்கு! நீயா போட்டுக் கொள்ளப் போகிறாய்!"

"போ அப்பா! உனக்கு எப்போதும் பரிகாசம் தான்!...கவுன் யாருக்கு என்று உனக்குத் தெரியாதாக்கும்! நம்ப சாமளிக்குத்தான்!"

நான் திடுக்கிட்டுத் திகைத்துப் பிரமித்தேன். சாமளி அவளுடைய மூன்று மாதத்துக் கைக்குழந்தை!

"ஏன் விஜயா! இந்த மூன்று மாதத்துக் குழந்தைக்கு கவுன், அதுவும் பதினைந்து ரூபாயில் அவசியமா! அது போட்டுக் கொள்ளப் போகிறதா! பெட்டிக்குள் வைத்து அழகு பார்ப்பதற்காகப் பணத்தைக் கொட்டி வாங்குவார்களா யாராவது! அப்படியாவது என்னிடம் பணம் லக்ஷ்யமில்லாமல் புரளுகிறதா! என்னுடைய நிலைமை உனக்குத் தெரியாததல்லவே!" என்றேன் அவளிடம்.

விஜயா பெரிதாகப் புலம்ப ஆரம்பித்து விட்டாள்:— "எனக்கு ஏதாவது செய்வதென்றால் உங்களுக்கு மனசே வருகிறதில்லை. இரண்டு பிள்ளைகளுக்கப்புறம் இப்போதுதான் ஒரு பெண் குழந்தை பிறந்திருக்கிறது எனக்கு. ஆசைப்பட்டு அதற்கு ஒரு கவுன் துணி வாங்கும்படி கேட்கிறேன். ஏதோ சால்ஜாப்பு சொல்கிறீர்கள்."

அவளுக்குச் சமாதானம் சொல்வது வீண் வேலை என்ற கருத்துடன் எழுந்து போய் விட்டேன். நான் ஏதோ ஒரு ஆபீஸில் எழுபது ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தா. விஜயாவும், இந்திராவும் ஆகிய இரு பெண்களைத் தவிர கடைக்குட்டிப் புதல்வன் ஒருவன் இருக்கிறான் எனக்கு. அவன் ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருக்கிறான்.

இரண்டு பெண்களின் கல்யாணத்துக்காகவும் வாங்கின கடனை என்னுடைய வீட்டை விற்று அடைத்தது போக மிச்சமிருப்பதை என்னுடைய சம்பளத்திலிருந்து மாதம் இருபது ரூபாயாகக் கட்டிப் பைசல் பண்ணிக் கொண்டிருக்கிறேன். எனவே குடும்பக் காலக்ஷேபமே மிக்க சிரமத்துடன்தான் நடக்கிறது.

நாளைக்கு விஜயாவைப் புக்ககத்துக்கு அனுப்புவதற்குப் பட்சணம், அது இது என்று முப்பது ரூபாய் வரையில் செலவழியும். அதற்காக எங்கெங்கோ அலைந்து, கேட்காதவர்களையெல்லாம் கேட்டு எப்படியோ அந்தத் தொகையைச் சேகரித்துக் கொண்டிருந்தேன். இந்த லக்ஷணத்தில் மூன்று மாதக் குழந்தைக்குக் கவுன் இல்லாமல் குறையாக இருக்கிறதாம், விஜயாவுக்கு! எங்கிருந்து இன்னொரு பதினைந்து ரூபாய் புரட்டுவது நான்!

இந்திராவின் கணவனாவது வெகு சாதாரண அந்தஸ்திலுள்ளவன். ஆனால் விஜயாவின் புருஷன் அப்படியில்லை. கை நிறையச் சம்பாதிக்கிறான். விஜயாவைத் தலைமேல் வைத்துத் தாங்குகிறான். அவள் என் என்பதற்கு முன் எண்ணெயாக வந்து நிற்கும். தன்னுடைய தேவைகளையும் அபிலாஷைகளையும் அவள் பூர்த்தி செய்து கொள்ளப் புக்ககத்தில் யாதொரு தடையும் கிடையாது. என்றாலும் பிறந்தகத்திலிருந்து ஏதாவது சுரண்டிக் கொண்டேயிருப்பதில் அவளுக்கு ஒரு திருப்தி. இங்கே வசதியிருந்தால் யாரும் ஆட்சேபணை சொல்லப் போவதில்லை. அதை அவள் உணருவதில்லை. பொறுப்பில்லாமல் ஏதாவது தொந்தரவு

செய்து கொண்டே இருப்பாள். அவள் இஷ்டப் பட்டது உடனே நடந்து விட வேண்டும். அது அத்தியாவசிய மானதுதானா என்பதைப் பற்றி அவள் சிந்திப்பது கிடையாது. அவள் கேட்டது கிடைக்காவிட்டால் அழுகையும், ஆர்ப்பாட்டமும் ஆங்காரமுமாக ஒரே ரகளைதான்.

இந்திரா இருக்கிறாளே, வாயைத் திறந்து தனக்கு இது வேண்டுமென்று கேட்பதே அபூர்வம். அப்படி அவள் ஏதாவது கேட்டு அது நிறைவேறா விட்டாலும் அதற்காகக் குறை கூறி ஆர்ப்பாட்டம் செய்ய மாட்டாள். "அதனால் என்ன அப்பா! பரவாயில்லை" என்று கூறி விடுவாள். கையில் பணமில்லாத போது அப்பாவைத் தொந்தரவு செய்து விட்டோமே என்று பச்சாத்தாபப்படுவாள்.

அப்படித்தான் பத்து நாட்களுக்கு முன்பு இரண்டு மூன்று எவர்ஸில்வர் பாத்திரம் வேண்டுமென்று கேட்டாள் அவள். எல்லாமாகப் பத்து ரூபாய் ஆகும். என்னிடமோ தம்பிடி இல்லை. "குழந்தாய்! நீயே வாயைத் திறந்து கேட்கிறாய்! இந்த அதிர்ஷ்டஹீனனிடம் காசே இல்லையே! வருத்தப் படாதே! கொஞ்சம் பொறு! எப்படியாவது முயற்சி பண்ணி வாங்கிக் கொடுக்கப் பார்க்கிறேன்!" என்றேன் வருத்தத்துடன்.

"அப்பா, சிரமப்படாதீர்கள்! இப்போ எவர் ஸில்வர் பாத்திரம் இல்லாமல் என்ன குடி மூழ்கி விடப் போகிறது! வீணாகக் கஷ்டப்படாதீர்கள்!" என்று கூறினாள்.

'ஐயோ பாவம்! இந்த உத்தமப் பண்பு நிறைந்த குழந்தையின் அற்ப அபிலாஷையைக் கூட நிறைவேற்ற முடியாத தரித்திரனாயிருக்கிறோமே!' என்று துயரடைந்தேன்.

*　　*　　*

அன்று முழுவதும் அழுது ஆகாத்தியம் பண்ணி வீட்டில் எல்லோரையுமே கலக்கிக் கொண்டிருந்தாள் விஜயா. என் மனைவி "இருக்கிற நிலைமை தெரியாமல் அப்படிக் குதிக்கிறாயேடி, விஜயா! அப்படியாவது இன்றியமையாத வஸ்துவா அந்த கவுன்! குழந்தையின் ஆண்டு நிறைவுக்கு அதைவிட ஒசத்தியாக ஒரு கவுன் வாங்கிக் கொடுத்து விடுகிறோம். வீணாக எங்களைத் தொந்தரவு பண்ணாதே! உனக்குப் புண்ணியமுண்டு" என்று மன்றாடினாள் விஜயாவின் காதில் ஏறினால்தானே!

"நான் கேட்ட போது கிடைக்காத வஸ்து அப்புறம் கிடைத்தால் என்ன, கிடைக்கா விட்டால் என்ன! நீங்கள் எனக்கு ஒன்றும் செய்யவே





புது டில்லியில் 'ஷங்கர்ஸ் வீக்லி' பத்திரிகையினர் நடத்திய குழந்தைகள் விழாவில், பற்பல குழந்தைகள் நாடகங்கள், நடனம் முதலான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தம் கலைத் திறமையைக் காட்டின. மத்திய அரசாங்க அமைச்சர் ஸ்ரீ ஓ. வி. அளகேசனின் புதல்வி குமாரி ஊர்மிளா பரத நாட்டிய நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மிக அருமையாக ஆடினாள். அன்னிய நாட்டினர் உள்பட அனைவரும் ஆறு வயதுச் சிறுமியான ஊர்மிளாவின் நடனத்தை வியந்து பாராட்டினர்.

வேண்டாம்! அப்பா அம்மா இல்லாத அனாதை என்று எண்ணிக் கொண்டு விடுகிறேன்'' என்று அசட்டுத்தனமாய் உளறினாள்.

இந்திராகூடத் தமக்கையைச் சமாதானம் பண்ண முயன்றாள். "அக்கா! கையில் வைத்துக் கொண்டா மாட்டேன் என்கிறார்கள், நம்முடைய அப்பா அம்மா! வசதி இருந்தால் நமக்குச் செய்யாமல் வேறு யாருக்குச் செய்யப் போகிறார்கள்! எல்லாம் தெரிந்திருந்தும் நீ இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறது நன்றாக இருக்கிறதா!''

தங்கையின் மீது சீறிப் பாய்ந்தாள் மூத்தவள். "போதும்டீ! நீ எனக்கு உபதேசம் பண்ண மாட்டாயா! நீ கேட்பவைகளெல்லாம் உடனே கிடைத்து விடுகின்றன. நீ அவர்கள் பக்கம்தானே பேசுவாய்! நான் எப்படிப் போனால் உனக்கு என்ன! அவரவர்களுக்கும் சுயகாரியம் ஆனால் போதும்!'' என்று பொரிந்து தள்ளினாள். பாவம், இந்திரா வாயடைத்துப் போனாள், அக்காவோடு தர்க்கம் பண்ணி விவாதத்தை வளர்த்த விரும்பாமல்.

விஜயா அன்று ஆடிய நாடகம் எனக்கு அளவற்ற துயரத்தையும் வேதனையையும் அளித்தது. மூன்று குழந்தைகளுக்குத் தாயாகி விட்ட ஒரு பெண் இப்படியும் நிலைமையை உணர மறுத்து அட்டகாசம் செய்வாளா என்ற வியப்பும் அடைந்தேன். "கடவுளே! எனக்குக் குழந்தைகள் வேண்டுமென்று தவமிருக்க வில்லையே! எதற்காக எனக்குக் குழந்தைகளை அளித்தாய்!'' என்று பொருமினேன்.

எனக்கு வேறு பயமொன்றும் பிடித்துக் கொண்டது. நாளைக்கு விஜயாவின் கணவன் வருவான். அவன் எதிரிலும் அவள் தன் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து நடத்தினால்! எனக்கு எத்தகைய தலை குனிவு! எனவே அவளுடைய கோரிக்கையை நிறைவேற்றிவிட வேண்டியது தான் என்று முடிவு செய்தேன். மறுபடியும் எங்கெங்கோ அலைந்து, தெரிந்தவர்களை யெல்லாம் கெஞ்சி அவள் கேட்ட தொகையைக் கடன் வாங்கிக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தேன். அவள் அகமும் முகமும் மலர்ந்தன. "என்ன இருந்தாலும் அப்பா ரொம்ப நல்ல அப்பா தான்! இவ்வளவு தூரம் என்னை அழ வைக்காமல் அப்போதே கொடுத்திருந்தால் என்ன அப்பா!'' என்று விஜயா கொஞ்சினாள்.

"அழ வைத்தது நீயா நானா அம்மா!'' என்றேன் சலிப்புடன்.

உடனே கடைத் தெருவுக்குக் கிளம்பி அந்த கவுனை வாங்கிக் கொண்டு வந்து விட்டாள் அவள்.

இரண்டு நாளில் அவளுடைய கணவன் வந்து அவளை அழைத்துக் கொண்டு போய் விட்டான். இந்திரா மட்டும் இங்கே தங்கியிருந்தாள்.

எனக்கு உள்ளூற வேதனையொன்று. இந்திராவின் முகத்தை ஏறிட்டு நோக்குவதற்கே அச்சமாயிருந்தது. அவள் கேட்ட எவரெவர் பாத்திரங்களை வாங்கிக் கொடுக்காமல் தட்டிக் கழித்து விட்டு, இப்போது விஜயாவுக்கு அவசியமில்லாத கவுனுக்காகப் பதினைந்து ரூபாய் கொடுத்தேன் அல்லவா! அதைப் பற்றி இந்திரா வெளிப்படையாகப் புகார் ஒன்றும் சொல்லா விட்டாலும் மனசுக்குள்ளாவது ஏதாவது எண்ணிக் கொண்டிருப்பாள் அல்லவா! நான் ஓர வஞ்சனை செய்கிறேனென்று துயரமும் கோபமும் அடைந்திருப்பாள் அல்லவா! அவள் சாதுவாக இருப்பதினால் அவளை நான் ஏமாற்றுகிறேன். 'அக்கா வாயடி கையடி அடித்து எல்லாவற்றையும் சாதித்துக் கொண்டு விடுகிறாள்' என்று அவளுக்கு வருத்தமிருப்பது இயற்கைதானே!

விஜயா ஊருக்குப்போன அன்று மாலை இந்திராவை அழைத்து நான் கூறினேன். "குழந்தாய்! நீ கேட்ட சாமானை அன்று வாங்கிக் கொடுக்கவில்லை நான். ஆனால் விஜயாவின் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு சகிக்க முடியாமல் தாங்க வொணாத கஷ்டப்பட்டு அவளுக்கு அந்தப் பதினைந்து ரூபாயைக் கடன் வாங்கிக் கொடுத்தேன். ஏற்கெனவே இருக்கும் கடன்களெல்லாம் போதாதென்று இது வேறு அநாவசியச் சுமை. அதையெல்லாம் எப்படி அடைக்கப் போகிறேனோ!...... அம்மா, உன்னை வஞ்சனை செய்து விட்டு விஜயாவுக்கு மாத்திரம் பணம் வாங்கிக் கொடுத்தேனே என்று நீ சிறிதும் வருத்தப் பட்டுக் கொள்ளாதே! கூடிய சீக்கிரம்......''

இடைமறித்தாள் இந்திரா. "அப்பா! எதற்கு ஏதேதோ கற்பனை பண்ணிக் கொண்டு துன்புறுகிறீர்கள்! அக்காவுக்குச் செய்து விட்டீர்களே என்று வருத்தமோ பொறாமையோ நான் ஏன் பட வேண்டும்! உண்மையில் அக்காதான் என் மேல் பொறாமைப்பட வேண்டும்! உங்களுடைய விலை மதிக்க முடியாத பொக்கிஷம் ஒன்றில் பெரும் பகுதியும் எனக்குத்தான் அளித்திருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். அதில் அக்காவுக்கு வெகு சொற்பமான பங்குதான்! அந்தப் பொக்கிஷம் தங்கள் இதயத்தின் அன்பு!'' என்றாள்.

ஆனந்தபாஷ்பம் பொங்க உணர்ச்சி வசப்பட்டவனாகி நான் கூறினேன்: "குழந்தாய், நான் பாக்கியசாலி! அன்று 'ஏன் குழந்தைகளைக் கொடுத்தாய்' என்று கடவுளை நிந்தித்தேன். இன்றோ உன்னைப் போல் உத்தமப் பண்பு நிறைந்த குழந்தைகள் இன்னும் இரண்டு இருக்கக் கூடாதா என்று வருத்தப்படுகிறேன்!''



சென்னை சித்ரா, பிராட்வே, மகாலக்ஷ்மி
காமதேனு மற்றும் தென்னாடெங்கும்

அட்வான்ஸ் புக்கிங் இப்பொழுது நடைபெறுகிறது

BHARAT STUDIO

டிஸ்ட்ரிபூட்டர்கள் : ○ சென்னை நகரம், வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, சித்தூர் : ராஜா பிலிம்ஸ், சென்னை-2 ; ○ மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி : எவரெஸ்ட் பிக்சர்ஸ், மதுரை ; ○ திருச்சி, தஞ்சாவூர் : வீயார் பிலிம்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை ; ○ கோயமுத்தூர், நீலகிரி : மஜீத் அண்டு ஆனந்தா பிக்சர்ஸ், கோயமுத்தூர் ; ○ சேலம் : எம். ஏ. வீ. பிக்சர்ஸ், சேலம் ○ பெங்களூர், மைசூர், கூர்க் : தல்லம் பிக்சர்ஸ் சர்க்யூட், பெங்களூர்

இதர விவரங்களுக்கு


எம். ஏ. வீ. பிக்சர்ஸ், சென்ட்ரல் ஸ்டூடியோஸ், கோயமுத்தூர்



வங்க மக்கள் விரும்புவது
எங்கும் விரும்பப்படுவது
ரஸகுல்லா
MORTON
இனிமையிலும்
ஒரு தனிமை




டயபெப்ஸின்
சாப்பிட ஆரம்பிக்கு
முன் இம்மாதிரி
வயிற்று வலியால்
கஷ்டப்படுகிறார்
DIAPEPSIN
டயபெப்ஸின்
சாப்பிட்டபிறகு
இம்மாதிரி
சந்தோஷமாக
தோற்ற
மளிக்கிறார்
DIA-PEPSIN
உங்கள் டாக்டரை கலந்தாலோசியுங்கள் :
யூனியன் டிரக் கம்பெனி லிமிடெட்
மதராஸ் டிப்போ : 2, ஜோன்ஸ்லேன், மதராஸ்-1



Unanimity in
Diversity
EWI LTD
Every one is
Satisfied
அனைவருக்கும்
திருப்தி அளிப்பது
போனிக்ஸ்
விசிறிகளே
Phoenix
FANS
CEILING, CABIN, TABLE & EXHAUST TYPES
R M . S . & CO., LTD. 16, BROADWAY, MADRAS-1.
பிராஞ்ச : 5, மேலக் கோபுர வாசல், மதுரை
CHARI

தொழில் பெருகுது!

எஸ்.வி.எஸ்.



இதுதான் கோச்சுத் தொழிற்சாலையின் மாதிரி அமைப்பு.

பகல் பன்னிரண்டு மணி யிருக்கும். 'கார்' எங்கள் காரியாலயத்தை நோக்கித் திரும்பி வந்து கொண்டிருந்தது. என்னுடைய மனசு மட்டும் 'குடுகுடு... குடு குடு... குடு குடு' என்றது.

ஒரு கணம் ஒன்றுமே புரியவில்லை. "மனமே, நீ என்ன சொல்லுகிறாய்!" என்றேன்.

"பாரதியார் பேசுகிறேன் :

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
நல்ல காலம் பிறக்குது நல்லகாலம் பிறக்குது.

* * *

தொழில் பெருகுது தொழிலாளி வாழ்வான்
சாத்திரம் வளருது : சூத்திரம் தெரியுது.
யந்திரம் பெருகுது : தந்திரம் வளருது
மந்திரமெல்லாம் வளருது! வளருது!"

என்று உள்ளத்திலிருந்து குரல் வந்தது.

'பாரதியார் என்னோடு, இப்பொழுது 'பிரம்பூர் இண்டக்ரல் கோச்சு பாக்டரி'யைப் பார்த்து விட்டு வந்தாரா என்ன? என் மனத்தில் உள்ள எண்ணங்களை அப்படியே வெளியிடுகிறாரே!' என்று எனக்கு அதிசயமாகப் போய் விட்டது.

நம் நாடு 1947–ல் சுதந்திரம் பெற்றது. அப்பொழுது '-ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்' என்று பாரதியார் பாடலைப் பாடியும் ஆடியும் அனுபவித்தோம். எப்பொழுதோ அமரருலகு எய்திய பாரதியார், அந்தப் பாடலை அந்த ஆகஸ்டு 15-ம் தேதி பாடினாற் போல் தோன்றியது. அதேமாதிரிதான் இண்டக்ரல் கோச் பாக்டரியைப் பார்த்து விட்டுத்தான் மேற்கண்ட பாடலைப் பாரதியார் இன்று பாடினாரோ என்ற பிரமை, எனக்குச் சென்ற மார்ச்சு 19-ந் தேதி அந்தத் தொழிற்சாலை உருவாவதைப் பார்த்து விட்டுத் திரும்பி வரும்போது ஏற்பட்டது!

உண்மைக் கவிஞன், தான் இருக்கும் காலத்தின் சூழ்நிலையை மட்டுமல்ல, எதிர்காலத்தையும் தன் கற்பனா சக்தியால் கூர்ந்து பார்த்து, அனுபவித்து எழுதுவான் என்றார் அமரகவி ரவீந்திரர். அந்த இலக்கணம் பாரதியாருக்குத்தான் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது!

* * *

நமது அருமைத் தலைவர்கள் ஒவ்வொருவரும் அன்னிய அரசாங்கத்தை எதிர்த்துப் போராடி, மக்கள் இயக்கங்கள் நடத்தி, சிறைப்பட்டு, பல இன்னல்களுக்கு உள்ளாயினர். எனினும் சுதந்திரம் பெற்றவுடன் அவர்கள் நியாயமாகப் பெறத் தகுதி பெற்ற ஓய்வை எடுத்துக் கொள்ளவில்லை ஆக்க வேலைகளுக்கான திட்டங்கள் வகுப்பதில் முனைந்தனர்.

காஷ்மீர் பிரச்னை, சமஸ்தானாதிபதிகள் பிரச்னை ஹைதராபாத் பிரச்னை, அகதிகள் பிரச்னை, உணவுப் பிரச்னை இப்படிப் பல துறைகளிலும் சுதந்திர சர்க்காருக்கு இன்னல்கள். இவற்றைச் சமாளித்தாலே பெரும் காரியம் சாதித்தமாதிரிதான் ஆக்க வேலைகளை, புனர் நிர்மாணத்துக்கான வேலைகளை வருங்கால சந்ததியார் சமாளிக்கட்டும் என்று இருந்து விடவில்லை. ஆக்க வேலைக்கான ஐந்து வருஷத் திட்டங்கள் வகுத்தனர். தங்கள் வாழ்நாளில் தாங்கள் வகுக்கும் திட்டங்கள் செய்து முடித்து அதன் பயனைப் பெறுவோமோ, என்னவோ என்று அசிரத்தையாக இராமல் வருங்கால சந்ததியாரின் நன்மையையே குறியாகக் கொண்டு வேலை செய்தனர். இன்றும் செய்து வருகின்றனர். நமது தலைவர்களிடம் காணும் இவ்வரிய பண்பை மக்கள் ஒவ்வொருவரும் நன்றாக உணர வேண்டும். இத்தகைய பண்பு ரயில்வே மந்திரியாக இருந்து பணியாற்றிய காலஞ்சென்ற என். ஜி. அய்யங்கார் அவர்களிடம் இருந்தது!

அதன் பயனாகத்தான் இன்று பிரம்பூரில் ஒரு மாபெரும் தொழிற்சாலை உருவாகி வருகிறது !

என்ன தொழிற்சாலை !

நாம் ரயிலில் பிரயாணம் செய்யும் கோச்சுகள் கட்டும் தொழிற்சாலைதான் !

இதுகாறும் நாம் ஏறிச் செல்லும் மர ரயில் பெட்டிகள் அன்னிய நாட்டிலும், நம் நாட்டிலும் செய்யப்பட்டு வந்தன. இப்பொழுது உறுதி மிக்க இரும்பு ரயில் பெட்டிகளை இங்கேயே செய்வதற்கான தொழிற்சாலைதான் பிரம்பூரில் நிறுவப்பட்டு வருகிறது.

முதலில் இத் தொழிற்சாலையைப் பங்களூரில் நிறுவலாமா என்று யோசித்தார்களாம். அங்கு ஏற்கெனவே கோச்சு கட்டும் தொழிற்சாலை இருக்கிறது. அத்துடன் இணைத்து விடலாமா என்று யோசித்தார்கள். பிறகு, பிரம்பூரில் ஏற்கெனவே பெரிய ரயில்வே தொழிற்சாலையிருப்பதால் அதற்குப் பக்கத்திலேயே இக் கோச்சுத் தொழிற்சாலை இருப்பது நலம் என்று முடிவு செய்யப்பட்டது. தமிழ் நாட்டின் நல் அதிர்ஷ்டமும் இருந்தது என்று வைத்துக் கொள்ளுங்களேன் !

ரயிலுக்கு முக்கியமாக வேண்டியது என்ஜின். அதைச் செய்யும் தொழிற்சாலை வங்காளத்தில் சித்தரஞ்சனில் நிர்மாணித்து வருகிறார்கள்.

அடுத்தாற் போல் வேண்டியது ரயில் பெட்டி. அதைப் பிரம்பூர் இண்டக்ரல் கோச் பாக்டரியில் செய்ய ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

இவை யாவும் பத்திரிகைகள் படித்தே தெரிந்து கொண்டிருந்தேன். ஆனால் நேரில் போய்ப் பார்க்கும் சந்தர்ப்பமே எனக்கு வாய்க்கவில்லை. சென்ற மார்ச்சு மாதம் 19உ இத்தகைய அரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

பத்தொன்பதாம் தேதி காலையிலேயே 'கல்கி' ஆசிரியர் ஸ்ரீ சோமுவும் நானும் போட்டோ கணேஷும் புறப்பட்டுப் பிரம்பூர் கோச்சுத் தொழிற்சாலைக்குச் சென்றோம். அப்பொழுது காலை ஒன்பது மணி.

நான் அப்படியே தொழிற்சாலை பார்க்கப் போகலாம் என்று நினைத்தேன். ஆனால் ஆசிரியர் சோமு, "ஸ்ரீ சடகோபன் அவர்களைப் பார்த்து விட்டு அல்லவா கோச் பாக்டரிக்குள் போக வேண்டும், இந்தக் கோச் பாக்டரி என்ற ரயிலுக்கே என்ஜின் அவர்தானே !" என்றார்.

"மணி இப்பொழுதுதான் ஒன்பதாகிறது, அதற்குள் அவர் வந்து விடுவாரா, என்ன !" என்றேன்.

இதற்குள் கோச்சு பாக்டரியின் நிர்வாக அலுவலகத்தை அடைந்து விட்டோம். அது ஒரு மூன்றடுக்கு மாடிக் கட்டடம். அந்தக் கட்டடத்தின் பூச்சு வேலைகள் வெகு வேகமாக நடந்து கொண்டிருந்தன. ஆகவே நாங்கள் நேர் வழியாகப் போகாமல், பக்க வாட்டிலிருந்த மாடிப் படி ஏறிப் போனோம். ஸ்ரீமான் சடகோபன் ஒன்பது மணிக்கு முன்பே காரியாலய அறையில் வந்திருந்தார். அவர் எங்களை உள்ளார்ந்த மகிழ்ச்சியுடன் வரவேற்று, திரு சாம்பமூர்த்தி என்ற ஸிவில் இன்ஜினீயர் அவர்களையும் எங்களுக்கு ஷாப்புகளைச் சுற்றிக்காண்பிக்க அனுப்புவதாகக் கூறினார்.

'ஷாப்' என்றதும் 'அடாடா! தொழிற்சாலை நிர்மாணத்தைப் பார்க்க இங்கே வந்தால் இவர்கள் நம்மை ஷாப்புக் கடைகளைப் பார்க்க ஏற்பாடு செய்கிறார்களே, இது என்ன வம்பு !' என்று சொல்லலாம் போலிருந்தது.

ஆனால் அதற்குள் நாங்கள் ஸ்ரீ சடகோபன் அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்து விட்டோம். இனி, ஸ்ரீ சாம்பமூர்த்தியினிடம், இதைப் பற்றிச் சொல்லலாம் என்று எண்ணிக் கொண்டே இருந்தேன். ஸ்ரீ சாம்பமூர்த்தி, "முதலில் நாம் பயிற்சிப் பள்ளிக்கூடத்துக்குப் போவோம். அங்கே இத் தொழிற்சாலையின் மாடல் இருக்கிறது. அதைப் பார்த்துவிட்டு மேலே போய்ப் பார்த்தால் நலம்" என்றார்.

* * *

இந்த ரயில் பெட்டி செய்யும் தொழில் மிகப் பெரிய தொழில். மிகுந்த திறமையும் நுட்ப அறிவும் தேவைப்படும் தொழில். இப்படிப்பட்ட தொழிலாளர் ஆயிரக் கணக்கில் தேவைப் படும், இத் தொழிலுக்கு. இத்தகைய தொழிலாளருக்கு எங்கே போவது !

அவர்களையும் மேல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய முடியுமா ! அப்படிச் செய்தால் என்ன பயன் ! உள் நாட்டில் உயர்ந்த தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் ஏற்படுவது எப்படி !


இதை யெல்லாம் உத்தேசித்துத்தான், இந்த ரயில் பெட்டி கட்டும் பெரிய தொழிலுக்கு ஏற்ற தொழிலாளர்களை வழங்குவதற்குத் தொழிற் பயிற்சிப் பள்ளிக்கூடமும், இந்தக் கோச்சு கட்டும் தொழிற் சாலைக்கு அருகிலேயே ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் தொழிற் சாலை வேலை செய்யத் தொடங்கவில்லை ; ஆனால் பயிற்சிப் பள்ளிக்கூடம் வேலை செய்ய ஆரம்பித்து ஓர் ஆண்டை வெற்றிகரமாக நடத்தி விட்டது!

இங்குதான் தொழிற் சாலையின் மாடல் — மாதிரி — இருக்கிறது. இதைக் காண்பிக்கத் தான் அழைத்துச் சென்றார் இன்ஜினீர் திரு சாம்பமூர்த்தி.

நாங்கள் தொழிற் பயிற்சிப் பள்ளிக் கூடத்துக்குச் சென்ற போது அதன் பிரின்ஸிபால் திரு காமத் தமது காலை ஆகாரம் முடித்துக் கொள்வதில் முனைந்திருந்தார். ஆகவே, "நீங்கள் உங்கள் ஆகாரத்தை முடித்துக் கொண்டு வாருங்கள். நான் அது வரைக்கும் எனக்குத் தெரிந்ததை இவர்களுக்கு விளக்கிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்" என்றார் ஸ்ரீமான் சாம்பமூர்த்தி.

வெல்டிங் நடக்கிறது !





'க்ரேன்'கள் வேலை செய்கின்றன; இயந்திரங்களும் அமைக்கப்படுகின்றன!

"நீங்கள் என்ஜினீர் என்கிறீர்கள். கடைசியில் எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன் என்கிறீர்களே. உங்களுக்கு விஷயம் சரியாகப் புரியாதா, என்ன!" என்று சற்று இந் நாட்டு 'மன்னன்' என்ற முறையில் அதிகாரத் தொனியிலேயே அவரைக் கேட்டு வைத்தேன்!

"என்ஜினீர் என்றால் அவர்களில் எத்தனையோ வகை. நான் இந்த ரயில் பெட்டி கட்டும் நுட்பத்தை அறிந்த என்ஜினீர் அல்ல. இப்பொழுது செய்யப் போகிற ரயில் பெட்டி கட்டும் இயந்திரங்களை வைப்பதற்கான பிரம்மாண்டமான சாலைகள் கட்டிக் கொடுக்கும் கட்டட என்ஜினீர். எங்கள் வேலை இந்தப் பெரிய தொழிற்சாலை அமைத்துக் கொடுப்பது. இங்கே வைக்கப் போகிற பெரும் இயந்திரங்களுக்கான அஸ்திவாரத்தைப் பலமாகப் போட்டுக் கொடுப்பது. தூசி பறக்காமல் இருக்கக் கூடிய சிமின்ட் தெருக்கள் அமைத்துக் கொடுப்பது. காற்றோட்டமும் வெளிச்சமும் நன்கு வரக்கூடிய முறையில் ஷாப்புக்கள் கட்டித் தருவது!" இப்படி அவர் அடுக்கிக் கொண்டே போனார்.

என் உள்ளத்தில் துடித்துக் கொண்டிருந்த அந்தக் கேள்வி தடக்கென்று வெளிப்பட்டு விட்டது. "தொழிலாளர்கள் சோப்பும் சீப்பும், மிட்டாயும், பின்கோத்தும் வாங்கிச் சாப்பிடுவதற்கு ஷாப்புகள் வேறு கட்டித் தருகிறீர்களா!" என்றேன்.

உடனே அவர் சிரித்து விட்டார். "ஷாப் என்றால் கடையல்ல. இந்த ரயில் பெட்டி கட்டுவதற்காக நிர்மாணிக்கப்படும் பிரம்மாண்டமான தொழிற்சாலைகளுக்கு ஷாப்புகள் என்று பெயர். அப்படிப்பட்ட ஷாப்புகள் பத்து இங்கே கட்டுகிறோம். இதோ இந்த மாடலைப் பார்த்தால் தெரியும்!" என்று கூறினார்.

அதற்குள் மாடல் வைத்திருந்த அறைக்கே வந்து விட்டோம். அங்கு கட்டப்போகும் ரயிலின் சிறு மாதிரி பொம்மை ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் எனக்குப் பால்யம் திரும்பி விட்டது. முதலில் இந்தப் பொம்மை ரயிலை வைத்துக் கொண்டு சற்று நேரம் விளையாட வேண்டும் போலவே இருந்தது.

ஆனால் திரு சாம்பமூர்த்தி எங்களை விடுவதாக இல்லை. அதன் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த மாதிரி தொழிற்சாலையைக் காண்பிக்கத் தொடங்கி விட்டார். "இதுதான் ஸார், மாதிரி தொழிற்சாலை. இதில் பத்து ஷாப்புகள் இருக்கின்றன. இதன் விஸ்தீரணம் 8,48,600 சதுர அடி. இதோ தெரிகிறது பாருங்கள் ரயில் தண்டவாளம், இது வில்லிவாக்கத்திலிருந்து வருவது. இதுதான் முதல் ஷாப்பு. இதில் மூலப் பொருள்களெல்லாம் இறக்கப்படும். இரும்புத் தகடுகள் முதலியவை இருக்கும். இங்கிருந்து அடுத்த ஷாப்பில் இரும்புத் தகடுகள் தட்டப்பட்டுச் சீர் செய்யப்படும். மூன்றாவது ஷாப்பில் இணைக்கப்படும்......நாலாவது ...ஐந்தாவது...... ஏழாவது...பத்தாவது, இங்கிருந்தெல்லாம் இந்தப் பெட்டிக்குத் தேவையுள்ள சாமான்கள் வந்து சேரும். இவற்றை யெல்லாம் பெற்று ரயில் பெட்டி பூரணமாகி விடும். பிறகு அங்கிருந்து வெளியேறிப் பிரம்பூருக்குப் போய் விடும்" என்று கையில் ஒரு கோல் கொண்டு விளக்கிக் கொண்டு போனார். எனக்குத் தலை கிறு கிறு என்று சுற்றத் தொடங்கியது.

ஆயினும் இப்பொழுது அமைதியாக யோசித்துப் பார்த்தால், ரயில் பெட்டி படிப்படியாக, ஒவ்வொரு தொழிற்சாலையிலும் அங்கங்களைப் பெற்று, கடைசியில் உள்ள சாலையில் கடைசி நகாசு வேலைகளுடன் வெளியேறும் வகையில் திட்டமிட்ட பொறிஇயல் நிபுணர்களைப் பாராட்ட வேண்டியதாகத்தான் இருக்கிறது. இதனால் வீண் அலைச்சலும், பெரிய சாமான்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குத் தூக்கிச் செல்ல வேண்டியசிரமமும் அறவே நீக்கப்படுகிறது. ஒழுங்கீனமே என் கண்களுக்கு பார்த்துப் பார்த்துப் பழகிப் போனவை. இயற்கை யன்னை விதையை முளையாகவும், சிறு செடியாகவும், பிறகு மரமாகவும், புஷ்பிக்கும் மரமாகவும், காயாகத் தொங்கும் மரமாகவும் பிறகு கனிய வைத்துப் பூமியில் உதிர்க்கும் மரமாகவும் ஒழுங்காக வளர்க்கும் முறையை மனிதனும் பின்பற்றலாம் என்பதை இந்தத் தொழிற்சாலையைப் பார்க்க வருகிறவர்களுக்கு வெகு நன்றாக உணர்த்துகிறது!

இதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போதே பிரின்ஸிபல் காமத் வந்து சேர்ந்தார். அவர் இப்பொழுது புதிதாக நிர்மாணிக்க இருக்கும் ரயில் பெட்டியின் விசேஷ அம்சங்களை வெகு ரஸமாக எடுத்துக் கூறினார்.

இந்தத் தொழிற்சாலையில் செய்ய இருக்கும் ரயில் பெட்டி, மேல் நாட்டில் இன்று உபயோகத்தில் இருக்கும் நவீன மோஸ்தரில் செய்யப்படுமாம். இதற்கென்று ஐரோப்பாவில் ஸ்விட்ஸர்லாந்திலுள்ள ரயில் பெட்டி செய்யும் கம்பெனியோனுடன் பாரத சர்க்கார் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிறார்கள். அதன்படி அந்தக் கம்பெனியைச் சேர்ந்த என்ஜினீர்கள் இங்கு வந்து இத்தொழிலைக் கற்றுத் தருவார்கள். இப்



மாணவர்கள் இரும்பில் பலவகை உருவங்கள் செய்திருப்பதை ராஜாஜி பார்வையிடுகிறார். அப்படியே மேல்நாட்டு இன்ஜினீயர்களுக்கும் கொஞ்சம் பொறி இயலை விளக்குகிறார்!

பொழுதே பல என்ஜினீர்கள் இங்கு வந்து சேர்ந்து இப்பயிற்சிப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களாக வேலை செய்கிறார்கள்!'' என்றார்.

'' இந்த ரயில் பெட்டி செய்வதற்கான இயந்திரங்கள் எல்லாம்கூட ஸ்விட்ஜர்லாந்துக்காரர்கள் தான் நமக்கு விற்கிறார்களா!''

'' இல்லை, இதற்கான இயந்திர சாதனங்களை நாம் சுவிட்ஸர்லாந்திலிருந்து மட்டும் வாங்கவில்லை. மேற்கு ஜெர்மனி, யுகோஸ்லேவியா, பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய பல நாடுகளிடமிருந்தும் வாங்கியிருக்கிறோம்!''

''ஆமாம், இங்கு செய்யப்படும் ரயில் பெட்டியில் விசேஷ அம்சம் என்ன! அதிக விசிறிகள், அதிக மின்சார விளக்குகள், படுப்பதற்கு இன்னும் விஸ்தாரமான மெத்தை போட்ட பலகை முதலியவை இருக்குமோ!'' என்றேன்.

'' உங்களுக்கு ரயில் பெட்டி என்றதும் அதற்குள் செய்யப்படும் வசதிகள்தான் ஞாபகம் வருகிறது. ஆனால் அந்தப் பெட்டியின் சக்கரத்திலிருந்து மேற்கூரை வரை இங்கு செய்யப்படும்.''

இதைக் கேட்டவுடன் எனக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது. சாதாரணமாக நம் ஊரில் கட்டின மோட்டார் என்றால், மோட்டாரின் முக்கியமான இயந்திரப் பகுதி மேல் நாட்டிலிருந்து வந்து விடும். பாக்கியுள்ள மக்கள் உட்காரும் சுக ஆசனங்கள், பலகைகள், மற்றவைதான் இங்கு செய்வார்கள். அப்படித்தான் இங்கும் செய்வார்களோ என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அதனால்தான் சக்கரத்திலிருந்து இங்கு செய்யப்படும் என்று சொன்னவுடன் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! அப்படியானால் இது மிகப் பெரிய பெரிய தொழிற்சாலைதான் என்று மனத்தில் உறுதி செய்து கொண்டேன்.

'' இது வரை நீங்கள் பிரயாணம் செய்த வண்டி மரத்தினால் செய்த பெட்டிகளைக் கொண்டிருக்கும். இதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். இங்கு செய்யப்படும் வண்டி பரிபூரணமாக இரும்பினால் செய்யப்பட்டதாக இருக்கும்!''

'' இரும்பிலா! அடேயப்பா! என்ன கனம் கனக்கும்!'' என்றேன்.

'' ஆ! அதுதான் இல்லை! இந்தப் பெட்டிகள் இப்பொழுதுள்ள பெட்டிகளைவிடக் கனத்தில் குறைவாக இருக்கும்!''

'' எவ்வளவு!'' என்றேன்.

'' எழுபது அடி நீளமுள்ள, எண்பது பேரை ஏற்றிக் கொள்ளும் வசதியுள்ள இப்போதைய பெட்டி சுமார் நாற்பத்திரண்டு டன் நிறை இருக்கிறது. இதோ இங்கு செய்யப் போகும் இப் புது மாதிரி பெட்டி முப்பத்திஞந்து டன் நிறைதான் இருக்கும். கிட்டத்தட்ட ஏழு டன் நிறை குறைந்து போகிறது!'' என்றார்.

'' நான் பள்ளிக் கூடத்தில் படித்த விஞ்ஞானத்தில் மரத்தை விட இரும்புதான் கனம் அதிகம் என்று படித்திருக்கிறேன், நீங்கள் மரம்தான் கனம் அதிகம் என்கிறீர்கள். கலி முற்றி விட்டது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது!'' என்றேன்.

'' இன்னொரு விசேஷ அம்சம். முன்பெல்லாம் ரயில் பெட்டியின் கனத்தை எல்லாம் அடித்தளம் தான் தாங்க வேண்டியிருந்தது. இதோ இந்தப் பெட்டிகளில் வண்டிக்குள் வைக்கப்படும் சுமை, வண்டி முழுதுமே தாங்குகிறது. வண்டியின் மேற் கூரைகூட உள்ளுக்குள் இருக்கும் பாரத்தைத் தாங்கிக் கொள்கிறது!'' என்றார். இது இன்னும் வியப்பை அளித்தது!

'' ஆகர்ஷண சக்தி மேலிருந்து பூமி நோக்கித்தான் இழுக்கிறது என்று படித்திருக்கிறேன். நீங்கள் பூமிக்கு ஆகர்ஷண சக்தி இல்லை, வானத்துக்குத்தான் இருப்பது போல் கூறுகிறீர்கள்! எனக்கு ஒன்றும் புரியவில்லை'' என்றேன்.

'' எல்லாம் புரிந்து விடும். சற்றுப் பொறுங்கள். ஒரு பெரிய குழாய்க்குள் கனமான பொருளை வைக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். பூமியின் ஆகர்ஷண சக்தி அதைக் கீழ் நோக்கி இழுத்தாலும், அந்தப் பளு முழுவதும், அந்தப் பாரம் இருக்கும் இடம் மட்டும் தாங்குவதில்லை. இரு பக்கங்களிலுள்ள பகுதிகளும், மேல் பகுதியும் சேர்ந்தே தாங்கப் பார்க்கின்றன. அதனால் சுமையின் அழுத்தம் குழல் முழுதும் வியாபித்து விடுகிறது. அந்தத் தத்துவம் தான் இந்தப் புது மாதிரி ரயில் பெட்டியிலும் வேலை செய்கிறது!'' என்றார் ஸ்ரீமான் காமத்.

'' அப்படியானால் பெரிய பெரிய இரும்புக் குழாய்களை வரவழைத்துப் பெட்டி செய்யப் போகிறீர்களா!'' என்றேன்.

இதைக் கேட்டு அவர்கள் சிரித்து விட்டார்கள். '' குழாய் குழாயாக வரவழைத்துச் சாத்தியமா! இரும்புத் தகடுகளாக வரவழைத்து நாம் இங்கு செய்து கொள்ள வேண்டியதுதான்!'' என்றார்.

'' இந்தப் பெட்டியின் சுற்றளவின் அகலமும் பெட்டியின் நீளமுமுள்ள தகடுகளை வரவழைத்து இங்கு குழலாக வளைத்துக் கொள்வீர்களா!'' என்று கேட்டேன்.

''அவ்வளவு நீளமும் அகலமும் கொண்ட தகடுகளை ஏற்றி வைத்துக் கொண்டு வருவது சாத்தியமில்லை. சிறுசிறு தகடுகளாகத்தான் வரும். அதைக் குழலாகச் செய்வதுதான் இங்கு பெரிய வேலை!''


'' ஓகோ! தகடுகளை ஆணிகளைக் கொண்டு முடுக்கி-ரிவட் செய்து - குழல் செய்து விடுவீர்கள் போலிருக்கிறது!'' என்றேன்.

'' அதுதான் இல்லை'' என்றார் திரு காமத்.

(அடுத்த இதழில் முடியும்)

சென்னைக்கு

பிலிப்ஸ் எலக்ட்ரிகல் கம்பெனி (இந்தியா) லிமிடெட், தமது வெள்ளிவிழா ஆண்டாகிய இவ்வருடத்தில் மதராஸ் கார்ப்பரேஷனுக்கு மிக நூதன வகை தெருவிளக்கு சாதனங்களை வழங்கி யுள்ளார்கள். இவ் விளக்குகள் பிராட்வே ஜங்ஷனிலிருந்து பூக்கடை போலீஸ் ஸ்டேஷன் வரை யுள்ள பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ளன.
படத்தில் காண்பது மேற்படி பிரதேசத்தின் இரவு தோற்றம்.
உள்படத்தில் அங்கு உபயோக படுத்தியுள்ள ஒரு நவீன ப்ளோரொஸண்ட்
விளக்கு
காணப்படுகிறது.



இந்தியாவில் 25 ஆண்டு விழா

கொண்டாடுகின்றனர்

பிலிப்ஸ்

நன்கொடை

PHILIPS

இருபத்தைந்து பெருமை மிகுந்த ஆண்டுகள்—இந்தியாவின் தொழிற் செல்வமும் பொதுநலமும் பெருகி அபிவிருத்தியடையச் செய்யும் பணியில் அன்றுடம் அதிகரித்த அளவில் பிலிப்ஸ் ஈடுபட்டு வந்துள்ள ஆண்டுகள்! இன்று எங்களது பழம் பெருமையை நினைத்து மட்டுமில்லாமல், எதிர் காலத்தில் இன்னும் மேன்மை ஏற்படப் போவதையும் பிலிப்ஸ்—இந்தியா ஸ்தாபனத்தின் சரித்திரத்திலேயே ஒரு புது நிலை ஏற்படப்போவதையும் எண்ணி மகிழ்கிறோம்.

சென்னையில் வெள்ளி விழாக் கண்காட்சி

பிலிப்ஸ் வெள்ளி விழாக் கண்காட்சி 1935 ஏப்ரல் 6ந் தேதியிலிருந்து சென்னை, மவுண்ட்ரோடு நெ. 35/4 கட்டிடத்திலிருக்கும் அவர்களது ஷோரூம்களில் ஆரம்பமாகி விட்டது. காட்சிப் பொருள்களுள் (சென்னையிலேயே முதன் முறையாக) தத்ரூபமான க்ளோஸ்ட்-சர்க்யூட் டெலிவிஷன் சாதனங்களும், ராடார் தற்காப்பு முறை மாடல்களும் மற்றும் ரேடியோ, ஒளி, மின்சக்தி சம்பந்தப் பட்டதும் அவை உபயோகிக்கப் படுவதுமான அநேக இதர மாடல்களும் அடங்கும்.

இந்தியாவின் எதிர்காலத்திற்கு இன்று வழங்கும் தொண்டு

PLX-29 Tam



ஆற்றங்கரையினிலே

பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை

14. திருவெண்ணெய் நல்லூர்

தென்பெண்ணை யாறு பாயும் நாட்டிலே திருமுனைப்பாடி என்ற நகரம் முன்னாளில் சிறப்புற்றிருந்தது. முனையர் என்னும் பெயருடைய தமிழ்க் குலத்தாரின் பெருமைக்கு ஒரு சான்றாக நின்றது அந் நகரம். நாளடைவில் அந் நகரத்தைத் தன்னகத்தே உடைய பெண்ணை நாடு திருமுனைப்பாடி நாடு என்னும் பெயர் பெற்றது. தக்கார் பலர் அந்நாட்டிலே தோன்றினர். தேவாரம் பாடிச் சிவ நெறியையும் செந்தமிழையும் பரப்பிய மூவருள் இருவர் திருமுனைப்பாடி நாட்டிலே பிறந்தருளினர்.

"மறந்தருதீ நெறிமாற
மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தருநா வுக்கரசும்
ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானல்
நம்மளவோ பேருலகில்
சிறந்த திரு முனைப்பாடித்
திறம்பாடும் சீர்ப்பாடு"

என்று திருநாவுக்கரசரும் சுந்தரரும் பிறந்த நாட்டின் சீர்மையைத் திருத் தொண்டர் புராணம் பாடிற்று.

அந் நாட்டில் உள்ள பழமையான ஊர்களில் ஒன்று திருவெண்ணெய் நல்லூர். பெண்ணை யாற்றின் தென்கரையில் பொருளும் அருளும் பொருந்தித் திகழ்ந்தது அவ்வூர். விந்தையான வழக்கு ஒன்று முந்தை நாளில் அங்கு நிகழ்ந்தது.

திருமுனைப்பாடி நாட்டைச் சேர்ந்த நாவலூரில் ஆரூரன் என்னும் பெயருடைய அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் திருவெண்ணெய் நல்லூர்ப் பெருமுனிவனாகிய பித்தனுக்கு ஓர் அடிமைச் சீட்டு எழுதிக் கொடுத்தார். "நானும் என் குடி வழியில் வருவோரும், வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்குத் தொண்டு செய்யக் கடமைப் பட்டுள்ளோம்" என்று அடிமை யோலையில் கண்டிருந்தது. இச் செய்தியை,

"அருமறை நாவல்ஆதி சைவன்
ஆரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப்
பித்தனுக்கு யானும் என்பால்
வருமுறை மரபு ளோரும்
வழித்தொண்டு செய்தற்கு ஓலை
இருமையால் எழுதி நேர்ந்தேன்
இதற்கிவை என் எழுத்து"

என்ற திருப் பாட்டுக் கூறுகின்றது.

இவ்வாறு அடிமையோலை எழுதிக் கொடுத்த ஆரூரன் மரபிலே பிறந்தார் நம்பி ஆரூரன் என்னும் சுந்தரர். அழகின் கொழுந்தென விளங்கிய நம்பியை, திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட நரசிங்க முனையர் ஆசை மகனாக எடுத்து வளர்க்க விரும்பினார். நம்பியின் பெற்றோரும் அரசன் கருத்திற்கு இசைந்தார்கள். அந்தணர்க்கு உரிய சீலமும், அரசர்க்குரிய சிறப்பும் பெற்றுத் திருந்தி வளர்ந்தார் சுந்தரர்.

மணப்பருவம் உற்றபொழுது புத்தூரில் வாழ்ந்த ஓர் அந்தணன் மகளை அவர்க்கு மணம் பேசி முடித்தார்கள். புத்தூர் புது மணம் பெற்றது என்று புகழ்ந்தனர் மக்கள் எல்லாம். திருமணத்திற்குக் குறித்த நாளில் உற்றாரும் உறவினரும் வந்து நிறைந்தனர்; திருமண மேடையில் அமர்ந்திருந்த மணமக்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தனர்; பட்டற்ற மகிழ்ச்சியில் மூழ்கினர்.

அந்த வேளையில் அங்கு வந்தார் ஒரு விருத்த வேதியர். மணப் பந்தலின் நடுவே

நின்று கொண்டு "இந்த மணமகனுக்கும் எனக்கும் இடையே ஒரு வழக்கு உண்டு; அதை இப்பொழுதே தீர்த்து ஆக வேண்டும். இவன் என் அடியான்" என்று பேசினார்.

கிழவர் பேச்சைக் கேட்டுச் சிரித்தார் சிலர்; திகைத்தார் சிலர். வேதனை தந்த வேதியனை நோக்கி வெகுண்டார் சுந்தரர். "முதியோனே! அந்தணன் ஒருவன் வேறோர் அந்தணனுக்கு அடிமையாதல் எங்கேனும் உண்டோ? பித்துப் பிடித்தவன் போல் பேசுகின்றாயே?" என்று மிடுக்காகப் பொழிந்தார். முதியவர் அதைப் பொறுமையாகக் கேட்டு "நான் பித்தன் ஆயினும் ஆகுக: பேயன் ஆயினும் ஆகுக. நீ வித்தகம் பேச வேண்டாம்; பணி செய்ய வேண்டும்" என்றார்.

அப்போது அங்கிருந்தவர்கள் சுந்தரருக்காகப் பரிந்து பேசத் தொடங்கினர். "விந்தையான வழக்கைக் கொண்டு வந்த ஐயரே! உமது சொந்த ஊர் எது?" என்று வினவினர்.

"என் ஊர் திருவெண்ணெய் நல்லூர். இவன் பாட்டன் எழுதிக் கொடுத்த அடிமைச் சீட்டு இதோ என்னிடம் உள்ளது" என்று காட்டினார் கிழவர்.

சுந்தரர் உள்ளம் துடித்தது. துள்ளி எழுந்து கிழவர் கையில் இருந்த ஓலையைப் பறித்தார். கிழித்தெறிந்தார்.

அது கண்ட முதியவர் "என் கையில் இருந்த ஓலையை வலிந்து பற்றிக் கிழித்தானே இவன்! இது முறையாகுமா? இச்செய்கையே இவன் அடிமை என்பதை மெய்ப்பிக்கும் அல்லவா?" என்று முறையிட்டார்.

கிழவர் ஒரு 'விடாக் கண்டர்' என்று உணர்ந்தார் சுந்தரர். பழைய மன்றாடி போலும் இவர்: வழக்குத் தீர்ந்தாலன்றித் திருமணம் நடைபெறுமாறில்லை என்று தெளிந்தார். "வழக்க மில்லாத இந்த வழக்கை உமது ஊரிலே பேசலாம் வாரும்" என்று கிழவரை அழைத்தார். அவரும் அதற்கு இசைந்து திருவெண்ணெய்நல்லூரை நோக்கி நடந்தார்: சுந்தரர் அவரைப் பின் தொடர்ந்தார்.

திருவெண்ணெய் நல்லூரில் பஞ்சாயத்தார் சபை கூடிற்று. அச் சபையின் முன்னே நின்ற சுந்தரரைச் சுட்டிக் காட்டி "இவன்





தவளேஸ்வரம் சூப்பரின்டெண்டிங் இன்ஜினியர் ஸ்ரீ ஆர். சிவசுப்பிரமண்யம் அவர்களின் குமாரி சௌ. விஜயலக்ஷ்மிக்கும் ஆந்திரா ஸ்டேட் ஜூனியர் இன்ஜினியர் ஸ்ரீ காமேஸ்வர சாஸ்திரி, B.E.க்கும் சென்ற 25-2-55 அன்று தவளேஸ்வரத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது. வாழ்க மணமக்கள்!

என் அடியான்; அதற்குச் சான்றும் உண்டு. இவன் பாட்டன் எழுதிக் கொடுத்த அடிமை யோலையைக் காட்டினேன்; அதை வலிந்து பற்றிக் கிழித்து விட்டான். இதுவே என் முறைப்பாடு'' என்றார் முதியவர்.

அது கேட்ட சுந்தரர் ''கல்வி கேள்விகளில் சிறந்த சபையோரே! நான் அந்தணன் என்பதை அறிவீர்! என்னை நீர் அடிமை என்று இம்மறையவன் சாதிக்கும் மாயம் அறியேன்'' என்று மாற்றம் உரைத்தார்.

சபையோர் சிந்தித்தனர். ''அந்தணர் அடிமையாகும் வழக்கம் இல்லை. ஆயினும் சுந்தரனுடைய பாட்டன் இசைந்து எழுதிக் கொடுத்த அடிமை யோலையை ஆதரவாகக் கொண்டு முறைப்பாடு செய்துள்ளார் இம் முதியவர். ஆட்சி, எழுத்து, சாட்சி என்னும் மூன்றில் ஒன்றை இவர் ஆதாரமாகக் காட்டுதல் வேண்டும்'' என்று கூறினர்.

'' ஆட்சியில் ஆவ ணத்தில்
அன்றிமற் றயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று
காட்டுவாய் என்ன முன்னே
மூட்சியிற் கிழித்த ஓலை
படியோலை மூல ஓலை
மாட்சியிற் காட்ட வைத்தேன்
என்றனன் மாயை வல்லான் ''

'சான்று காட்டுக' என்ற சபையோரை நோக்கி, ''இரண்டு ஓலை எழுதித் தந்தான் இவன் பாட்டன். ஒன்று மூல வோலை; மற்றொன்று படியோலை. இவன் கிழித்தெறிந்தது படியோலை. மூலவோலை இதோ இருக்கின்றது'' என்று காட்டினார் முதியவர்.

பஞ்சாயத்துச் சபையின் கரணத்தான் அவ்வோலையைப் பணிந்து வாங்கினான். சுருள் நீக்கி விரித்தான்; எழுதியிருந்த வாசகத்தைச் சபையிலே படித்தான்.

''வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு நானும் என்பால் வரும் மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கு இவ்வோலை எழுதிக் கொடுத்தேன்; நாவலூர் ஆதி சைவன் ஆரூரன் ஆகிய நான். இவை என் எழுத்து'' என்ற வாசகத்தைக் கேட்டார் சபையார். ''இது உமது பாட்டனார் எழுத்துத்தானோ? பாரும்'' என்று சுந்தரரைப் பார்த்துக் கூறினர். ''பாட்டனார் கையெழுத்து இவனுக்கா தெரியும்? அவர் எழுத்துடைய வேறு ஓலைகளின் கைச் சாத்தோடு இதனை ஒப்பு நோக்குதலே முறையாகும்'' என்றார் முதியவர். அதுவே சரி என்று ஏற்றுக் கொண்ட சபையார் 'ஆவணக்களரி'யிலிருந்து ஆரூரன் கையெழுத்தடங்கிய ஓலைகளை வரவழைத்தார்கள். அவற்றோடு அடிமையோலைக் கையெழுத்தை ஒப்பு நோக்கினார்கள். ஆரூரன் கையெழுத்தே என்று தெளிந்தார்கள். ''இந்த வழக்கில் பித்தனார் வென்றார்; சுந்தரர் தோற்றார்'' என்று தீர்ப்புரைத்தார்கள்.

வழக்குத் தீர்ந்த பின்னர், ''ஐயரே! இவ்வூரே உமது ஊர் என்று தெரிந்தோம். இங்கு உம்முடைய வீடு எங்கே இருக்கின்றது?'' என்று வினவினர் சபையார். முதியவர் முக மலர்ந்து ''என்னை ஒருவரும் அறியீராகில் வாருங்கள்; காட்டுகின்றேன்'' என்று அழைத்துக் கொண்டு திருக்கோயிலின் உள்ளே சென்றார்; மறைந்தார்.

இறையவனே மறையவனாக வந்து சுந்தரரை வலிந்து ஆட்கொண்டான் என்று எல்லோரும் அறிந்தார்கள்; ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள். சுந்தரர் மெய்யரும்பி விதிர்விதிர்த்து, உருகினார்; கதறினார். ''எல்லாம் உன் அடிமையே! எல்லாம் உன் உடைமையே! நாயேனை வலிந்து ஆட்கொண்ட நாதனே! பேயேனைத் தடுத்தாண்ட பெருமானே'' என்று நெக்கு நெக்குருகினார்.

அப்பொழுது விண்ணிலே ஒரு குரல் எழுந்தது. ''வன் தொண்டனே! பணி செய்க; தமிழிலே பாடுக: முன்னமே என்னைப் பித்தன் என்றாய். ஆதலால் பித்தன் என்றே எடுத்துப் பாடுக'' என்ற வானொலியைக் கேட்டு இன்ப வெள்ளத்தில் மூழ்கினார். 'அருட்டுறை' என்னும் பெயருடைய திருக்கோயிலின் முன்னின்று அருமையான பாட்டிசைத்தார்.

'' பித்தா பிறை சூடிபெரு
மானேஅரு ளாளா
எத்தான்மற வாதே நினைக்
கின்றேன் மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்
வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
அத்தாஉனக் காளாய் இனி
அல்லேனென லாமே ''

என்று வெண்ணெய்ம்பதியில் எழுந்த திருப்பாசுரத்தைப் பாடி இறைவனருள் பெற்ற அடியார் எண்ணிறந்தவர்.


வாழ்க்கை வாழ்வதற்கே..
வயிற்றுக் கடுப்பு, வலிப்பு, அஜீரண பேதி அல்லது
இதர வயிற்றுக் கோளாறினால் உங்கள் அன்றாட
அலுவல்களைக் குலைய விடாதீர்கள். ஓமம்-கற்பூர்
உட்கொண்டு உங்களை முடக்கிவிடும் அந்த வலியை
சமனப் படுத்துங்கள். அதன் அலாதியான குண
விசேஷ மருந்துகள் காரணமாக நீங்கள் உடனே
நிவாரணம் பெற்று மீண்டும் உங்கள் அலுவல்களை
சுறுசுறுப்பாகக் கவனிக்கலாம். ஓமம்-கற்பூர்
ஸ்திரீகளின் கர்ப்பாசயக் கோளாறு சமயங்களிலும்
நிவர்த்தி அளிக்கிறது. இந்த அற்புத நிவாரணியை
எந்த வயதினரும் நிர்ப்பயமாக உட்கொள்ளலாம்.
ஹென்றியின்
ஓமம்-கற்பூர்
தயாரிப்பவர்:
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மஸூடிகல்ஸ் லிமிடெட், மதராஸ்-1



திருக்குற்றாலம், 1—8—45

பள்ளிக் கூடங்களில் வருஷ விழாவையொட்டிச் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் பரிசுகள் வழங்கப் பார்த்திருக்கிறேன். பெரிய பெரிய புஸ்தகமாகக் கொடுப்பார்கள். ஷேக்ஸ்பியர், மில்டன், ப்ரௌனிங் முதலிய படே படே கவிஞர்களுக்குக் கீழே இறங்க மாட்டார்கள். உபயோகம் நாடிக் கொடுக்கிறார்களாம். இந்த ஜென்மத்தில் அந்தப் பிள்ளைகளுக்கு உபயோகப்படப் போவதில்லை. அடுத்த ஜென்மத்தில் இங்கிலாந்தில் போய்ப் பிறந்தால் அல்லவா அந்தப் பிள்ளைகளுக்கு உபயோகப்படும். உபயோகத்தை என்ன அழகாய் நாடுகிறார்கள்! ரொம்ப பேஷ்!

பொதுவாக நம்மவர்கள் ஏதாவது ஒரு விஷயத்தை எடுத்துப் பேசினால், 'இவர் சொன்னார்' 'அவர் சொன்னார்' என்ற முறையில்தான் பேசுவார்கள். குற்றாலத்திலிருந்து கொண்டு பேசும்போது 'நயாகரா' அருவிதான் விஷயம்! குற்றாலத்தருவியைப் பற்றிப் பேசவே முடியாது! அப்படிப் பேசினாலும் அங்குள்ள எண்ணெய் சோப்பு நெருக்கடிதான் விஷயம். வாஸ்தவந்தானே, அவர்கள் சௌகரியமாய், ஏக போகமாய்க் குளித்த நயாகராவில் அதெல்லாம் கிடையாதல்லவா! எல்லாம் புஸ்தகத்தைக் கிழித்துக் காகிதத்தை நெருப்பில் போடுகிற காரியந்தான். காகிதம் எரியும்போது நல்ல வாசனையா வருகிறது? இல்லையே!

அருவிகள் பாடு இப்படியென்றால் அடிப்படையான மனுஷ தத்துவங்களைப் பற்றிப் பேச நேர்ந்தால்க் கேட்கவா வேண்டும்!

இது போக, இயற்கையானது ஆண்பாலர் என்றும் பெண்பாலர் என்றும் இரண்டாகப் பிரித்து இடையே கனத்த திரையையும் போட்டு விட்டது. ஆகவே ஒருவருக்கொருவர் விஷயம் தெரியாமலே வீட்டை நடத்துகிறார்கள்; ஏன்—உலகத்தையே நடத்துகிறார்கள். இந்தப் பைத்தியக்காரத்தனங்களைப் பற்றிப் பேசுவதென்றால் முடிகிற காரியமா? ஒரு யுகமே வேண்டும். ஒரு மாசத்தில் என்னத்தைப் பேசிவிட முடியும்? இதையெல்லாம் யோசனை பண்ணி அல்லவா பள்ளிக்கூடத்தையும் படிப்பையும் வகுக்க வேண்டும். அப்படி வகுப்பது எந்த யுகத்திலோ?

பள்ளிக்கூடத்தில் நாற்பது பிள்ளைகளுக்கிடையே உட்கார வைத்து உபாத்தியாயரையும் முன்னே நிறுத்திவிட்டால் என்னத்தைப் படிப்பார்கள் குழந்தைகள்? செயல் செய்து உடலின் ஒவ்வொரு அம்சமும் தொழிற்பட்டால்த்தான் குழந்தைகளுக்குக் கல்வி வரும். அறுபத்து மூவர் மாதிரி உட்கார்ந்திருந்து உபன்னியாசங்களைக் கேட்டால் கல்வி வரவா செய்யும்? குழந்தையின் இயல்பான அறிவு, பண்பு, ஆக்கல் இவைகளைப் பார்க்கப் பார்க்கப் பள்ளிக்கூடங்கள் செய்து வரும் அநியாயங்களையும் கொடுமைகளையும் சகிக்க முடியவில்லை மனசுக்கு.

இரண்டாவது பாரத்தில் முதல் நாள் போய்ப் பையன் உட்கார்ந்திருக்கிறான். உபாத்தியாயர் முதல்க் கணக்காக ஆரம்பிக்கிறார்:


"அறுபத்தேழு லக்ஷத்து ஐம்பத்தோராயிரத்து நானூற்று முப்பத்தொன்பதில் A ஆயிரங்களாகவும், B பத்துகளாகவும், C ஒன்றுகளாகவும் இருக்கின்றன. A, B, C யின் மதிப்பு என்ன?"

எப்படியிருக்கிறது காரியம்!!!

குழந்தைகள் சதா கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள். ரொம்பப் பெரிய பள்ளிக்கூடத்தைப் போட்டிருக்கிறது இயற்கை. பாடல்களும் பாடப் புஸ்தகங்களும் எண்ணிறந்தன. தெவிட்டா விருந்து குழந்தைகளுக்கு.

"இதெல்லாம் உங்களுக்கு உதவாது. பள்ளிக்கூடத்துக்குள் வாருங்கள், பள்ளிப் புஸ்தகங்களை விரித்து முகத்தில் வைத்துக் கட்டி விடுகிறோம். சரியான கல்வி நன்றாய் வந்து விடும்!" என்று சொல்லிக் கொண்டிருக்கின்றனவே பள்ளிக்கூடங்கள், என்ன செய்ய அவைகளை?

டி. கே. சிதம்பரநாதன்



வேலை கிடைத்தது

எஸ். விஜயராகவன்

"வாசற் கதவு திறந்திருக்கிறது. எட்டிப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் வெளியே போய் விட்டு வருகிறேன்......" என்று கூறி விட்டு, எதிரேயிருந்த நிலைக்கண்ணாடியில் கடைசித் தடவையாக ஒரு முறை தன்னுடைய அழகைப் பார்த்துக் கொண்டாள் பங்கஜா.

உள் முற்றத்தில் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்த தருமாம்பாள் தலை நிமிர்ந்து, "அங்கே சுந்தரம் இல்லையா!" என்று பதிலுக்கு வினவினாள், மெதுவாக.

"அவர் இன்னும் ஆபீஸிலிருந்து வரவில்லை!"

"பெரியவராவது இருக்காரல்லவா......!"

"பெரியவர் இருந்தும் ஒன்றும்தான், இல்லாவிட்டாலும் ஒன்றுதான்! பாகவதத்திலே புதைந்து விட்டார் என்றால், உள்ளே யானை நுழைந்தால்கூட அவருக்குத் தெரியாதே!"— பங்கஜாவின் குரலில் ஒரு கொதிப்பு: அத்துடன் காலில் செருப்பை மாட்டிக்கொண்டு 'சரக்...... சரக்...'கென்று சப்திக்க வெளியேறி விட்டாள்.

தருமாம்பாள் நீண்ட ஒரு பெருமூச்சுடன் எழுந்தாள். அவள் நெஞ்சு ஏனோ ஈர நூலைப் போல் கனத்தது. மெதுவாகத் தாழ்வாரத்துக்கு வந்தாள். பூனைபோல் அவள் வந்தாலும், அதைக் கவனித்து விட்ட வாஞ்சிநாதய்யர் பாகவதத்தில் பதித்திருந்த பார்வையை உயர்த்தினார். இவரைப் போய், 'யானை புகுந்தாலும் அறியமாட்டாதவர்' என்று அபாண்டம் சொன்னாளே, பங்கஜா! இதை நினைத்த தருமாம்பாளுக்குத் துக்கம் அடைத்துக் கொண்டு வந்தது. கிழவர் அவள் கணவரல்லவா!

"தருமூ! குழந்தை எங்கே போகிறாள்!"

குழந்தை! கிழவருக்கு வீட்டில் நடக்கும் விவகாரங்கள் ஏதாவது தெரிந்தால்தானே! இப்படிப் பரப்பிரம்மமாக இருக்கிறாரே! இதை எண்ணிய தருமாம்பாளுக்கு மனத்தை என்னவோ செய்தது.

"என்ன தருமூ, மலைத்து நிற்கிறாய்! குழந்தை எங்கே போகிறாள் என்று கேட்டேனே...!"

நீருண்ட கருமுகில் குளிர்ந்த குன்றின் மீது மோதி விட்டதுபோல் பொழிய ஆரம்பித்தாள் தருமூ: "அவள் எங்கே போகிறாளோ, நான் கண்டேனா! அதையெல்லாம் கேட்காமல் இருக்கும்பொழுதே, எனக்கு இந்த வீட்டிலே இவ்வளவு 'கௌரவம்' இருக்கிறது. இதையெல்லாம் கேட்க வேறே ஆரம்பித்து விட்டால், அப்புறம் நான் தப்ப முடியுமா!"

கிழவர் சிரித்தார். "தருமூ! அவள் சிறிசுதானே! நீ இதையெல்லாம் பாராட்டலாமா! உனக்கு, நீயும் ஒரு மாமியார் என்கிற எண்ணம் வந்து விட்டாற்போல் இருக்கிறது!"

"மாமியார்! ஐய......! யாருக்கு யார் மாமியார்! அதற்கெல்லாம் நான் கொடுத்து வைத்திருக்கிறேனா! அந்த அற்ப ஆசையிலும்தான் மண்ணை அள்ளிப் போட்டு விட்டார்களே!" மேலே பேசுவதற்கு முடியாமல் விம்மிய தருமாம்பாள் உள்ளே போய் விட்டாள்.

வாஞ்சிநாதய்யர் மனம் கலங்கினார். மனைவியின் குற்றச்சாட்டு நேராக நெஞ்சில் ஊசியாய்க் குத்தியது. நடந்ததை மறக்கும் பாவனையில் பாகவதத்தில் பார்வையைப் பதித்தார். ஆனால் அவர் கண்முன் பாகவதக் கதை ஏடுகள் பெயரவில்லை; நடந்து போன சொந்த வாழ்க்கைதான் கதையாக ஏட்டில் விரிந்தது.

2

முப்பது வருஷங்களுக்கு முன் கதிராமங்கலம் பஞ்சாயத்து ஆபீஸில் குமாஸ்தாவாகச் சேர்ந்ததுமே, தருமாம்பாளைக் கைப்பிடித்தார், வாஞ்சிநாதய்யர். அப்போது அவருக்கு மாதச் சம்பளம் பதினைந்து ரூபாய் தான். ஆனாலும் அந்த சுபிட்ச காலத்தில் அது ஒரு குடும்பத்துக்குப் போதும். எனவே வறுமையின்றி இன்பமாகவே வாஞ்சிநாதய்யர் இல்லறம் நடத்தினார், மனைவியுடன்.

ஆனாலும் அவர்களுக்கு ஒரு குறை. மணமாகி நாலு வருஷங்கள் ஓடியும் அவர்களுக்குச் சந்தான பாக்கியம் கிட்டவில்லை. அதனால் தருமாம்பாளின் பெண் உள்ளம் கலங்கியது. இக்குறை தீரவேண்டி அவள் சுற்றாத அரச மரமில்லை; பால் வார்க்



திரு ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழா சென்ற மார்ச்சு மாதம் 28உ வடலூர் குருகுல நிலையத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் குருகுல நிலையத்தின் வளர்ச்சிக்காக ஓர் பணமுடிப்பு வழங்கப்பட்டது. இவ் விழாவுக்குச் சென்னை முதன் மந்திரி திரு காமராஜ், நீதிபதி திரு சோமசுந்தரம், திரு டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, சுத்தானந்த பாரதியார் முதலியோர் வந்திருந்து சிறப்பித்தனர்.

காத பாம்புப் புற்றில்லை. அவள் பிள்ளைப் பேற்றை வேண்டி நாகபஞ்சமி விரதமும் இருந்தாள். அவள் இருந்த விரதம் வீண் போகவில்லை.

நாகராஜன் பிறந்தான்; செல்லமாக வளர்ந்தான். விசேஷமான சுட்டிகையுடன் அவன் திகழாவிடினும், மூன்றாவது பாரம் வரை சுமாராகப் படித்தான். ஆனால் வயசு ஏற ஏற அவனுக்குப் படிப்பில் சிரத்தை செல்லவில்லை; கடைசியில் பிடிவாதமாகப் படிப்பையே நிறுத்தி விட்டான்; பெற்றோர்களின் பிரயத்தனங்களெல்லாம் வீணாயின.

வெட்டியாக ஊர் சுற்றித் திரிந்த நாகராஜன் வாஞ்சிநாதய்யருக்கு ஒரு பிரச்னையாகி விட்டான். அப்போது உள்ளூரில் 'ஷாப்புக் கடை' வைத்திருந்த செட்டியார், "பையனை என் கடைக்கு அனுப்பி வையுங்களேன்; வியாபாரமாவது கற்றுக் கொள்ளட்டும்" என்றபோது, அந்த யோசனையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார், வாஞ்சிநாதய்யர். முதல் மூன்று மாசம் சம்பளமில்லாமல் சேவகம் புரிந்த பிறகு செட்டியார் நாகராஜனுக்கு மாசம் பத்து ரூபாய் சம்பளமும் போட்டுக் கொடுக்க ஆரம்பித்தார்.

3

அன்றொரு நாள் இரவு எட்டரை மணி. சாப்பிடுவதற்காகக் கடையிலிருந்து நாகராஜனின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்தார் வாஞ்சிநாதய்யர். அவனுக்குப் பதில் செட்டியாரின் ஆள் ஒருவன் வந்து, "முதலாளி உங்களைக் கையோடே கூட்டி வரச் சொன்னாரு!" என்றான்.

அய்யர் கடைக்குள் நுழையும் பொழுது செட்டியார் பெட்டியடியில் உட்கார்ந்திருந்தார்; எதிரே சற்றுத் தள்ளி, தலை குனிந்து ஸ்தம்பமாய் நின்றான் நாகராஜன்.

"என்ன விஷயங்க, முதலாளி!"—ஆவலுடன் கேட்டார் வாஞ்சிநாதய்யர்.

"ஒன்றுமில்லை; கடையைக் கட்டிக் கொண்டு கிளம்பும்பொழுது உங்கள் மகன் கால் தடுக்கிக் கீழே விழுந்து விட்டான்!"

"ஐயையோ! காயம் பட்டு விட்டதா!"

"காயம் பட்டாத்தான் தேவலாமே! அதற்குப் பதிலாக அவன் அடிமடியிலிருந்து, இதெல்லாம் கீழே விழுந்தது!" என்று தம் மேஜை மீதிருந்த சாமான்களைக் காட்டினார் செட்டியார். அங்கே, ஒரு சோப்புக் கட்டி, ஸ்னோ பாட்டில், பிளேடு பாக்கெட், பௌடர் டப்பா, — இத்தியாதிகள் காட்சி அளித்தன.

வாஞ்சிநாதய்யரின் நெஞ்சில் காயம் பட்டாற் போலிருந்தது. இதென்ன மானக்கேடு! இந்தத் திருட்டுப் புத்தி இவனுக்கு எப்படி வந்தது!

"இன்றைக்கு இவை நான் பார்த்தது; நான் காணாமல் இதற்கு முன்னால் எத்தனையோ! பையனைப் போலீசுக்கு அனுப்புவதற்கு முன்னால் உங்களிடம் ஒரு வார்த்தை சொல்லணும் என்றுதான் கூப்பிட்டேன்" என்றார் செட்டியார்.

அவ்வளவுதான்; செட்டியாரின் கரங்களைப் பற்றிக் கொண்டு, "முதலாளி! அவன் செய்ததற்கு என்ன தண்டனை கொடுத்தாலும் தகும்! ஆனால் என் கௌரவத்தை உத்தேசித்து விட்டு விடுங்கள். இம்மாதிரிப் பிள்ளையைப் பெற்று உங்களிடம் அனுப்பியதற்கு, என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார் வாஞ்சிநாதய்யர்.

செட்டியாருக்கு அய்யரிடம் மரியாதை உண்டு. இந்த நாடகமெல்லாம் நாகராஜனை மிரட்டுவதற்குத்தான். எனவே அவனை மன்னித்து அனுப்பி விட்டார். அப்பா என்ன சொல்வாரோ என்ற பயத்துடன், தந்தையைப் பின் தொடர்ந்தான் நாகராஜன். அவரோ வழியில் ஒன்றுமே பேச வில்லை. ஆனால் வீட்டு வாசலில் அடியெடுத்து வைத்ததும், பின்னே நுழைய முயன்ற மகனைப் பார்த்து, "இதோ பார்! நீ உள்ளே வர வேண்டாம். எனக்கு ஒரு திருட்டுப் பிள்ளை தேவையில்லை!" என்று கூறி முகத்தில் அறைவது போல் 'படீ' ரென்று கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே போய் விட்டார்.

4

சாப்பிடும் போது மகனுக்குப் பரிந்து பேசிய தருமாம்பாளுக்கும் கன்னத்தில் ஒரு

அறைதான் கிடைத்தது. பிறகும் கூட எங்கே அவன் மகனை உள்ளே விட்டு விடுவாரோ என்று பயந்து, ரேழியிலேயே வாசற் கதவைத் திறக்க முடியாமல் கட்டிலைப் போட்டுக் கொண்டு படுத்து விட்டார்! அவருக்கு அவ்வளவு கோபம்!

ஆனால் படுத்த பின் நிம்மதி பிறந்ததா! நாழிகை ஆக ஆகக் கோபம் தணிந்தது, தாபம் மேலிட்டது. "பாவம், சிறுக! அறியாமல் செய்து விட்டான். பட்டினியாகப் படுத்திருப்பானே! வெளியே ஒரே பனியாயிருக்குமே!" என்றெல்லாம் அவர் சிந்தனை வெளிந்தது. இருந்தாலும், எழுந்து போய் அவனைக் கூட்டிவரச் சுய கௌரவம் இடம் தரவில்லை. "ஒரு ராத்திரி அவதிப் படட்டும்; அப்போது தான் புத்தி வரும். காலையில் உள்ளே வந்தால் நான் ஒன்றும் சொல்லப் போவ இல்லை" என்று சமாதானம் செய்து கொண்டு உறங்கினார்.

ஆனால் காலையில் கதவைத் திறக்கையில் நாகராஜனைக் காணோம். தருமாம்பாள் அழுது புலம்பினாள். "எங்கே போகப் போகிறான்! வயிறு காய்ந்தால் தானாகவே வருவான்!" என்று பதிலளித்தார் வாஞ்சிநாதய்யர்.

நாட்கள் தேய்ந்தன. தேடாத இடங்களிலெல்லாம் தேடினார். பலனில்லை. கடலில் குளித்தெடுத்த முத்து கை நழுவியது போல், பெருந் தவம் செய்து பெற்ற பிள்ளை திரும்பிவர வில்லை, இன்று வரை!

இத் துக்கத்திலேயே வாழ்வைக் கழித்த வாஞ்சி நாத அய்யர் ஐம்பத்தைந்து வயதை எட்டியதால் நாலு மாசங்கள் முன் ஓய்வு பெற்றார். அச் சின்ன ஆபீஸிலிருந்து கணிசமாகப் பென்ஷனோ, பிடிப்புப் பணமோ கிடையாது. இந்த முதிய வயதில் ஆதரிக்க மகன் இருந்தும், இல்லாமற் போய் விட்டானே!

ஆனால் இக் குறையை அய்யரின் அண்ணா பிள்ளை சுந்தரம் தீர்க்க முன் வந்தான். அவனுக்குத் தங்கமான குணம்; சென்னையில் பெரிய உத்தியோகம். அவன் அழைப்பை ஏற்றுக் கொண்டு அய்யர் தம்பதி சகிதம் சென்னைக்கு வந்தார். சுந்தரம் சித்தப்பாவையும், சித்தியையும் மிகவும் அன்போடு தான் நடத்தினான். ஆனால் அவனுக்கு வாய்த்த மனைவி பங்கஜாவுக்கும் தருமுவுக்கும்தான் ஒத்து வரவில்லை.

5

இன்று நடந்த ரகளை வாஞ்சிநாதய்யரைச் சிந்திக்க வைத்தது. தவமிருந்து பெற்ற பிள்ளையை உயிரோடு இழந்து வெதும்பும் தருமாம்பாளின் தாயுள்ளத்தை நிம்மதியுடன் வைக்க வேண்டியது அவர் கடமையல்லவா! உலகத்தில் எத்தனை பேர் ஓய்வுபெற்ற பின்னும் வேலை பார்க்கவில்லை! அவருக்கும் ஏதாவது வேலை கிடைத்தால், உடலில் தெம்புள்ள வரை தனியாக இருந்து கொண்டு மனைவிக்கு மன நிம்மதி யளிக்கலாமே! பிறகு வேண்டுமானால் சுந்தரம் இருக்கவே இருக்கிறான்!

இந்த யோசனைகளைச் செயலாக்க மறுநாள் முதல் விளம்பரங்களைப் பார்த்து, வேலைக்கு மனுக்கள் போட ஆரம்பித்தார். அவர் அதிர்ஷ்டம் அண்மையிலேயே, 'தேல்ஜி அண் கோ'விலிருந்து வேலை விஷயமாகப் பேட்டிக்கு அழைப்பு வந்தது. குறித்த நாளில், ரகசியமாக யாருக்கும் கூறாமல் பேட்டிக்குப் புறப்பட்டார்.

ஆனால் கம்பெனிக்குள் நுழைந்ததுமே, அங்கு சுமார் இருபது இளைஞர்கள் கைகளில் எம். ஏ., எம். எஸ்ஸி. பத்திரங்களுடன் காத்திருப்பதைக் கண்டதும் வாஞ்சிநாதய்யர் உற்சாக மிழந்து, ஒதுக்குப்புறமாக ஓரிடத்தில் போய்ப் பேசாமல் உட்கார்ந்தார். இளைஞர்கள் கிழவரைப் பார்த்துத் தமக்குள் சிரித்துக் கொண்டார்கள். அதைக் கவனித்த அவருக்கு எழுந்து போய் விடலாமா என்றுகூடத் தோன்றியது. எண்ணத்தைச் செயலாக்கப் பார்வையை வாசற் பக்கம் திருப்பினார்.

அப்போது அவருக்கு இன்னமும் வியப்பூட்டும் வண்ணம் ஒரு இளம் பெண் நாகரிக உடையலங்காரங்களுடன் உள்ளே வந்து கொண்டிருந்தாள். வீட்டுக்குள் லட்சுமீகரமாக வளைய வரவேண்டிய அழகுக் குழந்தைகள், கிருகத்தைப் பாழாக்கி விட்டு ஆபீஸை அலங்கரிக்க வருகின்றனவே என்ற எண்ணத்தில் அப்பெண்ணையே பார்த்தார் வாஞ்சிநாதய்யர்.

உள்ளே வந்ததும் அவள் ஒரு முறை தன் குறுகுறுத்த நயனங்களைச் சுழற்றி, அங்கிருந்த இளைஞர்களின் உள்ளங்களை ஒரு முறை அசைத்து விட்டு, அவர்கள் பொறாமைப்படும் வகையில் பெரியவரின் பக்கத்தில் போய் உட்கார்ந்தாள்!

சிறிது நேரம் மௌனமாக இருந்த வாஞ்சிநாதய்யர் மெல்ல அவளுடன் பேச்சுக் கொடுத்தார். பெண்ணின் பெயர் பத்மினி, பி. ஏ. பட்டம் பெற்றவள், பொழுது போக்குக்காக வேலை தேடி வந்திருக்கிறாள் என்பதையெல்லாம் தெரிந்து கொண்டார். பதிலுக்குத் தம் கதையை வாஞ்சிநாதய்யர் சொன்னதும், "ஐயோ பாவம்; எனக்குக் கிடைக்கா விட்டாலும், உங்களுக்கு வேலை

கிடைக்க வேண்டும்!" என்று மனமாரக் கூறினாள் அந்தப் பெண் பத்மினி.

ஆயினும் தெய்வம் வேறு விதமாக நினைத்து விட்டது. முதலில் யாரோ இருவரைக் கம்பெனி குமாஸ்தா வந்து மானேஜரிடம் பேட்டிக்கு இட்டுச் சென்றார்; மூன்றாவதாகப் பத்மினியின் முறை வந்தது. அவள் பேட்டி முடிந்ததும், அய்யர் உள்பட மற்றெல்லோரையும் மானேஜர் அழைக்கக் கூட இல்லை; பத்மினிக்கு வேலை கிடைத்து விட்டது!

வாஞ்சிநாதய்யர் நிராசையுடன் வீடு திரும்பினார்!

6

இந்த ஏமாற்றத்துக்குப் பிறகு வேலைக்கு மனுப் போடுவதையே விட்டு விட்டார் பெரியவர். வீட்டிலோ தருமுவுக்கும், பங்கஜாவுக்கும் இடையில் பூகம்பம் வெடித்துக் கொண்டேயிருந்தது. பாவம்; மனக் கசப்புடன் நாட்களை ஓட்டினார் வாஞ்சிநாதய்யர். மாதங்கள் ஆறு ஓடி மறைந்தன.

பிறகுதான் அதிசயம்! திடீரென்று 'தேவ்ஜி அண் கோ' விலிருந்து மீண்டும் அழைப்பு வந்தது. அன்று சனிக்கிழமை. ஐயர் தள்ளாடிப் போய் பஸ்ஸைப் பிடித்து, ஆபீசை அடைவதற்குள் மணி இரண்டாகி விட்டது. அநேகமாக எல்லாரும் போய் விட்டிருந்தார்கள்.

நிராசையுடன் வீடு திரும்பி விடலாமா என்று அவர் யோசிக்கையில், மானேஜரின் அறையிலிருந்து வெளியே வந்தாள் ஒரு பெண். அவள் பத்மினிதான்! கிழவரைப் பார்த்ததும் முறுவலிப்புடன் அண்மையில் நெருங்கி, "உங்களுக்கு வேலையில் சேர விருப்பமானால் நாளை முதல் வரலாம்; மாசம் நூறு ரூபாய் சம்பளம். அன்று உங்கள் கஷ்டத்தை அறிந்தது முதல், உங்களுக்கு உதவத் துடித்தேன். ஆனால் இப்போதுதான் சமயம் வந்தது. நாளை முதல் நான் ஆபீஸுக்கு வரமாட்டேன்; என் இடத்தில் நீங்கள் வரலாம்" என்று சிரித்தாள் பத்மினி.

"என்ன, எனக்காகவா நீங்கள் விலகுகிறீர்கள்!"

"இல்லை; எனக்கு இனி வேலை வேண்டாம்! நானும் மானேஜரும் கல்யாணம் செய்துகொண்டு நான்கு மாதங்களாகின்றன..." என்று கூறிய பத்மினி நாணித் தலை குனிந்தாள்.

"கல்யாணமாகி விட்டதா! சபாஷ்! நீ சௌபாக்கியவதியாக வாழ்வாயம்மா!" என்று மனங் குளிர ஆசீர்வதித்தார் வாஞ்சிநாதய்யர்.

"சரி... நீங்கள் மானேஜரைப் பாருங்கள்...... நான் அவரிடம் பேசியிருக்கிறேன்" என்று கூறிய பத்மினி வேறு அறைக்குச் சென்றாள்.

வாஞ்சிநாதய்யர் மானேஜரின் அறைக்குள் தயங்கிக் கொண்டே நுழைந்தார்.

"என்ன பெரியவரே! எப்படியோ என் மனைவியைச் சிபாரிசு பிடித்து விட்டீர்களே!" என்று கேட்டுக் கொண்டே தலையை நிமிர்த்தாமல் மேஜை மீது ஏதோ காகிதத்தைத் தேடினார் மானேஜர். பிறகு பார்வையை உயர்த்தியவர், ஒருகணம் திகைத்துப் போனார். உடனே, "உங்கள் பெயரென்ன!" என்று கேட்டார்.

"வாஞ்சிநாதய்யர்!"

"எந்த ஊர்!"

"கதிராமங்கலம்!" என்னும்போதே கிழவரின் பேச்சுத் தழுதழுத்தது.

அவ்வளவுதான்! "அப்பா, என்னைத் தெரியவில்லையா! நான் தான் நாகராஜன்!" என்று அலறியெழுந்த மானேஜர் பெரியவரை இறுகக் கட்டிக் கொண்டார்.


அய்யருக்கும் பேச முடியவில்லை. சந்தோஷம் நெஞ்சை அடைத்தது; கண்கள் நீரைப் பெருக்கின. மெல்லப் பிடியிலிருந்து விடுபட்டுக்கொண்டு, "நாகு! என்னை மன்னித்து விடடா!" என்றார்.

"எதற்கப்பா மன்னிக்கணும்! இது வரை உங்களை மறந்திருந்த நான்தான் பாவி! அன்று நீங்கள் என்னை வெளியேற்ற விட்டால், இன்று எனக்கு இந்த அதிர்ஷ்டம் வந்திருக்குமா! இந்த வயசில் உங்களைக் கஷ்டப்பட வைத்து விட்டேனே! ஓய்வு பெற வேண்டிய உங்களுக்கு வேலையா! இல்லை......இல்லை...... !"

அறைக் கதவு 'கிரீச்' சிட்டது; 'இல்லை' யென்ற கடைசி வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே பத்மினி உள்ளே நுழைந்தாள். உடனே, "என்ன, இவருக்கு வேலையில்லையா! நான் கொடுத்த வாக்கு வீண்தானா!" என்று கணவனிடம் கேட்டாள்.

"அவருக்கு இங்கே வேலையில்லை, பத்மினி! வேறு வேலை காத்திருக்கிறது! நாளைக்கு உனக்குக் குழந்தை பிறந்ததும், அப் பேரனைக் கொஞ்சுவது தான் அவருக்கு வேலை!" என்று சிரித்தான் நாகராஜன்.

பத்மினி ஒன்றும் புரியாமல் திகைத்தபோதிலும் அவள் எழில் வதனம் நாணத்தால் குங்குமமாய்ச் சிவந்தது. ஏனெனில் அவள் தாயாராகப் போகும் சிதம்பர ரகசியத்தை இன்று காலையில்தான் கணவனிடம் சொல்லியிருந்தாள், காதோடு காதாக!



திருச்சி ஜில்லா, அரியமங்கலம் - வயலூர் கிராமங்களின் பிரபல மிராசுதாரரான ஸ்ரீ டி. சேஷாத்திரி, D. Com. அவர்கள் 3-3-55 அன்று ஸ்ரீரங்கத்திலுள்ள தமது இல்லத்தில் காலமானார். ஸ்ரீ சேஷாத்திரி சென்னை மாகாணத்திலேயே தலைசிறந்த வாணிப கல்வி ஸ்தாபனங்களில் ஒன்றான ஸ்ரீரங்கம் நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் காமர்ஸின் அதிபர். வாணிப கல்வி ஆசிரியர்கள் குழுவில் தம் ஆற்றலினாலும் அறிவினாலும் தலைசிறந்து விளங்கியவர். அருமை மனைவியையும், இரு பெண்களையும் நான்கு பிள்ளைகளையும் கணக்கற்ற உறவினர்களையும் நண்பர்களையும் மீளாத் துயரத்தில் ஆழ்த்திச் சென்ற ஸ்ரீ சேஷாத்திரியின் ஆத்மா சாந்தி அடைக.

(ஸ்ரீ சேஷாத்திரி அவர்களின் குமாரர் ஸ்ரீ எஸ். ரங்கராஜனால் பிரசுரிக்கப்பட்டது.)

ஒரிஸ்ஸாவில் விநோபா

சுரேஷ் ராம்

வைஷ்ணவ பக்தர்கள் மலிந்த நாடு என்று புகழ் பெற்ற வங்க நாட்டிலிருந்து ஆசார்ய விநோபா, வீரர்களால் சிறந்த கலிங்க நாட்டுக்குள் ஜனவரி 26ல் பிரவேசித்தார்.

அசோக சக்கரவர்த்தி யுத்த வீரராகத் திகழ்ந்தார். கலிங்கத்தின் மீது படையெடுத்தார். கலிங்க வீரர்களோ, தங்கள் கடைசி மூச்சு இருக்கும் வரை யுத்த சன்னத்தராக வந்த அசோகனுக்குப் பணிவதில்லை என்று வீரத்துடன் போர் புரிந்தனர். ஒருவர் மிச்சமின்றிக் கலிங்க வீரர் அத்தனை பேரும் சண்டையிட்டு மடிந்தனர். அசோக சக்கரவர்த்தி அந் நிலையில் பிணக்காடாகக் கிடந்த அந்தப் போர்க்களத்தைக் கண்டார். அவர் மனத்தில் பெரும் புரட்சி ஏற்பட்டது. போரின் கொடுமையை உணர்ந்தார். அவரால் தாங்க முடியவில்லை. தமது ஆயுதங்களை அவ்விடத்திலேயே துறந்து விட்டு அன்பு வழியை மேற்கொண்டார். போர் வீரர் அசோகர் தர்ம வீரராகத் திகழலானார்! இப்படி மன்னனைப் பிடித்த மன்னனைத் தர்மத்தின் மீது ஆசை கொள்ளச் செய்த புனித நாடு ஒரிஸ்ஸா. அத்தகைய நாட்டுக்குள்தான் ஆசார்ய விநோபா சென்ற ஜனவரி இருபத்தாறாந் தேதி புகுந்து தமது புனித யாத்திரையைத் தொடர்ந்தார்.

* * *

வங்கத்தை விட்டு ஒரிஸ்ஸாவுக்குப் புறப்படும் அன்று — ஜனவரி 24-ம் தேதி—கருர்வேலி என்ற வங்கத்தைச் சேர்ந்த ஊரில், மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் விநோபா பின்வருமாறு கூறினர்:



"வங்கத்திலாகிலும் தீண்டாமைப் பிரச்னை அறவே ஒழிந்திருக்கும் என்று நினைத்தேன். மற்ற இடங்களில் இருப்பது போலவேதான் இங்கும் அந்தப் பிரச்னை அழியாத மேனியோடு இருந்து வருகிறது. சமீபத்தில் என்னைச் சில தோட்டிகள் பார்க்க வந்தனர். அவர்கள் தாங்கள் படும் கஷ்டங்களை யெல்லாம் என்னிடம் சொன்னார்கள். நான் அவர்களிடம், 'உங்களுடைய குழந்தைகளின் படிப்புக்கு ஏதாகிலும் வசதி யிருக்கிறதா!' என்று கேட்டேன். அவர்களுக்கென்று தனியாகப் பள்ளிக்கூடம் இருப்பதாகக் கூறினார்கள். இதைப் பெரிய அக்கிரமம் என்றே கருதுகிறேன். தோட்டிகளுக் கென்று தனியான பள்ளிக்கூடம் என்றால் அவர்கள் ஆயுள் முடியத் தீண்டத் தகாதவர்களாகவே வாழ வேண்டியதுதான். இதைப் போன்ற ஒரு சாபக்கேடு சுயராஜ்யத்துக்கு வேறில்லை. இன்று பள்ளிக்கூடங்களில் உங்கள் குழந்தைகளுடன் அவர்களுடைய குழந்தைகளைச் சேர்ந்து உட்கார அனுமதி மறுக்கிறீர்கள். ஆனால் நாளைக்கே ஒரு அன்னியப் படையெடுப்பு, அல்லது யுத்தம், அல்லது ஏதோ ஒரு இக்கட்டான நிலை ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது அவர்கள் உங்களுடன், தோளோடு தோள் சேர்ந்து நின்று அக் கஷ்ட நிலையைச் சமாளிப்பார்கள், உதவுவார்கள் என்று நீங்கள் எதிர்பார்க்க முடியுமா! ஆகவே, தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் மற்றவர்களும் பெற்றுவரும் சலுகைகள் வசதிகள் யாவும் தோட்டிகளும் பெற வேண்டும். அவர்கள் ஒதுக்கப்படலாகாது. இதை மனத்தில் கொண்டு இனி நீங்கள் வேலை செய்வீர்கள் என்று நம்புகிறேன். சீக்கிரத்திலேயே வங்க நாட்டை விட்டுத் தீண்டாமை என்னும் பேய் போய்த் தொலையும் என்றும் எண்ணுகிறேன்.

"வங்க மக்கள் தங்கள் வங்க மொழியினிடம் இன்னும் கொஞ்சம் அன்புடனும் உண்மையோடும் நடந்து கொள்ள வேண்டும். நமது நாட்டிலுள்ள மொழிகளிலே மிகவும் அழகானதோர் மொழி வங்க மொழி. மிகவும் ஆழமும் அகலமும் உள்ளது. வங்க மொழியைக் கொண்டு, மேற்கு வங்கத்துக்கும் கிழக்குப் பாகிஸ்தானுக்கும் இடையே நேச உறவை ஏற்படுத்தி விடலாம். இம்மொழி அதற்குப் பெருந் துணையாகவும் ஊக்கமாகவும் விளங்கும். அதனாலே வங்க மக்களுக்குத் தங்கள் தாய்மொழியைப் பேணிப் போற்றுவதில் பெரும் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. இலக்கிய ஆசிரியர்களும் மற்றவர்களும் தங்கள் இலக்கியத்தினிடம் அதிக அன்பும் பரந்த மனப்பான்மையும் கொள்ள வேண்டும். ஆகவே நான் தாழ்மையுடன் உங்கள் இலக்கியத்துக்கும் மொழிக்கும் அதிக சிரத்தையும் கவனமும் செலுத்துங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆங்கில மொழியை விழுந்து விழுந்து கும்பிடுவதில் நேரத்தை வீணாக்காதீர்கள். ஆங்கிலமும் அதன் இலக்கியமும் இன்றைய உலகில் எவ்வளவு உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கின்றன என்பது நன்றாகத் தெரியும். அதனால் சிலர் அம்மொழியை ஆழ்ந்து படிக்கவும் வேண்டும்தான். ஆயினும் அது தாய் மொழியின் ஸ்தானத்தை எப்படி ஏற்க முடியும்! இது தவிர ஹிந்தி மொழியையும் நீங்கள் நன்றாகக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆங்கிலம் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த காலம் மலையேறி விட்டது. காந்தி மகாத்மா இந்நிலையை 1918ம் வருஷத்திலேயே தீர்க்க திருஷ்டியோடு எதிர்பார்த்து, சென்னை ராஜதானியில் ஹிந்திப் பிரசாரம் செய்யத் தமது புதல்வரை அனுப்பி வைத்தார். ஆம், காந்தி மகான் குஜராத்திக்காரர். ஆனாலும் பாரத நாட்டில் வருங் காலத்தில் ஹிந்தி எப்படிப்பட்ட முக்கியமானதோர் ஸ்தானத்தை வகிக்கும் என்பதை நன்கு உணர்ந்திருந்தார். ஆகவே இங்குள்ள தொண்டர்கள், பள்ளிக்கூட ஆசிரியர்கள், படித்தவர்கள் யாவரும் எவ்வளவு சீக்கிரம் ஹிந்தியைக் கற்றுக் கொள்ள முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கற்றுக் கொள்ளுவது நல்லது!

"கடைசியாக ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும். நான் இது வரை பூதான இயக்கத்

தைப் பற்றிப் பிரசாரம் செய்து வந்திருக்கிறேன். இன்றையப் பொருளாதார நிபுணர்கள் ஒப்புக் கொள்ளும் வகையில் கூறி வருகிறேன். ஆயினும் இப்பூதான இயக்கத்தில் தெய்வ பக்தி அம்சமும் இருக்கிறது. பூமாதேவிக்குத் தொண்டு செய்வதைப் போல் ஆண்டவனுக்குச் செய்யும் சிறந்த பூஜை வேறு ஒன்றும் இல்லை.''

விநோபா, வங்கத்திலுள்ள டாண்டன் என்ற கடைசிக் கிராமத்திலிருந்து 26 ம் தேதி விடியற்காலை புறப்பட்டார். ஆறு மைல் நடந்தோம். வங்க–ஒரிஸ்ஸா எல்லையை அடைந்தோம். வங்க தேசத் தொண்டர்களும் நண்பர்களும் ரவீந்திரரின் அருமையான கவியொன்றைப்பாடி விநோபாவை வழியனுப்பினர். ஆசார்ய ஹரிஹரதாஸ் என்ற பழைய தேச பக்த தொண்டர் ஒரிஸ்ஸாவுக்கு வருமாறு விநோபாவுக்கு நல்வரவு கூறினர். பிறகு விநோபா பேச ஆரம்பித்தார் :



"இன்று ஜனவரி இருபத்தாறும் தேதி. நாம் சுதந்திரப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்ட நாள் இது. அந்தப் பிரதிக்ஞையில் ஒரு பகுதி நிறைவேறி விட்டது. அரசியல் சுதந்திரம் பெற்று விட்டோம். இன்னொரு பகுதி—மிக முக்கியமான பகுதி — இன்னும் நிறைவேறாமலே இருந்து வருகிறது. நான் எந்த ராஜ்யத்துக்குள் புக இருக்கிறேனோ, அங்கு நான் செய்யப் போகும் யாத்திரை புனித யாத்திரையாகும். ஏனெனில் எனது பூதான இயக்கம் எப்படிப் பரிபூரண வடிவம் பெறுகிறது என்று ஒரிஸ்ஸாவில் தான் பார்க்க விரும்புகிறேன். பூதானத்தின் பூரண ஸ்வரூபத்தை இங்கே காண ஆசைப்படுகிறேன்.

"நான் ஒரிஸ்ஸாவை வங்கத்தின் ஒரு பகுதியாகவும், ஒரிஸ்ஸாவின் ஒரு பகுதியாக வங்கத்தையும் கருதுகிறேன். ஏனெனில் இரண்டுக்கும் பொதுத் தெய்வம் ஜகந்நாதர். வங்கத்தில் தோன்றிய ஞானி சைதன்ய மகா பிரபுவின் பக்தி பாரத தேசம் முழுவதும் பரவியது. அவர் தமது கடைசி நாட்களை ஒரிஸ்ஸா ராஜ்யத்தில்தான் கழித்தார். இங்கேதான் முக்தியும் பெற்றார். ஆகவே இரண்டு ராஜ்யங்களையும் ஒரு ராஜ்யமாகக் கருதுகிறேன்.

"சீரழிந்து போன பக்திமார்க்கத்தை நிர்மாணம் செய்வது தான் நமது முக்கியமான வேலை. இந்த தர்மசக்கர பரிவர்த்தன வேலையில் நமது பலவீனமான கைகளைப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறான் ஆண்டவன். நாம் ஒருவருடன் ஒருவர் ஒத்துழைத்து முயன்றால் இக்காரியம் வெகு சீக்கிரமே வெற்றி யடையும் என்று நம்புகிறேன். இதற்குக் கடவுள் அருள் பாலிப்பாராக.



என்றும் உங்களுக்குப் பணிபுரிய போதிய சக்தியை எனக்கும் ஆண்டவன் அளிப்பாராக.''

ஒரிஸ்ஸாவில் பிரவேசித்தபின் நடந்த முதல் பிரார்த்தனைக் கூட்டமே மிகச்சிறப்பாக இருந்தது. ஒரிஸ்ஸாவில் பூதான இயக்கத்தை வெற்றிகரமாக நடத்திவரும் ஸ்ரீ கோப பந்து சௌத்ரி என்பவர், நாற்பதாயிரம் பேர் வழங்கிய லக்ஷத்து இருபதினாயிரம் ஏக்கர் நிலத்தையும், தொண்ணூற்று மூன்று கிராமங்களையும் வழங்கினர்.


அந்த நிலங்களை ஏற்றுக்கொண்டு ஆசார்ய விநோபா பாவே பின்வருமாறு கூறினர்:

"நான் இந்த நாட்டுக்கு வந்ததில் எவ்வளவோ சந்தோஷப்படுகிறேன். இது வீரம் பொருந்திய தேசம் என்று புகழ்பெற்றதல்லவா! அசோக சக்கரவர்த்தியின் மனத்தை மாற்றி, அஹிம்சா போதனை புரிந்த நாடல்லவா! முன்னாட்களில் யாராவது ஏழைகளுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்று விரும்பினால், மகாத்மா 'ஒரிஸ்ஸாவுக்குப் போங்கள்' என்பார். அப்படிப்பட்ட இப்புனித நாட்டுக்கு, நமது பழைய சுதந்திர பிரதிக்ஞைக்குப் புது மெருகு கொடுக்க வேண்டிய இந்த ஜனவரி 26-ம் தேதி யன்று நான்வந்ததில் மகிழ்ச்சியடைகிறேன். பாரத நாட்டின் எந்த மூலையிலும் பொருளாதார அடிமைத்தனமோ, சமூக மூடப் பழக்கங்களால் ஏற்படும் அடிமைத்தனமோ நிலவ இடங் கொடுக்கக் கூடாது என்று உறுதி செய்து கொள்ள வேண்டும். ஹரிஜனன் ஆனாலும் சரி, ஆதிவாசியானாலும் சரி, அல்லது வேறு யாரானாலும் சரி, யாவரும் அவர்களுக்குரிய எல்லா உரிமைகளையும் பெற்று வாழ வேண்டும். தாழ்த்தப்பட்டவர்கள் எனப் படுபவர்கள் உயர்த்தப் படவேண்டும். இந்த உறுதிகளை யெல்லாம் நிறைவேற்றப் பாடுபடவேண்டும். இன்னும் கொஞ்சம் தீவிரமாகச் சொல்ல வேண்டுமெனில், நாம் நம் புலன்களை, உணர்ச்சிகளை, அறிவை நம் வசத்தில் கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். 'அவைகளுக்கு நாம் அடிமையாக மாட்டோம்' என்று உறுதி கொள்ள வேண்டும். இந்தச் சுயராஜ்யத்தை முதலில் அடைய முயல்வோம். பிறகு, அடிமை வாழ்வின் மற்ற எல்லாச் சின்னங்களையும் ஒழிக்கப் பார்ப்போம். இவ்விரு முயற்சிகளின் அடையாளச் சின்னமே பூதான யக்ஞம். இவை யாவும், அஹிம்சா முறையில் ஒரு புரட்சி ஏற்பட்டா லொழியச் சாத்திய மில்லை. அதனால் நான் உங்களைக் கிராமந்தோறும், வீட்டுக்கு வீடு சென்று பூதானம், சம்பத்தி தானம் கேளுங்கள் என்கிறேன். அப்படிப் பெற்ற செல்வமும் நிலமும் அந்தக் கிராமவாசிகளுக்கே பகிர்ந்து அளிக்கப்படும். பிறகு கிராமம், கண்ணன் வாழ்ந்து விளையாடி லீலைகள் புரிந்து மகிழ்ந்த கோகுலமாகி விடும்!''

சரித்திரப் புகழ் பெற்றதோர் நாளில் விநோபா ஒரிஸ்ஸாவில் நுழைந்தார். அவர் புனித யாத்திரை அங்கு நடக்கிறது. புதுவாழ்வு பெறும் ஒரிஸ்ஸா விவசாயி, பாரத நாட்டிலுள்ள மற்ற சகோதரர்களுக்கும் வழிகாட்டியாக விளங்குவாராக!

ஒரு காமிராவில் நீங்கள் பிரதானமாக எதிர்பார்க்கும் இரண்டு அம்சங்கள்

அதுவும் உங்கள் சக்திக்குட்பட்ட நயமான விலையில்



1. ஒரு சிறந்த லென்ஸ்

உயர் ரக f/4.5 லென்ஸ் பகல் எந்த சமயத்திலும், வெளிச்சம் மங்கலாயிருப்பினும்கூட, தெளிவான ஸ்னாப்புகள் தரும். லென்ஸை ஒன்று திருப்பினால் போதும், ஒரு போர்ட்ரேட் முதல் நிலப்பரப்புக் காட்சிவரை எதைவேண்டுமானாலும் நிஷ்ணயமாக போக்கஸ் செய்ய முடியும்.

2. ஒரு துரிதமான ஷட்டர்

உச்ச வேகத்தில் ($\frac{1}{200}$ செகண்டு), மிக துரிதமான செயல் காட்சிகளையும் தெளிவு குன்றாமல் ஸ்னாப் பெடுக்கலாம். தாமதித்து இயங்கும் வசதியுள்ள திறல், உங்களுக்கும் வேண்டுமானால் படத்தில் கலந்துகொள்ள முடியும். ஒரு 'கோடக்' பிளாஷ் ஹோல்டரை காமிராவுடன் இணைத்துக் கொண்டு வீட்டினுள்ளும் இரவிலும்கூட அற்புதமான ஸ்னாப் புகள் எடுப்பது சுலப சாத்தியமே.

கோடக் 'ஸ்டேர்லிங்' II காமிரா

இதன் அழகிய டிசைனும் அமைப்பும உங்களை புளகாங்கிதமடையச்செய்யும்! 'கோடக' 620 பிலிம் ஒவ்வொரு சுருளிலும் எட்டு ஆல்பம் சைஸ் ஸ்னாப்புகள் எடுக்கலாம்... ... ரூ. 157/8

பிளாஷ்ஹோல்டர்... ... ... ரூ. 31/4

தோல் கேஸ் ... ... ரூ. 9/8

இவ்விலைகளில் விற்பனை வரி சேராது.

இரு சிறந்த போல்டிங் காமிராக்கள் இன்னும் குறைவான விலைகளில்



கோடக் 'ஜூனியர்' காமிராக்கள் 'ஸ்டேர்லிங் II' காமிராவைப் போலவே கவர்ச்சிகரமான தோற்றமும் அமைப்பும்—ஆனால் இன்னும் எளிய லென்ஸ்கள் மற்றும் ஷட்டர்களுடன். 'கோடக்' 620 பிலிமில் எட்டு அழகான ஸ்னாப்புகள்.

'ஜூனியர் I' ஒரு பாக்ஸ் காமிராவைப் போன்று அவ்வளவு சுலபமாக உபயோகிக்கக்கூடியது. காட்சியை குறி பார்த்து பொத்தானை அமுக்க வேண்டியதே ரூ. 76/-

'ஜூனியர் II' உயர்ரக f/6.3 லென்ஸ் மற்றும் இரு வேகமுள்ள ஷட்டர். ஒரு 'கோடக்' பிளாஷ்ஹோல்டருடன் வீட்டினுட்புறக் காட்சிகளை அற்புதமாக படம் பிடிக்கலாம். ரூ. 115/-

எந்த மாடலுக்கும் கேஸ் ... ரூ. 9/8

ஜூனியர் II' காமிராவிற்கு பிளாஷ்ஹோல்டர் ... ... ரூ. 31/4


கோடக் லிட்.

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்


K. 904

'பெர்க்கின்ஸ்' டீஸல் இன்ஜின்களையே பொருத்துங்கள்



பஸ்களுக்கும்
லாரிகளுக்கும்

ஏனெனில்



- ★ எவ்வித ரஸ்தாவுக்கும் பருவுக்கும் ஏற்ற அதிக சக்தி
- ★ பராமரிப்புக்கிடையே கூடுதலான மைல்கள் ஓட்டம்
- ★ பெட்ரோல் இயந்திரத்தை விட மைலுக்கு மூன்றளு செலவில் சேமிப்பு
- ★ புகை ஏற்படாததோடு என்ஜின் சேதாரமும் இல்லை
- ★ குறைந்த ஸ்பேர் செலவுடன் சுலபமான பராமரிப்பு
- ★ எவ்வித சிரமமின்றி எளிதில் இயங்குவது
- ★ ஓட்டுபவர்களுக்கு மிகவும் சௌகரியம்

உங்களுக்கு அதிக செலவின்றி லாபமளிக்கிறது

ஸிம்ஸன் & கோ., லிமிடெட்

மதராஸ் - 2

பிராஞ்சுகள்: பெங்களூர்-உதகமண்டலம்-திருச்சிராப்பள்ளி-செகந்திராபாத் (Dn.)

இந்தியா முழுவதும் விற்பனையும் ஸர்விஸும் உண்டு

அருகாமையிலுள்ள உங்கள் 'பெர்க்கின்ஸ்' வியாபாரியை விசாரிக்கவும்



அத்தியாயம் 3

புயலுக்கு முன்

அறைக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. ஓடிச் சென்று கதவைத் திறந்தேன். ரமேஷ்தான் நின்று கொண்டிருந்தார். "இந்து, அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. நீ சீக்கிரம் கீழே போ" என்றார். நானும் பறந்தோடிச் சென்றேன்.

கோமளவல்லி அம்மாள் பிரசவ வேதனையில் தவித்துக் கொண்டிருந்தார். அவருக்கு உடலில் பலமே கிடையாது. பாவம்! அவரைப் பார்த்ததும் பரிதாப உணர்ச்சி பொங்கி எழுந்தது.

அன்று முழுதும் வேலை சரியாக இருந்தது. மூச்சுவிடக் கூட ஒழிவு இல்லை. டாக்டர் அம்மாவும், நர்ஸுகளும் வந்து போய்க்கொண்டிருந்தனர். எல்லோருக்கும் பணிவிடைகள் செய்து கொண்டிருந்தேன். அன்றிரவு ஒரு மணிக்குக் "குவா குவா" என்ற சின்னஞ் சிறு குழந்தையின் அழுகை ஒலியை நான் கேட்ட போது வேலை செய்த சிரமமெல்லாம் எனக்கு மறைந்து போய் விட்டது. ஒரு நர்ஸ் வெளியே வந்து, "ஆண் குழந்தை என்று எல்லோருக்கும் சொல்லு" என்றாள். நான் ஓட்டமாக ஓடி, முதலில் பத்மநாபனிடம் கூறி விட்டு மாடிக்கு ஓடினேன். எனக்கு முன்னால் யாரும் தெரிவித்து விடக் கூடாதே என்று

கவலை. என்னுடைய பரபரப்பில் பாதிப் படிகள் ஏறும் போதே, "சுலோசனா! ரமேஷ்!" என்று கத்திக் கொண்டே சென்றேன். இருவரும் ஓடி வந்தார்கள். "கங்க்ராஜுலேஷன்ஸ்! இருவருக்கும் தம்பிப் பாப்பா பிறந்திருக்கிறான்!" என்று குதூகலத்துடன் சொன்னேன்.

சுலோசனா கீழே ஓடினாள். ரமேஷ் மாத்திரம் சற்று நாணமடைந்தது போல் எனக்குத் தோன்றியது. ஒரு புன்னகையுடன் அவர் தன் அறைக்குச் சென்று விட்டார். அதன் பிறகும் விடிய விடிய வேலை இருந்தது. சுலோசனா என்னைப் போய்ச் சற்றுநேரம் தூங்கும்படி சொன்



னாள். எனக்கு மனம் வரவில்லை. ஒருவர் இப்படித் துடிக்கும்போது எப்படித் தூங்குவதற்கு மனம் வரும்? மேலும் நான் மிகவும் கடமைப் பட்டவள் அல்லவா? முத்துவோ ஒரு தூங்கு மூஞ்சி. சுலோசனாவுக்கு ஒன்றும் தெரியாது. ஆகவே நான் அவளை அதட்டிப்



போகச் சொல்லிவிட்டு எல்லாக் காரியங்களையும் நானே கவனித்தேன். அத்தனை நேரத்துக்கு மேல் டாக்டருக்கும் நர்ஸ்களுக்கும் காப்பி போட்டுக்கொடுத்தேன்.

அதன் பிறகு குழந்தையைப் பார்த்தேன். அத்தனை சின்னஞ் சிறு குழந்தையை நான் பார்த்ததே இல்லை. அதன் பட்டுக் கைகளையும், சின்னக் கால்களையும், களங்கமற்ற வதனத்தையும் கண்டபோது எனக்கு உடலெல்லாம் புல்லரித்தது. என் உள்ளத்தில் பதுங்கிக் கிடந்த தாய்மை உணர்வு பொங்கிப் பிரவாகமாகப் பெருகுவது போன்ற ஒரு பிரமை உண்டாயிற்று. தொட்டிலில் அது நிராதரவான நிலையில் கிடந்ததைப் பார்த்தபோது இரக்க உணர்ச்சி பொங்கிற்று. அந்த நிமிஷம் முதல் அந்தக் கண்மணிதான் எனக்கு அந்த வீட்டில் உற்சாகமளித்துக் கொண்டு வந்தது.

கோமளவல்லி அம்மாள் என்னைக் கண்டதும் புன்னகை புரிந்தார். அதில் ஒரு தாயின் பெருமிதம் வெளிப்பட்டது. மூன்று குழந்தைகளுக்குத் தாயான பிறகும் அவருக்குத் தாய்மையின் பூரிப்பு போகவில்லை. அந்தக் களைத்துப் போன முகத்திலும் தாய்மையின் சுடர் வீசியது.

எனக்கு என் அன்னையின் நினைவு வந்தது. என்னை ஈன்றெடுத்தபோது அந்த உத்தமி இப்படித்தானே பெருமிதம் கொண்டிருந்திருப்பாள் என எண்ணினேன். நானும் ஒரு காலத்தில் இப்படித் தாய்மையின் பூரணத்துவத்தை அனுபவிப்பேன் என்கிற எண்ணம் கூடவே தோன்றியது. ஆகா! அந்த எண்ணம்தான் உள்ளத்தில் எப்படிப்பட்ட இன்பத்தைச் சுரக்கச் செய்தது! அப்போது அது ஒரு கனவாகவே தேய்ந்து மறைந்து விடும் என்று நான் சிறிதேனும் அறிந்திருந்தேனா?

பெண்மையின் நிறைவு தாய்மை உணர்ச்சியிலே அடங்கித்தான் நிற்கிறது. மற்றதெல்லாம் அதற்குப் பிறகுதான். அந்த நிறைவை அடையாமல் என் வாழ்க்கை முடிவடையப் போகிறதே என்று எண்ணும்போது சற்றுத் துயரம் உண்டாகிறது. அதிலும் கடந்த ஒரு வருஷமாக இந்த ஏக்கம் அதிகரித்துக் கொண்டே வந்தது. எத்தனை தடவைகள் ஒரு பச்சிளங் குழந்தையை அணைத்துக் கொள்வது போலவும், அதன் பிஞ்சுக் கரங்களை முத்தமிடுவது போலவும் கனவு கண்டிருக்கிறேன், தெரியுமா? இந்த ஏக்கத்தை யாரிடமாவது சொல்லத்தான்

முடியுமா? சொன்னால்தான் புரியுமா? விவாகமாகாத ஒரு பெண்ணுக்குக் குழந்தை வேணுமென்ற ஆசை தோன்றுவதே விசித்திர மென்று தோன்றலாம். இதை நான் யாரிடமும் வெளியிட்டதே கிடையாது! ஆனால் என் கதையை எழுதும்போது என் உள்ளக் கிளர்ச்சிகளையும், ஆசாபாசங்களையும் வெளியிட்டுவிட வேண்டுமென்று தோன்றுகிறது. அவரிடம் எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டுவிட வேண்டுமென்று தோன்றுகிறது. அதனால்தான் கூச்சத்தையும் போக்கிக் கொண்டு எழுதுகிறேன். அவர் என்னைப் புரிந்து கொள்வார் என்ற நம்பிக்கை எனக்குப் பரிபூரணமாக இருக்கிறது.

பாலுக் கண்மணி பிறந்ததிலிருந்து எனக்கு நேரம் போவதே தெரியவில்லை. அவனைக் கண்டு மகிழவும், கொஞ்சவும் நேரம் போதவில்லை என்று சொல்ல வேண்டும். அவன் சிரித்தால் சந்தோஷம். அழுதால் ஆனந்தம்-தும்பினால் மகிழ்ச்சி. ஏதாவது சத்தம் கேட்டால் அப்படியே அவனுக்குத் தூக்கிப் போடும். அதைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கும். இப்படி என்னை மறந்து அவனிடம் அன்பு வைத்து விட்டேன். பெண்மை உள்ளத்துக்கு எதன் மீதாவது அன்பைச் சொரிந்து விட வேண்டும். அந்த அன்புக்கு இலக்கானவர்கள் அதில் திக்கு முக்காடிப் போவார்கள், அதிலும் ஒரு குழந்தை ஒரு பெண்ணின் அன்புக்கு இலக்காகும்போது, பாவம்! அதன் பாடு கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கும்.



ஒரு கணம் அவனைச் சும்மா விடமாட்டேன். நிமிஷத்துக்கு ஒரு சட்டை மாற்றுவேன். வாசனை பௌடரை அவன் மீது கொட்டித் திக்குமுக்காடிப் போகும்படி செய்து விடுவேன். மடியில் வைத்துக் கொண்டு அவனுடைய "ங்கு, ங்கு" என்னும் பாஷையை நான் கற்றுக் கொண்டு, அவனிடம் பேசிப் பார்ப்பேன். தூங்கும் போதுகூட அவனைத் தொட்டிலில் போட மனம் வராது. நல்ல வேளையாகக் கோமளவல்லி அம்மாள் இதையெல்லாம் தடுக்கவில்லை. அவருக்கும் நிம்மதி வேண்டியிருந்தது. ஆகவே சிறிது சிறிதாக அவனைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பில் பெரும் பகுதி எனக்கு வந்து சேர்ந்து விட்டது. அதை உற்சாகமாக ஏற்றுக் கொண்டேன்.

ஆனால் என் மன அமைதி நீடித்திருக்கவில்லை. பாலுவை ஒருநாள் நான் கொஞ்சிக் கொண்டு தோட்டத்தில் நின்று கொண்டிருந்தேன். இரண்டு மாதக் குழந்தையான அவனுக்குத் தோட்டத்திலுள்ள புஷ்பங்களையெல்லாம் காட்டினேன். பெயர்களையும் சொன்னேன். அப்போது ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கியவர்களைப் பார்த்ததும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. முன்பு ஒருநாள் வந்திருந்த அதே மனிதர் இறங்கினார். என்னைப் பார்த்து விட்டுப் புன்னகை புரிந்தார். ஐயோ! அதைப் பார்த்ததும் ஏன் எனக்கு அப்படிக் கோபம் வந்ததென்று எனக்கே புரியவில்லை. குழந்தையை மார்போடு அணைத்தவாறு பின் பக்கமாக விரைந்து சென்றேன். நான் அவரைப் பார்க்கவில்லை. ஆனால் அவர் என்னையே பார்க்கிறார் என்று என் அந்தரங்கம் கூறிற்று. விவரிக்க முடியாத பயம் என் மனத்தில் படர்ந்தது. குழந்தையைத் தொட்டிலில் போட்டு விட்டு மெதுவாக ஆட்டினேன். மெதுவாகப் பாடினேன். அன்று ரமேஷ், சுலோசனா இருவரும் வீட்டில் இல்லை. கோமளவல்லி அம்மாளையும் அறையில் காணவில்லை.

குழந்தையின் கண் இமைகள் மூடின. அழகிய நீலோத்பல மொட்டு குவிவது போல் தோன்றியது. அதை நான் ரொம்ப ரொம்ப அனுபவித்து ரஸிப்பது வழக்கம். ஆனால் அன்று அவ்வளவு ரஸிக்கும்படி மனம் அதில் ஈடுபடவில்லை.

வாய் மாத்திரம் பாடியது.

சமாபுரித் தேவோ?
தணிகை மலைத் தேனோ?
அமரும் பழனி மலைக்கு
ஆன மணி விளக்கோ?
செஞ் சதங்கை கொஞ்ச
சீறு கிண்கிணியாட
கஞ்சமலர்த்தாள் உமையாள்
கண்களிக்க வந்தானோ?



என்று பாடிக்கொண்டே நான் உருகிப் போய் விடுவேன். அன்று மனம் எதிலும் லயிக்க வில்லை. அருகில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்தேன்.

'ரங்க துரை சீமை சென்று ஏறக் குறைய ஒரு வருஷம் ஆகி விட்டது. ஒரு கடிதம் கூட வர வில்லை. என்ன ஆயிற்றென்றே தெரியாமல் ஒரே புதிராக இருக்கிறதே! அவர் இன்னும் ஒரு வருஷம் சென்ற பிறகுதானே திரும்பி வருவார்? அது வரை என்ன செய்வது? இந்த வீட்டில்தான் இருக்க வேண்டுமா? ஆனால் வேறு எங்கே போவது? யார் இருக்கிறார்கள்? தற்சமயம் வக்கீல் பத்மநாபனை விட ஒருவருக்கும் என் மீது அக்கறை கிடையாது. ஆகவே இங்கே எப்படியாவது பல்லைக் கடித்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான். அவர் வரும் வரையில்தானே? பிறகு இன்பம்! இன்பம்!! இன்பம்!!!' என்று எண்ணிக் கொண்டிருந்த போது திடீரென்று இன்ப உலகத்திலிருந்து இந்தப் பூவுலகுக்கு இறங்கி வந்தேன். என்னை வக்கீல் பத்மநாபன் கூப்பிடுவதாக முத்து வந்து கூறினான்.

ஏதோ ஒரு உற்சாகக் குறைவான சம்பவம் நிகழப் போகிறதென்று என் உள்ளுணர்வு கூறியது. வர முடியாதென்று சொல்லி விட நினைத்தேன். ஆனால் கூப்பிடும் போது போகாமலிருப்பதும் சரியாகத் தோன்ற வில்லை. எனக்கு இவ்வளவு உதவி செய்திருப்பவரிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொள்ளக் கூடாது என்றும் நினைத்தேன். மேலும் வந்திருப்பது யாரானால் எனக்கென்ன? என் தந்தை காசிலிங்கத்தைப் பற்றித் தெரிந்தவராகத்தான் இருக்கட்டுமே! என்னை என்ன செய்து விட முடியும்? நான் எதற்காகப் பயப்பட வேண்டும் என்று எண்ணிக் கொண்டே வக்கீலின் அறைக்குத் தயங்கியபடி சென்றேன்.

பத்மநாபன் அருகில் அந்தக் காரிலிருந்து இறங்கிய மனிதர் உட்கார்ந் திருந்தார். அந்த அறையில் பிரவேசிக்கும் போதே எனக்கு உடல் முழுதும் கூசியது. தலையை ஒரு ஆட்டு ஆட்டிக் கொண்டு அறைக்குள் சென்றேன்.

என்னைக் கண்டதும் பத்மநாபன் புன்னகையுடன், "வாம்மா! இப்படி உட்கார்" என்று தமக்கு அருகில் இருந்த நாற்காலியைக் காட்டினார். நான் உட்கார வில்லை. மௌனமாக நாற்காலியைப் பிடித்துக் கொண்டு நின்றேன்.

பத்மநாபன் அந்த மனிதரைப் பார்த்து விட்டு, என்னை நோக்கி, "இந்துமதி! இவரை உனக்குத் தெரியுமா?" என்றார்.

"தெரியாது" என்றேன்.

"அவருக்கு உன்னைத் தெரிந்திருக்கிறது. உன் அப்பா காசிலிங்கத்தை அவருக்கு நன்றாகத் தெரியுமாம். உன் அம்மாவைக் கூடத் தெரியுமாம். உன்னைப் பார்க்க வேண்டும் என்றார். அதனால் தான் கூப்பிட்டேன்" என்றார்.

"ஆமாம் அம்மா! உன் தந்தை காசிலிங்கத்தை எனக்கு நன்றாகத் தெரியும். பாவம்! அவர் ரொம்ப கஷ்டப் பட்டார். நீ அவருடைய பெண் என்று பத்ம

நாபன் சொன்னதும் உன்னைப் பார்க்க வேண்டுமென்று தோன்றிற்று. உனக்கு ஏதாவது உதவி வேண்டுமானால் கூட என்னைக் கேட்கலாம். சந்தோஷமாகச் செய்வேன்" என்றார் புதிய மனிதர்.

இப்படி அவர் கூறியதும் அவருக்கும் என் தந்தைக்கும் இருந்த தொடர்பைப் பற்றி அறிந்து கொள்ள எனக்கு ஆவல் உண்டாயிற்று. ஆயினும் அதை அடக்கிக் கொண்டு, "இங்கே எனக்கு ஒரு குறைவும் இல்லை. சந்தோஷமாகத்தான் இருக்கிறேன்" என்றேன்.

"இவர் யாரென்று உனக்குச் சொல்லவில்லையே. இவர் பெயர் ஈசுவரமூர்த்தி. திருநந்திபுரத்தில்தான் இருந்தார். உனக்குத் தெரிந்திருக்காதே தவிர அங்கெல்லாம் ரொம்பப் பிரசித்தி பெற்றவர்" என்றார் பத்மநாபன்.

நான் திகைத்துப் போனேன். 'அட, பாவமே! என் அருமைத் தந்தையை ஜெயிலுக்கு அனுப்பிய புண்ணியாத்மா இவன்தானா?' என்று எண்ணியதும் எனக்கு அவமானமாகப் போயிற்று. என் அறைக்கு ஓடிப் போனேன்.

நெஞ்சம் குமுறிற்று. ஒரு பாவமும் செய்தறியாத என் தந்தையைச் சிறைக்கு அனுப்பிய இவன், எனக்கு உதவி செய்வதாகச் சொல்வதைக் காட்டிலும் என்ன விந்தை இருக்கிறது? இதற்கு என்ன பொருள்? எதற்காக அவர் என்னிடம் அப்படிக் கூறுகிறார்?

சுயநலத்தைத் தவிர வேறு என்ன நோக்கம் இருக்க முடியும்? அம்மாவின் படம் என் கண்களில் பட்டது. 'அம்மா! அம்மா!! நீ என்னை விட்டு விட்டுப் போனாய்? அப்பா! நீங்களாவது இருக்கக் கூடாதா? ரங்கதுரையும் இப்படிப் பராமுகமாய் இருக்கிறாரே' என்றெல்லாம் எண்ணி மனம் சஞ்சலப்பட்டது. கண்களிலிருந்து சூடான கண்ணீர் பெருகி வழிந்து தலையணையின் மேல் விழுந்து அதை நனைத்தது. இப்படிக் கண்ணீர் விட்டவண்ணம் எத்தனை நேரம் இருந்தேனோ தெரியவில்லை.

சுலோசனா உள்ளே வந்தாள். "இந்து! நீ இன்று கீழேயே வரவில்லையாமே. அம்மா குழந்தையுடன் திண்டாடுகிறாள். உனக்கென்ன உடம்பு சரியாக இல்லையா?" என்று கேட்டுக் கொண்டே என் அருகில் வந்தாள்.

"ஏன் இப்படி உன் முகம் வீங்கியிருக்கிறது இந்து? அழுதாயா?"

சற்று நேரம் வரையில் ஒன்றுமில்லை என்று சொல்லிப்பார்த்தேன். சுலோசனா என்னை விடுவதாயில்லை.

கடைசியில் விஷயத்தைச் சொன்னேன். "என் தகப்பனாரைச் சிறைக்கு அனுப்பிய மகராஜன் ஈசுவரமூர்த்திக்கு என்னை உங்கப்பா அறிமுகம் செய்து வைத்தார். அதிலிருந்து என்னுடைய மனம் சரியாகவே இல்லை."

"இந்துமதி! நீ அனாவசியமாய் மனத்தைக் குழப்பிக் கொள்கிறாய்."

"சுலோசனா! என்னால் அந்த ஈசுவரமூர்த்தியின் பார்வையைச் சகிக்க முடியவில்லை. அது கிடக்கட்டும். என்ன வந்தாலும் நீ எனக்குத் துணையாக இருப்பாய் அல்லவா?" என்று கேட்டேன்.

"நிச்சயம். உன்னை நான் என் உடன் பிறந்த தங்கையாகத்தான் நினைக்கிறேன். அதிலிருந்து நான் என்றும் மாறவே மாட்டேன். கவலைப்பட வேண்டாம், இந்து. இதை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்றாள்.

அவள் அப்படிச் சொன்னதும் ஒரு அமைதி ஏற்பட்டது. என்னுடைய பக்கத்தில் ஒருவர் இருக்கிறார் என்ற எண்ணம் எனக்குத் தெம்பு கொடுத்தது. ஆனால் அது புயலுக்கு முன்பு ஏற்படும் அமைதி என்று நான் நினைக்கவேயில்லை.

அத்தியாயம் 4

வாடிய தாமரை

அந்தச் சம்பவத்தை மறக்க நான் முயன்று பார்த்தேன். ஆனால் வெற்றி கிட்டவில்லை. எனக்குக் கவலைப்பட நேரமில்லாமல் வேலை யிருந்தது, சௌகரியமாகவே இருந்தது. இருந்தாலும் ரங்கதுரையைப் பற்றிய ஏமாற்றம் மட்டும் உள்ளத்தை அரித்துக் கொண்டே இருந்தது. உடலும் இளைத்துப் போயிற்று.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஈசுவரமூர்த்தி அந்த வீட்டுக்கு ஐந்தாறு தடவைகள் வந்தார். ஆனால் முன்போல் எதுவும் நடைபெறவில்லை. ஆகவே நான் உண்மையிலேயே அதைமறக்கலானேன்.

ஒரு நாள் இரவு, குழந்தை பாலுவுக்காகப் பால் காய்ச்சிக் கொண்டிருந்தேன். பாலை அடுப்பில் வைத்து விட்டு உட்

கல்கி திரு ரா. கிருஷ்ணமூர்த்தி
நினைவுச் சிறுகதைப் போட்டி
2000 ரூபாய் பரிசு

தமிழில் அருமையான பல கதைகள் எழுதி அழியாப் புகழ் பெற்ற கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நினைவாக இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படுகிறது.

தேர்ந்தெடுக்கும் கதைகளுக்குப் பரிசுத் தொகை ரூ. 2000 கீழ்க் கண்டவாறு வழங்கப்படும் :

முதல் பரிசு ரூ. 500/- :: இரண்டாம் பரிசு ரூ. 250/-
மூன்றும் பரிசு ரூ. 125- வீதம் பத்துக் கதைகளுக்கு.

இந்தப் போட்டியின் முடிவுத் தேதி 30—6—1955

நிபந்தனைகள் :

1. போட்டிக்கு அனுப்பப்படும் கதைகள் எழுதியவரின் சொந்தக் கற்பனையாக, தமிழ்நாட்டின் வாழ்க்கைக்கும் பண்பாட்டுக்கும் இசைந்த முறையில் இருக்க வேண்டும்.
2. 'கல்கி' இதழில் பத்துப் பக்கங்களுக்கு மேற்படாத அளவில் அமைய வேண்டும்.
3. நல்ல காகிதத்தில் இடைவீடுகள் விட்டு ஒரு பக்கத்திலேயே எழுத வேண்டும்.
4. முதலாவது பக்கத்தின் தலைப்பில் 'கல்கி திரு ரா. கிருஷ்ணமூர்த்தி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிட்டு, "ஆசிரியர், கல்கி, சென்னை - 10" என்ற விலாசத்துக்கு 1955 ஜூன் 30-ந் தேதிக்குள் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.
5. முடிவுத் தேதிக்குப் பின் வந்து சேரும் கதைகள் இந்தப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டா.
6. ஒரே எழுத்தாளர் இந்தப் போட்டிக்கு என்று மூன்று கதைகள் வரை அனுப்பலாம்.
7. கதை அனுப்பும்போது, அத்துடன் எழுதியவர் தமது கைப்பட இக் கதை சொந்தக் கற்பனை என்றும், தமிழிலோ அல்லது வேறு மொழியிலோ இந்தக் கதை அல்லது இதுபோன்ற கதை தம்மாலோ அல்லது வேறொருவராலோ எழுதப்படவில்லை என்றும் ஒரு உறுதி மொழி அனுப்ப வேண்டும்.
8. பரிசுக்குத் தேர்ந்தெடுத்த கதைகளைக் 'கல்கி' இதழில் வெளியிட்ட பிறகு, இக் கதைகளை வேறு மொழிப் பத்திரிகைகளிலோ அல்லது புத்தகமாகவோ வெளியிடுவதற்கு உரிய எல்லா உரிமைகளும் கதை எழுதிய ஆசிரியரையே சாரும்.
9. தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர், கதைகளுடன் போதிய தபால் பில்லைகள் அனுப்ப வேண்டும். கதைகள் திரும்ப அனுப்பப்படும் என்று உறுதி கூறுவதற்கில்லை.
10. பரிசுக்குரிய கதைகள் தவிர, பிரசுரத்துக்கு என்று தேர்ந்தெடுக்கப் படுபவை, 'கல்கி' இதழ்களில் வெளியாகும். அவற்றிற்கு வழக்கம் போல் சன்மானம் அளிக்கப்படும்.
11. பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுக்க ஒரு பரிசீலனைக் குழு நியமிக்கப்படும்.
12. இந்தப் போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் 'கல்கி' ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

கல்கி காரியாலயம்
சென்னை-10

சதாசிவம்
மானேஜிங் டைரக்டர்



என்னுடைய கண்கள் இரவில் ஒளியுடன் பிரகாசிக்கின்றன. ஏனெனில் எஸ்ட்ரெல்லாவிலிருக்கும் ஒளிச் சக்தி என்னிடமிருக்கிறது.
எஸ்ட்ரேலா பாட்டரீஸ்
எஸ்ட்ரெல்லா பாட்டரீஸ் லிட்.,
ESTRELA
YOUR GUIDE IN DARKNESS
ESTRELA BATTERIES LTD
BOMBAY

கார்ந்திருந்தேன். உடல் அசதியினால் சற்றுக் கண்ணை மூடி விட்டேன். பால் அடுப்பில் வழிந்த வாசனை வரவே, சட்டென்று விழித்துக் கொண்டு பாத்திரத்தை அடுப்பிலிருந்து எடுத்தேன். கையை நன்றாகச் சுட்டு விட்டது. கை தவறிற்று. அப்படியே கொதிக்கும் பால் காலில் கொட்டி விட்டது. எரிச்சலினால் துடித்துப் போனேன்.

முத்துவைக் கூப்பிட்டு வேறு பால் காய்ச்சச் சொன்னேன். முத்து உடனே தோசை மாவை எடுத்துக் கொடுத்து அதன்மேல் தடவச் சொன்னான். அதைத் தடவியவுடன் சற்று எரிச்சல் குறைந்தது. ஆயினும் பொறுக்க முடியாமல் எரிச்சல் இருந்தது. மெதுவாக மாடியறைக்குச் சென்று சுலோவைக் கூப்பிட்டு என் காலில் பாலைக் கொட்டிக் கொண்டதைச் சொல்லி, "நான் இங்கே படுத்துக் கொள்கிறேன். அம்மாவிடம் போய்ச் சொல்லிவிட்டு, குழந்தையைக் கவனித்துவிட்டு வா" என்றேன். கோமளவல்லி அம்மாளிடம் எனக்கு நேரில் சொல்லப் பயம்.



சுலோ டாக்டரைக் கூப்பிடுவதாகச் சொன்னாள். நான் கண்டிப்பாய் வேண்டாமென்று சொல்லி விட்டு மின்சார விசிறியைச் சுழல விட்டுவிட்டுப் படுத்துக் கொண்டேன். எரிச்சல் தாங்க முடியவில்லை. "ராமா! ராமா!" என்று முனகிக் கொண்டேயிருந்தேன். சற்று நேரத்துக்கெல்லாம் சுலோ மேலே வந்தாள். தன் அறைக்குச் சென்று இரண்டு தலையணைகளை எடுத்துக் கொண்டு வந்தாள். நான் துணிமணிகளை 'இஸ்திரி' போடுவதற்காக இரண்டு பெஞ்சுகளைப் போட்டிருந்தேன். அவற்றைச் சேர்த்துப் போட்டுக் கொண்டு என் அறையிலேயே படுத்துக் கொண்டாள். என் மனம் நெகிழ்ந்தது. ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். அப்படியே கண்ணயர்ந்து விட்டாள். எனக்கு விடிய விடியத் தூக்கமில்லை. கால்கள் ஒரே காந்தலாகக் காந்திற்று. அந்த வேதனையைத் தாங்க முடியவில்லை.

மறுநாள் வக்கீல் இதைக் கேட்டுவிட்டு என் அறைக்கு வந்தார். "என்னம்மா, இந்து! உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டாமா? இப்படி அலட்சியமாக இருக்கலாமா?" என்று கனிவுடன் கேட்டார்.

இரண்டு நாட்கள் கழித்துத்தான் எனக்கு அதன் அபாயம் தெரிய வந்தது. மூன்றாம் நாள் காலை பால் கொட்டிய இடத்தில் ஏற்பட்டிருந்த புண்ணில் தாங்க முடியாத குத்து வலி உண்டாயிற்று. நான் சுலோசனாவிடம் கூறிய போது கவலையுடன் டாக்டரைக் கூப்பிட்டாள். டாக்டர் வந்து பார்த்து, "நல்ல வேளையாக இன்னும் இரண்டு நாள் கழித்துச் சொல்லாமல் இன்றே சொன்னீர்களே. புண் 'ஸெப்டிக்' ஆக ஆரம்பித்திருக்கிறது. இஞ்செக்ஷன் செய்துதான் ஆக வேண்டும்" என்று சொல்லி விட்டு ஊசி குத்தினார்.

எல்லோரும் என்னைப் பற்றிக் கவலைப் பட்டார்கள். என்னைப் பற்றி அவர்கள் கவலைப்படுகிறார்கள் என்பதில் எனக்கு ஏதோ ஒரு திருப்தி உண்டாயிற்று. ரமேஷ், சுலோசனா, மீரா எல்லோரும் அன்பைச் சொரிந்து என்னைக் கவனித்துக் கொண்டார்கள். முத்து கூட கவனித்தான். "நீங்கள் இல்லாமல் வேலை செய்ய முடியவில்லை, அம்மா!" என்றான். எனக்கு அப்போது ஏற்பட்ட பெருமை சொல்லத் தரமன்று.

ஆனால் எப்போதுமா என்னைச் சுற்றி எல்லோருமிருப்பார்கள்? காலை அசைக்கவே முடியவில்லையாதலால் எழுந்திருப்பதே சாத்தியமில்லாமல் போயிற்று. ஒருவரும் இல்லாத சமயங்களில் மனம் இன்பகரமான கற்பனைகளில் ஈடுபட்டுக் குதூகலமடையும். சில சமயம் நிராசையினால் நொந்து துன்பமடையும்.

சுலோ முதலியவர்கள் காலேஜுக்குச் சென்ற பிறகு வீடு பெருக்கும் வேலைக்காரி லட்சுமி என்னை வந்து கவனித்துக் கொள்வாள். ஏதாவது வேண்டுமானால் செய்து விட்டுப் போவாள். ஆனால் கோமளவல்லி அம்மாள் ஒரு தடவை கூட மேலே வரவில்லை. லட்சுமி சொன்னாள்: "கஷ்டத்தை வரவழைத்துக்கொள்பவர்களுக்கு வைத்தியம் என்ன வேண்டிக் கிடக்கிறது!" என்று சொன்னாராம். அடிக்கடி, "சுகமா மெத்தையிலே படுத்

துக் கொண்டிருக்காளோ இல்லையோ?'' என்று வேறு அவர் கூறினாராம்.

ஏழெட்டு நாட்கள் சென்ற பின் லட்சுமி ஓடி வந்து "ஐயா வராரு'' என்று சொன்னாள். நான் எழுந்து உட்கார்ந்து கொண்டேன். வக்கீலுடன் உள்ளே வந்த இன்னொருவரைப் பார்த்ததும் என் மூச்சே நின்று போய்விடும் போலிருந்தது. சாக்ஷாத் ஈசுவர மூர்த்தி தான் அவருடன் வந்தார்.


வக்கீல், "ஏன் இந்து உட்கார்ந்திருக்கிறாய்? உன்னைக் கொஞ்சங்கூட சிரமப் படக்கூடாது என்று டாக்டர் சொன்னார். பேசாமல் படுத்துக் கொள்ளு, அம்மா. இன்னும் நான்கு நாட்களில் நன்றாகச் சரியாகிவிடும். இப்போது வலி யில்லையே?'' என்றார்.

"முன்னளவில்லை. ஆனாலும் கொஞ்சம் கொஞ்சம் வலிக்கிறது'' என்றேன்.

"இவரிடம் உனக்கு இப்படி உடம்பு சரியில்லை என்று சொன்னேன். உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கிறார்'' என்றார் வக்கீல் பத்மநாபன்.

நான் பேசவில்லை.

இருவரும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். ஈசுவர மூர்த்தி என்னைப் பார்த்து, "உனக்குப் பொழுது போவது ரொம்பக் கஷ்டமாக இருக்குமே?'' என்றார்.



"அப்படி ஒன்றுமில்லை. தனிமையாக இருக்கும் போது நிம்மதியாக இருக்கிறது. நோயாளிக்கு வேண்டியது ஓய்வு தானே? அது தனியாக இருந்தால்தானே கிடைக்கும்?'' என்றேன். அவர் சீக்கிரம் போய்விட வேண்டும் என்பதற்காக அப்படிச் சொன்னேன்.

அவர்கள் புறப்படும்போது "உனக்குச் சீக்கிரம் உடம்பு சரியாகிவிட வேண்டும் என்று ஈசுவரனைப் பிரார்த்திக்கிறேன்'' என்று சொன்னார் ஈசுவர மூர்த்தி.

"நீங்களே அந்த வரத்தைக் கொடுத்து விடலாமே! பிரார்த்தனைசெய்வானேன்?'' என்றார் பத்மநாபன். ஏதோ பிரமாத ஹாஸ்யத்தைக் கேட்டு விட்டது போல் இருவரும் சிரித்துக் கொண்டே சென்றார்கள். காலில் பால் கொட்டியபோது ஏற்பட்ட எரிச்சலை விட, அவர்கள் சிரித்த சிரிப்பு என் நெஞ்சில் பெரும் எரிச்சலை உண்டாக்கி விட்டது.

மாலை சுலோசனாவிடம் இதைக் கூறினேன். சுலோசனா வழக்கம் போல் அதை ஒன்றும் முக்கியமான விஷயமாக நினைத்துக் கேட்க வில்லை. நானும் அதிக மாக அதைப் பற்றிக் கவலைப் படவில்லை.

ஆனால் மறு நாளும் அவர் வந்தார். அதற்கு மறு நாளும் வந்தபோது எனக்கு வியாகூலம் உண்டாயிற்று. எதற்காக இந்த மனிதன் இப்படிப் படையெடுக்கிறான் என்று எண்ணினேன். சுலோசனா விடம் ஆத்திரத்தோடு நான் கூறினேன். "இனிமேல் கவனிக்கிறேன்'' என்றாள்.

எனக்குக் கால் குணமாகிவந்தது. மெதுவாக நடமாட ஆரம்பித்தேன். நான் கண்ணாடி எதிரில் உட்கார்ந்து தலையை வாரிக் கொண்டிருந்தபோது சுலோசனா வந்தாள். அவள் முகம் சோபை இழந்து கவலையுடன் காணப்பட்டது.

அன்று சுலோசனா கூறிய விஷயங்கள் என் உள்ளத்தில் பெரிய சூறாவளியைக் கிளப்பி விட்டன என்றுதான் சொல்ல வேண்டும். ஒருவாறு நான் எதிர் பார்த்த விஷயந்தான் என்றாலும் மிகவும் அதிர்ச்சியாக இருந்தது.

"ஒரு தண்ணீர் ததும்பும் தாமரைத் தடாகம். அதில் ஒரு தாமரைப் புஷ்பம் மணம் வீசி மலர்ந்தது. ஆதவனைக் கண்டு மெய் சிலிர்த்தது. தன் இதழ்க் கரங்களால் அவனை அழைத்தது. ஆனால் அந்தக் கல் நெஞ்சன் சென்று விட்டான். தாமரையும் முகம் வாடிச் சோர்ந்தது. அதையும் கசக்கிவிட ஒரு யானை வந்தது. தடாகத்தில் இறங்கியது. தெளிந்த ஸ்படிகம் போன்ற நீரைக் கலக்கியது. அதோடு நின்றதா? தாமரையைப் பறித்துத் தன் காலால் நசுக்கப் பார்த்தது.''

இப்படி என் உள்ளத்தில் ஒரு கற்பனை எழுந்தது! அதைப் போக்கடித்துக் கொண்டு சுலோசனாவைப் பார்த்து விஷயம் என்ன வென்று சொல்லச் சொல்லிக் கேட்டேன். அவள் இலேசில் சொல்கிற வழியாக இல்லை. கெஞ்சி, மிரட்டி, வற்புறுத்தி அவளிடமிருந்து பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். அந்த விவரமெல்லாம் சரியாக நினைவில்லை.

ஆனாலும் சுலோசனா சொன்ன விஷயத்தை மாத்திரம் ஒருவாறு எழுதிப் பார்க்க முயல்கிறேன். (தொடரும்

SANDOW


உறுதிக்கும் நம்பகத்திற்கும் எங்கும்
ஜனங்கள் ஸாண்டோவை விரும்புகிறார்கள்



3112 – வசீகரமான கெடியாரம், தட்டை கேஸ், 'செந்நிற' ரோல்ட் கோல்ட் முகப்பு ஸ்டேய்ன்லெஸ் ஸ்டீல் பின்புறம். 8¾''' காந்தக் கவர்ச்சியற்ற இயந்திரம், சென்டர் செகண்டுடன் கூடியது தோல்ஸ்டார்ப் அல்லது மாயர் சில்க் பட்டையுடன் "டயல் C." மட்டும். ரூ. 140



3102-சதுர வடிவ கெடியாரம் விரும்புவோருக்கு புதியவகைத்த கேஸ் மோஸ்தரில், 'செந்நிற' ரோல்ட் கோல்ட் முகப்பும் ஸ்டேயின்லெஸ் ஸ்டீல் பின்புறமும் கூடிய இந்த கெடியாரம் ஏற்றது. 8/9''' காந்தக் கவர்ச்சியற்ற இயந்திரம், சென்டர் செகண்டுடன் கூடியது ஆப்டிக் கண்ணாடி பொருத்தப்பட்டது. "டயல் C" மட்டும். ரூ. 136



3272-தட்டை கேஸ், புதிய 'செந்நிற' ரோல்ட் கோல்ட் முகப்பு, ஸ்டேய்ன்லெஸ் ஸ்டீல் பின்புறம் கூடியது. 10½''' காந்த கவர்ச்சியற்ற இயந்திரம் சென்டர் செகண்டுடன். படத்தில் உள்ளபடி "டயல் A" உள்ளது. ரூ. 138

3273-மேற்படி 3272-ஐப் போன்றது. ஆனால் முழுதும் ஸ்டேய்ன்லெஸ் ஸ்டீல் கேஸ் "டயல் A" உள்ளது ரூ. 112

3242-மேற்படி 3272-ஐப் போன்றது. ஆனால் பிரிவு விநாடி முள்ளும் உள்ளது. "டயல் A" மட்டும் ரூ. 132

மூன்றுவித பகட்டான டயல்களில்:

A-வெள்ளி நிற டயல், சாதாரண அரபி எண்களுடன்
B-வெள்ளி நிற டயல், ஜ்வலிக்கும் எண்கள், முள்களுடன் ரூ. 3 தனி
C-வெள்ளி நிற டயல் கில்ட் ரிலீப் எண்களும், முள்களும் ரூ. 5 தனி

பேவர்-லூபா & கோ., லிட்., பம்பாய் - கல்கத்தா

FAVRE-LEUBA & CO., LTD.
BOMBAY • CALCUTTA

C. 15


வியக்கத் தகுந்த புதிய வெளுக்கும் சாதனம்
துணிகளுக்கு
கண்ணைப் பறிக்கும் வெண்மையைத்
தருகிறது
டினோபால் பி வி என் ஓர் உயர்தர வெண்மை தரும் பவுடர். நீலம் போடுவதற்குப் பதிலாக உபயோகிக்கப்படுவது. துணிகளுக்கு இது வரை எப்பொருள் உபயோகிப்பதினாலும் ஏற்படாத, உண்மையில் கண்ணைப் பறிக்கும், வெண்மையைத் தருவது. டினோபால் சிக்கனமானதும் கூட! ஏனெனில் ஒரு தரம் உபயோகிப்பதால் ஏற்படும் வெண்மை 3 அல்லது 4 சலவைகள் வரை நீடித்திருக்கிறது. டினோபால் முதன் முதலாகவீட்டு உபயோகத்திற்கென ஒரு அவுன்ஸ் பிடிக்கும் அழகான பிளாஸ்டிக் புட்டியில் தயாரிக்கப்பட்டுள்ளது. இன்றே ஒரு டினோபால் புட்டி வாங்குங்கள். உங்கள் பருத்தி, பட்டாடைகளில் ஏற்படும் மாறுதல்களைக் கண்டு நீங்கள் ஆனந்திப்பீர்கள்.
குறிப்பு:— முன்பே சோப்பினால் சுத்தம் செய்து அலசிய துணிகளுக்கே டினோபால் பி வி என் உபயோகிக்க வேண்டும்.
எல்லா உயர்ந்த
கெமிஸ்ட்களிடமும் கடைகளிலும் கிடைக்கும்.
டினோபால்
டினோபால் பி வி என் ஓர் உயர்ந்த வெளுக்கும் சாதனம்!
Geigy
ஒரு கெய்கி தயாரிப்பு

புயலும் கிளியும்

சாந்த சிங் சேகான்

பஞ்சாபிக் கதை ❖ மொழிபெயர்ப்பு ❖ ஜெயமணி ❖

மங்கள் சிங் இராணுவத்தில் சேர்ந்ததிலிருந்து, வசந்த கௌரிக்கு வேலை அதிகமாகி விட்டது. வீட்டு வேலைகளுடன் அவள் தினசரி வயல்களுக்கும் சென்று வர வேண்டியிருந்தது. மங்கள் சிங் இருக்கும் வரையில் எருமை மாட்டுக்கு அவனே புல் அறுத்துக் கொண்டு வந்து விடுவான். ஆனால், அந்த வேலையைச் செய்ய வேண்டிய பொறுப்பு இப்போது வசந்த கௌரியின் தலையில் சுமர்ந்தது.

இந்த நிலைமையைக் கிழவி மகா கௌரி மன வேதனையுடன் கவனித்துக் கொண்டிருந்தாள். கைக் குழந்தைக்காரியும் யுவதியுமான வசந்த கௌரி குழந்தையை வீட்டில் விட்டு விட்டு வயலுக்குச் செல்லுவதும், அங்கிருந்து புல் சுமையைத் தூக்கிக் கொண்டு வருவதும் மகா கௌரியின் மனத்தைச் சஞ்சலப்படுத்தின. அவளுக்குக் கண் பார்வை சரியாக இருக்கும் பட்சத்தில் அவள் எதற்கும் கவலைப்படமாட்டாள். ஒரு சிப்பாயைப் போலத் தன் குடும்பத்தைப் பாதுகாத்து வருவாள். அவளுக்குத்தான் கண்கள் பார்வை சக்தியை அடியோடு இழந்து விட்டனவே.

"காலம் கெட்டு விட்டது, வசந்த். நீ மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தன் மானத்தைக் காத்துக் கொள்ள இன்று ஒவ்வொருவருக்கும் அவரவர் விவேகத்தைத் தவிர வேறு எவ்வித பாதுகாப்பும் இல்லை" என்று கிழவி தன் மருமகளை அடிக்கடி எச்சரிப்பது வழக்கம்.

"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம், அம்மா! என்னிடம் விஷமம் செய்யும் துணிச்சல் உள்ளவன் இன்னும் பிறக்கவில்லை."

இவ்விதம் வசந்த கௌரி பதில் அளிப்பாள். அவளது தைரியமான பதில் கிழவிக்குச் சிறிது மன ஆறுதலைக் கொடுக்கும்.

"ஆமாம், ஆமாம். நீ சொல்லுவது சரிதான். ஒரு பெண்ணின் மனம் சரியான நிலையில் இருக்கும் பட்சத்தில், அவளிடம் நெருங்குவதற்கு எவனும் அஞ்சுவான்" என்பாள் மாமியார்க் கிழவி, எங்கேயோ பார்த்துக் கொண்டு.

வசந்த கௌரி சம்பந்தப்பட்ட வரையில் அவளது மனம் சரியான நிலையில்தான் இருந்தது. ஆனால் குருதேவ் சிங்கின் மன நிலையைப் பற்றி அவ்விதம் சொல்லுவதற்கில்லை!

குருதேவ் சிங், ஜாகீர்தார் ஹரிதயாள் சிங்கின் மகன். கௌரி தினந்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் வயலுக்குச் செல்லுவதைக் கண்ட அவன், தினசரி அவளது பாதையில் குறுக்கிட ஆரம்பித்தான். வசந்த கௌரிக்கு அருகில் வந்ததும், தொண்டையைக் கனைத்துக் கொள்வான். இச் சமிக்ஞையை அர்த்தமற்றது என்று அலட்சியமாக எண்ணிய வசந்த கௌரிக்கு, அதன் உண்மை தெரிவதற்குச் சில நாட்கள் ஆயின.

தன் விஷயத்தில் குருதேவ் சிங்கின் வீண் முயற்சியைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது. இதுவும் ஒரு வேடிக்கைதான் என்று எண்ணினாள். கீர்துவதில் தேர்ச்சி பெற்றவன் தன்னை எதிர் நோக்கி வரும் அலையை லட்சியம் செய்ய மாட்டான் அல்லவா! அது போலவே, தன் மன உறுதியில் நம்பிக்கை கொண்ட வசந்த கௌரி குருதேவ் சிங் விஷமத்தைக் குறித்து அஞ்சவில்லை.

மங்கள் சிங் இராணுவத்தில் சேர வேண்டாம் என்று அவனது தாயாரும் மனைவியும் எவ்வளவோ தடுத்துப் பார்த்தனர். ஆனால், அவன் கேட்கவில்லை. அவன் வேறு என்ன செய்ய முடியும்! தானியங்களின் விலை அதிகமாக இருந்தாலும், குடிவார உரிமையின் கீழ் ஐந்து ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டுள்ள மங்கள் சிங்குக்கு அதனால் பிரமாதமாக என்ன லாபம் கிடைத்து விடப் போகிறது!

அவன் வயலில் இடைவிடாது உழைத்தான். மழை இல்லாததால் அவனது உழைப்பு வீணாகியது. போதாக் குறைக்கு அவன் வாங்கியிருந்த கடன் சென்ற நாலு வருஷங்களில் முதலும் வட்டியுமாக ஆயிரம் ரூபாயாக உயர்ந்து விட்டது. இதே நிலைமை இன்னும் ஐந்து வருஷங்களுக்கு நீடிக்குமாயின், மங்கள் சிங் தனக்குச் சொந்தமான சொற்ப நிலத்தையும் இழக்க வேண்டியதுதான். எனவே, தனது கஷ்டம் தீருவதற்கு இராணுவத்தில் சேருவதைத் தவிர வேறு வழியில்லை என்று அவனுக்குத் தோன்றியது.

அவனது தீர்மானம் புத்திசாலித்தனமானது தான் என்பது முதலிலேயே தெரிந்து விட்டது. அதற்கு மேல் நிலத்தை உழ வேண்டிய அவசியமில்லையாதலால், அவன் தன்னிடமிருந்த ஒரு ஜோடி எருதுகளை விற்று விட்டான். அதன் மூலம் கிடைத்த தொகையைக் கொண்டு அவனால் பாதிக் கடனை அடைத்துவிட முடிந்தது.

மகா கௌரி ஏழையாயினும், தன் மருமகளான வசந்த கௌரியை விலையுயர்ந்த பொக்கிஷமாகக் கருதினாள். அவளுக்குக் கண் பார்வை போய் விட்டது. இப்போது மங்கள் சிங்கும் இராணுவத்தில் சேர்ந்து விட்டான். அந்த நிலைமையில் வசந்த கௌரி யாதொரு பாதுகாப்புமின்றி வீட்டில் இருந்தது, பூட்டப்படாத வீட்டில் விலையுயர்ந்த பொக்கிஷம் கிடப்பதைப் போல் மகா கௌரிக்குத் தோன்றியது.

மங்கள் சிங் வீட்டை விட்டுச் சென்றதிலிருந்து பல நாட்கள் வரையில் வசந்த கௌரி கண்ணீரும் கம்பலையுமாக இருந்தாள். இராணுவத்தில் சேர்ந்த மங்கள் சிங் இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஐம்பது ரூபாய் தொகை அனுப்பி வைத்தான். அதன் பின்தான் அவனது தாயாருக்கும் மனைவிக்கும் சிறிது மன ஆறுதல் ஏற்பட்டது.

அந்தத் தொகையைக் கொண்டு மகா கௌரி குளிருக்கு ஒரு போர்வை வாங்கிக் கொண்டாள். வசந்தின் ஒரு வயதுக் குழந்தைக்கும் ஏதோ உடைகள் வாங்கினர். கிழவியின் வற்புறுத்தலுக்கு இணங்க வசந்த கௌரியும் தனக்கு உடைகள் வாங்கிக் கொண்டாள். இவை யெல்லாம் முப்பது ரூபாய் ஆயிற்று. மீதியிருந்த இருபது ரூபாய்க்கு வசந்த கௌரி வீட்டுக்கு வேண்டிய பண்டங்களும், கறவை எருதுக்குப் பிண்ணாக்கு, வைக்கோல் முதலியனவும் வாங்கினாள்.

மங்கள் சிங் சென்று சில மாதங்கள் ஆயின. குருதேவ் சிங் வசந்த் செல்லும் பாதையில் அடிக்கடி குறுக்கிட ஆரம்பித்தான். வசந்த கௌரி புது உடை உடுத்திக் கொண்டு ஒய்யாரமாகச் சென்றது, அவனது மனத் தடுமாற்றத்தை அதிகப்படுத்தியது. குருதேவ் சிங்கின் விஷமத்தைக் குறித்து வசந்த கௌரி உள்ளூறச் சிரித்துக் கொண்டாளே யன்றி, அதைத் தடுக்க அவள் யாதொரு முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை.

மற்றொரு நாள் வசந்த கௌரி தன்னை அலங்காரம் செய்து கொண்டு புது உடை உடுத்திச் சென்றது, குருதேவ் சிங்கின் தடுமாற்றத்தை மேலும் அதிகப்படுத்தியது. அன்று வஸந்த கௌரியைப் பார்த்ததும் குருதேவ் சிங்கின் மனம் அவளுடன் ஒரு வார்த்தையாவது பேச வேண்டும் என்று துடியாய்த் துடித்தது.

“வசந்த கௌரி! மங்கள் சிங் ரஜாவில் வந்திருக்கிறானா!” என்று கேட்டான் குருதேவ் சிங்.

“இல்லை, அவர் வரவில்லை” என்றாள் வசந்த கௌரி நாணிக் கொண்டு. தன் ஆடை அலங்காரத்தைக் குருதேவ் சிங் மறைமுகமாகப் புகழ்கிறான் என்பதை அவள் அறிந்து கொண்டாள்.

குருதேவ் சிங்கிற்கு வசந்த கௌரியுடன் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்து விட்டதல்லவா! அவன் அதை நழுவ விட விரும்பவில்லை.

“நாளைக்கு வருகிறானா!” என்று கேட்டான்.

“இல்லை” என்று சொல்லிக் கொண்டே வசந்த கௌரி வீட்டுக்குச் சென்று விட்டாள்.

மேற்படி சம்பவம் நடந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு குருதேவ் சிங் தன் தந்திரத்தை மாற்றிக் கொண்டான். வசந்த கௌரி புல் வெட்டி முடிக்கும் தறுவாயில் வயலுக்கு வந்து சேர்ந்தாள். புல் கட்டை யாராவது தன் தலையில் தூக்கிவிட மாட்டார்களா என்று அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில், குருதேவ்சிங் அங்கு வந்து சேர்ந்தான். அவள் கேட்டுக் கொள்ளாமலிருக்கும் போதே, அவளுக்கு உதவி செய்வதில் ஆர்வமுள்ளவன் போல் புல் கட்டைத் தூக்கி அவள் தலையில் வைத்தான். வசந்த கௌரி அவனுடன் எதுவும் பேசாமல் மௌனமாகப் புல் கட்டைத் தூக்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள்.



வயலில் நடந்த சம்பவத்தைப்பற்றி மகா கௌரிக்கு எதுவுமே தெரியாது. அப்படியிருந்தும் அவள் அன்று வசந்த கௌரியை எச்சரித்தது, கிழவியின் கணிக்கும் சக்தியைக் காட்டியது. “பெண்ணே! மங்கள் சிங் ஊரில் இல்லாத சமயத்தில் நீ மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இந்தக் குடும்பத்தின் கௌரவம் உன் கையில்தான் இருக்கிறது. இந்தக் கிராமத்தில் துர்நடத்தையுள்ள பலர் இருக்கின்றனர். ஜாகீர்தாரின் மகன் குருதேவ் சிங் இருக்கிறானே, தெரியுமா! அவன் யாருக்கும் கட்டுப்படாத அயோக்கியன். அவன் கண்ணில் நீ படக் கூடாது.”

கிழவியின் வார்த்தைகள் வசந்த கௌரியின் ஹிருதயத்தை ஊடுருவிப் பாய்ந்தன. ‘வயலுக்குச் சென்றால், குருதேவ் சிங் வந்து தொலைகிறானே, என்ன செய்வது!’ என்று யோசித்தாள். அவன் தன் பேச்சுக்கு வராமலிருக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்தாள். தான் ஜாக்கிரதையாக நடந்து கொள்வதாய்க் கிழவி மகா கௌரிக்கு உறுதி கூறினாள்.

ஒரு நாள் வசந்த கௌரி புதிய உடையை உடுத்திக் கொண்டு சென்றபோது, அடுத்த வீட்டுப் பெண் கேட்ட ஒரு கேள்வி வசந்த கௌரியைத் திடுக்கிடச் செய்தது.

“நீ என்ன புல் வெட்டப் போகிறாயா! அல்லது எங்கேயாவது திருவிழாவுக்குப் போகிறாயா!” என்று கேட்டாள் அடுத்த வீட்டுப் பெண்.

அந்தக் கேள்வி வசந்த கௌரிக்கு உற்ற சமயத்தில் ஓர் எச்சரிக்கையாக அமைந்தது. அதிலிருந்து அவள் வழக்கத்தைக் காட்டிலும் சீக்கிரமாக வயலுக்குச் சென்று, சீக்கிரமாகத் திரும்பிவர முற்பட்டாள். எனவே, குருதேவ் சிங்கிற்குக் குறித்த நேரத்தில் சென்று புல் கட்டை அவள் தலைமீது தூக்கி வைக்க முடியாமற் போயிற்று. எனினும் அவனை வசந்த கௌரிக்கு வழியில் சந்திக்காமல் இருக்க முடியவில்லை. அவன் தன் வழிக்கு வராமலிருப்பதற்கு என்ன செய்வது என்பதும் அந்தப் பேதைப் பெண்ணுக்குத் தெரியவில்லை.

இத்தகைய தர்ம சங்கடமான நிலைமையில் இரண்டு வாரங்கள் சென்றன. அப்போது மங்கள் சிங்கிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அவன் இராணுவத்தில் சேர்ந்து ஒரு வருஷத்துக்குமேல் ஆகிவிட்டதால், ஒரு மாத ரஜாவில் வருவதாக அவன் எழுதியிருந்தான்.

இதைக் கேட்டதும் மகா கௌரிக்குப் போன உயிரே திரும்பி வருவதுபோல் இருந்தது. வசந்த கௌரிக்கு அச் செய்தி மிகுந்த மன ஆறுதலையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது.

மறுநாள் அவள் வயலுக்குச் சென்று புல் மூட்டையைக் கட்டியபின், அதை அவள் தலையில் தூக்கி விடுவதற்காகக் குருதேவ் சிங் வந்தான். அவள் அவனிடம் புல் கட்டைத் தூக்கிவிட வேண்டாம் என்று முகத்தில் அடித்ததுபோல் கூறி விட்டாள். மற்றொரு நாள் அவன் அங்கு வந்து அவளிடம் தகாத வார்த்தைகள் கூறிக் குறும்புத்தனம் செய்யத் தொடங்கினான்.

அன்று வசந்த கௌரி குருதேவ் சிங்கை மிகவும் கடிந்து கொண்டாள். “குருதேவ் சிங்! இப்படியெல்லாம் நீ என்னைத் தொந்தரவு செய்வது நியாயமல்ல. நாளை என் கணவர் ஊருக்குத் திரும்பி வருகிறார், ஜாக்கிரதை” என்றாள்.

குருதேவ் சிங் திடுக்கிட்டுப் போனான்.

** ** **

வசந்த கௌரி கூறியது போல் மறு நாள் மங்கள் சிங் வந்து சேர்ந்தான். எனவே அன்று முதல் புல் வெட்டிக் கொண்டு வரும் பொறுப்பை அவனே ஏற்றுக் கொண்டான்.

அன்றும் வசந்த கௌரியே வருவாள் என்ற எண்ணத்துடன் குருதேவ் சிங் வந்தபோது, மங்கள் சிங் புல் வெட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் தேள் கொட்டிய திருடன் போல் விழித்தான். எதுவும் பேசாமல் உடனே திரும்பிப் போய் விடலாமா என்று எண்ணினான், குருதேவ் சிங். எனினும் பிறகு மனத்தை மாற்றிக் கொண்டான். தான் வந்து விட்டுத் திடீரென்று திரும்புவதை மங்கள் சிங் பார்த்தால் ஏதாவது நினைத்துக் கொள்வானோ என்று அவன் அஞ்சினான். எனவே, ஒன்றும் தெரியாதவனைப் போல மங்கள் சிங்கிடம் வந்து, "மங்கள் சிங், நீ என்று வந்தாய்!" என்று கேட்டான்.

"இன்று காலையில்தான் வந்தேன், சர்தார். தாங்கள் எங்கு இப்படி வந்தீர்கள்!"

"விசேஷம் ஒன்றுமில்லை. இப்படி வயல்களைச் சுற்றி விட்டுப் போகலாமென்று வந்தேன். நீ ஊரில் இராத போது யார் புல் அறுத்துச் செல்லுவார்கள்!" என்று ஒன்றுமே தெரியாதவன் போல் கேட்டான் குருதேவ் சிங்.

"வேறு யார் இருக்கிறார்கள்! என் மனைவிதான் புல் அறுத்துக் கொண்டு போவாள்" என்று மங்கள் சிங் அடக்கத்துடன் சொன்னான். குருதேவ் சிங் ஜாகீர்தாரின் மகன் அல்லவா!

குருதேவ்சிங் மேலும் விஷமத்தனமாகச் சில கேள்விகள் கேட்டு விட்டு, அவ்விடத்தை விட்டுச் சென்றான்.

மங்கள் சிங் புல் மூட்டையுடன் வீடு சென்றதும், அவன் தாயார் மகா கௌரி தன் மனக் கஷ்டத்தை அவனிடம் சொல்லத் தொடங்கினாள்.

"அப்பா, இன்னும் எவ்வளவு காலம் நீ இராணுவத்தில் இருப்பாய்!"

"ஒரு வருஷம் வேலை செய்து விட்டால், ஆயுள் வரையில் எனக்கு 'பென்ஷன்' தருவார்கள் என்று நினைத்தாயா!"

"நீ கிழவனாகப் போன பின் தான் 'பென்ஷன்' கொடுப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். அது வரையில் வீட்டை யார் பார்த்துக் கொள்வார்கள்! நீ போகும் போது வசந்த கௌரியையும் கூட அழைத்துக் கொண்டு போய் விடு."

"அம்மா, நீ இருக்கும் வரையில் எனக்கு வீட்டைப் பற்றியோ வசந்த கௌரியைப் பற்றியோ சிறிதும் கவலையில்லை."

"வசந்த கௌரிக்கு எதிரில் அவளை நான் புகழ்வது சரியல்ல. அவள் பத்தரை மாற்றுத் தங்கம் தான். இருந்தாலும் காலம் மிகவும் கெட்டுக் கிடக்கிறது."

"உன்னையும் வசந்த கௌரியையும் கெட்டகாலம் எதுவும் செய்ய முடியாது" என்று மங்கள் சிங் உறுதியாகவும் உணர்ச்சியுடனும் கூறினான்.

"நீ இங்கேயே இருந்து விடலாம், அப்பா! இந்தத் தடவை நீ சௌகாருக்கு நூற்றைம்பது ரூபாயைத் திருப்பிக் கொடுத்து விட்டாய். இன்னும் நானூறு ரூபாய்கூட கடன் பாக்கியில்லை. நம்முடைய எருமை மாட்டை விற்று விட்டால் கடன் எல்லாம் தீர்ந்து விடும். அப்படியிருக்க, நீ ஏன் இனிமேல் வேலைக்குப் போக வேண்டும்!"

"வீட்டில் உட்கார்ந்து கொண்டு நான் என்ன அம்மா செய்வது!"

"ஏன், நிலத்தில் பாடுபட்டால் நமது ஜீவனத்துக்கு வேண்டியது கிடைக்காமலா போய்விடும்!"

"நிலத்தில் பாடுபட வேண்டுமென்றால், மறுபடியும் நான் ஐந்நூறு ரூபாய்க்கு உழவு மாடுகள் வாங்க வேண்டும்" என்றான் மங்கள் சிங்.

இதைக் கேட்டதும் அவன் தாயார் வாயடைத்துப் போனாள். நிலத்தில் பாடுபட வேண்டுமாயின், மறுபடியும் மாடுகள் வாங்கவேண்டியிருக்குமே என்பதை அவள் மறந்து விட்டாள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வசந்த கௌரி குறுக்கிட்டுப் பேசினாள்.

"எப்படியிருந்தாலும் நாம் எருமை மாட்டை விற்கத்தான் போகிறோம். இன்னும் ஆறு மாதத்தில் சிறிய எருமை கன்று போட்டு



விடும். இரண்டு கறவை மாடுகள் நமக்கு எதற்கு!" என்றாள் வசந்த கௌரி.

சிறிய எருமை வசந்த கௌரியின் தந்தை அவளுக்குக் கொடுத்ததாகும். எனவே, அந்த எருமை மாட்டைப் பற்றிக் குறிப்பிட்டபோது வசந்த கௌரிக்குப் பெருமை தாங்க முடியவில்லை!

மங்கள் சிங் மறுபடியும் ஊரை விட்டுப் போகக் கூடாது என்பதையே வசந்த கௌரி மறைமுகமாக அவ்விதம் வற்புறுத்தினாள்.

"அதெல்லாம் சரிதான். இங்கேயே நிலத்தைப் பார்த்துக் கொள்வதாயின், உழவு மாடுகளுக்கு எங்கு போவது!" என்றான் மங்கள் சிங்.

வசந்த கௌரி சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தாள். பிறகு, "என்னுடைய தட்டுமுட்டு நகைகளை விற்று விட்டால் என்ன! அவற்றின் மூலம் ஐந்நூறு ரூபாய் கிடைக்கும். கடவுள் கிருபையால் நல்ல விளைச்சல் கிடைத்தால், மறுபடியும் நகைகள் வாங்கிப் போட்டுக் கொண்டு விடலாம்" என்றாள் உற்சாகத்துடன்.

"கூடவே கூடாது. உன் நகைகளை எவ்வளவு விலை வந்தாலும் விற்கச் சம்மதிக்கவே மாட்டேன். கடனாக ஐந்நூறு ரூபாய் வாங்கி உழவு மாடுகளை வாங்கி விடுவோம். பிறகு நல்ல விளைச்சல் இருந்தால் கடனை அடைத்து விடலாம்" என்றாள் மகா கௌரி.

"அம்மா, அதையெல்லாம் நம்பிக் கொண்டு கடன் வாங்கக் கூடாது. இரண்டு வருஷம் நல்ல விளைச்சல் விளைந்தால், கடனை அடைத்துவிடலாம் என்பது உண்மைதான். ஆனால், நல்ல விளைச்சல் இரா விட்டால், கடன் அதிகமாகி நம் குடும்ப நிலைமை மோசமாகி விடும். இப்போது எனக்கு மாதம் ஐம்பத்தைந்து ரூபாய் கிடைக்கிறது. புயல் அடித்தாலும் பெருமழை பெய்தாலும் ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் தேதி யன்று எனக்கு ஐம்பத்தைந்து ரூபாய் சம்பளம் கொடுத்து விடுகிறார்கள். சாப்பாடு இலவசமாகப் போடுகிறார்கள். எனவே நான் மாதா மாதம் முப்பத்தைந்து அல்லது நாற்பது ரூபாய் மிச்சப்படுத்த முடிகிறது. நீ சிறிது காலம் வீட்டைப் பார்த்துக் கொள். என் உற்சாகத்தைக் குறைத்து விடாதே."

இவ்விதம் மங்கள் சிங்கின் நீண்ட பிரசங்கத்தைக் கேட்ட அவ்விருவரும் வேறு எதுவும் கூற முடியாமல் மௌனமாயினர்.

கடைசியாக, மங்கள் சிங்கின் தாயார், மனைவி இவ்விருவருடைய வற்புறுத்தலின் பேரில் அவன் எருமை மாட்டை விற்றான். அதன் மூலம் அவனுக்கு மூந்நூற்றைம்பது ரூபாய் கிடைத்தது. அதைக் கொண்டு அவர்களுக்கு இருந்த கடனில் பெரும் பகுதியை அடைத்து விட்டனர்.

** ** **

மங்கள் சிங் வேலைக்குத் திரும்ப வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

எருமை மாடு கறந்தபோது சேர்ந்திருந்த வெண்ணெயை வசந்த கௌரி அடுப்பில் வைத்து உருக்கிக் கொண்டிருந்தாள். சுமார் இருபது சேர் நெய்க்கு மேல் இருக்கும்.

"இந்த நெய் யாருக்கு!" என்று கேட்டான்.

"ஏன், உங்களுக்குத்தான். இராணுவத்தில் உங்களுக்கு நல்ல நெய் கிடைக்குமா!"

"பேஷ், நீ சொல்லுவது வேடிக்கையாக இருக்கிறது. எங்களுக்கு அங்கு வேண்டிய நெய் கிடைக்கிறது" என்றான் மங்கள் சிங்.

"அதெல்லாம் கலப்பு நெய்யாக இருக்கும், அப்பா" என்றாள் அவன் தாயார் பரிவுடன்.

"அந்த நெய் சாப்பிட்டதால் என் உடம்பு இளைத்தா போய் விட்டது!"

இவ்விதம் மங்கள் சிங் வசந்த கௌரியைப் பார்த்து மிகுந்த அன்புடன் கூறியபோது அவள் மனத்தை என்னவோ செய்தது.

"எனக்கு இந்த நெய் வேண்டாம். உங்கள் இருவருக்கும் இது ஆறுமாதம் வரை வரும். அதற்குள் சிறிய எருமையும் கன்று போட்டு வந்து விடும்" என்றான் மங்கள் சிங் தொடர்ந்து.



அவர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் கேட்கவில்லை. கடைசியில் அந்த நெய்யை அவர்களே வைத்துக் கொள்ள நேர்ந்தது. எனினும் வசந்த கௌரி அன்புடன் வற்புறுத்தியதால் மங்கள் சிங் இரண்டு சேர் நெய்யை மாத்திரம் எடுத்துச் செல்லச் சம்மதித்தான்.

அன்றிரவு வசந்த கௌரி மங்கள் சிங்குடன் தனியாக இருந்தபோது, அவன் இரண்டொரு நாளில் புறப்படப் போவதைக் குறித்து அவள் கண்ணீர் விட்டாள்.

"உங்களைப் பிரிந்து இன்னும் எவ்வளவு காலம் இப்படி இருப்பேன்! என்னையும் உங்களுடன் அழைத்துச் சென்று விடுங்கள்" என்றாள்.

"நீ என்ன சிறு குழந்தை மாதிரி பேசுகிறாயே! இராணுவ முகாம் இருக்கும் இடத்துக்கெல்லாம் உன்னை அழைத்துப் போக முடியுமா!"

"உங்களைப்போல் வேலை செய்பவர்கள் எல்லாம் அவர்கள் மனைவியை வீட்டிலா விட்டு விட்டு வந்து விடுகிறார்கள்! உங்களுக்கு என்னால் சிரமமே ஏற்படாது" என்றாள் வசந்த கௌரி.

"உன்னை நான் அழைத்துச் சென்று விட்டால் அம்மாவை யார் கவனித்துக்கொள்வது, வசந்த்!"

மங்கள் சிங்கின் இந்தக் கேள்விக்கு வசந்த கௌரி யாதொரு பதிலும் சொல்லவில்லை.

சிறிது நேரம் கழித்து, "நீங்கள் இராமல் இங்கு இருக்க எனக்குப் பிடிக்கவே இல்லை. இங்கு நரக வேதனையாக இருக்கிறது" என்றாள் வசந்த கௌரி, மங்கள் சிங்கின் விசாலமான மார்பில் சாய்ந்த வண்ணம்.

அவன் மார்பில் அவள் சாய்ந்து கொண்டது, புயலுக்குப் பயந்த கிளி அந்த ஆபத்திலிருந்து தப்புவதற்காக அடைக்கலம் புகுவதற்குற்ற ஓரிடத்தை நாடுவது போல் இருந்தது!

புதிய

ASPRO
REG TRADE MARK

'ஆஸ்ப்ரோ'

வலி மற்றும் ஜுரத்தை

அதி துரிதமாக

நிறுத்துகிறது!



புதிய 'ஆஸ்ப்ரோ' ஒரு அற்புதமான புதிய முறையில் தயாரிக்கப்படுவதன் காரணமாக, அதை உட்கொண்டவுடன் மூன்று க்ஷணத்திற்குள்ளாகவே அதன் வேலையைத் தொடங்கி விடுகிறது. இப்பொழுது உங்களுடைய சகலவிதமான நோவுகள், தலைவலி, ஜலதோஷம் மற்றும் ஜுரத்தை வேறெந்த மருந்தைக் காட்டிலும் மிக துரிதமாக நிவர்த்திசெய்யக்கூடிய புதிய 'ஆஸ்ப்ரோ' கிடைக்கின்றது. 'ஆஸ்ப்ரோ' இருதயம் அல்லது வயிற்றுக்கு எவ்வித கெடுதியும் விளைவிக்காது.

276-TAM

புதிய 'ஆஸ்ப்ரோ' ஒன்று தான் இந்த எல்லா அனுகூலங்களும் கூடியது.

* **உதிரி வில்லைகளே கிடையாது!** வில்லைகள் உதிரியாக இருந்தால் தூசியும் ஈரமும் அதை எளிதில் பாதித்து, அதன் விளைவாக வயிற்றுக்கு கோளாறு ஏற்படக் கூடும். புதிய 'ஆஸ்ப்ரோ' பரிபூரண பாதுகாப்புடையதாக இருப்பதற்கு காரணம் ஒவ்வொரு வில்லையும் தனித்தனியாக, காற்றுப்புகாத வகையில் விசேஷ முறையில் மூடி உறையிடப்பட்டுள்ளது.
* **பாதுகாப்பு!** 'ஆஸ்ப்ரோ' இருதயத்திற்கோ, வயிற்றுக்கோ கெடுதி விளைவிப்பதில்லை. துர்ப்பழக்கம் உண்டாக்கும் மருந்து எதுவும் இதில் சேர்க்கப்படவில்லை. புதிய 'ஆஸ்ப்ரோ'வை குழந்தைகள்கூட பயமின்றி உட்கொள்ளலாம்.
* **மதிப்பு:** இரண்டே அணா செலவில் உங்களுக்கு துரிதமாக வேலை செய்யும் மூன்று புதிய 'ஆஸ்ப்ரோ' வில்லைகள் கிடைக்கின்றன. எவ்வளவு மலிவு!

தாமதிக்காதீர் — இன்றே புதிய 'ஆஸ்ப்ரோ' கேட்டு வாங்குங்கள்



மாயூரத்தில் கலை விழா

மாயூரம் நகர சபை உயர்தரப் பாடசாலையின் எண்பத்துமூன்றாவது ஆண்டு விழா பிப்ரவரி 25, 26 தேதிகளில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த ராஜ்யத்தின் உயர்தரப் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழும்படி செய்த அதன் முன்னாள் தலைமை ஆசிரியர் திரு வி. ராகவ ஐயங்காரின் ஞாபகார்த்தமாகத் திறந்த வெளி அரங்கு ஒன்று அமைத்து, அதன் திறப்பு விழாவையும் ஆண்டு விழாவுடன் சேர்த்துச் சிறந்த முறையில் ஒரு கலை விழாவாகவே கொண்டாடிப் பெருமைப்பட்டார்கள் மாயூரம் நகர மக்கள்.

முதல்நாள் கலைவிழாவைக் கீழ்த் தஞ்சை மாவட்டக் கல்வி அதிகாரி திரு ஜே. ஏ. ராயன் திறந்து வைத்தார். மறு நாள் ஆண்டு விழாவுக்குத் தஞ்சை மாவட்டக் கலெக்டர் திரு சி. ஏ. ராமகிருஷ்ணன் தலைமை தாங்கிச் சிறப்பித்ததுடன், "திரு ராகவ ஐயங்கார் ஞாபகார்த்தத் திறந்தவெளி அரங்கை"யும் திறந்து வைத்தார்.

இந்த விழாவின் வெற்றிக்குப் பாடுபட்ட மாயூரம் மக்களையும், பள்ளித்தலைமை ஆசிரியர் திரு சேஷகிரி ஐயரையும் பாராட்டிப் பேசினார். திரு சேஷகிரி ஐயரின் நிர்வாகத் திறமையையும், திறந்தவெளி அரங்கு அமைப்பதற்கு அவர் எடுத்துக் கொண்ட தன்னலங் கருதா முயற்சியையும், உழைப்பையும் மாயூரம் மக்கள் மறந்து விட மாட்டார்கள் என்று கூறினார்.

விழா முடிவில் பள்ளி ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் "துர்க்காதாஸ்" என்னும் நாடகம் திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது.

எதிர்ப் பக்கத்தில் உள்ள படங்களில் இரண்டு நாள் விழாக் காட்சிகள் சிலவற்றைக் காணலாம்.

1. விழாவுக்கு வந்திருந்த ரஸிக மகாசபையின் தோற்றம். 2, 3. துர்க்காதாஸ் நாடகத்தில் ரஸமான இரண்டு காட்சிகள். 4. கீழ்த் தஞ்சை மாவட்டக் கல்வி அதிகாரி கலை விழாவைத் துடங்குவதற்கு அறிகுறியாக வாசலில் கட்டி யிருந்த நாடாவைக் கத்திரிக்கிறார். 5. விழாத் தலைவர் தஞ்சை மாவட்டக் கலெக்டர் தலைமையுரை ஆற்றுகிறார். அவருக்கு அருகில் அமர்ந்திருப்பவர்தான் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர் திரு எஸ். சேஷகிரி ஐயர். போட்டோ: என். ராமகிருஷ்ணா.

ஆரோக்கிய வாழ்வு

சீதாலக்ஷ்மி குமாரசாமி

14. தண்ணீரை உபயோகிப்பது எப்படி?

பிராணவாயுவும், ஜலவாயுவும் கலந்ததே தண்ணீராகும். இதை விஞ்ஞான ஆய்வுக் கூடத்தில் சுலபமாய் இரண்டு வாயுக்களையும் ஒரு கண்ணாடிக் குப்பியில் பாய்ச்சி ஜலத்தை உண்டாக்கிக் காண்பிக்கலாம். ஆனால் நாம் உபயோகிக்கும் தண்ணீர் இவ்வாறு ஆய்வுக் கூடங்களின் மூலமாக பிராண வாயுவையும் ஜல வாயுவையும் ஒன்றாகக் கலந்து கொடுத்தது அல்ல; இயற்கையாக வான் நமக்கு அளிக்கும் வரப் பிரசாதமாகும். அதனால்தான்,

> "வானின் றுலகம் வழங்கி வருதலால்
> தான்அமிழ்த மென்றுணரற் பாற்று"

என்று வள்ளுவர் பகர்ந்திருக்கின்றார்.

வானின்று மழையாகப் பெய்து உலகத்தைக் காப்பாற்றுகிறது தண்ணீர். தண்ணீர் கிடைக்காவிட்டால் எந்த வேலையும் சரிவர நடவாது. உடல் வேலைகள் மட்டுமல்ல, மற்றும் உயிர் வாழ உணவு வகைகள் விளைவிக்கவும், ஸ்நானம் செய்யவும் பலவிதத் தொழில்களைச் செய்யவும் தண்ணீர் மிக மிக முக்கியமானது. சமீபத்தில் சுமார் ஐந்தாறு ஆண்டுகள் பருவ மழை சரிவர இல்லாத போது, நாமெல்லாரும் தண்ணீர் கிடைக்காமல் எவ்வளவு கஷ்டப்பட்டோம்! எனவே எல்லாவற்றுக்கும் தண்ணீர் மிக இன்றியமையாதது.

வானிலிருந்து விழும் நீர் ஒரே வகையாய் இருந்தாலும், அந்தந்த நிலத்தின் தன்மைக்குத் தக்கபடி நீரின் தன்மை மாறுதல் அடைகின்றது. சில வகை உப்புச் சத்துக்கள், கனிய சத்துக்கள் அதனுடன் சேர்ந்து கொள்ளுகின்றன. இவைகளில் சில உடலுக்குத் தீமை செய்யும், சில மருந்தைப் போல சுகத்தையும் அளிக்கும். சில இடங்களில் ஊற்று நீர் கிடைப்பதுண்டு. அவ்விடமுள்ள நிலத்தின் தன்மையைக் கொண்டு சில தாமிரச் சத்து உடையதாகவும், சில கந்தகச் சத்து உடையதாகவும், சில இரும்புச் சத்து உடையதாயும் இருக்கின்றன. அந்தச் சத்துக் குறைவினால் பாதிக்கப்படும் நோயாளிகள் அந்தந்தச் சத்துக்களடங்கிய ஊற்று நீரை அருந்துவதனால் ஆரோக்கியமடைகின்றனர். இம்மாதிரி சத்துக்களடங்கிய ஊற்று நீர் சுவிட்ஸர்லாந்து போன்ற இடங்களில் உள்ளது. அங்கெல்லாம் சுகவாசஸ்தலம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சௌகரியமுள்ளவர்கள் அங்கு சென்று நலம் அடைகின்றனர். நம்முடைய நாட்டிலும் அம்மாதிரி ஊற்றுகள் இல்லாமல் போகவில்லை. சிலர் இதனை மூட நம்பிக்கையாக நகையாடுகின்றனர். சுவிட்ஸர்லாந்து தேசத்தில் இருக்கிறது என்றால் அதனை நம்புகின்றனர். எல்லாம் தூரத்துப் பச்சை கண்ணுக்கு அழகாய் இருக்கிறது; மனத்துக்கு உகந்ததாய் இருக்கிறது.

நமது நாட்டிலும் பல இடங்களில் இம்மாதிரி சத்து நீருள்ள ஊற்றுகள், கிணறுகள், குளங்கள், ஆறுகள் முதலியன இருக்கின்றன. தீர்த்தங்கள் என்று வழங்கப்பட்டு, அவற்றின் மகிமையால் நோய் தீர்ந்ததாகச் சொல்லுகின்றனர். உண்மையில் நீரில் உள்ள தாதுப் பொருள்களே இதற்குக் காரணம். கடவுள் தந்த நீருக்காக யாரும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றனர். அவ்வகையில் கடவுள் மகிமையைப் போற்றுவதில் குற்றமில்லை. ஆனால் அம்மாதிரியான நீர் நிலைகளைச் சுகாதார முறைப்படி பாதுகாத்து சுவிட்ஸர்லாந்தைப் போலப் பல ஆரோக்கிய ஸ்தலங்களை உண்டாக்க வேண்டும்.

* * *

இத்தனை நாள் ஏதோ கடவுள் பெயரால் இம்மாதிரி ஸ்தலங்கள் தீர்த்த மகிமை பெற்று மதக் கொள்கை ரீதியில் நடந்து வந்திருக்கின்றது. நமது சுதந்திர சர்க்கார் இனி விஞ்ஞானிகளை இம்மாதிரிப் பல இடங்களுக்கு அனுப்பி எந்தெந்த இடத்திலுள்ள நீர் எந்தத் தாதுவைக் கொண்டு இருக்கின்றது, அதனால் எந்தெந்த நோயாளிகள் எங்கு சென்றால் நலம் என்னும் அறிக்கையை வெளியிட்டார்களானால் நாட்டுக்குப் பெரும் சேவை செய்தவராவார்கள். இது மிக அவசியமும் அவசரமுமாகும். இவைகளெல்லாம் தனிப்பட்டவர்களால் செய்ய முடியாது. வேண்டிய விஞ்ஞானக் கருவி வசதிகளெல்லாம் கிடைப்பது கடினம். அரசாங்கம் இதற்கு வேண்டிய முயற்சி எடுத்துப் பரிசோதித்து, அதன் முடிவுகளைத் தெரிவித்து விடுவார்களானால், பின்பு பலர் அவ்விடங்களைப் பிரபலப்படுத்தி உபயோகித்துக் கொள்ள வசதியாய் இருக்கும்.

தாமிர சத்துள்ள நீர் க்ஷயத்துக்கும், இருமலுக்கும் நல்லது. சில இடங்களில் தங்க சத்துள்ள நீரும் உண்டு. அது முக்கியமாய் க்ஷயத்துக்கு ஏற்றது. இரும்புச் சத்துள்ள நீர் ரத்த சோகை மற்றும் பலவீனக்காரர்களுக்கும் நல்லது. கந்தகச் சத்துள்ள நீர் அஜீரணக் கோளாறுகளுக்கு நல்லது. இம்மாதிரி விஞ்ஞான ரீதியாய் சரிவரக் கண்டு பிடித்தால் நம் நாட்டு மக்களின் ஆரோக்கியம் அபிவிருத்தியடைய மார்க்கமுண்டு.



இவை யெல்லாமுமே ஒரு அளவுடன் சில நாட்கள் சில மாதங்கள் தான் உட்கொள்ள வேண்டும். நோய் நீங்கியபின் அவசியமில்லை. எதுவும் அளவுக்கு மீறினால் கெடுதல் செய்யும்.

ஒவ்வொரு இடத்திலுள்ள நீர் ஒவ்வொரு விதமாக இருக்கும். சில நீரிலுள்ள உப்புச் சத்துக்கள் நாம் குடிக்கும் தண்ணீரின் மூலமாய் உட்சென்று உடல் முழுவதும் பரவிச் சிறுநீர்க் காய்களால் வடிகட்டப் படும்போது இந்த உப்புக்களும் வடிகட்டப்படுகின்றன. சிலருக்குச் சில சமயம் இம்மாதிரி உப்புக்கள் கட்டி தட்டி முதலில் மணல்போன்று சிறு கற்களாக மாறிப் பின் கோழிமுட்டை அளவும், மற்றும் பலவித ரூபங்களாகக் கூழாங் கற்களைப் போன்

றும் உருவாவ துண்டு. இவை சிறுநீர்க் காய்களிலும் அதன் குழாய்களிலும் தங்கிப் பெருகி வழியை அடைத்துக் கொண்டு மாளா நோயை உண்டாக்கும். அம்மாதிரி ஆனவர்களுக்கு ஆப்பரேஷன் செய்து அக் கற்களை நீக்குவார்கள். சிறு மணல்போன்ற அளவிலேயே தெரிந்தால், யோகாசனங்களினாலும், உணவு இட்டத்தினாலும் போக்கி விடலாம். கற்கள் பெரிதானபின் ஆப்பரேஷன் செய்து எடுப்பதைத் தவிர வேறு மார்க்கமே இல்லை.



தாகம் இயற்கை நமக்குத் தந்த ஒரு வரப் பிரசாதமாகும். நமது உடலுக்கு நீர் தேவைப்படுகின்றது என்பதைக் காட்டவே தாகமென்ற உணர்ச்சி ஏற்பட்டுள்ளது. உடனே நல்ல நீர் வேண்டிய மட்டும் அருந்த வேண்டியது நமது கடமை. சிலர் சாப்பிடும் போது தாகமெடுத்தால் ஜலம் அருந்தக் கூடாது என்பார்கள். இத்தவறான அபிப்பிராயம் எவ்வாறோ நம்மிடையே பரவி விட்டிருக்கின்றது. சாப்பிடும்போது தண்ணீர் அருந்தினால் ஜீரண ரசங்கள் பாதிக்கப்படும். உணவு அதிகம் எடுக்காது; அஜீரண மூண்டாகும் என்று பலவாறாய்ச் சொல்லுகின்றனர். ஒருகாலும் அவ்வாறு ஆவது கிடையாது. பலப் பல பரிசோதனைகளைச் செய்து பார்த்து இவை முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்று கண்டிருக்கின்றனர். சாப்பிடும்போது இடையில் ஜலம் அருந்துவதால் காஸ்டிரிக் ரசம் எனும் ஜீரண ரசம் சரிவர சுரக்க உதவியாக இருக்கிறது; ஜீரணம் செய்யவும் உதவுகிறது என்று கண்டிருக்கின்றனர். தண்ணீர் சாப்பிடுவதால் மற்ற ஆகாரம் குறைந்து விடும் என்பது சாப்பாட்டு ராமன்களின் வாதம். பாதி வயிறு ஆகாரமும், கால் வயிறு தண்ணீரும், கால் வயிறு காலியாகவும் விட்டுவிட வேண்டுமென்பது ஆரோக்கிய விதியாகும். அந்தக் கால் வயிறு தண்ணீரின் இடத்தையும், மற்றும் காலியாக விடவேண்டிய இடத்தையும் பஞ்சு திணிப்பதுபோல் சாதத்தையே போட்டுத் திணித்தால் ஆரோக்கியத்துக்குச் சற்றும் எடுத்தது அல்ல. தவிர இவ்வாறு சாப்பிடுகிறவர்களுக்கு மலச்சிக்கல் உண்டாகும். இடையில் தண்ணீர் சாப்பிடுகிறவர்களுக்கு மலச்சிக்கல் இருக்காது. இருந்தாலும் விலகி விடும்.

தாகம் எடுக்கும் போதெல்லாம் சுத்த நீரையே குடிப்பது நல்லது. சிலர் காப்பி, டீ, கோக்கோ, ஓவல்டின், கலர், கிரஷ், சோடா முதலியவைகளை அருந்துவர். இவைகளெல்லாம் தாகத்தைத் தீர்க்காது. ஆரோக்கியத்துக்கு உகந்த பானங்களும் அல்ல. இவைகளில் உணவுப் பொருள்கள் இருப்பதுடன், விஷப் பொருள்களும் கலந்திருக்கின்றன. சில மணி நேரம் உற்சாகத்தைக் கொடுக்கும். அவ்வளவே. பின் அத்தனைக்கும் சேர்த்துச் சோர்வு ஏற்படும். பின் அதனைப் போக்க மறுபடியும் காப்பி, டீ அருந்துவர். இந்தப் பழக்கம் ஆரோக்கியத்துக்கு மிகவும் கெடுதலாகும். கலர், சோடா, கிரஷ் வகையும் அவ்வாறே. அதில் வெறும் இனிப்புச் சத்தும், சில எசென்ஸ் வாசனையும், காற்றையும் தவிர வேறு ஒன்றுமே கிடையாது. இனிப்புச் சக்தியை அளிப்பதாலும், காற்றும் கலந்து உட்செல்வதாலும் ஆகாரப்பை தூண்டப்பட்டு உடனே சிறிது உற்சாகம் தோன்றுகின்றது. காற்று ஏப்பமாக இரண்டு தடவை வெளியானதும் ஆகாரப்பை என்னவோ இலேசாகத் தோன்றும். ஆனால் இந்தப் பழக்கமும் நல்லதல்ல. நாளடைவில் ஆகாரப்பை பலவீனப்பட்டு இந்தச் சோடா வாயு இல்லாமல் வேலை செய்ய முடியாது என்று சண்டித்தனம் செய்யும்.

எனவே தாகத்துக்கு எடுத்தது நல்ல குளிர்ந்த நீர்தான். குளிர்ந்த நீர் என்றால் காய்ச்சி, வடிகட்டி, பானையில் விட்டு வைத்த நீர். சிலர் தாகத்தின் போதெல்லாம் ஐஸ் தண்ணீரைக் குடிப்பார்கள். அதுவும் ஆரோக்கியத்துக்குக் கெடுதல்தான். ஏதோ ஒரு சமயம் உபயோகிப்பதால் ஒன்றுமில்லை. வழக்கமாகக் கூடாது.

கலர், கிரஷ், காப்பி, டீ உபயோகிப்பதற்குப் பதிலாக எலுமிச்சை ரசத்தில் நாட்டுச் சர்க்கரை அல்லது பனங்கற் கண்டு போட்டுக்கலந்து குடிக்கலாம். அதில் பல நல்ல வைட்டமின்கள் இருக்கின்றன. சி. வைட்டமினும், சர்க்கரையின் இனிப்புச் சத்தும் உடலின் ஆயாசத்தைப் போக்கி இதமளிக்க வல்லவை. இவற்றால் ஒரு கெடுதலும் உண்டாக வழியில்லை. நீர் மோர் நல்லது. அவசியமானால் சிறிது உப்பையும் கலந்து கொள்ளலாம். இவைகளெல்லாம் ஜீரணத்துக்கும் நல்லது. சிலர் பெருங்காயம், மிளகாய், கடுகு, இஞ்சி முதலியன மோரில் போடுவார்கள். இவை அத்தனையும் சாட்டையைப் போல ஆகாரப் பையை அடித்து வேலை வாங்கக் கூடியது. ஏதோ மருந்தைப் போல அவசியமானபோது உபயோகிக்கலாமே அன்றித் தினசரி பழக்கமாகக் கூடாது.

* * *

தண்ணீரைப் பற்றி இவ்வளவு விரிவாக எழுதுவதற்குக் காரணம் அதன் அவசியத்தைப் பற்றி யோகாசன நேயர்கள் நன்கு உணர்ந்து கொண்டு அதன்படி நடக்க வேண்டும் என்பதற்காகத்தான். கண்ட கண்ட தண்ணீரைக் குடித்து விட்டு யோகாசனத்தைப் பயின்று வந்தால், யோகாசனம் செய்வதால் ஏற்படும் பலன் பூரணமாக உடனே கிடைக்காது.

யோகாசனம்தான் பயிலுகிறோமே எப்படி இருந்தால் என்ன என்று அலட்சியத்துடன் இருந்துவிட்டுப் பிறகு ஆசனங்கள்மீது குறைப்படுவதில் அர்த்தமில்லை. ஆகையால் யோகாசனம் பயிலுபவர்கள் உணவு ஞானமும் பெற வேண்டும். சத்துள்ள உணவுடன் சுத்தமான தண்ணீரையும் போதுமான அளவு அருந்தி வரவேண்டும்.

ஆரோக்கியக் கட்டுரைகளில் கூறியபடி உணவு முறையையும் கையாண்டு யோகாசனமும் விடாமல் பயின்று வந்தால் கட்டாயம் பலன் கிடைக்கும். எல்லாவற்றுக்கும் விடா முயற்சியும் நம்பிக்கையும்தான் வேண்டும்.

தீராத நோய்கள் எல்லாம் தீர்த்து வைக்கும் சஞ்சீவி யோகாசனம். ஆனால் அச் சஞ்சீவியைச் சோம்பேறிகள் அடைய முடியாது. உடலுழைப்பு உள்ளவர்கள்தான் பெற்று மகிழ முடியும். ஏதோ சில தினங்கள் ஆசனங்கள் பயின்றுவிட்டு ஆசனங்கள் பயிலுவதில் பயன் ஒன்றுமில்லை என்று கூறுவது சோம்பேறிகளின் பேச்சாகவே முடியும். ஆகையால் நல்ல ஆசன நிபுணர்களின் ஆலோசனைகளின் பேரில் யோகாசனங்களை விடாமல் தொடர்ந்து செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். இது அனுபவ உண்மை. (தொடரும்)

Firestone

பயர்ஸ்டோன் டயர்களுக்கு

மீண்டும் வெற்றி!



உலகின் மிக முரடான ரோடு ரேஸில் முதல் நான்கு கார்கள் பயர்ஸ்டோன் டயர்களை உபயோகிக்கின்றன.

டயர், கார் மற்றும் டிரைவர் உழைப்பின் தரத்தை நிர்ணயிப்பதற்காக மிக்க கடுமையான சோதனைகள் நிறைந்த உலகப் பிரசித்திபெற்ற பான்-அமெரிக்கன் ரோடு ரேஸில் பயர்ஸ்டோன் டயர்கள், தொடர்ந்து மூன்றுவது ஆண்டிலும், வெற்றி பெற்ற பெரிய இன கார்களில் பூட்டப் பட்டிருந்தன. முதல் நான்கு டிரைவர்களும் உலகின் கடுமையான கார் ரேஸ்களில் ஒன்றான இப்போட்டியில் தங்கள் பாதுகாப்புக்கு பயர்ஸ் டோன் டயர்களையே வாங்கி உபயோகித்தனர்.





மெக்ஸிகோவின் தென் மூலையில் டக்ஸ்ட்லா குடியாஸிலிருந்து வடக்கே யு. எஸ். எல்லையில் ஸியுடாட் ஜுவாரஸ்வரை உள்ள பான்-அமெரிக்கன் ரேஸ் பாதை வளைந்து வளைந்து செல்லும் மலை ரஸ்தாக்கள், நீண்ட மணற்பாங்கான வாயுவேகப் பாலைவனப் பாதைகள், பட்டணங்கள், நகரங்கள் வழியாகச் செல்கிறது – உண்மையிலேயே டயரின் உழைப்புக்கு எல்லா வகைகளிலும் சோதனை இது.

பயர்ஸ்டோன் சூப்பர் கம்-டிப்டு டயர்களின் பிரத்தியேக அம்சங்கள்—

அதிக வலுவு, வெடிப்பு ஏற்படாமல், எதிர்ப்பு, சுகமான ஓட்டம், உறுதியான ரப்பர், நீடித்துழைக்கும் டிஸைன் இவையாவும் ஓட்டப் போட்டிக்கானாலும் தினசரி உபயோகத்திற்கானாலும் டயரின் பாதுகாப்பையும் சிக்கனத்தையும் அதிகரிக்கின்றது.



சொக்கனின் சோகக் கதை

சரஸன்

என் கம்பெனி எஜமானர் ஒரு நாள் என்னை அழைத்து, "உனக்குக் காஷ்மீர் போகச் சம்மதமா! அங்கு போவதாய் இருந்தால், உன் சம்பளத்தை அறுநூறாக உயர்த்துவதுடன், ஆண்டுக்கு ஒரு முறை உன் சொந்த ஊருக்குப் போய் வரப் படிச் செலவும் கிடைக்கும்" என்றார்.

சிறிது யோசித்தேன். என் சொந்த ஊர் எது! எனக்கு வாழ்வதற்குப் போதிய ஊதியம் கிடைக்குமிடம் எதுவோ, அதுதானே என் சொந்த ஊர்! நான் ஒண்டிக்கட்டை. எங்கிருந்தால் என்ன! அதுவும் அறுநூறு ரூபாய்! "சரி, நான் போகிறேன்" என்று சம்மதம் தெரிவித்து விட்டேன்.

காஷ்மீர் போய் என் புது வேலையை ஒப்புக்கொண்டேன். சென்னையில் உள்ள அந்தக் கம்பெனியின் தலைமைக் காரியாலயம் காஷ்மீரில்தான் உள்ளது. அதில் உதவி மானேஜர் பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டது. என்னிடம் என் எஜமானருக்கு இருந்த நம்பிக்கையும், பிரியமும்தான் எனக்கு இத்தகைய உயர்வை அளிக்கப் பயன்பட்டன என்று உணர்ந்தேன்.

எனக்கென்று ஒரு தனி இருப்பிடம் அளிக்கப்பட்டது. சிலகாலம் நான் பட்ட அவஸ்தை கொஞ்ச நஞ்சமல்ல. எல்லாம் பாஷைப் பிரச்னைதான். எனக்கு அவர்களுடைய பாஷை வராது. ஆங்கிலம் பேசினால், காரியாலயத்தை விட்டு வெளியே நான் தினசரி பழகக் கூடிய இடங்களில் புரிந்து கொள்ளச் சிரமப்பட்டார்கள்.

அவ்வளவு ஏன்! எனக்கென்று ஏற்பட்ட ஒரு வேலைக்காரனுடன் நான் பட்ட அவஸ்தை! அவனுக்குப் புரியக்கூடிய பாஷையில் என்னால் பேச முடியாததன் காரணமாக, என் வேலையை நானே செய்து கொள்ள வேண்டியதாயிற்று. சம்பளம் மட்டும் அவன் கணக்காய்ப் பெற்றுக் கொண்டான். அவன் பேரில் பிசகு என்ன!

இந்த நிலையில் அன்று என்னைக் காண ஒரு வயோதிகன் வந்தான். எனக்கு வணக்கம் தெரிவித்து விட்டு, ஹிந்தியில் ஏதோ பேசினான். 'இதென்னடா மீண்டும் சங்கடம்!' என்று நான் படும் சிரமத்தை அந்த வயது முதிர்ந்த கிழவன் புரிந்து கொண்டு விட்டான் போலும்!

"ஐயா! நான் சாப்பிட்டு நான்கு நாட்கள் ஆகின்றன. ஏதாவது கொஞ்சம் ஆகாரம் கிடைத்தால்......" என்று நல்ல தமிழில் அவன் பேசியதைக் கேட்டபோது, துள்ளிக் குதித்தேன். இத்தனை தொலை தூரத்தில் ஒரு தமிழன் கிடைத்தானே என்று என் உள்ளத்தில் ஏற்பட்ட உவகை கொஞ்சநஞ்சமல்ல.

அந்தக் கிழவனுடைய பசியைப் போக்கியது மட்டுமல்லாமல் அவனை என்னுடனே தங்கிவிடும்படி கூறினேன். அவனும் என்னைப்போலத்தானே! சோறு கண்ட இடம் சொர்க்கம். எனவே என்னுடன் தங்கச் சம்மதித்தான்.

அவன் பெயர் சொக்கன் என்று தெரிந்து கொண்டேன். அந்த இடத்திலே எனக்கு அவன் கிடைத்தது என் அதிர்ஷ்டம் என்றுதான் கூற வேண்டும். எனது சில்லறை வேலைகளையெல்லாம் அவன் செய்தான். என்னுடன் தங்கிய சொற்ப காலத்துக்குள் என் அபிமானத்தைப் பூரணமாய்ச் சம்பாதித்துக் கொண்டு விட்டான் சொக்கன்.

என்னுடன் பழகும்போது, சொக்கன், ஒரு வேலைக்காரன், தன் எஜமானனுடன் பழகும் முறையில் பழகினான். நான் அம்மாதிரி அவனைப் பழக விடவில்லை. "சொக்கா! என்னை ஒரு பெரிய மனுஷ்யன் மாதிரி பாவித்து நடந்து கொள்ள வேண்டியதில்லை. உன் மகன் ஒருவன் இருந்தால் அவனிடம் எப்படிப் பழகுவாயோ அப்படிப் பழகு" என்றேன். கிழவன் ஒருமுறை என்னைப் பார்த்து நீண்ட பெருமூச்சு விட்டான்.

சொக்கன் எனக்காகப் படும் பாடுகளைப் பார்த்த போது, எனக்குப் பரிதாபமா யிருந்தது. ஒருநாள் அவனிடம், "சொக்கா! உனக்கென்று சம்பளம் கொஞ்சம் கொடுக்க எண்ணுகிறேன்" என்றேன்.

அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. "தம்பி! உன்னை என் மகனைப்போல் பாவிக்கும்படி நீயே சொன்னாயல்லவா! தந்தை மகனிடம் சம்பளம் வாங்குவது என்பது பொருத்தமா யிருக்குமா என்று யோசித்துப் பார்! எனக்குச் சம்பளம் ஏன்! வேளா வேளைக்குச் சாப்பாடு; துணிமணி எல்லாம் கிடைக்கிறது. சம்பளம் வேறு எதற்காக!" என்று எனக்குச் சூடு கொடுத்தான்.



சில மாதங்கள் சென்றன. சென்னையில் என்னுடன் வேலை பார்த்த என் நண்பன் ஒருவனையும், என் யோசனையின் பேரில் இங்கு மாற்றினார்கள். அவன் தன் மனைவியுடன் வந்து சேர்ந்தான். அவனுக்கு வேறொரு இடத்தில் ஜாகை வசதி செய்யப்பட்டிருந்தது. அவன் பெயர் சந்திரன்.

சந்திரன் அடிக்கடி என் வீட்டுக்கு வந்து போவது வழக்கமாயிற்று. என் வேலைக்காரக் கிழவன் சொக்கனையும் கவனித்தான். "நீ அதிர்ஷ்டக்காரன் தானப்பா! உனக்கு ஒரு தமிழன் வேலைக்காரனை அமர்த்திருக்கிறான் அல்லவா!" என்றான் சந்திரன்.

"ஏன்! உனக்கும் வேண்டுமானால், வேலை செய்யச் சொக்கனை அனுப்புகிறேன்" என்று கூறினேன். பிறகு, சொக்கன் பக்கம் திரும்பி, "என்ன சொக்கா! நாளை முதல் நீ இங்கு வேலை செய்தது போக, பாக்கி நேரங்களில், சந்திரனுடைய வீட்டு வேலைகளையும் செய்கிறாயா!" என்று கேட்டேன்.

"அதற்கென்ன, தம்பி! அப்படியே செய்தால் போச்சு!" என்று சம்மதம் தெரிவித்தான் சொக்கன். அதுமுதல் சொக்கன் என் நண்பன் வீட்டுக்குச் சென்று வேலை செய்தான்.

இப்போது சில நாட்களாக, சொக்கன் ஏதோ மனத்தில் எண்ணித் தாபப்படுகிறான் என்பது அவன் முகக் குறிப்பிலிருந்து என்னால் ஊகிக்க முடிந்தது. "சொக்கா! சில தினங்களாய், ஏதோ வருத்தமுற்றுக் காணப் படுகிறாய் போலிருக்கிறதே! ஏன்!" என்றேன் ஒருநாள்.

"ஒன்றுமில்லை, தம்பி!" என்று மழுப்பப் பார்த்தான். நான் விட்டேனா அவனை! "பரவாயில்லை, சொல். நீ என்னுடன் பழகிவரும் இத்தனை காலமாய், உன்னைப் பற்றி நான் ஒன்றும் கேட்காததே தவறு. நீயாகவும் கூறவில்லை. இப்போது சந்தர்ப்பம் வாய்த்துக் கொண்டிருக்கிறது. எதுவானாலும் சொல். உன்னுடைய வரலாறு என்ன! என்னால் முடிந்தால், ஏதாவது உதவி செய்து உன் சோகத்தைக் குறைக்கவோ போக்கவோ முயல்கிறேன். இல்லா விட்டாலும், பிறரிடம் நம்முடைய குறைகளைச் சொல்வதில் சற்று மனச் சமாதானமாவது அடையலாம்" என்றேன்.

சொக்கன் தன்னுடைய சோகக் கதையைச் சொல்லத் தொடங்கினான் :—

"எல்லோரையும் போல நானும் ஒரு காலத்திலே சௌக்கியமாய்த்தான் வாழ்ந்தேன். கல்யாணமும் செய்து கொண்டேன். என் மனைவி ராஜம் என்பவள் என்பேரில் தன் உயிரையே வைத்திருந்தாள். எங்களுக்கு ஒரு ஆணும் பெண்ணும் குழந்தைகளாய்ப் பிறந்தார்கள். அவர்களுடைய வயது முறையே நான்கும் இரண்டுமாக ஆன போது, எங்கள் எல்லோரையும் தவிக்க விட்டு விட்டு, பாம்பு தீண்டப் பட்டுக் காலமாகி விட்டாள் என் மனைவி ராஜம்.

சில காலம் நான் வைராக்கியத்துடன் இருந்து வந்தேன். வயது பால்யம் எனக்கு. நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கே, ஒரு மனைவி போய் விட்டால், மறு மனைவியைக் காலில் கட்டச் சித்தமா யிருக்கும் நமது சமூகம், இருபத்தைந்து வயதே நிரம்பப் பெற்ற என்னைச் சும்மா விட்டு வைக்குமா!

பல பல உபதேசங்கள் செய்து, என்னை மறுமணம் புரிந்து கொள்ளச் சம்மதம் பெற்று விட்டார்கள், என் நலனில் அக்கறை கொண்டுள்ளதாய்ப் பறைசாற்றிய என் உறவினர். நானும் வயப்பட்டு விட்டேன். சாவித்திரி என்ற பெண் என் மனைவியாய் வந்து சேர்ந்தாள். என் குழந்தைகளைச் சிலகாலம் பிரியத்துடன்தான் நடத்தினாள். அம்மாதிரியே நீடித்து நடந்து கொண்டிருந்தால், என் கதையை உன்னிடம் சொல்ல வேண்டிய அவசியமே எனக்கு ஏற்பட்டிருக்காது.

யாரோ அவளுக்குக் குழந்தைகள் பிறக்காது என்று கூறி விட்டார்களாம். அது முதல் என்னுடைய குழந்தைகளைக் கண்டால், வெறுத்து ஒதுக்குவதற்குத் தலைப்பட்டாள்.

நான் சிலகாலம் இதை லட்சியம் செய்யாமலிருந்தேன். குழந்தைகளை அவள் படுத்தும் பாட்டை அக்கம் பக்கத்தார் என்னிடம் கூறிய போது, என்னால் துயரமும் கோபமும் தாள முடியவில்லை. செய்வதறியாது சாவித்திரியை மிகவும் கடிந்து கொண்டேன்.

ஒரு நாள் நான் வீடு திரும்பியபோது, என் பெண் குழந்தை துளசி முகம் சிவக்க அழுது கொண்டிருந்தாள். காரணம் என்னவென்று கேட்டபோது, "அம்மா என்னை முதுகில் பளீர் பளீர் என்று அறைந்தாள்" என்று திணறியபடி கூறித் தன் முதுகை எனக்குக் காட்டினாள்.

எனக்கு வந்த ஆத்திரத்தில், என்னையே மறந்தேன். மூலையில் கிடந்த கழியை எடுத்து, சாவித்திரியை நையப் புடைத்து விட்டேன்.

"அடி! சண்டாளி! உன் குழந்தையாய் இருந்தால், இம்மாதிரி அடிப்பாயா! தாயற்ற குழந்தையை இம்மாதிரி அடிக்க உன் மனம் என்ன பாறாங் கல்லா! உன்னுடைய கெட்ட எண்ணத்துக்கு உனக்கு ஏழேழு ஜன்மங்களுக்குக் குழந்தை பிறக்குமா!" என்று கடிந்தேன் அவளை.

என்மீது தாபப்பட்டுப் பிறந்தகம் போய் விட்டாள் அவள். பின்பு திரும்பி வரவே யில்லை. என்னுடன் வாழ முடியாது என்று ஜீவனாம்ச வழக்குத் தொடர அவளுடைய தந்தை ஏற்பாடு செய்வதாகக் காதில் விழுந்தது.

வழக்குத் தொடரும் அளவுக்கு இந்த விஷயத்தை வளரவிட எனக்கு விருப்பமில்லையாதலால கோரியதற்கு மேல் இரண்டு பங்கு கொடுத்து விட்டேன். மேலும் அந்த ஊரில் இருக்க விரும்பாமல், பம்பாயில் உள்ள தலைமைக் காரியாலயத்துக்கு என்னை மாற்றும்படி கேட்டுக் கொண்டு, பம்பாய் போய்ச் சேர்ந்தேன். அப்போது குழந்தைகளுக்கு வயது ஏழும் ஐந்தும். பம்பாய் வந்த சில காலத்துக் கெல்லாம், என் நிலையை அறிந்த என் காரியாலய மானேஜர்—அவரும் ஒரு தமிழர்தான்—குழந்தைகளைத் தன்னுடனேயே இருக்கும்படி கூறினார். எனக்கும் அதற்கு ஆட்சேபம் சொல்லத் தோன்றவில்லை. அவருடைய பொறுப்பில் விட்டு விட்டேன்.

பம்பாய் வந்த ஆறு மாதத்துக்கெல்லாம் என்னை "மலாயா போகிறாயா !" என்று கேட்டார்கள், என் காரியாலயத்தில். யோசித்தேன். என் குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஓர் உத்தமர் ஏற்றுக்கொண்டு விட்டார். பின்பு நான் ஒண்டிக் கட்டை. எங்கிருந்தால் என்ன என்று தோன்றியது. "சரி" என்றேன்.

மலாயா சென்ற நான் அங்கிருந்து பல தேசங்களுக்குச் சென்றேன். இடையில் அவ்வப்போது குழந்தைகளைப் பற்றிய க்ஷேம நலச் செய்தி மட்டும் கிடைத்துக் கொண்டிருந்தது.

இம்மாதிரி சுமார் ஆறு ஆண்டுகள் வெளிநாடுகளில் சஞ்சரித்து விட்டு, மீண்டும் தாய் நாடு திரும்பி, பம்பாய் வந்தேன். எனக்குக் காத்திருந்தது, துக்கமும் ஏமாற்றமும். என் குழந்தைகளைக் காப்பாற்றி வந்த அன்பர் காலமாகிச் சில மாதங்கள் ஆகி விட்டன என்று தெரிய வந்தது. குழந்தைகள் இருக்குமிடம் தெரியவில்லை. சிலர் என் பெண் இறந்து விட்டதாய்க்கூடச் சொன்னார்கள். இதை நம்ப என் மனம் மறுத்தது.

இரண்டு மகா யுத்தங்களைப் பார்த்து விட்டேன், தம்பி! இதற்கிடையில், பல ஊர்களாய்ச் சுற்றி வருகிறேன். அங்கங்கே என் குழந்தைகளைப் பற்றிய செய்தி ஏதாவது கிடைக்குமா என்று வலை வீசிப் பார்க்கிறேன். எங்கும் ஒரே ஏமாற்றம் !



நான் மலாயா முதலான இடங்களில் வேலை பார்த்தபோது, சுமார் ஏழாயிரம் ரூபாய் வரை மிச்சப் படுத்தி யிருந்தேன். அதை வைத்துக் கொண்டு, அங்கங்கே ஏதாவது வியாபாரம் செய்து கொண்டு, காலங் கழித்தேன். கை நஷ்டம் இன்றுவரை ஏற்படவில்லை.

கடைசியாய்க் கடந்த ஏழு வருஷங்களாய், நான் ஹைதராபாத்தில்தான் இருந்தேன். சமீபத்தில் ஒரு நாள், யாரோ என் மக்கள் காஷ்மீரில் இருப்பதாய்த் தகவல் சொன்னார்கள். அது எவ்வளவு உண்மை என்றுகூட யோசிக்க என் மனம் இடந்தரவில்லை. எத்தனை வருஷங்கள் இம்மாதிரி யார் யாரோ கொடுக்கும் தகவல்களை யெல்லாம் நம்பி, அலைந்து ஏமாந்திருக்கிறேன்! இருந்தும், ஒரு ஆதாரம் ஏற்பட்டு, இந்தச் செய்தியாவது உண்மையாய் இருக்கலாமோ என்ற நம்பிக்கையில், என் கடையைக் குமாஸ்தாவைப் பார்த்துக் கொள்ளச் செய்து விட்டு, இங்கு வந்தேன். உன்னைக் கண்டேன். என் கையில் பணம் இருந்தது. ஆயினும் உன்னை அறிமுகம் செய்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் வேண்டும் என்பதற்காகப் பசிக்கிறது என்றேன்.

உண்மையில் சொல்கிறேன். உன்னைப் பார்க்கும் போது என் மகன் முத்துவின் நினைவுதான் வருகிறது, அப்பா! உன்னைப்போலத்தான் இருப்பான் அவன். ஒருவேளை நீதானோ! உன்னையே என் மைந்தனாய் எண்ணிச் சமாதானம் அடைந்தேன்."

கிழவன் கதையை ஒருமாதிரி முடித்தான். கதையின் சோகத் தன்மைக்காக நான் அவனிடம் அனுதாபம் கொண்டாலும், ஒரு விஷயம் கேட்டு எனக்குச் சிரிப்பு வந்தது. என்னைத் தன் மைந்தனா என்று கேட்டான் அல்லவா!

"சொக்கா! உலகத்திலே ஒரே சாயல் உள்ள பலர் இருப்பது இயல்பு. உன் மகனுடைய சாயல் கொண்டு இருக்கலாம் நான். ஆனால் என் தாய் தந்தையர் வேறு. இத்தனை வருஷம் நீ அலைந்தும் உன் மக்களைக் காண முடியவில்லையென்றால், அவர்கள் இன்னும் உயிருடன் இருக்கிறார்கள் என்னும் எண்ணத்தைக் கைவிட்டுவிட வேண்டியதுதான்" என்றேன்.

சொக்கன் கண்களிலிருந்து நீர் பெருக்கெடுத்ததைக் கண்ணுற்றபோது, எனக்கு ஏன் அம்மாதிரி கூறி, அவனுடைய பெற்ற மனம் புண்ணாகும்படி பேசி விட்டோம் என்று நொந்து கொண்டேன். உலக அனுபவம் எனக்கு இல்லாமைக்காக வெட்கினேன்.

சில தினங்களுக்குப் பின்பு. ஒருநாள் நண்பன் சந்திரனை அவன் வீட்டில் கண்டேன். பேச்சுவாக்கில், சொக்கனைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். அவனுடைய சோகம் நிறைந்த கதையைக் கூறினேன்.

"ஆம்! எங்களிடம் கூட இதே கதையைக் கூறினான் சொக்கன். அதுமட்டுமல்ல. நமது சுபத்திராவைப் பார்த்தது முதல், தன் பெண்ணின் ஞாபகம் வருகிறது என்றும் கூறினான். பாவம்! சுபத்திராவும் அவனிடம் இரக்கப்பட்டு, 'என்னை உன் பெண்ணாகவேதான் எண்ணிச் சமாதானம் அடைந்து கொள்ளேன்' என்று கூறினாள். சுபத்திராவுக்கு என்னவோ அவன் பேரில் உயிர்" என்றான் சந்திரன்.

சந்திரன் அன்று காரியாலயத்தில் சுறுசுறுப்புடன் காணப்பட்டான். விஷயம் என்னவென்று அவனிடம் கேட்டபோது, "ஊரிலிருந்து நாளை அம்மா வருகிறாள்" என்றான்.

மறுநாள் மாலை. நான் காரியாலயத்திலிருந்து வீடு திரும்பினேன். சிறிது ஓய்வு எடுத்துக்

கொண்ட பின்பு, சந்திரன் வீட்டுக்குப் புறப்படுகையில், பரக்கப் பரக்க ஓடிவந்தான் சொக்கன், சந்திரன் வீட்டிலிருந்து.

"தம்பி! என் குழந்தைகளைக் கண்டு பிடித்து விட்டேன்" என்றான் மூச்சு வாங்க.

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. புத்திர சோகத்தால் சொக்கனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ என்று ஐயுற்றேன்.

"என்ன, தம்பி! இப்படிப் பார்க்கிறாய்? நம் சந்திரனும், சுபத்திராவும் தான் என் குழந்தைகள்! ஐயோ! முத்துவின் அடையாளமே தெரியாதபடி, அவன் முகமெல்லாம் அம்மை வடுக்கள் வாரி இறைத்திருக்கிறதே! சுபத்திராதான் என் அருமை மகள் துளசி, தம்பி!"

"சொக்கா! எப்படி அதைக் கண்டு பிடித்தாய்?"—என் ஆச்சரியம் கொஞ்சமல்ல.

"அவள், வந்திருக்கிறாள்!"

"அவளா! யார்?"

"சாவித்திரி...!"

"யார்! உன் இளைய மனைவியா?"

"வேறு யார்?"

"அப்போது சந்திரனும் சுபத்திராவும் அண்ணன் தங்கையா? நான் ஏதோ கணவன் மனைவி என்றல்லவா......!" என்று இழுத்தேன்.

"நீ என்ன தம்பி! நானும் தான் அம்மாதிரி எண்ணி ஏமாந்து போனேன். தன் செய்கைக்காகச் சாவித்திரி கண்ணீர் வடித்தாள், என் காலடியில் விழுந்து" என்றான் சொக்கன்.

எனக்கு ஓர் ஐயப்பாடு ஏற்பட்டது. "சொக்கா! உன் பிள்ளையும் பெண்ணும் எப்படி அவளை அடைந்தார்கள்?" என்றேன்.

சொக்கன் கூறினான்:

"என் குழந்தைகளை வளர்த்த அந்த பம்பாய் அன்பர் சாவித்திரியின் உறவினராம். திடீரென்று அவர் காலமானபின், விஷயமறிந்து வந்த சாவித்திரி, குழந்தைகளைக் கண்டு, மனம் மாறி, தன்னுடனே அழைத்துக் கொண்டு போனாளாம். அவர்களைப் படிக்க வைத்து, மூன்னுக்குக் கொண்டு வந்தாள். உடனே, குழந்தைகளின் பழைய பெயர்களை மாற்றி, சந்திரன், சுபத்திரா என்று சூட்டினாளாம். சந்திரனுக்குக் காஷ்மீரில் வேலை ஆனபோது, சுபத்திராவும் உடன் போவேன் என்று பிடிவாதம் பிடிக்கவே, அநுமதித்தாளாம். பழைய சாவித்திரியாய் இல்லை அவள் இப்போது. 'ஐயோ! குழந்தைகளைப் படாதபாடு படுத்தி விட்டேனே, பாவி நான்! என்னால் அல்லவா நீங்கள் இத்தனை கஷ்டங்களுக்குள்ளாக நேர்ந்தது!' என்று கதறினாள். இதைக் கேட்டதும், எனக்கு உள்ளம் குழைந்து விட்டது, ஐயோ! சாவித்திரியை அன்று அம்மாதிரி கடிந்து விட்டோமே என்று. பார்க்கப் போனால், எல்லை விட அவள் எத்தலையோ மேலானவள். தன் தவற்றை உணர்ந்து, அதற்காக வருந்தி, திருந்தியதுடன் மட்டும் நில்லாமல், என் அருமை மக்களையும் இத்தனை காலம் காப்பாற்றி முன்னுக்குக் கொண்டு வந்தாளல்லவா! ஆனால் நான்!...கட்டிய மனைவியை, மூன் கோபம் காரணமாகத் திரஸ்கரித்து விட்டேனே! யாரோ கூறிய அக்கப் போர் வார்த்தையைக் கேட்டு, அவளுக்கு ஜீவனாம்சம் கொடுத்துப் பந்தத்தை அறுக்கப் பார்த்தேன். ஆனால், அதே பணத்தை வைத்துக் கொண்டு, என் குழந்தைகளைப் போற்றி வளர்த்துப் படிக்க வைத்த உத்தமி அவள்."

இவ் வரலாற்றையெல்லாம் கேட்டபின், என் மனம் எத்தனை ஆச்சரியத்தில் ஆழ்ந்து போயிற்று! மறுநாள் நான் சந்திரனைக் கண்டபோது, "சந்திரா! சுபத்திராவை உன் மனைவி என்றல்லவா எண்ணி ஏமாந்து போனேன்!" என்றேன்.

"அது என்னுடைய தவறு. நானே அவளைப் பற்றி உன்னிடம் முன்னமே கூறியிருக்க வேண்டும். போகட்டும், என் தந்தை உன்னிடம் திருமண விஷயமாய் ஒன்றும் சொல்லவில்லையா, நேற்று?" என்று கேட்டான்.

"ஒன்றும் கூறவில்லையே! யாருக்கு?"

"என் தங்கை சுபத்திராவுக்குத்தான்."

எனக்குப் பகீர் என்றது "மாப்பிள்ளை யார்?" என்றேன் குளறியபடியே.

"அட! என்னப்பா, நடுங்கி விட்டாய்? வேறு யார்! நீதான்" என்றான்.

"அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டேன்.



இரவு வேளைகளில் நிம்மதியற்ற உறக்கம் பகலிலோ சிணுக்கமும், எதிலும் அதிருப்தியும் . . . இதனால் குழந்தை பருவத்திற்கேற்ற வளர்ச்சியுறுதலில் வியப்பில்லையல்லவா?



தாயாரின் கவலையோ மேலும் வளர்ந்தது ...... தனது தாயாரிடமே கலந்தாலோசித்தாள். அவளது தாயின் அனுபவமும், அறிவும் குழந்தைக்கு 'க்ளாக்ஸோ' உணவு புகட்ட வழிகாட்டியாக உதவின.



திடமான எலும்புகளும், பற்களும் வளர்வதற்கெனவே விடமின் டியும் சுத்த ரத்த வளர்ச்சிக்கென இரும்புச் சத்தும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட 'க்ளாக்ஸோ' ஒரு சுத்தமான, போஷாக்களிக்கும் பால் ஆகாரம்.



முன்பு சோனியாய் இருந்த குழந்தைதான் இது என்று உங்களாலேயே அடையாளம் கண்டு கொள்ள முடியாத மாற்றம்! அது நன்கு உறங்குகிறது. அன்றியும், கிரமமான வளர்ச்சியும் தேக திடமும் பெற்று எப்பொழுதும் மனச் சந்துஷ்டியுடனும் விளங்குகிறது.

Glaxo

"க்ளாக்ஸோ" ஒரு சிறந்த சுத்தமான
போஷாக்களிக்கும் பால் ஆகாரம்.

'க்ளாக்ஸோ' லேபரடரீஸ் (இந்தியா) லிமிடெட்
பம்பாய் – கல்கத்தா – மதராஸ்

சக்கரவர்த்தித் திருமகன்

61. வானரர்கள் தேடிச் சென்றார்கள்

“இதோ பார்! ராமனே, இந்தக் கோடிக் கணக்கான வானரர்களடங்கிய சேனை முழுதும் உன்னுடைய சேனை; இந்த அபூர்வ பலம் கொண்ட வானரர்கள் அனைவரும் உன்னுடைய ஆட்கள், உன் பணியைக் குறைவறச் செய்யும் ஆசையும் பலமும் பெற்றவர்கள்: நீ இடும் ஆணையைச் செய்து முடிப்பவர்கள். இந்தப் பெருஞ் சேனையை உன் பொருளாகவே கருதி என்ன வேண்டுமோ அதைச் செய்ய உத்தரவிடுவாய்” என்றான் சுக்ரீவன்.

இதைக் கேட்ட ராமன் மகிழ்ச்சி பரவசனாகி சுக்ரீவனை அணைத்துக் கட்டிக் கொண்டான்.

“முதலில் கண்டறிய வேண்டியது சீதை உயிரோடிருக்கிறாளா, எங்கே இருக்கிறாள், ராவணன் எங்கே இருக்கிறான் என்பதை. பிறகு செய்ய வேண்டியதைச் செய்வோம். இந்தச் சேனைக்கு உத்தரவு இடவேண்டியவன் நீதான். நானாவது லக்ஷ்மணனாவது அல்ல. அரசன் நீ. தவிர நீதான் எல்லாம் அறிந்து செய்ய வேண்டியதைச் செய்யத் தெரிந்தவன். உன்னைப் போன்ற ஒரு நண்பன் தம்பி லக்ஷ்மணனோடு எனக்குக் கிடைத்த பாக்கியத்தை நான் என்னவென்று சொல்வேன்!” என்றான்.

பிறகு சுக்ரீவன் தன் சேனாதிபதிகளுக்குக் கண்டிப்பான ஆணையிட்டான்: நான்கு திக்குகளுக்கும் தன் பெருஞ் சேனையையும் தலைவர்களையும் பிரித்து ஒரு இடம் விடாமல் நன்றாகப் பார்த்துச் சீதையைத் தேடும்படி கடுமையான உத்தரவிட்டு அனுப்பினான்.

வானரத் தலைவர்கள் அனைவரையும் பல திசைகளுக்கு அனுப்பித் தேடச் சொன்ன பின் ஹனுமானைத் தனியாகக் கூப்பிட்டு சுக்ரீவன் சொன்னான்:

“வாயுகுமாரனே! நீயே இந்தக் காரியத்தை முடித்துக் கொடுக்கக் கூடியவன். உன் தந்தையின் வேகமும் தேஜஸூம் நீ பெற்றிருக்கிறாய். உனக்குச் சமமாக வேறு யாரும் உலகில் இல்லை. உன்னைத் தான் நான் இந்தப் பெருங் காரியத்தில் நம்பியிருக்கிறேன். பலம், புத்தி, பராக்கிரமம், உபாயம், அறிவு அனைத்தும் உன்னிடமிருக்கிறது. உனதே இந்தப் பொறுப்பு” என்றான்.

ஹனுமானால் காரியம் சித்தியாகும் என்று ராமசந்திரனும் உணர்ந்தான். எந்த இடையூறு நேர்ந்தாலும் இவன் அதற்குப் பரிகாரம் கண்டு செய்ய வேண்டியதைச் செய்து முடிப்பான் என்று உணர்ந்தான். தன் சொந்த மோதிரத்தை ஹனுமானிடம் தந்து, “இதை வைத்துக் கொள்வாய். உன்னால் சீதை கண்டு பிடிக்கப்படுவாள். அவளுக்கு இதைக் காட்டினாயானால் என் தூதன் என்று அவளுக்கு உறுதியாகும். சீதையை நான் மறுபடி அடையும்படி செய்வாயாக!” என்று அன்போடும் பூரண நம்பிக்கையுடனும் ராமன் ஹனுமானைக் கேட்டுக் கொண்டான். சீதைக்காக வாடி, துயருற்ற ராமன் ஆஞ்சனேயனுக்கு மோதிரத்தைத் தந்த காட்சியை யாரே எழுதிக் காட்ட முடியும்? பூரண நம்பிக்கையுடன் தந்தான். வாயு புத்திரனும் மோதிரத்தைப் பக்தியுடன் வாங்கிக் கொண்டு ராமசந்திரனை வணங்கி விடைபெற்றுக் கொண்டு சென்றான்.

* * *

சுக்ரீவன் தன் வானரப் படைக்கு மிகக் கண்டிப்பான ஆணையிட்டான். எப்படியாவது சீதையைக் கண்டு பிடிக்க வேண்டும். எங்கே ஒளித்து வைக்கப்பட்டிருந்தாலும் உங்களால் கண்டு பிடிக்க முடியும்; ஒரு மாதத்துக்குள் கட்டாயம் திரும்பி வந்து தன்னிடம் செய்தி சொல்ல வேண்டும் என்று ஆணையிட்டு அனுப்பினான். அவர்களும் புற்றிலிருந்து ஈசல் கிளம்புவது போல்

ராஜாஜி

கிளம்பி நான்கு திக்கிலும் சென்று விட்டார்கள்.

சதபலி என்கிற வானர வீரன் தன் சேனையுடன் வடக்கே சென்றான். வினதன் அவ்வாறே கிழக்கு நோக்கிச் சென்றான். சுஷேணன் மேற்கே தேடப் போனான். ஆஞ்சனேயன், அங்கதன், தாரன் தெற்கு நோக்கிச் சென்றார்கள்.

எல்லாரும் மிக உற்சாகமாகச் சென்றார்கள். எங்கிருந்தாலும் இந்தத் திருடன் ராவணனைக் கொன்று சீதையை மீட்டுக் கொண்டு வருவோம் என்று ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு உற்சாகமாக கோஷம் செய்து கொண்டு சென்றார்கள்.

* * *

"இந்தப் பூமி முழுதும் நேரில் கண்டபடி ஒவ்வொரு திக்கிலிருக்கும் பிரதேசத்தையும் நீ உன் படைவீரர்களுக்கு விளக்கிச் சொன்னாயே; இவ்வளவையும் நீ எப்படிக் கண்டாய்? எப்போது கண்டாய்?" என்று ராமன் வானரர் தலைவன் சுக்ரீவனைக் கேட்டான்.

"ஐயனே! நான் வாலியால் திரும்பத் திரும்பத் துரத்தியடிக்கப் பட்டேனல்லவா! நான் எங்கே சென்றாலும் அவன் என்னைத் துரத்திக் கொண்டு வருவான். உலகம் முழுதும் நான் இப்படி அலைந்தேனல்லவா? அந்தக் காரணத்தால் எனக்கு இந்தப் பூ மண்டலத்தில் ஒவ்வொரு பாகமும் நேரில் காணச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. பிறகு இந்த மாதங்க ரிஷி ஆசிரம பூமியைப் பற்றி அறிந்தேன். இந்தப் பிரதேசத்திற்குள் வாலி நுழைந்தானானால் ரிஷியின் சாபத்தால் அவன் தலை வெடித்துப் போகும். அந்தக் காரணத்தால் அவன் இந்த இடம் வர மாட்டான், வந்தாலும் எனக்கு அபாயமில்லை யென்றறிந்து இவ்விடம் மறைந்து பிழைத்தேன்" என்றான்.

* * *

வானரப் படைகளில் வடக்கும் கிழக்கும் மேற்கும் போனவர்கள் ஒரு மாதம் தேடிப் பார்த்து விட்டு சீதையைக் காணாமல் திரும்பி வந்து வானர ராஜனிடம் விஷயத்தைச் சொல்லி வணங்கினார்கள்.

"காடுகள், மலைகள், ஆறுகள், நகரங்கள் எல்லாம் ஜாக்கிரதையாகத் தேடிப் பார்த்து விட்டோம். எங்கும் காணவில்லை. ஜானகியின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்துத் திரும்பிவர எங்களுக்கு பாக்கியமில்லாமல் தெற்கே போயிருக்கும் ஹனுமானுக்கே அந்த அதிர்ஷ்டம் போலிருக்கிறது. அரக்கன் சீதையைத் தூக்கிப் போனதும் தென் திசை நோக்கியே அல்லவா? ஹனுமான் இன்னும் திரும்பி வரவில்லை" என்றார்கள்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த ராமன் வானரர்கள் செய்து வந்த முயற்சிகளைப் பற்றித் திருப்தி யடைந்தான்.

* * *

ஹனுமானும் அங்கதனும் தெற்கே தேடிக் கொண்டு சென்றார்கள். விந்திய மலைகுகைகளிலும் வனங்களிலும் புகுந்து எல்லா விடங்களையும் தேடிப் பார்த்தார்கள். பிறகு ஒரு பெரும் பாலைவனத்தைக் கண்டார்கள். அவ்விடம் ஒரு ரிஷி தவம் செய்து கொண்டிருந்தார். அவருடைய சாபத்தால் அவ்விடம் ஒரு மரமும் செடியும் மிருகங்களும் பக்ஷிகளுமில்லாமல் சூன்யமாக இருந்தது. அங்கேயும் தேடிப் பார்த்து விட்டுப் பிறகு வேறு பிரதேசம் சென்றார்கள். அங்கே ஒரு பெரிய அசுரனைக்கண்டார்கள். மகா கொடியவனான அந்த அசுரன் வானரங்கள் கூட்டமாக வருவதைக் கண்டு நல்ல போஜனம் கிடைத்தது என்று சந்தோஷமாக அவர்களைப் பிடிக்கத் தாவினான்.

தங்களை எதிர்த்த அரக்கன் ராவணனாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணினார்கள். அங்கதன் அவன் மேல் பாய்ந்து ஒரு அறை அறைந்தான். அந்த அடியைத் தாங்காமல் அரக்கன் ரத்தம் கக்கிக் கொண்டு கீழே ஒரு மலை போல் விழுந்தான். வானரர்கள் ராவணன் செத்தான் என்று மகிழ்ச்சி அடைந்து பிறகு காடு முழுதும் சீதையைத் தேடிப் பார்த்தார்கள். சீதையாவது ஒரு அறிகுறியுமாவது காண வில்லை. பிறகு வேறு இடங்களைத் தேடிச் சென்றார்கள்.

பல சமயங்களில் எவ்வளவு தேடியும் பயன் காண வில்லையே என்று உற்சாகம் இழந்து வருத்தப்பட்டு உட்காருவார்கள். பிறகு அங்கதன், கந்தமாதனன் முதலியோர் தைரியம் சொல்லி மறுபடியும் தேடிச் செல்வார்கள். இப்படிப் பல

நாட்கள் கழிந்து விட்டன. சீதையைக் காணவில்லையே, சுக்ரீவனே கடுமையான தண்டனை விதித்து விடுவானே, என்ன செய்வது என்று ஏக்கமடைந்தார்கள். இப்படி தெற்கு நோக்கிப் போன வானரர்கள் வெகு தூரம் தேடிக் கொண்டே சென்றார்கள்.

பசியாலும் தாகத்தாலும் வாட்டப் பட்ட இந்த வானரப் படையினர் ஒரு பெரிய குகையைக் கண்டார்கள். அந்தக் குகையிலிருந்து அநேக வகைப் பறவைகள் சந்தோஷமாக வெளி வந்து கொண்டிருந்தன. உடல் முழுவதும் தாமரை புஷ்பத்து மகரந்தப் பொடி பூசிய நீர்ப் பறவைகளைக் கண்டும் நல்ல வாசனையோடு காற்று வீசுவதையும் பார்த்து, 'இந்தக் குகைக்குள் தண்ணீர் இருக்கும். உள்ளே புகுவோம்' என்று தாகத்தால் மிக வருந்திய வானரர்கள் புகுந்தார்கள்.

பேரிருள் மூடி யிருந்த அந்த குகைக்குள் வானரர்கள் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு மெள்ள வெகு தூரம் சென்றார்கள். வானரர்களில் சிலர் மிகக் களைத்துப் போய், 'ஐயோ! தாகம் தாகம்' என்று கூப்பிட்டுக் கொண்டே சென்றார்கள். வெகு தூரம் இப்படி இருட்டிலேயே சென்ற பிறகு திடீர் என்று வெளிச்சம் தோன்றி மிக ரம்மியமான வனத்தைக் கண்டார்கள். போகப் போக மிக அதிசயமான மாளிகைகளும் எல்லாவித செல்வமும்நிறைந்த நகரத்தைக் கண்டார்கள். தங்க மயமாக அற்புத அழகோடு தெருக்களும் மாளிகைகளும் சொல்ல முடியாத சௌந்தர்யம் கொண்டு பிரகாசித்தன.

அங்கே ஓரிடத்தில் மரவுரி தரித்து மான் தோல் விரிப்பு மேல் உட்கார்ந்திருந்த ஒரு வயோதிக ஸ்திரீ தபஸ்வியைக் கண்டார்கள். அவள் முகத்தின் திவ்விய தேஜஸைப் பார்த்து வானரர்கள் நடுங்கினார்கள்.

ஹனுமான் தைரியம் செய்து கொண்டு தபஸ்வியை வணங்கிப் பேசலானான்: "தாயே, நமஸ்காரம்! தாங்கள் யார்? இந்த விசித்திரக் குகையைப் பற்றியும் தங்களைப் பற்றியும் சொல்ல வேண்டும்! நாங்கள் மிகப் பசியும் தாகமும் களைப்புமாக இந்த இருள் மூடிய குகைக்குள் புகுந்தோம். தண்ணீர் கிடைக்கும் என்று ஆசைப்பட்டு உள்ளே நுழைந்தோம். இங்கே தங்க மயமான விசித்திர மாட மாளிகைகளும் மரங்களும் குளங்களும் பார்த்து எங்களுக்கு பயம் உண்டாகிறது. விஷயத்தைச் சொல்லி எங்கள் பயத்தைப் போக்க வேண்டுகிறேன்" என்றான்.

"வானரர்களே, நீங்கள் இந்த இருள் மூடிய குகை வாயிலை எப்படிக் கண்டு எவ்வாறு உள்ளே பிரவேசித்தீர்கள்? இங்கே உங்களுக்கு வேண்டிய தண்ணீரும் ஆகாரமும் இருக்கின்றன. பசியும் களைப்பும் தீர்த்துக் கொள்ளுங்கள். இந்த அழகிய மாளிகை தானவர்களுடைய விசுவகர்மாவான மயன் நிர்மாணித்தது. அவன் சுக்ராச்சார்யரிடம் நிர்மாண வேலையை நன்றாகக் கற்றவன். அவன் இங்கே வெகுகால மிருந்தான். பிறகு அவன் மேல் இந்திரன் பகை கொண்டு அவனை வதம் செய்து விட்டான். அதன்பின் இந்த பொன் மயமான மாளிகையை இந்திரன் ஹேமை என்கிற என் தோழி அப்சரஸுக்குக் கொடுத்தான். இந்த மாளிகைகள் உத்யான வனங்கள் முதலியவற்றுக்கு அவளே உடையவள். அவள் இப்போது தேவலோகம் சென்றிருக்கிறாள். உங்கள் காரியம் என்ன? ஏன் இந்த மாதிரி காடுகளில் திரிந்து களைப்படைந்தீர்கள்? பசியும் தாகமும் களைப்பும் தீர்த்துக் கொண்டு விவரமாகச் சொல்லுங்கள்" என்று அவர்களுக்கு ஆகாரமும் பானமும் வேண்டியளவு அமைத்துக் கொடுத்தாள்.

எல்லாரும் நீர் அருந்தி, நன்றாகப் புசித்து, மகிழ்ச்சியடைந்தார்கள். பிறகு ஹனுமான் வணக்கத்துடன் தபஸ்வியம்மைக்குக் காரியத்தை எடுத்துச் சொன்னான்.

"தசரதன் குமாரன் ராமன் பூமண்டலத்துக்கு அதிபதியானவன். அவன் தன் தம்பியுடனும் மனைவியுடனும் ஒரு காரணமாக ராஜ்ய பதவியை விட்டு வனவாசம் செய்து கொண்டிருந்தான். அப்போது அரக்கன் ஒருவன் ராமனுடைய மனைவி சீதையைத் தூக்கிக் கொண்டு போய் விட்டான். அவளைத் தேடிக் கொண்டு ராமனும் லக்ஷ்மணனும் வந்தார்கள். வானர ராஜன் சுக்ரீவன் அவர்களுக்கு நண்பனாகி விட்டான். ராமனுக்காக சீதையைத் தேடும்படி எங்களை வானர ராஜன் ஆணையிட்டனுப்பினான். அவன் இட்ட காலவரை இந்தக் குகையில் நாங்கள் வழிதெரியாமல் அலைந்து கொண்டிருந்த காலத்தில் தாண்டி விட்டது.



இப்போது எங்களுக்கு ஒன்றும் தோன்ற வில்லை. எங்களுடைய அரசன் சுக்ரீவன் மிகக் கண்டிப்புக்காரன். அவன் இட்ட வேலையைக் குறித்த காலத்தில் செய்ய வில்லையென்கிற காரணத்தால் எங்களைக் கொன்று விடுவான்" என்று ஹனுமான் சொன்னான்.


தபஸ்வியம்மை இதைக் கேட்டு, "நீங்கள் இப்போது வெளியில் போக முடியாதே! இந்தக் குகையின் சக்தி உங்களுக்குத் தெரியவில்லை. இதில் பிரவேசித்த அன்னியர்கள் மறுபடி வெளியில் உயிருடன் செல்லமுடியாது. மாண்டு போவார்கள். உங்கள் காரியமோ பெருங் காரியம். ஆனபடியால் கண்களை மூடிக் கொள்ளுங்கள். நான் என்னுடைய தவ வலிமையால் உங்களை வெளியேற்றுகிறேன்" என்றாள்.

அவர்கள் அவ்வாறே கண்களை மூடிக் கொண்டார்கள். உடனே தபோ பலத்தினால் கடற் கரையில் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

62. சம்பாதி

கடற்கரை சேர்ந்ததும் வானரர்கள் சுற்றிப் பார்த்தார்கள். வசந்த காலம் ஆரம்பித்து விட்டது என்பதைக் கண்டார்கள். அங்கதன் பேசலானான்:

"ஐயோ! காலவரை தாண்டிப் போயிற்று. சீதையைக் காணாமல், ஏதொரு துப்பும் அறிந்து கொள்ளாமல் கிஷ்கிந்தைக்குத் திரும்பினோமானால், அரசன் எனக்கு மரண தண்டனை விதிப்பான் என்பது நிச்சயம். என் மேல் சுக்ரீவனுக்கு அன்பு கிடையாது. ராமனுடைய ஆணைக்குப் பயந்தேதான் எனக்கு யுவராஜ்ய பட்டம் தர சுக்ரீவன் ஒப்புக் கொண்டானே யொழிய என்மேல் சிற்



The Famous
FOURSOME
OF THE
FUJI
FAMILY!
AT YOUR BECK & CALL
TO SERVE ONE & ALL!
Trade Mark
Verily, the ideal films for picturising ideal subjects on FUJEX quality paper.
FUJI
NEOPAN SS 120 .... Rs. 2. 1. 0
NEOPAN SS 620 .... Rs. 2. 1. 0
NEOPAN SS 127 .... Rs. 1. 14. 0
NEOPAN SS 35 mm.
20 exp. Cartridge ... Rs. 2. 13. 0
32° Sch.
FUJI FILM
35 mm FUJI FILM
The Best From Modern Japan!
SOLE DISTRIBUTORS:
CHOWGULE & CO., (HIND) LTD.
Bombay P.O. Box 1478 New Delhi P.O. Box 486 Calcutta P.O. Box 8943 Madras P.O. Box 1743



மில்க் ஆப் மக்னீஷியா
மற்றுமொரு
ஐ.டி.எல். தயாரிப்பு.
வயிற்றிலுள்ள புளிப்பைப் போக்கி
மலசுத்தியை அளிக்கும்.
தயாரிப்பவர்கள்:
தி மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங்
லேபரேட்டரீ லிட்., மல்லேஸ்வரம், பெங்களூர்.
ஸேல்ஸ் டிப்போ :
35/37, தம்பு செட்டித் தெரு
சென்னை-1
MILK OF MAGNESIA

றப்பனுக்கு அன்பு கிடையாது. அங்கே போய் உயிர் விடுவதைவிட இங்கேயே பிராயோபவேசம் செய்து இறப்போம்" என்றான் அங்கதன்.

அங்கதன் சொன்னதே சரி என்றார்கள் பல வானரர்கள்.

தாரன், "அது சரியல்ல. நாம் ஏன் உயிர் நீத்து மாள வேண்டும்? தபஸ்வி சுயம்பிரபையினுடைய குகைக்குள் மறுபடியும் சென்று அங்கேயே சுகமாக உயிர் கழிப்போம். அவ்விடம் நமக்கு வேண்டியதெல்லாம் இருக்கிறது. அங்கே சுக்ரீவனாவது வேறு யாராவது பிரவேசிக்க முடியாது. நாம் சந்தோஷமாக ஆயுள் முழுதும் காலம் கழிக்கலாம்" என்றான்.

ஹனுமானுக்கு இந்த யோசனை சரியென்று தோன்றவில்லை.

"இது வென்ன தகாத பேச்சு பேசுகிறாய்? நம்முடைய குடும்பங்களைக் கிஷ்கிந்தையில் விட்டு விட்டுக் குகைக்குள் உண்டு குடித்துத் தூங்கி உயிருடன் வாழ்வதில் என்ன சந்தோஷம்? சுக்ரீவனுக்கு அங்கதன் பேரில் துவேஷமில்லை. சுக்ரீவன் மிக நல்லவன். நாம் அவனைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. உண்மையில் சுக்ரீவனுக்கு நம் பேரில் கோபம் உண்டாகி நம்மைத் தண்டிக்க எண்ணம் கொண்டானானால் இந்தக் குகையில் நாம் எப்படி க்ஷேமமாக இருக்க முடியும்? லக்ஷ்மணனுடைய கோபத்தை அந்தக் குகை தாங்குமா? அதைப் பொடிப் பொடியாக்கி நிர்மூலம் செய்து விடுவான். ஆனபடியால் இந்த யோசனையில் நான் ஒன்றும் நன்மை காணவில்லை. நாம் திரும்பிப் போய் சுக்ரீவனிடம் உள்ளதைச் சொல்லி அவன் தயவைக் கேட்டு க்ஷேமம் அடையலாம்" என்றான் ஹனுமான்.

"ஹனுமான் சொல்லுவது சரியல்ல" என்றான் அங்கதன். "சுக்ரீவனுக்கு என் பேரில் கொஞ்சமும் இரக்கம்கிடையாது. என்னை அவன் கொல்லுவது நிச்சயம். அவன் மகா குரூர சுபாவம் கொண்டவன். வாலியை எப்படிக் கொன்றான், யோசித்துப் பாருங்கள். நான் உயிருடன் இருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை, எப்படியாவது ஏதோ காரணம் வைத்து என்னை ஒழிப்பதே அவன் எண்ணம். அவனும் அவனுடைய மக்கள்மாரும் வானர ராஜ்யத்தை அடைந்து இடையூறின்றி வைத்துக் கொண்டு ஆளுவதற்கு நான் ஒரு தடை என்றே அவன் எண்ணுவான். செய்த பிரதிக்ஞையை மறப்பதே அவன் சுபாவம். சீதையைத் தேடித் தருவேன் என்று ராமனுக்குச் சொல்லி விட்டு அந்த வாக்குறுதியை மறந்தவன் அல்லவா? பிறகு லக்ஷ்மணனுடைய வில்லுக்குப் பயந்தல்லவா எங்களை அனுப்பினான்? என் தாயோ தன் பர்த்தாவை இழந்து துக்கப்பட்டும் கஷ்டப்பட்டும் சுக்ரீவனைக் கண்டு பயந்து அவனுடைய வசத்தில் அடங்கிப் போயிருக்கிறாள். என் மேல் தன் பிராணனை வைத்திருக்கிறாள். நான் இறந்தேன் என்று அவள் அறிந்தால் உயிரை நீப்பாள். எனக்காகத்தான் அவள் உயிரை வைத்திருக்கிறாள். ஐயோ, நான் என்ன செய்வேன்?"



மறுபடியும் "கிஷ்கிந்தை திரும்பினாலும் என் மரணம் நிச்சயம். இங்கே உயிர் நீப்பதே மேல். பிராயோபவேசம் செய்து உயிர் நீப்பதே நலம்" என்று தீர்மானமாகச் சொல்லித் தரையில் தருப்பைப் புல் முறைப்படி பரப்பி, தெய்வங்களையும் பெரியோர்களையும் வணங்கி விட்டு, உயிர் நீக்கும் சங்கற்பம் செய்து, கிழக்கு முகம் பார்த்து உட்கார்ந்தான்.


யுவராஜனான அங்கதன் இவ்வாறு பிராயோபவேச விரதம் பூண்டதும் மற்ற வானரர்கள் "ஓ!" என்று கதறியழுது அவர்களும் அப்படியே உயிர் நீத்துவிட நிச்சயித்து உபவாச சங்கற்பம் செய்து கிழக்கு நோக்கி உட்கார்ந்தார்கள்.

• • •

'இப்படி நம் கதியாயிற்றே' என்று உட்கார்ந்த வானரர் கூட்டத்தைக் கழுகரசனான சம்பாதி பக்கத்தில் ஒரு மலைமேலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான். இறகுகள் இழந்து பறக்க முடியாமல் வெகு காலம் பட்டினியாகக்

கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சம்பாதி, 'இத்தனை வானரங்கள் ஒரே இடத்தில் இறந்து போகப் போகின்றன. எனக்கு உணவு சுலபமாகக் கிடைத்து விட்டது' என்று எண்ணிச் சந்தோஷமடைந்தான்.

அதே சமயம் வானரர்கள் மரணத்தை எதிர்பார்த்துத் தங்கள் துக்கத்தை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டிருந்தார்கள். "கைகேயினால் அல்லவோ தசரதன் இறந்தான். தசரதன் இறந்து விட்டதால் அல்லவோ ராமன் காட்டில் இருக்க வேண்டியதாயிற்று. ராமன் காட்டில் இருந்ததாலன்றோ சீதையை ராவணன் தூக்கிப் போனது. வீரனை ஜடாயு சீதைக்காக உயிர் நீத்தான். இன்னும் கொஞ்ச நேரம் ஜடாயுப் பறவைக்கு சக்தி இருந்து யுத்தத்தை நடத்தி யிருந்தால் ராம லக்ஷ்மணர்கள் வந்து விட்டிருப்பார்கள். சீதையை மீட்டிருப்பார்கள். ஆனால் விதி இப்படி யெல்லாம் செய்து விட்டது. முடிவில் நாம் மரணமடைய வேண்டியதாயிற்று." இப்படித் தங்களுடைய துக்கத்தை ஒருவரோடொருவர் பேசிக் கொண்டு பிரலாபித்துக் கொண்டிருந்தார்கள்.



இதைக் கேட்ட சம்பாதி, "என்ன! என் அருமைத் தம்பி ஜடாயு இறந்தானா?" என்று விஷயத்தைச் சரியாகத் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டான்.

சம்பாதி மிகக் கிழப் பறவை. கருடனும் அருணனும் அண்ணன் தம்பிகள். அருணனுக்கு இரண்டு குமாரர்கள். ஜடாயுவும் சம்பாதியும். ஜடாயுவும் சம்பாதியும் சிறு வயதில் தாங்கள் பெற்ற அபார சக்தியை அனுபவித்துக் கொண்டு ஒரு நாள் ஆகாயத்தில் போட்டி போட்டுக் கொண்டு உயரக் கிளம்பினார்கள். சூரியனை நெருங்க நெருங்க, வர வர வெப்பம் அதிகரித்து ஜடாயுவைக் கொளுத்தி விடும்போலிருந்தது. சம்பாதி தன் சிறகுகளை விரித்து ஜடாயுவை சூரியனுடைய நெருப்பின் வேகத்திலிருந்து காப்பாற்றினான். இதனால் ஜடாயு பிழைத்தான். ஆனால் சம்பாதியின் சிறகு எரிந்து போயிற்று. சம்பாதி பறக்க முடியாமல் கீழே மலைமேல் விழுந்தான். அதுமுதற் கொண்டு பறக்க முடியாமல் ஒரே இடத்தில் பசியினால் வாட்டப்பட்டான். ஆயினும் உயிரிழக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான்.

"அன்புக்குரிய என் தம்பி ஜடாயுவைப் பற்றித் துக்க சமாசாரம் யார் இங்கே பேசுவது? வானரங்களே! ஜடாயு இறந்தானா? சக்கரவர்த்தி தசரதனுடைய குமாரன் ராமன் ஏன் காட்டுக்குப் போனான்? எப்படி மனைவியை இழந்தான்? ஜடாயு ராவணனால் கொல்லப்பட்டானா? எனக்கு விவரம் சொல்லுங்கள்" என்று வருந்திக் கூக்குரலிட்டது.

வானரர்கள் பிராணனை நீப்பதற்கு உபவாசம் இருக்கவும், அந்த வானரப் பிணங்களைக் கஷ்டமில்லாமல் உணவாக அடைவேன் என்று சிறகு இழந்த கிழக் கழுகு ஆசைப்படவும் ஆரம்பித்த இந்த நிகழ்ச்சியானது முடிவில் வேறுவிதமாக வடிவம் எடுத்தது.

வானரர்கள் எழுந்து சம்பாதியை அணுகி மெதுவாக அந்தக் கிழப் பறவையைக் கீழே நடத்தி வந்தார்கள். பிறகு விஷயங்களை ஒருவருக்கு ஒருவர் சொல்லி அறிந்தார்கள்.

சம்பாதி தன் கதையைச் சொன்னான். அங்கதன் கிஷ்கிந்தை வரலாற்றைப் பூரணமாகச் சொல்லி எப்படி ராமனுக்கு உதவலாம் என்று கேட்டான். சம்பாதிக்குத் தன் கண்களின் தூரதிருஷ்டிச் சக்தி குறைய வில்லை. இலங்கையில் சீதை சிறையிலிருப்பதை, தான் அங்கிருந்து பார்க்க முடியும் என்றும், தான் காணும் காட்சியை யெல்லாம் விவரமாகச் சொன்னான்.

லங்கையைப் பற்றியும் ராவணனுடைய ஐசுவரியத்தைப் பற்றியும் ஜானகி ராக்ஷசிகளின் காவலிலிருப்பதைப் பற்றியும் எல்லாம் கண்டு சொன்னான்.

வானரர்களுக்கு உற்சாகம் உண்டாகி "சீதையைப் பற்றி அறிந்து விட்டோம். இனி நமக்குப் பிராண பயமில்லை. ராம காரியம் வெற்றி பெறும்" என்று மகிழ்ச்சி பரவசமாகத் துள்ளிக் குதித்தார்கள்.

சம்பாதிக்கு ஏற்பட்ட கஷ்டமும் நீங்கிற்று. "ராம காரியத்தில் நீ உதவுவாய். அப்படி உதவியபோது உன் சிறகுகள் மறுபடி முளைக்கும்" என்று தான் பெற்ற வரம் அப்போது உண்மையாயிற்று. பேச்சு நடக்கும்போதே இளஞ் சிறகுகள் உடலில் முளைக்க ஆரம்பித்து, சம்பாதி மிக அழகுடன் பிரகாசித்தான்.

சிறகுகளை மறுபடி அடைந்த சம்பாதி ஜடாயுவுக்கு ஜலக்கிரியையும் சமுத்திரத்தில் செய்து திருப்தி யடைந்தான்.

ஹாஸ்யக் களஞ்சியம்





" ஆபீஸில் ஏதேனும் படித்தால் தூக்கம் வந்து விடுகிறது!"
"பின் ஏன் படிக்கிறீர்கள் ?"
" தூக்கம் வருவதற்குத்தான் !"



" என்ன சார், இது? பத்து நாள் முன்பு மைசூர்ப்பாகு பிரமாதம் என்றீர்கள்! இன்றைக்குச் சகிக்கவில்லை என்கிறீர்களே? அதே மைசூர்ப்பாகுதானே சார், இது!"




" மேலே சத்தம் கேட்கிறதே! பெண்ணுக்கு நடனம் சொல்லி வைக்கிறீர்களா?"
" நடனமா? வீடு ரிப்பேருக்காக இடித்துக் கொண்டிருக்கா, ஸார்!"

" தலைக்கு ஒரு முத்துமாலையாகப் பத்தும், இருபது கைகளுக்கு மோதிரங்களும் வாங்க வேணும், சார்!"
"யாருக்கு, ராவணனுக்கா ?"
" ராவணனா? சரியாய்ப் போச்சு! எனக்குப் பத்து பெண்கள், சார்!"



சாமா




"கூட்டத்தில் சின்னக் கலகம் ஆரம்பித்து விட்டது! போலீஸ்காரர் கூட்டத்தினுள் புகுந்து போக முடியாதென்று இப்படி அவரை அனுப்புகிறார்கள்!"



"மேற்கே போகிற டிக்கட்டை வைத்துக் கொண்டு கிழக்கே போகிற வண்டியில் பிரயாணம் செய்கிறீர்கள்!"


"தப்பு என்பேரில் இல்லே! என்ஜின் பேரில்தான். என்ஜின் டிரைவரிடம் போய்ச் சொல்லுங்கள்!"



"அப்பா, முனியா! அந்தப் பூசணிக்காயை இப்படித் தூக்கிக்கிட்டுப் போகாதே! திருஷ்டிப் பரிகாரம் நடந்து வருகிறமாதிரி இருக்கு!"



"அண்ணே! கொஞ்சம் நெருப்புப் பெட்டி இருந்தால் கொடு, விளக்குக் கொளுத்த வேணும்!"




காங்கிரீட் ரோடுகளினால்
ஏற்படும் மூன்று சகாயங்கள்
• வழுக்குவதை தடை செய்கிறது. • இரவில்
தெளிவான பார்வை ஏற்படுகிறது. • டிரைவிங்
செய்வதில் களைப்பு ஏற்படாமலிருக்கிறது.
இவைகளும், அத்துடன் காங்கிரீட்டின் நெடுநாள் உழைப்பும், அதன் குறைந்த முதல் செலவும், அதன் பின் செப்பனிடும் குறைவான செலவும், ரோடுகள் அமைப்பதற்கு மிகவும் சிறந்தது.
நீலகிரி பிராண்ட்
இந்த புகழ் பெற்ற ஏ சி சி சிமெண்ட் காலமெனும் சோதனையில் தேறியது.
ஏ சி சி
தி சிமெண்ட் மார்க்கடிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

28. வீரசிம்மன் பட்ட அவமானம்

வயல் காட்டுக் கிழவி வீரப்பதேவனைச் சந்தித்த பிறகு பீமபுரியில் தங்கி இருந்த அரசன் வீரசிம்மனுக்குத் தகவல் சொல்லி யனுப்பிப் பாலைவனத்தில் சுய நினைவில்லா மல்சென்று கொண்டிருக்கும் பிரபாகரனை யும், உமாவையும் கைது செய்ய ஏற்பாடு செய்தாள். அரசன் வீரசிம்மன் இரண்டு குதிரைச் சேவகர்களுடன் ஓடோடியும் வந்து பாலைவனத்தில் பார்த்தான். பிரபா கரனும் உமாவும் அகப்படவில்லை. அவர் களை வீரப்பதேவன் மகேந்திர மன்னனின் அரண்மனைக்கு அழைத்துப் போயிருக் கிறான் என்ற விஷயத்தை அறிந்த வீர சிம்மன் சந்தோஷத்துடன் வெகு வேக மாக அரண்மனைக்குள் சென்றான். ஆனால், பாவம்! வேகமாகச் சென்றவன் அரண் மனைக்குள் கீழே சிதறிக் கிடந்த ஒரு பெரிய திராக்ஷைப் பழத்தின் மீது தெரி யாமல் காலை வைத்தான். அது சறுக்கி விட்டது. உடனே 'தடால்' என்று கீழே






விழுந்தான். பின்னால் அவசரமாக வந்து கொண்டிருந்த இரண்டு குதிரை வீரர் களும் அரசன் வீரசிம்மனுடைய கதி யையே அடைந்தார்கள்.

இவர்கள் மூவரும் கீழே விழுந்த அதே சமயத்தில் ஆசையுடன் மந்திரப் பச்சை திராக்ஷைப் பழங்களைத் தின்ற மகேந்திர மன்னனும், வீரப்ப தேவனும், மற்றைய மந்திரிகளும், சிப்பந்திகளும் திராக்ஷைப் பழத்திலுள்ள மந்திர சக்தியினாலே 'ஓஹோ, ஓஹோ, ஹிஹி' என்று பலமாகச் சிரித்தார்கள். அதைப் பார்த்த வீரசிம்ம னுக்குக் கோபம் வந்தது. தான் ஏதோ தவறி விழுந்து விட்டதால் அதற்கு இப் படிச் சிரித்துத் தன்னை அவமானப் படுத்து வதா என்று நினைத்தான். "போதும், போதும்! உங்கள் சிரிப்பை நிறுத்துங்கள்! நிறுத்தா விட்டால் எனக்குக் கோபம் வரும்" என்று கத்தினான். ஒன்றும் பய னில்லை. சுய நினைவை இழந்த அவர்கள் மேலும் பெரிதாகச் சிரித்தார்கள்.

தன்னைப் பார்த்துச் சிரிப்பவர்களில் வீரப்ப தேவனும் ஒருவன் என்று பார்த் ததும் வீரசிம்மனுக்கு அடங்காத கோபம் வந்தது. "வயல்காட்டுக் கிழவி சொல்லி யது உண்மை. வீரப்ப தேவனுக்கு நான் அவமான மடைந்ததில் மிகவும் சந்தோ ஷம். வீரப்பதேவா! உன்னை இப்பொழுதே என்ன செய்கிறேன், பார்!" என்று தன் னிடமிருந்த கத்தியினால் வீரப்ப தேவ னுடன் சண்டை போட்டான். அரசன் சண்டை போடுவதைப் பார்த்த மற்றைய இரண்டு வீரர்களும் அங்கிருந்த மகேந்திர மன்னனையும் மற்ற மந்திரிகளையும் தாக்கினார்கள். பல நிமிஷங்கள் கத்தி களின் ஓசை படபடவென்று கேட்டது.

"உமா! இதுதான் நல்ல சமயம். நம்மை ஒருவரும் கவனிக்க வில்லை. இவர்கள் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் போதே நாம் நழுவி விடலாம்" என்றான் பிரபாகரன். பிறகு இருவரும் அரண்மனை வாசற் பக்கம் வந்தார்கள். ஒட்டகம் கட்டியிருந்த இடத்துக்கு வந்தார்கள். "வாருங்கள், வாருங்கள்! ஒட்டகத்தை நான் படுத்துக்கொள்ளச் சொல்லுகிறேன். நீங்கள் மெதுவாக ஏறி அம்பாரியில்



நீந்தும் குழந்தை தெரிகிறதா... திருப்பிப் பாருங்கள். வாத்தும் தாமரையும் தெரியும்.

உட்கார்ந்து கொள்ளுங்கள். வீரப்பதேவர் உங்களுடன் வரவில்லையா?" என்று ஒட்டகத்தை ஓட்டும் சிப்பந்தி கேட்டான்.

"அவர் வரவில்லை. சீக்கிரம், ஓட்டுங்கள்" என்றான் பிரபாகரன். உடனே வேகமாக ஒட்டகத்தில் பிரபாகரனும், உமாவும் ஏறிக் கொண்டார்கள். பாலைவனத்தில் பாதி தூரம் போகும் வரையில் யாராவது தங்களைத் துரத்திக் கொண்டு வருகிறார்களோ என்ற பயம் அவர்களிடம் இருந்தது. அதனால் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றார்கள். அந்தப் பாலைவனத்தில் அடிக்கடி சென்று பழக்கமுள்ள ஒட்டகம் ஆனதால் மிகவும் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. ஒட்டகம் ஓட்டும் சிப்பந்தி, பிரபாகரனையும் உமாவையும் மிகவும் மரியாதையாக நடத்திக் கொண்டு வந்தான். இவர்கள் இருவரும் அரண்மனையைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணம் அவனுக்கு.

கல்லறைத் தீவின் சமீபம் அடைந்தவுடன் ஒட்டகத்தை நிறுத்தினான் அந்தச் சிப்பந்தி. "ஐயா, நீங்கள் ஒட்டகத்தினின்று இறங்குங்கள். இதற்குமேல் ஒரு பிராணியும் போக முடியாது. இங்கிருந்து கல்லறைத் தீவு இன்னும் ஒரு மைல் தூரம் இருக்கிறது. இதோ, தெரிகிறதே, அந்த ஒற்றையடிப் பாதையில்தான் நீங்கள் போக வேண்டும். இருவரும் சேர்ந்து போக முடியாது. ஒருவர் பின்னால் மற்றொருவர் போகலாம். ஜாக்கிரதையாகப் போங்கள். இதோ இந்த ஒற்றையடிப் பாதையின் இரண்டு பக்கங்களிலும் உள்ள தண்ணீரில் தவறி விழுந்து விடப் போகிறீர்கள். மிகவும் ஆழம். விழுந்தால் இறப்பது நிச்சயம். நான் சென்று வருகிறேன்" என்று ஒட்டகத்தை ஓட்டி வந்த சிப்பந்தி பிரபாகரனிடமும் உமாவினிடமும் விடைபெற்றுக் கொண்டான்.

பிரபாகரனும், உமாவும் மகேந்திர மன்னனின் அரண்மனையை அடைந்தவுடன் அங்கு இருப்பவர்களுக்குள் கத்திச் சண்டை பலமாக நடந்தது. அந்தச் சண்டையில் வீரப்பதேவனுக்கு வீரசிம்மனின் கத்தியால் பலத்த காயம் ஏற்படவே அவன் மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தான். மற்றவர்களுக்கும் பலத்த காயம் ஏற்பட்டது. அரசன் வீரசிம்மன் அவமானமடைந்த கோபத்தினால் சண்டை செய்தபடியால் பிரபாகரனையும், உமாவையும் கவனிக்கவில்லை. அவன் ஆத்திரம் அடங்கிய சிறிது நேரத்துக்குப் பிறகுதான் அங்கு நின்று கொண்டிருந்த பிரபாகரனையும், உமாவையும் பற்றி ஞாபகம் வந்தது. உடனே வாசற் பக்கம் ஓடி வந்தான். வழக்கமாகக் கட்டி யிருக்கும் இடத்தில், பாலைவனத்தில் சவாரி செய்யும், ஒட்டகத்தைக் காணவில்லை. ஒருகால் அவர்கள் இருவரும் ஒட்டகத்தின்மீது ஏறிப் பாலைவனப் பக்கம் சென்றிருப்பார்களோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. இவ்வூர் அரசனுடைய உத்தரவு இல்லாமல் அவர்கள் எப்படி ஒட்டகத்தை உபயோகிக்க முடியும்? முடியவே முடியாது. நடந்துதான் போய்க் கொண்டிருப்பார்கள் என்று எண்ணினான். பாலைவனத்தை நோக்கித் தனது வீரர்களுடன் நடந்து சென்று கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் ஒரு காக்கை அவன் எதிரில் பறந்து வந்து உட்கார்ந்து கொண்டது. பிறகு அடுத்த நிமிஷம் அந்தக் காக்கை வயல் காட்டுக் கிழவியாக மாறி விட்டது.

"அரசே! நான் சொல்லியபடி ஏன் செய்யவில்லை? அவர்கள் சுய நினைவு இல்லாத பொழுது அவர்கள் இருவரையும் கைதிகளாக ஆக்கி இருக்கக்கூடாதா? அவர்கள் இருவரும் கல்லறைத் தீவுக்குப் போகும் ஒற்றையடிப் பாதையருகில் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தேன். இவ்வூர் அரசனுடைய ஒட்டகத்தின் மீதுதான் அவர்கள் ஏறிக் கொண்டு வந்தார்கள். அவர்களுக்கு எப்படி அந்த ஒட்டகம் கிடைத்தது?" என்று கேட்டாள் வயல் காட்டுக் கிழவி.

இதைக் கேட்ட அரசனுக்கு அவமானம் உண்டாயிற்று. "என்ன! எவ்வளவு முயன்றும் அவர்கள் கல்லறைத் தீவுக்குப் போவதைத் தடைப்படுத்த முடியவில்லையே! வீரப்பதேவனை நான் நம்பியது மிகவும் கேவலம். அவனது முயற்சியால் தான் பிரபாகரனுக்கும், உமாவுக்கும் அந்த ஒட்டகம் கிடைத்திருக்கும். இன்றைய தினம் இவ்வூர் அரசனுக்கு எதிரில் என்னை அமானப்படுத்தினான், அந்த வீரப்பதேவன். ஏதோ பச்சைத் திராக்ஷைப்பழங்களாம்! கொலு மண்டபத்தில் கீழே விழுந்து கிடந்தன. அதன் மீது நான் காலைத் தவறி வைக்கவே வழுக்கி விழுந்தேன். எதற்காக வெகு நேரம் வரையில் அரண்மனையில் இருந்த யாவரும் சிரித்துக் கொண்டே இருந்தார்களோ, தெரியவில்லை! வீரப்ப

தேவன் கூட நான் எவ்வளவோ சொல்லியும் சிரித்துக் கொண்டே இருந்து, என்னை அவமானப் படுத்தினான். அதனால் அவனுக்கும் எனக்கும் பெரிய சண்டை உண்டாயிற்று. கடைசியில் பலத்த காயங்களுடன் மூர்ச்சையுற்றுக்கீழே விழுந்தான் விரப்பதேவன். அந்தச் சமயத்தில் பிரபாகரனும், உமாவும் தப்பி இருக்க வேண்டும். இனிமேல் என்ன செய்வது?''

"என்ன செய்வதா! அவர்கள் எப்படியும் நம்முடைய பூதக் கண்ணாடிப் படகிலே ஏறித்தான் செல்ல வேண்டும். நடு வழியில் அவர்கள் போய்க் கொண்டிருக்கும் பொழுது அந்தப் படகை வழக்கம் போலக் கவிழ்த்து விட ஏற்பாடு செய்தால் என்ன?'' என்று கேட்டாள் கிழவி.


உடனே வீரசிம்மன், "கூடாது, கூடாது! அப்படிச் செய்து விடாதே. நல்ல வேளையாக என்னைக் கேட்டாயே? அப்படி நீ படகைக் கவிழ்க்கும்படி செய்தால் அவர்கள் இருவரும் இறந்தல்லவா போய் விடுவார்கள்! அப்புறம் குல குருவுக்குக் கொடுத்த வாக்குறுதி என்ன ஆகிறது?'' என்றான்.

"ஆமாம், அரசே! நானும் மறந்து விட்டேன். அவர்கள் கல்லறைத் தீவுக்குப் போவதைத் தடை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அங்கிருக்கும் நாயினால் அவர்கள் சிலையாக மாறிவிட்டால் நீங்கள் குலகுருவிடம் வீண் அபவாதத்துக்கு அல்லவா உள்ளாகும்படி நேரிடும்?'' என்றாள் கிழவி.

"இல்லை. அவர்களே தங்கள் அழிவைத் தேடிக் கொண்டால் நான் அதற்குப் பொறுப்பாளி அல்லவென்று துறவிக்குச் சொல்லி இருக்கிறேனே! அவரும் நான் சொன்னதை ஒப்புக்கொண்டிருக்கிறார். பிறகு ஏன் கவலைப் பட வேண்டும் என்றாலும் மனசில் கவலை அரிக்கிறது! பிரபாகரனையும், உமாவையும் நான் சிறு வயதிலே தான் பார்த்திருக்கிறேன். பிறகு வெகு நாட்கள்வரையில் பார்க்கவே இல்லை. வில் போட்டி நடந்த அன்றைய தினம் தான் அவர்களைப் பார்க்கச் சந்தர்ப்பம் வாய்த்தது. இரண்டு பேரும் நல்ல அழகுள்ளவர்களாகக் காணப் பட்டார்கள். என்னுடன் அவன் வில்போட்டி செய்வதற்கு வந்திருந்தாலும் அவன் என்னைப் பார்த்தபொழுதெல்லாம் புன்முறுவலுடனே சிரித்துக் கொண்டிருந்தான். என்னை அறியாமலே அவன் மீது ஒரு பாசம் உண்டாயிற்று. இவர்கள் இருவரும்கல்லறைத் தீவுக்குச் சென்றால் அந்த நாயின் கண்களில் பட்டுச் சிலையாகிவிடப் போகிறார்களே என்ற வருத்தம்தான் என் மனத்தைப் புண்படுத்துகிறது.பேசாமல்உன்னுடைய பாதுகாப்பிலேயே இருந்தால் அவர்கள் உயிருக்கு ஆபத்து வராது. அவர்கள் கல்லறைத் தீவுக்குச் சென்று சிலையாக மாறியவுடன் எனக்குத் தகவல் சொல்லி அனுப்பு. குலகுருவுக்கு நடந்த விஷயங்கள் யாவும் விவரமாகச் சொல்லும்படி நேரிடும். இல்லாவிட்டால் அவர் என்மீது வீண் சந்தேகம் கொள்ளுவார்'' என்று கூறிவிட்டு நகர்ந்தான் அரசன்.

வயற்காட்டுக் கிழவியும் அவ்விடத்தை விட்டு அகன்றாள். அரசனுடைய மனச்சாட்சி மாத்திரம், "அரசே! உனக்கு ஆபத்து நெருங்கி விட்டது'' என்று சொல்லுவது போல் இருந்தது.

வீரசிம்மன் என்ன ஆகுமோ, என்ன சேதி வருமோ என்று பயந்தவனாய்ச் சீக்கிரத்தில் மாயா மகேந்திரபுரத்துக்குப் போய்ச் சேர்ந்தான். (தொடரும்)



தெம்பூட்டுகிறது

காலையில் உபயோகித்தால்!

மென்மை உணர்ச்சி

மணிக்கணக்காய் மாறுது!



காஷ்மீர் பொக்கே டால்க் எவ்வளவு தெம்பூட்டுகிறது! அந்த மென்மை உணர்ச்சி மணிக் கணக்காக நீடிக் கிறது! ஈரத்தை உறிஞ்சி, அரிப்பும் புண் ணும் வராமல் தடுக்கிறது. குளுமை மணம், புத்துணர்ச்சி அளிக்கிறது.

கால்கேட் 1806 முதல்
தரத்துக்குப் பெயர்போனது


காஷ்மீர் பொக்கே
டால்கம் பவுடர்
ஆண்கள் விரும்பும் நறுமணம்

CBG/13





தென் இந்தியா ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை-1



47. புகை நடுவில் தீ!

நாத் பாபாவின் கேள்விக்கு ஸர் பிஹாரிலால் என்ன பதில் சொல்வார்? சமூகத்தின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் பற்றி அவர் அறியாதவர் அல்லவே! இந்தக் காலத்தில் மணம் புரிந்து கொள்ளும் பெண், பிள்ளை இருவருடைய சம்மதத்தையும் அறியாமல் அவர் எப்படித் தம் சம்மதத்தைத் தெரிவிக்க முடியும்? எனவே, சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்த அவர் ஒரு முடிவுக்கு வந்தவராக, "என் சம்மதத்தைக் கேட்டு என்ன பிரயோசனம்? இது குஸுமாவின் இஷ்டத்தைப் பொறுத்த விஷயமாயிற்றே! அவள் சம்மதித்தால் எனக்கு ஏதும் ஆட்சேபனை இருக்க நியாயம் இல்லை. இது சம்பந்தமாக நான் சாந்தா கௌரிக்கு வெகு நாட்களுக்கு முன்னாலேயே பதில் சொல்லி அனுப்பி விட்டேன். 'மனோஹரின் முகம் யாரைப்போல் இருக்கிறது?' என்பதற்கு உங்கள் இருவரில் யாராவது ஒருவர் முதலில் தீர்மானமான முடிவுக்கு வந்துவிட்டால் இந்த விஷயம் தானாகவே தீர்ந்துவிடும். இதைத் தீர்க்க இன்னொருவர் வரவேண்டிய அவசியமே ஏற்படாது. அதோடு இன்னொரு விஷயத்தையும் நான் உனக்குத் தெளிவுபடுத்திவிட விரும்புகிறேன். சாந்தாகௌரி என்னை உயிருக்கு உயிராக நேசித்தாள் என்பது முற்றிலும் உண்மை. அதை நீயே கூட ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொள்கிறாய். அவள் தனது குழந்தையின் முகம் என்னைப் போலிருக்க வேண்டும் என்று விரும்பினாள் என்பதையும் நீ அறிவாய். அதனால்தான் உனக்கு உன் மகன் முகம் என்னைப் போல் இருப்பதாக பிரமை உண்டாகி யிருக்கிறது. அந்தப் பிரமை பிரமையாக இருக்கும் வரையில் குஸுமாவை மனோஹருக்குக் கொடுப்பதென்பது நியாயமாகாது. கூடவும் கூடாது. அப்படி உன் பிரமை தீர்ந்து குஸுமாவை மனோஹருக்கு மணம் செய்து வைக்கலாம் என்ற நிலை ஏற்பட்டால்கூட நான் குஸுமாவின் விருப்பத்துக்குத்தான் முக்கியத்துவம் அளிப்பேன். அவள் எண்ணத்துக்கு எதிராக எதுவும் செய்யமாட்டேன். தெரிந்துகொள்!" என்றார் ஸர் பிஹாரிலால்.

"அது கிடக்கட்டும். இப்பொழுது உன்னுடைய உத்தேசம் என்ன?"

"அட முட்டாள்! என் உத்தேசத்தைக் கேட்டு உனக்கு என்ன பிரயோசனம் ஏற்படப் போகிறது? வாழ்வைப் பாழாக்கிக் கொண்டு வீணில் உழன்று திரியும் உன்னைப் போன்ற புருஷனுக்கு மனைவியே கிடைத்திருக்கக் கூடாது. அப்படிக் கிடைத்த மனைவியின் அன்பு உனக்குக் கிடைக்கவில்லையென்றால், அது உன் தவறேயொழிய அவள் தவறு அல்ல: வேறு யாருடைய தவறும் அல்ல. உன் மனைவி என்னை நேசித்தாள் என்பதை என் தவறு என்று எப்படிச் சொல்ல முடியும்? ஒருவர் என்மீது அன்பு காட்டினால், 'காட்டாதே!' என்று சொல்லித் தடுக்க நான் யார்?" என்றார் பிஹாரிலால்.

"ஆமாம், நீ என்னிடம் என்ன சொல்ல விரும்புகிறாய்? எப்பொழுதும் நான் தூயவனாகத்தான் இருந்தேன் என்று பறைசாற்றிக் கொள்ள விரும்புகிறாயா? நீ சொல்வதன் பொருள் எனக்குச் சிறிதும் சரியாக விளங்கவில்லையே!"

"இதுகாறும் நான் அத்தகைய அகந்தை கொண்டதில்லை; கொள்ளவும் நினைத்ததில்லை. என்னைப் போல் தூய்மை வாய்ந்தவன் இந்த உலகத்திலேயே கிடையாது என்று என் உற்றார்களும் உறவினர்களும் நண்பர்களும் எனக்குப் புகழுரை வழங்கிப் பாராட்டுப் பத்திரம் வாசித்தளிக்க வேண்டும் என்றும் நான் விரும்பியதில்லை. என் சிற்றறிவுக்கு எட்டியவரை நான் இம்மாதிரி முயற்சிகளில் இறங்கியது கூடக் கிடையாது. என்னைப்பற்றி எனக்கு இவ்வளவுதான் தெரியும்!" என்றார் பிஹாரிலால். அவர் வாயிலிருந்து அச் சொற்கள் வெகு அடக்கமாகத்தான் வெளி வந்தன; ஆனால் அவற்றின் பொருள்தான் அடக்கமாக இல்லை.

அதைக் கேட்ட நாத் பாபாவின் கடுமை கொஞ்சம் குறைந்து விட்டது. "நீ பத்து வருஷங்களாகச் சாந்தாவைச் சந்திக்கவில்லை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்!" என்றார், வெகு அமரிக்கையாக.



"நான் அதைச் சொல்லவில்லை. எனக்கும் சாந்தாவுக்கும் உள்ள தொடர்பு எத்தகையது என்பதை நான் அறிவேன்; சாந்தாவும் அறிவாள். எங்கள் இருவரைத் தவிர மூன்றாமவர் யாருக்குமே எங்கள் தொடர்பைப் பற்றி எதுவும் தெரியாது. ஆனால் நீ என் மேல் வீண் சந்தேகம் கொண்டாய்; பிரமையில் உழன்று என்னிடம் பழி வாங்கத் திட்டமிட்டாய். அதற்காக என் மனைவியிடம் மிகவும் இழிவான முறையில் நடந்துகொள்ள முயன்றாய் என்பதையும் நான் அறிவேன். எல்லாம் அறிந்திருந்தும் நான் உன்னிடமும் ஒன்றும் சொல்லவில்லை; என் மனைவியினிடமும் ஒன்றும் சொல்லவில்லை. காரணம், அவள் தூய்மையே உருவானவள் என்பதை நான் நன்கு அறிந்திருந்ததுதான். ஆனால் நீ நியவன்; தாராள மனம் படைத்தவன் அல்ல. இருந்தாலும்...!" என்று பேச்சை மேலும் தொடர முயன்றார் ஸர் பிஹாரிலால்.

நாத்பாபா அதைக் கேட்டதும், தீயை மிதித்து விட்டவர் போலத் துணுக்குற்றார். "என்ன? உனக்கு எல்லா விவரமும் தெரியுமா, பிஹாரி?" என்று கேட்டார்.

"சரி, இப்பொழுது அந்தப் பழைய கதையெல்லாம் நமக்கு எதற்கு? விட்டுத் தள்ளு. வேறு ஏதாவது சொல்ல வேண்டுமானால் சொல்!"

"என் சொத்து முழுவதையும் எனக்குத் திருப்பித் தந்து விடு. என் பணத்தினால்தானே நீ இத்தனை பணக்காரன் ஆனாய்!"

"வாஸ்தவம்! ஆனால் உன் சொத்திலிருந்து ஒரு தம்பிடி கூட நான் என் சொந்த உபயோகத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லை!"

"அப்படியானால் யாருக்குக் கொடுத்தாய்?"

"சாந்தா கௌரிக்கும் உன் வாரிசாகப் பிறந்திருக்கும் உன் பிள்ளைக்கும்தான்! உன் சொத்தை வேறு யாருக்குக் கொடுக்கப் போகிறேன்? உன்னிடமிருந்து வாங்கிக் கொண்ட தொகையைப் பைசாக் கூடப் பாக்கி சாக்கி யில்லாமல் கணக்குப் பார்த்து வட்டியும் முதலுமாகச் சேர்த்துக் கொடுத்து விட்டேன். அதோடு உன்னால் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாத அளவுக்கு நான் கொடுத்த அந்தத் தொகை மூலம் உன் மனோஹருக்குத் தற்போது சம்பாத்தியம் வருகிறது. போதுமா?"

"நீ அவர்களுக்குக் கொடுத்த பொருளைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நான் உன் சொத்து முழுவதையுமே என்னுடைய சொத்தாக மதிக்கிறேன். தெரியுமா?"

"பேஷ், பேஷ்! ஆனால் உன் வேதாந்தம்தான் எனக்குச் சரியாக விளங்கவில்லை!"

"விளங்குமோ? விளங்காதுதான். என் சொத்து இல்லாவிட்டால், நீ எங்கிருந்து இத்தனை பொருள் சம்பாதித்திருக்க முடியும்? உன்னிடம் இப்பொழுது இருக்கும் முதலுக்கு முக்கிய காரணம் என் சொத்துத்தானே? அதனால்தான் உன் சொத்தெல்லாம் என்னுடையதென்று சொல்கிறேன். இப்பொழுது என் வேதாந்தம் தெளிவாக விளங்குகிறதா?" என்று கேட்டார் நாத்பாபா.

அதைக் கேட்டதுதான் தாமதம்; ஸர் பிஹாரிலால் பெருத்த யோசனையில் ஆழ்ந்தார். நண்பனிடமிருந்துகொஞ்சம் ரூபாய்களை வாங்கிக் கொண்டு அவர் சிறு தொழிலை ஆரம்பித்தது என்னவோ உண்மைதான். அது சிறுகச் சிறுக வளர்ந்து அவரை லட்சாதிபதியாக்கி விட்டது. அந்தப் பழைய நினைவு சங்கிலித் தொடர்போல அவர் கண்களெதிரே காட்சி அளித்தது. அவர் தமது புத்தி பலத்தினாலும் மற்ற அகட விகட சாமர்த்தியங்களினாலும் இத்தனை பொருளை ஈட்டியதாக வாதம் புரிந்திருக்கலாம்.

ஆனால் அவர் அப்படியெல்லாம் எதுவும் பேசவில்லை. "நீ சொல்வது நியாயமான வார்த்தை. உன் சொத்து முழுவதையும் உன்னிடமே ஒப்படைக்கும் விஷயத்தில் எனக்கு யாதொரு விதமான ஆட்சேபணையும் இல்லை; பூர்ண சம்மதமே!" என்றார்.

"என்ன, நிஜமாகவா?"

"ஆமாம். எதற்கு நான் பொய் சொல்லப் போகிறேன்? ஏழையாகி விடுவேனே என்று நான் அஞ்சினால்தானே பொய் சொல்ல வேண்டும்? நீ என்னை உயிரோடு விட்டு விட்டால், நான் எப்படியோ பாடுபட்டு என் வயிற்றுப் பாட்டைப் பார்த்துக் கொள்வேன். அந்தத் தைரியம் எனக்கு இருக்கிறது!" என்றார் பிஹாரிலால்.

"இப்படிச் சொன்னால் மட்டும் போதாது. எழுதிக் கொடுக்க வேண்டும்!"

"எப்படி எழுதித் தரவேண்டும் என்கிறாய்? கிரயசாஸனமாகவா அல்லது இனாம் சாஸனமாகவா?"

"எல்லாவற்றையும் இனாம் சாஸனமாகவே எழுதிக் கொடு!"

"ரொம்ப சரி! சொத்தின் பெரும் பகுதியைப் பற்றி எழுதிய பத்திரம் இதோ இருக்கிறது. குஸுமாவுக்காக வைத்திருக்கும்

சொத்தின் விவரத்தையும் இதோ எடுத்துத் தருகிறேன்!" என்று சொல்லிய வண்ணமே அவர் எழுந்து மேஜையின் ஒரு டிராயரில் வைத்திருந்த தஸ்தாவேஜுகளை எடுத்தார். அதை நாத்பாபாவின் கையில் கொடுத்து, "உனக்காக ஏழையாகும் விஷயத்தில் எனக்கு ஒன்றும் சிரமம் பிடிக்காது. இந்தா, இதை வைத்துக்கொள். நீ சொன்னால் இப்பொழுதே உனக்காக உயிர் விடவும் தயாராயிருக்கிறேன். நான் அப்படிச் செய்வதனால் உனக்கு இன்பம் ஏற்படக் கூடும் என்றால் சொல். நான் உயிரை ஒரு பொருட்டாக மதிக்க மாட்டேன்!" என்றார்.

பிஹாரிலாலின் வார்த்தைகளைக் கேட்ட நாத்பாபா சடக்கென்று எழுந்து நின்றார். அவருடைய முகத்தில் கோபம் ஜொலித்தது. "பேஷ், பேஷ்! எனக்குப் பெரிய உபகாரம் செய்வதாக உன் நினைப்போ? இருக்கட்டும், சொல்கிறேன் உனக்கு! உன்னை ஒரே வீச்சில் கொன்று எமனுலகுக்கு அனுப்புவது எனக்கு ஒரு பெரிய காரியமில்லை. ஆனால் சிறுகச் சிறுகச் சிரமங்களைக் கொடுத்துச் சித்திரவதை செய்து கொல்வதில்தான் எனக்கும் இன்பமிருக்கிறது. உனக்கும் புத்தி வரும்!" என்று சொல்லிக் கொண்டே வெகு வேகமாக வாசலை நோக்கி நடந்தார்.

ஸர் பிஹாரிலால் அவருக்குப் பின்னாலேயே சென்று அவர் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "ரஷ்மி ரஷ்மி! கொஞ்சம் தாராள குணத்துக்கு மனத்தில் இடங்கொடு. எதற்காக வீணில் மனத்தைப் போட்டு இப்படி வருத்திக் கொள்கிறாய்?" என்று கெஞ்சாத தோஷமாகக் கேட்டார்.

"காரணம் உன்னைப் போன்ற பிருஹஸ்பதிகள்தான். என்னை இக்கதிக்கு ஆளாக்கிய நீங்களும் என்னைப்போல் துயரப்பட வேண்டும்; உங்களைப் போன்றோர் வாழும் இந்த உலகமும் துயரக் காடாகிவிட வேண்டும். அதற்கான பிரயத்தனங்கள் செய்து விட்டுத் தான் மறு காரியம் பார்ப்பதாக உத்தேசம்!" என்றார் நாத்பாபா.

"உள்ளத்தில் ஒரு திவலையாவது உதார குணம் இடம் பெறுமானால் எத்தனையோ தீராத மனோ வியாதிகள் தீரக்கூடும், அப்பா! இதைத் தெரிந்து கொண்டு அதன்படி நடக்க முயற்சி செய்!" என்று நாத் பாபாவுக்கு உபதேசம் செய்தார் பிஹாரிலால்.

"உதாரகுணமாம், உதார குணம்! உன் உதாரகுணம் இங்கே யாருக்கு வேண்டும்? ஆண்மையற்றவனுக்கு அது ஒரு பலமாகத் தோன்றலாம். வலிவற்றவனுக்கு அது ஒரு துணிச்சல் தரும் விஷயமாகத் தோன்றலாம். பேடித்தனத்துக்கு அடையாளமான அந்த உதாரகுணம் எனக்கு வேண்டாம், வேண்டாம்; வேண்டவே வேண்டாம்!" என்று சொல்லிய நாத் பாபா தமது கையை வெகு வேகமாக உதறி விடுவித்துக் கொண்டு வெளியேறினார். அவர் இடை



யில் செருகி யிருந்த வாள் 'கலீர்' என்ற ஒலியுடன் கீழே விழுந்தது. விழுந்த வேகத்தில் அது இரண்டு துண்டாகி விட்டது. காத்பாபா குனிந்து அந்தத் துண்டுகளை எடுத்துக் கொண்டு அரைக்கணம் கூட அங்கே தாமதியாமல் வெளியேறி விட்டார்.

நேரே மோட்டார் நின்று கொண்டிருந்த இடத்துக்குச் சென்று அதில் ஏறி உட்கார்ந்து கொண்டார். மோட்டார் புறப்பட்ட பொழுது ஜுகல் கிஷோர் முன் ஆசனத்தில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. கன வேகமாகச் சாலையைக் கிழித்துக்கொண்டே கார் கண் இமைக்கும்பொழுதில் மறைந்துவிட்டது. பல வருஷங்களுக்குப் பின், தம்மைக் காண வந்த விசித்திரத் தோழன் எங்கே மாயமாய் மறைந்து விட்டான் என்பது ஸர் பிஹாரிலாலுக்குப் புரியாத புதிராக இருந்தது. வெகுவாகப் பிரயத்தனப்பட்டு மறைக்கப்பட்டு மறக்கப்பட்ட இறந்தகாலம் இன்று மறுபடியும் நிகழ் காலமாக உருவெடுத்தது. கண் இமைக்கும் நேரத்துக்குள் மறுபடியும் மறைந்து மகா ரகசியத்தைத் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் வருங்காலமாக உருவும் மாறிவிட்டது. இதை எண்ணிப் பார்த்த ஸர் பிஹாரிலால் மறுபடியும் தம் ஆசனத்தில் சென்று சிந்தனையில் ஆழ்ந்து விட்டார்.

அஸ்தமித்ததும் சுகபால், சாந்திப் பிரியன், மனோஹர் ஆகிய மூவருடனும் குஸுமா வீட்டுக்குத் திரும்பினாள். அவர்களில் யாருக்கும் அப்பொழுது அவளுடன் அதிகமாகப் பேச வேண்டும் என்ற எண்ணம் உண்டாக வில்லை. ஸர் பிஹாரிலால்மட்டும் மனோஹரை நிமிஷத்துக்கு ஒரு தடவை பார்த்தார். அவனைத் தம் அருகில் அழைத்து ஏதேதோ லோகாபிராமமாகப் பேசவும் பேசினார். சிறிது நேரத்துக்கெல்லாம் மூன்று நண்பர்களும் விடைபெற்றுக் கொண்டு அவ்விடத்தை விட்டு வெளியேறினர். அவர்கள் போன பின்பும் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்த ஸர் பிஹாரிலால் தம்மையும் மீறி, "ரஷ்மியின் முகத்தைப் போலவேதான் இவனுடைய முகமும் இருக்கிறது. நடை, உடை, பாவனைகள் கூட அவனைப் போலவே தான் இருக்கின்றன. அசைப்பில் பார்த்தால் அந்தக் காலத்து ரஷ்மியேதான் இவன்!" என்று கூறிக் கொண்டார்.

அவரது அந்த வார்த்தைகளைக் கேட்ட குஸுமாவுக்கு வியப்பாக இருந்தது. "அப்பா! ரஷ்மியா? யார் அது? ஒருவேளை மனோஹரின் தந்தை ரஷ்மிகாந்தரைப் பற்றிச் சொல்கிறீர்களோ?" என்று கேட்டாள்.

"ஆமாம், ஆமாம்! அவரேதான். அவரைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். அவர் எனக்கு அத்தியந்த நண்பர். அவர் காரணமாகத்தான் நமக்கு இத்தனை பொருளும் புகழும் கிடைத்திருக்கின்றன!"

"அவர் காரணமாகவா? அது எப்படி அப்பா? நீங்கள் சொல்வது எனக்குக் கொஞ்சமும் விளங்க வில்லையே!"

"அதை இன்னொரு நாள் சாவகாசமாகச் சொல்கிறேன். இன்று உனக்குப் பிறந்த நாள் ஆயிற்றே! இன்று போய் உனக்குப் பிடிக்காத விஷயத்தைச் சொல்வானேன் என்று எண்ணுகிறேன். இருந்தாலும் சொன்னால் என்ன என்றும் தோன்றுகிறது. சொல்லட்டுமா, வேண்டாமா? நீயே சொல்லு!" என்றார் ஸர் பிஹாரிலால்.

"நீங்கள் செய்யும் காரியம் வெகு நன்றாயிருக்கிறதே, அப்பா! உள்ளத்தில் ஒரு ஆவலைக் கிளப்பி விட்டு அப்புறம் சொல்லட்டுமா, வேண்டாமா என்று கேட்டால் யார் தான் வேண்டாம் என்பார்கள்? அது எனக்குப் பிடித்ததோ, பிடிக்காததோ, நீங்கள் சொல்லுங்கள். நான் எதுவாயிருந்தாலும் கேட்கத் தயார்!" என்றாள் குஸுமா.

"மனோஹரை நீ மணந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ரஷ்மிகாந்தனின் உதவியினால் கிடைத்திருக்கும் இத்தனை சொத்தையும் நான் தானம் செய்துவிட வேண்டும். இப்படி நாங்கள் ஒரு நிபந்தனை செய்து கொண்டிருக்கிறோம். உனக்கு இரண்டில் எது இஷ்டம், சொல்லு!" என்று கேட்டார் ஸர் பிஹாரிலால்.

"சொத்தைத் தானம் செய்து விடுங்கள். எனக்கு ஏழ்மை வாழ்வுதான் பிடித்திருக்கிறது!" என்று சட்டென்று பதில் சொன்னாள் குஸுமா.


"என்ன? ஏழையாக வாழ்வதில் உனக்குப் பிடித்தமா? காரணம் என்னவோ?"

"காரணம் ஒன்றும் பிரமாதமானதில்லை. சும்மாத்தான்!" என்றாள் குஸுமா. பேச்சுக்கு அவள் அப்படிச் சொல்லிவிட்டாளே யொழிய அடுத்த கணமே அவளுக்கு ரமேஷின் நினைவு வந்து விட்டது. ஒருநாள் ஏதோ பேச்சு வாக்கில் அவள், 'நானும் உங்களைப் போல் ஏழையா யிருந்தால்...?' என்று ரமேஷிடம் சொல்லி யிருந்தாள் அல்லவா? அந்தச் சம்பவம் அவள் நினைவுத் திரையில் அழியாச் சித்திரமாக உருப் பெற்றிருந்தது; தூசி தட்டித் துப்புரவாகத் தோன்றும் படத்தைப் போல் மறுபடியும் அவள் மனக் கண்ணெதிரே வந்து நின்றது.

"சும்மாவாகவா? நான் வேடிக்கைக்குச் சொல்லவில்லை. நிஜமாகத் தான் சொல்கிறேன். நாம் உண்மையில் ஏழையாகி விட வேண்டி யிருக்கும். புரிந்ததா?" என்று குரலில் ஒரு அழுத்தத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டார் பிஹாரிலால்.

"சரி, அதனால் பெரிய நஷ்டமோ கெடுதலோ எதுவும் இல்லையே! என் தாயார் ஏழ்மையிலேயே பிறந்து வளர்ந்து வாழ்ந்தவள் என்று நீங்களே எனக்குச் சொல்லவில்லையா? ஏழையாக இருந்தாலும் அவள் ஆனந்தமாகத் தானே வாழ்ந்தாள்? அது போல் நானும் ஏன் இருக்கக் கூடாது?" என்று பதிலுக்குக் கேட்டாள் குஸுமா.

ஸர் பிஹாரிலால் அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. அவரை ஏதோ இனந்தெரியாத



ஸ்டார்ட்டிங் தொந்தரவுகளைத் தவிருங்கள்!

ஒரு நல்ல பாட்டரி தெரிந்தெடுப்பது

எப்படி என்பதை இப்பொழுது அறிந்து கொள்ளுங்கள்


உங்கள் காருக்கு ஒரு ஸ்டாண்டர்ட் பாட்டரி பொருத்தும் பட்சத்தில் ஸ்டார்ட்டிங் தொந்தரவுகள் நின்று விடும். எவ்வகைப்பட்ட காரிலும் உன்னத சேவை புரியும்படி பிரத்தியேகமாக உண்டாக்கப்பட்ட பாட்டரிகள் இவை.

உங்கள் காருக்கு ஒரு ஸ்டாண்டர்ட் பாட்டரியே ஏன் சிறந்தது என்பதற்கு ஐந்து விசேஷ காரணங்கள் இதோ:

- ★ பெரும்பான்மையான புதுக் கார்களிலும் பொருத்தப்படுவது இதுவே
- ★ கெட்டியாக்கப்பட்ட ரப்பரில் செய்த கேஸ்
- ★ பூர்ணமாக பரிசோதிக்கப்பட்டது
- ★ நம்பகமான 6 – மாத உத்தரவாதம்
- ★ நியாயமான விலைகள்

உங்கள் பணத்திற்கு பூர்ண பயன் கிடைக்க..

ஸ்டாண்டர்ட்



ஸ்டாண்டர்ட் பாட்டரீஸ் லிட்., பம்பாய்

விநியோகஸ்தர்கள்: அடிஸன் & கம்பெனி லிட்., 158, மவுண்டு ரோடு, மதராஸ்

கிளைகள்: பெங்களூர் & வெல்லிங்டன் (நீலகிரி)

STB. 720

நான்கு வித முயற்சி

அனஸின், வேதனைகளுக்கு நான்கு விதத்தில் நிவாரணம் அளிக்க, சாஸ்திரீய முறையில் தயார் செய்யப்பட்டது. ஏனெனில் இதில் கீழ்கண்ட மருந்துகள் சேர்க்கப்பட்டிருக்கிறது

1. கொயினா: ஜுரத்தடுப்புகுணமும், பலவிருத்தி செய்வதற்கு பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது
2. காப்பின்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத்தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. அஸிடைல் ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்கடிப்பதற்கு மிகவும் உபயோகமுள்ளது.

அனஸின் திட்டத்தில் கலந்திருக்கும் மருந்துகளின் ஏகோபித்த முயற்சியால், வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, தசைவலி, கீல்வாயு முதலியவைகளிலிருந்து துரிதமாகவும், நிச்சயமாகவும், அபாயமின்றியும் நிவாரணம் கிடைக்கும்.



எப்பொழுதும்

அனஸின்


வில்லைகள்

வேண்டுமென்றே கேளுங்கள்

2 வில்லைகள் கொண்ட பாக்கெட்டுகளிலும் [illegible]
32 வில்லைகள் கொண்ட டப்பிகளிலும் கிடைக்கும்.

சிந்தனை ஆட்கொண்டு விட்டது. குஸுமாவும் அலுத்துச் சலித்துக் களைத்துப் போய் வீட்டுக்கு வந்திருந்தாள். அதோடு ஏழையாக வேண்டியிருக்கும் என்று தந்தை சொன்ன சொற்களைக் கேட்டதுமே, ஏழையாகி இன்ப வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற இன்பக் கனவு அவளுடைய இருதயத்திலே இடம் பற்றியது. அந்தக் கனவைச் சாங்கோபாங்கமாகக் காண வேண்டும் என்ற அவாவுடன் அவள் படுக்கைக்குச் சென்று விட்டாள். ஸர் பிஹாரிலாலும் சிந்தனையில் ஆழ்ந்தவாறே கொஞ்சம் கொஞ்சமாகப் படுக்கையில் சாய்ந்து கடைசியில் படுத்தும் விட்டார். படுக்கை யறையில் அவர்கள் இருவருக்கும் இடையே அப்பொழுது ஒரு துணித்திரை மட்டுமே தான் இருந்தது.

மணி பத்துப் பத்தே கால் இருக்கும். தூங்காமல் கண்களை மூடிக் கொண்டு 'குறுட்டுக் குறுட்'டென்று யோசனை செய்து கொண்டிருந்த ஸர் பிஹாரிலாலுக்குப் புகை வாசனை வருவதாகத் தோன்றியது. கண்களைத் திறந்து பார்த்தால் அறையில் இலேசாகப் புகை சூழ்ந்திருப்பதும் தெரிந்தது. அறையில் வைத்திருக்கும் விடி விளக்கு பெரிதாக எரிந்து அதனால் இப்படிப் புகை சூழ்ந்திருக்கலாமோ என்று எண்ணி விடி விளக்கு இருக்கும் பக்கத்தை நோக்கினார். அன்று விடி விளக்கு தினத்தைக் காட்டிலும் சிறிதாக எரிந்து கொண்டிருந்தது. அதனால் புகை சூழ்ந்திருப்பதாகத் தாம் எண்ணுவது வீண் பிரமை என்று எண்ணி மறுபடியும் கண்களை மூடித் தூங்க முற்பட்டார். ஆனால் தூக்கம் வரவில்லை. அவருக்கு அப்பொழுது எங்கிருந்தோ புகை அதிகமாக வருவதாகத் தோன்றியது. அதன் காரணமாக அவர் உள்ளத்தில் ஒரு பரபரப்பு உதித்தது.



கும்பகோணம் பாணாதுறை ஹைஸ்கூலின் புதுக் கட்டடங்களான விஞ்ஞான, நூல்நிலையக் கூடங்கள் 21—3—55 அன்று தஞ்சை ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ எஸ். ஏ. அய்யாசாமி செட்டியார் எம். ஏ., பி. எல். அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அவ்விழாவின் போது எடுக்கப்பட்ட படத்தில் சென்னை முன்னாள் மேயர் ராமஸ்வாமி நாயுடு, எஸ். ஏ. அய்யாசாமி செட்டியார், கண்டிராக்டர் சுந்தரேசம் பிள்ளை, கரெஸ்பாண்டண்ட் ஸ்ரீ டி. எஸ். ராஜகோபால அய்யங்கார், தலைமையாசிரியர் ஸ்ரீ ஏ. ராஜகோபால அய்யங்கார் முதலியோரைக் காணலாம்.

திரைக்குப் பின்னால் தன் கனவில் லயித்திருந்த குஸுமாவும் தூங்கவில்லை. புகை வரவர அதிகமாவதை அறிந்த அவள், "ஏன் அப்பா! இத்தனை புகை எங்கிருந்து வருகிறது?" என்று கேட்டாள்.

"அதுதான் நானும் யோசிக்கிறேன், அம்மா!" என்றார் பிஹாரிலால்.

கணத்துக்குக் கணம் புகை அதிகமாகி அறையை வியாபிக்கத் தொடங்கியது. பிஹாரிலாலும் குஸுமாவும் எழுந்து அறைக் கதவைத் திறக்கச் சென்றனர். ஆனால் கதவைத் திறக்க முடியவில்லை. வெளியிலிருந்து தாழ்ப்பாள் போட்டிருக்கும் கதவை எங்கேயாவது உள்ளிருந்த வண்ணமே திறக்க முயன்றால் முடியுமா?

நாத்பாபா கட்டடத்துக்குத் தீ வைத்திருப்பாரோ என்ற சந்தேகம் ஸர் பிஹாரிலாலுக்கு உண்டாயிற்று. இன்னொரு புறத்துக் கதவைத் திறக்க ஓடினார். அங்கும் புகை சூழ்ந்திருந்தது. அந்தக் கதவும் வெளிப்புறமாகத் தாளிடப்பட்டிருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் இரண்டு மூன்று ஜன்னல்கள் வழியாக நெருப்பே தெரிந்தது. யாரோ தீதான் வைத்து விட்டார்கள் என்பது உறுதியாகி விட்டது. மேலே பார்த்தார்; கீழே பார்த்தார். அறையைவிட்டு வெளியேற அவருக்கு ஒரு வழிகூடத் தென்படவில்லை.

"குஸுமா! யாரோ கட்டடத்துக்குத் தீ வைத்துவிட்டார்கள்!" என்றார் பிஹாரிலால்.

"வேறு யார் வைத்திருக்கப் போகிறார்கள்? எல்லாம் இந்தத் தொழிலாளிகளாகத்தான் இருக்க வேண்டும். ஜுகல்கிஷோர் தீ வைக்குமாறு அவர்களுக்கு உபதேசம் செய்துகொண்டிருந்ததாக யாரோ சொன்னார்கள்!"

"யார் வைத்தால் என்ன? இப்பொழுது வெளியேற வழியைக் காணோமே!"


"வழியைக் காணோமா? அப்பா, எப்படியாவது நீங்கள் வெளியேறி விடுங்கள்!"

"உன்னை ஒன்றியாக விட்டு விட்டா? பேஷ், பேஷ்! மிக நன்றாகச் சொன்னாய், குஸுமா! பெண்ணைத் தீக்குப் பலி கொடுத்து விட்டுப் பெற்ற தகப்பன் எப்படியாவது தப்பி ஓடித் தன் பிராணனைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது தான்!" என்றார் பிஹாரிலால். அவரது அந்தத் தணிந்த குரலிலும் தவிப்புத் தொனித்தது.

"அப்பா! என்ன செய்வது?" புகை பொறுக்காத குஸுமா பீதியுடன் புலம்பினாள்.

எப்பொழுதுமே ஒரு நிலையில் அறிவை அடக்கி வைத்திருக்கும் திறன் வாய்ந்த ஸர் பிஹாரிலால்கூட ஒரு கணம் நிலை தடுமாறி





னார்; திகைத்து நின்றார். அவருக்குத் தம் கவலையைக் காட்டிலும் குலஸூமாவின் கவலை தான் அதிகமாயிருந்தது. பீதியுற்றுப் பரிதவிக்கும் குலஸூமாவை அன்பும் ஆதரவும் தாண்டவமாடப் பார்த்து அமைதியே உருவான குரலில், "அம்மா, குழந்தாய்! இங்கே வா! உனக்குப் பயமாயிருக்கிறதா?" என்று கேட்டார். அதோடு அருகில் சென்று அவளுக்குத் துணையாகவும் நின்று கொண்டார்.

"பயமும் இல்லை, கியமும் இல்லை. ஆனால் ஏன் அப்பா, வெளியில் பேச்சுக் குரலே கேட்கக் காணோம்! நான் வேண்டுமானால் கூப்பிட்டுப் பார்க்கட்டுமா?" என்று கேட்ட குலஸூமா உடனே ஆட்களுக்குக் குரலும் கொடுத்துப் பார்த்தாள்.

அவள் குரல் கொடுக்கவும் இரண்டொரு மனிதர்களின் பேச்சரவம் கேட்கவும் சரியாக இருந்தது. ஆனால் வெளியிலிருந்தவர்களாலும் அறைக் கதவைத் திறந்துவிட முடியவில்லை. திறந்து விடுவதற்காக அவர்கள் எடுத்துக் கொண்ட அத்தனை பிரயாசைகளும் பலன் அளிக்கவில்லை.

நேரமாக நேரமாகப் புகை ஜ்வாலையாகப் பரிணமித்துத் தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. தீ கட்டடத்தின் ஒரு பகுதியில்தான் வைக்கப்பட்டிருந்தது. அதிகமாகப் பரவிவிட்டது என்றும் சொல்லி விடுவதற்கில்லை. ஆனால் தீ வைத்தவர்கள் பலே சாமர்த்தியசாலிகளாக இருக்கவேண்டும். ஏனெனில் உள்ளிருந்து ஒருவன் வெளியே போகவும் முடியாது; வெளியிலிருந்து ஒருவன் உள்ளே பிரவேசிக்கவும் முடியாது. தீ வைத்திருந்தவர்கள் அவ்வளவு சாதுரியமாக வைத்திருந்தார்கள்.

குலஸூமாவைக் கையோடு அழைத்துச் சென்ற ஸர் பீஹாரிலால் 'படபட' வென்று தம் பலம் கொண்ட மட்டில் கதவைத் தட்டினார், இடித்தார்; உடைக்கவேகூட முயன்றார். அசுரவேகத்தில் அந்தக் காரியத்தைச் செய்ய முயன்ற அவர் இரண்டொரு தடவை தடுமாறிக் கீழேகூட விழுந்து விட்டார்.

கடைசியில் கதவைத் திறப்பதற்கான வழி எதுவும் தோன்றாமற் போகவே, நம்பிக்கை இழந்து ஆய்ந்து ஓய்ந்து ஒரு ஓதுப்புறமாகப் போய் உட்கார்ந்து கொண்டார்.

இருவருக்குமே இக்கட்டான அந்த நிலைமையில் பாதி உயிருக்கு மேல் போய் விட்டதாகத் தோன்றியது. இருவரும் சாவு சமீபித்து விட்டது என்றே தீர்மானித்து விட்டனர்.

இந்த மண்ணுலகில் பிறந்து விட்டால் யாருக்குமே மரணம் சர்வ நிச்சயம். இன்றைக்கு இல்லா விட்டால் என்றைக்காவது ஒரு நாள் கால தேவனின் கருக்கரிவாளுக்கு யாருமே இரையாகத்தான் வேண்டும். அதற்கு அஞ்சிப் பயனில்லை.

இந்த வேதாந்தம் காலதேவனின் கூரிய கத்தி தலைக்கு நேரே நூலிழையில் தொங்கும் பொழுது தவிடு பொடியாகி விடுகிறது.

அஞ்சாநெஞ்சம் படைத்தவர்கள்கூட அஞ்சி அஞ்சிச் சாகத்தான் செய்கின்றனர்.

வாழ்க்கையில் விருப்பு வெறுப்பை அறவே ஒழித்து விட்ட ஸர் பிஹாரிலால் எந்த முறையில் வேண்டுமானாலும் சாகத் தயாராகத்தான் இருந்தார். தாம் மரித்து விட்டால் அப்புறம் என்ன ஆகுமோ என்று அவர் அஞ்சவில்லை. அவருடைய அருமை மகள் குஸுமா அவருக்கு அருகிலேயே நின்று கொண்டிருந்தாள். கொழுந்து விட்டெரியும் தீயில் புழுவாகத் துடித்து அவள் கருகிச் சாவதைக் காண்பதென்றால்...அப்பப்பா! நினைத்தாலே அவர் நெஞ்சம் நடுங்கியது. 'இந்தக் காட்சியைக் காணவா நான் இத்தனை நாட்களும் உயிர் வாழ்ந்தேன்?' என்று மனம் துடிதுடித்துப் போய் விட்டார்.

"சரியான வார்த்தை! அவனைத் துடிதுடிக்க வைத்துச் சிதள் சிதளாக வெட்டிச் சித்திரவதை செய்து கொல்ல வேண்டும்!" என்றார் பிஹாரிலால். அவர் பயத்தில் அப்படி உளறினாரா? அல்லது பைத்தியம் தான் பிடித்து விட்டதா? இல்லா விட்டால் நாத்பாபா சொன்ன சொற்கள் நினைவுக்கு வந்து அவற்றைத்தான் முணுமுணுத்துக் கொண்டாரா? யார் கண்டார்கள்?

அதே சமயம் அறையின் உச்சிக் கூரையில் காற்றோட்டத்துக்கென்று வைத்திருந்த சாளரம் பெயர்ந்தது. அதன் வழியே ஒரு நீளத் துணியைத் தொங்க விட்டுக் கொண்டு ஒரு மனிதன் வெகு வேகமாகக் கீழே இறங்கி வந்தான். அவன் இறங்கி வருவதற்கு வழி காட்டுவதுபோல 'ஒளி பாய்ச்சி' விளக்கின் பிரகாசம் பூமியில் விழுந்தது.

அந்த ஒளியில் இருவர் புகையினால் மூச்சுத் திணறிக் கொண்டிருப்பதை அவன் கண்டான். தரையில் காலை வைத்ததும் வைக்காததுமாக அவர்கள் அருகில் ஓடினான். அசையாமல் கல்லாகச் சமைந்து உட்கார்ந்திருந்த குஸுமாவின் உடலைப் பற்றி உலுக்கினான்.

"யார் அது?" என்று கேட்டாள் குஸுமா.

"நான்தான் ரமேஷ்! உம், புறப்படுங்கள்! சீக்கிரம், சீக்கிரம்! நேரமாக்காதீர்கள்!" என்று அவசரப்படுத்தினான் அவன்.


"எங்கே?"

"வெளியேதான்! நான் உங்களை வெளியே அழைத்துச் செல்லத்தான் வந்திருக்கிறேன்!"

"என்னை மட்டுமா? நான் மட்டும் தனியாக வரமாட்டேன். முதலில் அப்பாவை அழைத்துச் செல்லுங்கள். அப்புறம் நான் வருகிறேன்!" என்றாள் குஸுமா.

"குஸுமா! நேரமாக்காதே! நானும் உன்னோடுதான் வரப் போகிறேன். எழுந்திரு!" என்று சொல்லியவண்ணம் பிஹாரிலால் எழுந்து ரமேஷின் அருகில் வந்தார்.

ரமேஷ் இருவரையும் அழைத்துக்கொண்டு தொங்கிக் கொண்டிருந்த துணிக்கு அருகில் வந்தான். அறையில் சூழ்ந்திருந்த புகை கண்களை மறைத்தது. (தொடரும்)



தமிழில் ஆங்கிலம்

மாதவபுரத்தில் டாக்டர் சாமிநாதய்யர் அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் ராஜாஜி அவர்கள் தமிழில் ஆங்கிலம் கலந்து பேசும் அநாகரிகம் பற்றிப் பேசியதை மார்ச்சு மாதம் 13-ந் தேதி கல்கியிலே கண்ணுற்றதும் எனக்குப் பெருமகிழ்வு ஏற்பட்டது.

நற்தமிழ் நாட்டு மக்களில் பெரும்பாலோர் அழகிய தமிழோடு ஆங்கிலத்தைக் கலந்து பேசுவது நாகரிகம் என எண்ணி அநாகரிகத்திலே மூழ்கி வருகின்றனர். இங்ஙனமே நீ்தமிழோடு ஆங்கில வார்த்தையைக் கலந்து பேசும் மக்கள் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகுமானல், தமிழ் மொழியின் சிறப்பு இழந்து போனலுங் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை! தமிழோடு ஆங்கிலம் கலந்து பேசும் அவல — இழிநிலையை நீக்கத் தமிழர்கள் முயற்சிக்க வேண்டும்! தமிழோடு பின்னிக் கிடக்கின்ற ஆங்கிலப் பதங்களுக்கு (ராஜாஜி போன்ற பேரறிஞர்கள்) சரியான தமிழ்ச் சொற்களைக் கண்டு பிடிக்க வேண்டும். இதன் மூலம் தமிழ் மொழியின் சிறப்பும் உயரும். வாழ்க, தமிழ்மொழி! உயர்க அதன் பண்பு!!

சிறுடையபுரம்
20—3—55 எம். கே. ஏ. எஸ். அஹ்மது மீரா

●

கருத்தின் சிகரம்

மார்ச்சு 13உ "கல்கி" இதழைப் பார்த்தேன். "ஆங்கிலமும் தமிழும்" என்ற தலையங்கப் பகுதி என்னை மிகவும் கவர்கிறது. ஒவ்வொரு பட்டதாரியும், பட்டம் பெறப் போகிறவரும் படித்து உணர்ந்து கொள்ள வேண்டிய பகுதி. சரளமான நடை — நடைக்கேற்ற கருத்து — கருத்துக் கேற்ற சொற்கள். ஒவ்வொரு வார்த்தையையும் பொறுக்கி எடுத்துக் கோத்தாற் போல அமைந்திருக்கிறது. தமிழரின் பண்பாட்டை, புகழை, அந்தஸ்தை உயர்த்த விரும்பும் ஒவ்வொருவரும் இதைப் படிக்க வேண்டியது அவசியம்.

கும்பகோணம்
11—3—55 எஸ். வி. கிருஷ்ணன்

●

கவனம் செலுத்துமா?

தமிழ் நாட்டில் கிராமக் காங்கிரஸ் கமிட்டிகளை அமைத்துச் சுமார் இரண்டு ஆண்டுகள் சென்று விட்டன. ஆயினும் கிராமக் காங்கிரஸ் கமிட்டிகளில் வேலை திறம்பட நடக்க வில்லை. அதற்குக் காரணம் கிராமக் காங்கிரஸ் கமிட்டிகளுக்கோ, அல்லது அதில் செயல் புரிபவர்களுக்கோ திறமை இல்லை என்று பொருள் கொள்ளக் கூடாது. பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி நாட்டின் நிலைமைக் கேற்ப அவ்வப்பொழுது வகுத்து வரும் கொள்கைகளை ஜில்லாக் கமிட்டிகளுக்கு மட்டும் தான் தெரிவித்து வருகிறது. ஆனல் ஜில்லா தாலூக்கா காங்கிரஸ் கமிட்டியினர் அவற்றைக் கிராமக் காங்கிரஸ் கமிட்டிகளுக்குத் தெரிவிப்பது கிடையாது. அவ்வப்பொழுது உள்ள நடப்புக்குத் தக்கவாறு பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றும் தீர்மானங்கள் கிராமக் காங்கிரஸ் கமிட்டிகளுக்குத் தெரிவிக்கப்பட்டால் தான் கிராமக் காங்கிரஸ் கமிட்டி அதற்கொப்ப வேலை செய்வதற்கு முடியும்.

கிராமக் காங்கிரஸ் கமிட்டி நன்கு வேலை செய்தால் தான் காங்கிரஸ் ஸ்தாபனம் நன்கு வலுப்பெறும். இல்லையேல், மற்றக் கட்சிகள் கிராமங்களில் நன்கு ஊன்றிக் கொண்டு, காங்கிரஸைப் பலவீனப்படுத்தி விடும்.

வரகூர்
20—3—55 வி. ஏ. பாலகிருஷ்ணன்
காரியதரிசி, கிராமக் காங்கிரஸ் கமிட்டி

●

வாய் மணக்கும்

கல்கி பத்திரிகையிலே வரும் ராமாயணத்தைப் படிக்கும் போதெல்லாம் என் மனத்துக்குப் பெரிதும் சாந்தியும் ராமபிரானைக் காண்பது போன்ற பிரமையும் உண்டாகிறது.

இம்முறை சக்கரவர்த்தித் திருமகனை வாசித்ததும் எழுந்த பாடலைத் தங்களுக்கு அனுப்ப ஆவலாயிருந்தமையால் அனுப்பியிருக்கிறேன்.

தொல்லுலகில் அழியாத அழகுடைய சரிதை
சொன்னலும் வாய்மணக்குந் தூய திரு நாமம்
மல்லலில் வெற்றியை முழங்கு கோதண்டம்
மலர் மகளும் நிலமகளும் விளங்குந் திரு மார்பு
கல்லும்உயிர்த் தெழச்செய்யுந் தாமரைப்பூம்
[பாதம்
கடலனைய கருணை நிறைந் திலங்கும் மலர்க்
[கண்கள்
நல்லவனை சக்ரவர்த்தித் திருமகனை யிங்கே
நாம் காணத் தந்தனர்நம் ராஜாஜி யம்மா.

நுங்கம்பாக்கம்
28—3—55 ராஜம் ஸீதாராமன்


●

நாம் பாக்கியசாலிகள்

"**ச**க்கரவர்த்தித் திருமகன்" சரிதையை வாரந் தோறும் வாசித்து மெய் சிலிர்க்கும் நேயர்களில் நானும் ஒருவன். "வியாசர் விருந்து," "ராமகிருஷ்ண உபநிஷதம்" முதலியவைகளை எமக்குத் தந்துதவிய பெரியார் அவர்களே, பாரதத்தின் பெருமைக்கும், கலாச்சாரத்துக்கும் ஆணிவேர் போன்ற நூல்களில் ஒன்றான "ராமாயணத்தை"யும், தமக்குரிய பாணியில் எல்லோருக்கும் புரியும் வண்ணம் எழுதி உதவுவது, தமிழ்கூறும்நல் லுலகின் பாக்கியமென்றே கொள்ளல் வேண்டும்.

நம்பில், சிலரிடையே நிலவி வரும் அறியாமை உணர்ச்சியையும், ஆய்ந்து அறியுமாற்றலின்மையையும் ரஸனையற்ற உள்ளங்களையும் சாதகமாகக் கொண்டு, சாதித் துவேஷ, நாத்திகப் பிரசார எழுத்துக்களும், சினிமாக்களும் இந்தியாவிலும், இலங்கையிலும் தற்பொழுது மலிந்து கிடக்கின்றன. இந்நிலையில் ராஜாஜி போன்ற பெரியோர்களின், மெய்யுணர்வையும், கண்யத்தையும்நிலைநிறுத்தும் பொருட்டு உதவும் எழுத்துப் பணிக்கு, தமிழர்கள் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கொழும்பு
17—3—55 மு. கணேசலிங்கம்



பர்மாவிலிருந்து பத்திரமாய்த் திரும்பி வந்த பெண்ணையும் மாப்பிள்ளையையும் வரவேற்பதற்காக என்னுடைய நண்பர் ஒருவர் விருந்து நடத்தினார். விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, "என், ஸார்! இன்னும் உங்கள் பெண்—மாப்பிள்ளை யாராவது ஜோஹோரிலோ, ஸுரபயாவிலோ, கொச்சின் சைனாவிலோ, போர்னியாவிலோ இருந்து திரும்பி வரப் போகிறார்களா!" என்று கேட்டேன். சாப்பாடு அவ்வளவு ருசியாயிருந்தது; ஆனால், அதைக் காட்டிலும் விருந்துக்கு வந்திருந்தவர்களின் பேச்சு சுவாரஸ்யமாயிருந்தது.

சாப்பாட்டுக்கு முன்னால் மாப்பிள்ளையைக் கொண்டு வந்து நடுவில் நிறுத்தி அவரை நாங்கள் எல்லாரும் சுற்றிச் சுற்றி வந்து பார்த்தோம். எங்கேயாவது குண்டு பட்டுச் சேதம் ஏற்பட்டிருக்கிறதா என்று பரிசோதித்தோம். ஒரு சேதத்தையும் காணவில்லை. காது, மூக்கு, கைகால், விரல்கள் எல்லாம் அப்படி அப்படியே இருந்தன. வாயைத் திறக்கச் சொல்லிப் பார்த்தோம். பல்லெல்லாம் கூட அப்படியே இருந்தன.

"மாப்பிள்ளை! கொஞ்சங்கூட சுகமில்லை. இப்படித்தானா எங்களை ஏமாற்றுகிறது! இத்தனைக்கும் மோல்மீனிலிருந்து வந்ததாகச் சொல்கிறீர்! ஒருவேளை அந்த ஊரில் ஜப்பான் குண்டு போடுவதற்கு முன்னால் கிளம்பி விட்டீரோ!" என்று கேட்டேன்.

மாப்பிள்ளை வரதராஜன் ரோஸத்துடன், "இல்லை, இல்லை! ஐந்து நாள் குண்டு விழுந்த பின்தான் கிளம்பினேன்" என்றார்.

அவரைவிட மாமனாருக்கு அதிக ரோஸம் வந்து விட்டது. "நீங்கள் என்னமோ சொல்கிறீர்கள்! மூன்றாநாள் ராத்திரி இங்கே என்ன நடந்தது தெரியுமோ, இல்லையோ! திடீரென்று 'ஏ பழனியாண்டவனே! என்னைக் காப்பாற்று! ஸ்வாமி! என் குழந்தையைக் காப்பாற்று! ஐயையோ! நான் என்ன செய்வேன்!' என்று கூச்சல் கிளம்பவே, நாங்கள் எல்லாரும் பயந்து போய் விட்டோம்..."

"என்ன, மாப்பிள்ளை! இப்படியா பயமுறுத்தி விட்டீர்!" என்றேன்.

"இல்லை, இல்லை! அவர் பெண்ணின் பெருமையைச் சொல்கிறார்! அங்கே இருந்த வரையில் எப்படியோ தைரியமாய் இருந்து விட்டாள். இங்கே வந்த பிறகு இப்படித் திடீர் திடீரென்று கூச்சல் போட்டு மூர்ச்சையாகி விடுகிறாள்" என்று வரதராஜன் சொன்னதும், எங்களுக்கெல்லாம் என்னமோ மாதிரி ஆகி விட்டது. அப்புறம் கொஞ்ச நேரம் தமாஷாகப் பேச அங்கிருந்த யாருக்குமே மனம் வரவில்லை.

* * *

"நீங்கள் சென்னையில்தான் இருக்கப் போகிறீர்களா! ஊருக்குக் கிளம்பும் உத்தேசம் உண்டா!" என்று ஒருவர் கேட்டார்.

"நன்றாயிருக்கிறது. இந்தச் சமயத்தில் யாராவது சென்னையை விட்டுக் கிளம்புவார்களோ! ராஜாஜி சொன்னது போல குண்டு விழுகிற வேடிக்கையைப் பார்ப்பதற்காகக் கிராமாந்தரங்களிலிருந்து பட்டணத்துக்கு வரவேண்டிய சமயமல்லவா இது! இந்தச் சமயத்தில் பட்டணத்தை விட்டுப் போகலாமோ!" என்றார் ஒருவர்.

"ஆமாம்; ரங்கூனில் இப்படித்தான் அநேகர் குண்டு விழுகிற வேடிக்கையைப் பார்ப்பதற்காக வீதியில் நின்றார்களாம்! அவர்கள் பார்த்த கடைசி வேடிக்கை அதுதானாம்! ஏன் மாப்பிள்ளை, அப்படித்தானே!"

"ஆமாம்" என்றார் மாப்பிள்ளை, சுருக்கமாக. அவருக்கு அந்தப் பயங்கரத்தைப் பற்றிப் பேசவே இஷ்டமில்லையென்று தோன்றியது.

"வேடிக்கை பார்க்கிறதென்றால், வெளியில் போய் நிற்க வேண்டுமா, என்ன! வீட்டுக்குள்ளேயே இருந்து பார்த்தால் போதாதா!" என்று இன்னொருவர் கேட்டார்.

"வீட்டுக்குள் இருந்தால் என்ன வேடிக்கை தெரியும்! குழியில் இருந்தாலும், அண்ணாந்து பார்க்கலாம்."

"வீட்டுக்குள் இருந்தால் வேடிக்கை ஒருவேளை பார்க்க முடியாது; ஆனால் வேடிக்கையைக் கேட்கலாம். குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டுச் சிலருக்குக் காது செவிடாகவே போய் விட்டதாம். சில குழந்தைகள் திறந்த வாய் திறந்தபடியே இருக்கின்றனவாம்!" என்றார் ஒருவர்.

"ஆனால் மாப்பிள்ளை மட்டும் வாயையே திறக்க மாட்டேனென்கிறாரே! ஒருவேளை குண்டு சத்தத்தில் மாப்பிள்ளையின் வாய் மூடி விட்டதோ!" என்றேன் நான்.

"சாப்பாட்டுக்கு மட்டும் வாய் திறக்கும்போலிருக்கிறது!" என்றார் ஒருவர்.

மாப்பிள்ளை கொஞ்சம் பல் தெரியும்படி சிரித்து விட்டு, "ஆமாம்! குண்டு விழும்போது வாயைக் கெட்டியாக மூடிக் கொள்ளத்தான் வேண்டும். பல்லைக் கடித்துக் கொள்ள வேண்டும். வெறு மனே கடித்துக் கொண்டால் போதாது; வாயில் கைக்குட்டையை அடைத்துக் கொண்டு பல்லைக் கடித்துக் கொண்டிருக்க வேண்டும். காதிலும் பஞ்சை அடைத்துக் கொள்ள வேண்டும். குண்டு விழும் சத்தம் அவ்வளவு பயங்கரம்!" என்றார்.

"ஒரு குண்டு விழுந்தால் அதைச் சுற்றிலும் எவ்வளவு தூரத்துக்கு அபாயம் உண்டாகும்!" என்று கேட்டேன்.

"குண்டு வெடித்ததும் கிளம்பும் இரும்புத் துண்டுகள் மூன்று நாலு பர்லாங்கு தூரம் வரையில் பரவும்" என்று வரதராஜன் சொன்னார்.

குண்டு விழும்போது வீட்டுக்குள் இருந்தால் நல்லதா, குழியில் பதுங்கிக் கொண்டிருந்தால் நல்லதா என்று விவாதம் நடந்தது.

"வீடாவது குழியாவது! இதனாலெல்லாம் ஒரு வேளை ஜப்பான் குண்டிலிருந்து தப்பிக்கலாம்; யமனிடமிருந்து தப்பிக்க முடியுமா!" என்று ஒரு வேதாந்தி கேட்டார்.

அப்போது மாப்பிள்ளை, "ஆமாம்; விதியும் முக்கியமானதுதான். ரங்கூனில் என் பந்துக்கள் இருக்கும் வீட்டுக்கு அடுத்த வீட்டிலிருந்து ஒரு தெரு பூராவும் நாசமாகி விட்டது. என் பந்துக்கள் வீட்டில் ஒரு ஓடு, ஒரு செங்கல் பெயரவில்லை" என்றார்.

"ஆமாம்; எல்லாம் விதிதான்!" என்று சிலர் ஆமோதித்தார்கள்.

"நாளை பொழுது விடிந்தால் யாருடைய விதி எப்படி இருக்குமோ! எல்லாருக்கும் இன்னும் ஒரு தொன்னை பாதாம்கீர் போட்டுவிடு!" என்றார் விருந்து கொடுத்த சிநேகிதர்.

சாப்பிட்டு எழுந்திருந்ததும் எல்லாரும் தாம்பூல தாரணத்துக்கு உட்கார்ந்தார்கள்.

"இனிமேலாவது ஏதாவது சந்தோஷமான விஷயத்தைப் பேசலாம்" என்றார் சந்தோஷப் பிரியர்.



"ராயபுரம் கடற்கரையில் 'ஓடிப் போங்கள்' என்று அச்சிட்ட துண்டுப் பிரகரங்கள் கிடந்ததாமே!" என்று ஒருவர் சந்தோஷமான பேச்சை ஆரம்பித்தார்.

"அது நிஜந்தானு! யாராவது அந்தப் பிரகரத்தைப் பார்த்தீர்களா!" என்று ஒவ்வொருவரும் கேட்டார்கள்.

ஒருவரும் நேரில் பார்க்கவில்லையென்று தெரிந்தது. பத்திரிகைகளில் வெளியான சர்க்கார் அறிக்கையைப் பார்த்துத்தான் எல்லாரும் தெரிந்து கொண்டிருந்தார்கள்.

மாப்பிள்ளை, "பிரகரத்தில் என்ன எழுதியிருந்தது!" என்று கேட்டார்.

"'ஓடிப்போங்கள்' என்று எழுதியிருந்தது."

"நிச்சயந்தானே! 'ஜப்பான்! ஓடிப்போ' என்று எழுதவில்லையே!"

"இல்லவே இல்லை."

"அப்படியானால் இது யு. பி. ராகவாச்சாரியின் வேலை அல்ல" என்றார் மாப்பிள்ளை.

"அது என்ன சமாசாரம்! யு. பி. ராகவாச்சாரி என்பது யார்!" என்று வியப்புடன் கேட்டோம்.

ரொம்பவும் தூண்டிக் கேட்ட பிறகு மாப்பிள்ளை சொன்னதாவது:—

மாப்பிள்ளை சொன்ன கதை

யு. பி. ராகவாச்சாரிக்கு ரங்கூன் போஸ்டு ஆபீஸில் வேலை. மாதம் இருநூறு ரூபாய் சம்பளம். எனக்கு அவன் அத்தான் முறை ஆகவேணும். நான் மோல்மீனுக்குப் போவதற்கு முன் இரண்டு பேரும் ரங்கூனில் ஒரே வீட்டில் குடியிருந்தோம்.

யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து ராகவாச்சாரியின் போக்கு ஒரு மாதிரி ஆகிக்கொண்டு வந்தது. ஆபீஸ் வேலையைக்கூட நன்றாய்க் கவனியாமல் யுத்தச் செய்திகளைப் படிப்பதில் ஈடுபட்டான். தினசரிப் பத்திரிகைகள் வந்ததும், முதலில் யுத்த 'மாப்'பை வெட்டி எடுத்து அவனுடைய பெரிய நோட்டுப் புஸ்தகத்தில் ஒட்டி விடுவான். பத்திரிகை எத்தனை பிரதி கிடைக்கிறதோ, அவ்வளவு 'மாப்'புகளையும் வெட்டி எடுத்துக் கொள்வான். ஒரே படத்தைக் குறுக்கு நெடுக்காகவும் மேல் கீழாகவும் பலவிதமாக ஒட்டி யிருப்பான். அவைகளில் நீலப் பென்சிலாலும் சிவப்புப் பென்சிலாலும் கோடுகள் இழுப்பான். எப்போது யாரைக் கண்டாலும் யுத்தச் செய்திகளைப் பற்றியே பேசுவான். இதனாலெல்லாம் யு. பி. ராகவாச்சாரியை "யுத்தப்பித்து ராகவாச்சாரி" என்று எல்லாரும் அழைக்க ஆரம்பித்தார்கள்.

"ஆமாம்:—நான் பித்துக்கொளிதான்! பைத்தியந்தான்! நாளைக்கு ஜப்பான்காரன் வந்துபடார், படார் என்று குண்டு போடுகிறபோது யார் பைத்தியம் என்று தெரியும்" என்று ராகவாச்சாரி அடிக்கடி சொல்லுவான்.

இந்தோ-சைனா, ஸயாம், மலாய், பர்மா, டச்சு இந்தீஸ் ஆகிய தேசங்களின் 'மாப்'புகளை எடுத்து வைத்துக் கொண்டு அம்புக் குறிகள் போட்ட வண்ணம் இருப்பான். "ஐயோ! பார்மோஸாவுக்கு வந்துவிட்டானே! ஸயாமை எட்டிப்பார்க்கிறானே! இன்னும் இங்கிலீஷ்காரன் தூங்குகின்றானே!" என்று லபோலபோ என்று அடித்துக்கொள்வான்.

ஸர் ராபர்ட் புருக் போபம், "மலாய் நாடு யுத்தத்துக்குத் தயார்" என்று சொன்னபோதெல்லாம் யு. பி. ராகவாச்சாரி தலையில், தலையில் போட்டுக் கொள்வான். "இந்தப் பொறுக்கி எடுத்த அசடைச் சேனாதிபதியாக அனுப்பி யிருக்கிறார்களே!" என்பான். "ஏன்!" என்று கேட்டால், "யுத்தத்துக்குத் தயாராமே, தயார்! ஆகாச விமானம் எத்தனை இவர்களிடம் இருக்கிறது! ஆயிரம், பதினாயிரம், ஐம்பதினாயிரம் என்று ஆகாய விமானங்கள் வந்து ஆகாசத்தை மறைக்கும் போதல்லவா யுத்தத்துக்கு நாம் தயார் என்று சொல்லலாம்!" என்பான்.

"ஜப்பான் தான் சைனாவில் மாட்டிக்கொண்டு விழிக்கிறதே!" என்று சொல்லி விட்டால் போதும். உடனே ராகவாச்சாரிக்குப் பிரமாத கோபம் வந்து விடும்.

"அட, பைத்தியக்காரப் பிள்ளை! யார் சொன்னது! சைனாவிலே ஜப்பான்காரன் யுத்தமா செய்கிறான்! யுத்தப் பயிற்சியல்லவா செய்து கொள்கிறான்! பிரிட்டனுடனும் அமெரிக்காவுட

னும் சண்டை போடுவதற்காகச் சீனுவை ராணுவப் பயிற்சிக் கூடமாக வல்லவா உபயோகிக்கிறான் !''

இன்னும் அவன் தன்னுடைய நோட்டுப் புத்தகத்தில் யுத்த மாப்புகளுடன் சண்டை விமானம், பாம்பர் விமானம் முதலிய படங்களை ஒட்டி, அவற்றின் கீழ் "ஜப்பானை முறியடிக்க இம்மாதிரி 20,000 விமானம் வேண்டும்'' என்று ஏதாவது எழுதி வைத்திருந்தான்.

* * *

கடைசியில், ஜப்பானுக்கும் பிரிட்டனுக்கும் உண்மையாகவே யுத்தம் ஆரம்பமானபோது யு.பி. ராகவாச்சாரியின் பைத்தியம் தலைக்கேறி விட்டது! யுத்தம் ஆரம்பித்தவுடன் நான் தமையன் மார்களுடன் ஆலோசனை செய்வதற்காக மோல்மீனிலிருந்து ரங்கூனுக்குப் போயிருந்தேன். அப்போது யு. பி. ராகவாச்சாரி என்னைப் பிடித்துக் கொண்டான்.

"இதைக் கேள்! வரதா! இனிமேல் பிறத்தியாரை நம்பியிருப்பதில்லை யென்று தீர்மானித்து விட்டேன். ஆகாச விமானப்படை தயாரிக்க நானே ஆரம்பித்து விட்டேன் !'' என்றான்.

நான் இதை அலட்சியம் செய்தது ராகவாச்சாரிக்குப் பொறுக்கவில்லை. என் கையைப் பிடித்து அவனுடைய வீட்டுக்கு இழுத்துக் கொண்டு போனான். வீட்டில் ஜன்னல் எல்லாம் அடைத்து இருட்டாக வைத்திருந்த ஒரு அறையைத் திறந்து காட்டினான்.

"இதென்ன ! ஆகாசத் தாக்குதலுக்கு ஒளிந்து கொள்ளும் இடமா !'' என்று கேட்டேன்.

"சீச்சீ! நன்றாய்ப் பார்! அதோ என் ஆகாசப் படை!'' என்றான் ராகவாச்சாரி. எவ்வளவோ உற்றுப் பார்த்தும் எனக்கு ஒன்றும் தெரியவில்லை. மேல் கூரையில் நாலைந்து வௌவால் தொங்கிக் கொண்டிருந்தது மட்டும் தெரிந்தது.

"அதோ பார்த்தாயா !'' என்று ராகவாச்சாரி வௌவாலைச் சுட்டிக் காட்டினான்.

அப்போது ஒரு வௌவால் திடீரென்று கீழ் நோக்கி வந்தது !

"ஆஹா ! 'டைவ் பாம்பிங்' (Dive-Bombing) பார்த்தாயா !'' என்று ராகவாச்சாரி கதறினான்.

இன்னொரு வௌவால் சிறகை அடித்துக் கொண்டு பறந்து அறையை ஒரு சுற்றுச் சுற்றி விட்டுப் போய் மறுபடியும் கூரையில் தொத்திக் கொண்டது.

அது பறந்தபோது, "பார்த்தாயா, ரோந்து விமானத்தை! (Reconnaissance Flight) செய்து விட்டுப் போகிறது ! ஜப்பானை ஜாக்கிரதையாய் இருக்கச் சொல் !'' என்றான்.

ஒவ்வொரு வௌவாலின் கழுத்திலும் ஒரு சீட்டுக் கட்டித் தொங்குவதை அப்போதுதான் பார்த்தேன். "அது என்ன சீட்டு!'' என்று கேட்டேன். ராகவாச்சாரி சட்டைப் பையிலிருந்து ஒரு சீட்டை எடுத்தான். அதில், "ஜப்பானே ! ஓடிப் போ !'' என்று எழுதி யிருந்தது.

"பார்த்துக் கொண்டே இரு ! அந்த ஜப்பான் குள்ளன் ரங்கூனுக்கு வருவதற்குள் இந்த மாதிரி இருபதினாயிரம் சண்டை விமானம் தயார் செய்து விடுகிறேன். அப்புறம் எதிரி விமானங்கள் எல்லாம் தவிடு பொடிதான் !'' என்றான்.

பைத்தியம் தலைக்கேறி விட்டது என்று நினைத்துக் கொண்டு நான் மோல்மீனுக்குப் போய் விட்டேன்.

அப்புறம் இரண்டு நாளைக்கொரு தடவை யு. பி. ராகவாச்சாரியிடமிருந்து எனக்குக் கடிதம் வந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு கடிதத்திலும் "ஐம்பது விமானம் தயார்; அறுபது விமானம் தயார்; நூறு தயாராகி விட்டது'' என்று எழுதிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் தபாலாபீஸில் எனக்கு வரும் கடிதங்களைப் பிரித்துப் பார்க்கிறார்களென்று தெரிய வந்தது. இன்னும் இரண்டு தினங்களுக்கெல்லாம் யு. பி. ராகவாச்சாரியை ஐந்தாம் படைக்காரன் என்று சந்தேகித்துக் கைது செய்து விட்டார்களென்று பத்திரிகையில் வெளியாயிற்று.

* * *

மோல்மீனில் ஜப்பான் தாக்குதல் ஆரம்பித்ததும் நான் என் மனைவியையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டேன். வரும் வழியில் ரங்கூனில் ஒரு நாள் தங்க வேண்டியிருந்தது. அங்கே யு. பி. ராகவாச்சாரியைப் பார்த்ததும் திகைத்துப் போனேன். விசாரித்ததில், அவனை அதிகாரிகள் "அபாயமற்ற பைத்தியம்'' என்று தீர்மானித்து விடுதலை செய்து விட்டதாகத் தெரிந்தது. "வரதா ! இன்று இராத்திரி நடக்கப் போகும் வேடிக்கையைப் பார் !'' என்று சொல்லி விட்டு ராகவாச்சாரி போய் விட்டான். அவன் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன் என்று பிடிவாதமா யிருந்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று என்றெண்ணி நான் ஒருவாறு ஆறுதல் அடைந்தேன்.

அன்று இரவு இரங்கூனில் ஆகாச விமானத் தாக்குதல் நடந்தது. அதனால் நாசமான வீடுகளில் ஒன்று என் நண்பன் ராகவாச்சாரி இருந்த வீடு என்று மறு நாள் காலையில் அறிந்து மிகவும் துக்கப்பட்டேன். "பாவம்! அவன் என்ன கதியானானோ ! அவனுடைய இருட்டறையில் இருந்த ஆகாசப் படைதான் என்ன கதியடைந்ததோ !'' என்று வருந்தினேன்.

இந்த விமானத் தாக்குதலில் ஒரு ஜப்பான் விமானம் கீழே விழுந்து நொறுங்கியதாகக் கேள்விப்பட்டேன். அங்கு விழுந்த ஜப்பான் விமானத்தைப் பார்ப்பதற்காகப் போன என் தமையன்மார்களுடன் நானும் போனேன்.

விமானத்தைச் சுற்றி வந்த போது, அதன் என்ஜினில் சிக்கிக் கொண்டிருந்த ஒரு பொருளின் மீது தற்செயலாக என் பார்வை விழுந்தது. உற்றுப் பார்த்தபோது அது வௌவாலைப் போல் தோன்றியது. சொல்ல முடியாத ஆவலுடன் அதன் அருகில் சென்று பார்த்தேன். என்ன ஆச்சரியம்! என்ன அற்புதம்! அது வௌவால் தான். அதன் கழுத்தில் ஒரு சீட்டும் இருந்தது ! அதில் "ஜப்பானே ! ஓடிப் போ !'' என்று எழுதி யிருந்தது.

மேற்படி ஜப்பான் விமானம் என்ன காரணத்தினால் கீழே விழுந்தது என்பது சரியாகத் தெரியவில்லை யென்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் எனக்கு அது தெரிந்து விட்டது. யு. பி. ராகவாச்சாரியின் வீடு இடிந்தபோது அதன் இருட்டறையில் அடைந்து கிடந்த வௌவால்கள் வெளிக் கிளம்பி யிருக்க வேண்டும். அவற்றில் ஒன்று இசைகேடாக விமானத்தின் இன்ஜின் சக்கரத்தில் மாட்டிக் கொண்டிருக்க வேண்டும். அதன் காரணமாகவே அந்த ஜப்பான் விமானம் விழுந்திருக்க வேண்டும்.

இப்போது நீங்களே சொல்லுங்கள்! யு. பி. ராகவாச்சாரி பைத்தியமா ! அவனைப் பைத்திய மென்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் பைத்தியமா !

—கல்கி – 16-2-42

Printed and Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras-10. Editor : Mi. Pa. Somasundaram.

REGISTERED No. M. 4392

Registered as newspaper in Ceylon

